வரு. 76 இல. 07 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி
2024 பெப்ரவரி 18ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
February 18 Sunday, 2024
24 பக்கங்கள் 100/-



















# இந்த ஆண்டுக்குள் 350,000 புதிய வெளிநாட்டு வேலைவாய்ப்புகள்

## ஆண்டின் முதல் ஒன்றரை மாதங்களில் 38,000 பேர் வேலைவாய்ப்புக்காக பயணம்

## இஸ்ரேல், தென்கொரியா, ருமேனியா, மத்திய கிழக்கு உள்ளிட்ட பல நாடுகளிலிருந்தும் பணியகத்துக்கு Job Orders

இலங்கையருக்கு இந்த ஆண்டுக்குள் சுமார் 350,000 புதிய வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் கிடைக்குமென வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

வருடத்தின் முதல் ஒன்றரை மாதங்களில் பணியகத்தில் பதிவு செய்து வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக சென்றவர்களின் எண்ணிக்கை 38,000 பேர் என்றும் அப்பணியகம் சுட்டிக்காட்டியுள்ளது.

2023ஆம் ஆண்டில் 287,000 பேர் வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக நாட்டை விட்டு வெளியேறியதாகவும், அதற்கு முன்னைய ஆண்டு 2022 இல் இந்த எண்ணிக்கை 3,21,600 பேர் எனவும் அப்




பணியகம் தெரிவித்துள்ளது. 2024 இல் இஸ்ரேல், தென்கொரியா, ருமேனியா உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து அதிக சம்பளம் பெறக்கூடிய வேலை வாய்ப்புகளுக்கான அழைப்புகள் (Job Orders) பணியகத்துக்கு கிடைத்துள்ளதாகவும், மத்திய கிழக்கு உள்ளிட்ட பல நாடுகளில் இருந்தும் வேலை வாய்ப்புகளுக்கான உத்தரவுகள் (Job Orders) வந்துள்ளதாகவும் பணியகம் கூறுகிறது.

எவ்வாறாயினும், இலங்கையில் பயிற்சி பெற்ற பணியாளர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதால், தற்போது பயிற்சி பெற்ற பணியாளர்களை அதிக சம்பளத்துடனான வேலைவாய்ப்புகளுக்கு அனுப்புவதற்கு ஏதுவாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் என்பன இணைந்து தற்போது 'ஜயகமு ஸ்ரீலங்கா'

06

## இலங்கை–இந்திய மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு

### இந்திய அரசிடமும் கோரியுள்ளேன்; அமைச்சர் ஜீவன்



இலங்கை - இந்திய கடற்றொழிலாளர் பிரச்சினைக்கு விரைவில் நிரந்தர தீர்வு காணுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் இந்திய அரசாங்கத்திடமும் தாம் கோரியுள்ளதாக, அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார். யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலுள்ள தமிழக

06



## 06 புலிகள் புதைத்து வைத்த தங்கம் முல்லைத்தீவில் நாளை அகழ்வு

### கிளிநொச்சி நீதிமன்றம் அனுமதி

### தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ள 3,600 மில். அமெ. டொலர்

## வெளிநாட்டு கடனை மீள செலுத்த மும்முனை நிவாரண பொதிமுறை

### கடன் வழங்குநர்களுடன் பேச்சு முன்னெடுப்பு

கே. அசோக்குமார்



தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள 3,600 மில்லியன் அமெரிக்க டொலர்

06

## ஹஜ் செயற்பாடுகளில் கட்சி, அரசியலுக்கு இடமில்லை

### அரச ஹஜ் கமிட்டி உறுப்பினர் மில்பர் கபூர்

அஜ்வாத் பாஸி



ஹஜ் செயற்பாடுகளில் எவ்வித கட்சி, அரசியல் நடவடிக்கைகள் இடம்பெற ஒருபோதும் இடமளிக்க மாட்டேன். தூய்மையான எண்ணத்துடன் நாம் ஹஜ் முகவர்களுடன் செயற்படுவோமென

06

## காமினி ஜயவிக்கிரம பெரேரா காலமானார்



முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேரா தனது 83ஆவது வயதில் நேற்று காலமானார்.

1941ஆம் ஆண்டு ஜனவரி 29ஆம் திகதி பிறந்த காமினி ஜயவிக்கிரம பெரேரா, ஐ.தே.க. வின் முன்னாள் தவிசாளர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சரும் ஆவார்.

06

### லேக்ஹவுஸ் நிறுவன ஸ்தாபகர்

## டி.ஆர். விஜயவர்தனவின் 138ஆவது ஜனன தின நிகழ்வு



லேக்ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் அமரர் டி.ஆர்.விஜயவர்தனவின் 138ஆவது ஜனன தினத்தையொட்டி லேக்ஹவுஸ் நிறுவனத்தில் எதிர்வரும் 21ஆம் திகதியும் 22ஆம் திகதியும் விசேட சமய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. எதிர்வரும் 21ஆம் திகதி இரவு 9.00 மணிக்கு சமய அனுஷ்டானம்

06

## எங்கள் கருத்து

### மனிதநேயம் இல்லாத காட்டுமிராண்டித்தனம்!

ஐக்கிய நாடுகள் சமவாயத்தின்படி உலகில் பதினெட்டு வயதுக்கு உட்பட்டவர்கள் அனைவரும் சிறார்களாவர். உளப்பக்குவம் முதிர்ச்சியடையாத சிறார்களின் அடிப்படை உரிமைகளைப் பேணுவதும், அவர்களுக்கான தேவைகளை வழங்குவதும் வளர்ந்தோரின் கடமைகள் ஆகின்றன.

பெற்றோரைப் பொறுத்தவரையில் தங்களது இளவயதுப் பிள்ளைகளின் நலன்களைப் பேணுவது அவர்களின் முக்கிய கடமையாகும். கல்வி, சுகாதாரம், பாதுகாப்பு உட்பட அனைத்து அடிப்படைத் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு உள்ளது. அதேவேளை சிறார்களுக்கான அடிப்படை உரிமைகளை மறுப்பதும், அவர்களது உரிமைகளை மீறுவதும் பாரதூரமான குற்றங்களாகும்.

ஐ.நாவின் சிறுவர் சமவாயத்தை ஏற்றுக் கொண்டுள்ள அத்தனை நாடுகளும் சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான நடைமுறைகளை கண்டிப்பாகக் கடைப்பிடித்து வருகின்றன; அதற்கான சட்டதிட்டங்களையும் வகுத்து அவற்றை கண்டிப்பாக நடைமுறைப்படுத்தி வருகின்றன.

06

### 'அஸ்வெசும' நலன்புரி நன்மைகள்

## விண்ணப்பிக்காத எவருக்கும் கொடுப்பனவுகள் கிடையாது



'அஸ்வெசும' நலன்புரி கொடுப்பனவு பெற வேண்டுமானால் தகுதியுடைய அனைவரும் மார்ச் 15ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டுமென நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க கேட்டுக்கொண்டுள்ளார். இதற்கு விண்ணப்பிக்காத எவருக்கும் நலன்புரி நன்மைகள்

06

### இன்னும் ஓரிரு மாதங்களின் பின்

## இலங்கையில் காணிகளின் விலை குறையும் வாய்ப்பு


இலங்கையில் காணிகளின் விலை எதிர்வரும் காலங்களில் வேகமாக வீழ்ச்சியடையுமென பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர். இலங்கையில் காணிச் சந்தையை திறக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

நாட்டில் ஒரு அங்குல நிலம் கூட சொந்தமில்லாத 20 இலட்சம் குடும்பங்களுக்கு காணி உறுதிகளை வழங்கியதன் மூலமும் அரச பெருந்தோட்டக்

06

### அமெரிக்க இராஜதந்திர துணை செயலர்

## எலிசபெத் எம். அலன் இலங்கை வருகிறார்



அமெரிக்க பொது இராஜதந்திரத்துக்கான துணைச் செயலாளர் எலிசபெத் எம்.அலன் (Under Secretary of State for Public Diplomacy and Public Affairs of United States) இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

06

### ஐ.நா. உணவு, விவசாய அமைப்பின்

## 37ஆவது மாநாடு நாளை கொழும்பில் ஆரம்பம்



ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 37ஆவது ஆசிய பசுபிக் பிராந்திய மாநாடு நாளை 19ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ளது. இம்மாநாடு எதிர்வரும் 22ஆம் திகதிவரை கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. மாநாட்டின் ஆரம்ப அமர்வு நாளை மறுதினம்

06

## நிந்தவூர்–ஒலுவில் கடலில் மூழ்கி இரண்டு சிறுவர்கள் உயிரிழப்பு

### கடல் அலைக்குள் படம் பிடித்து விளையாடியதாக தகவல்

ஒலுவில் விசேட, நிந்தவூர் தினகரன், மாளிகைக்காடு குறூப் நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்கள்





நிந்தவூர்-ஒலுவில் பிரதேச எல்லைக்குட்பட்ட கடற்கரையில் கடல் அலைக்குள்

06

### இலங்கைக்கு கடத்தவிருந்த

## 250 Kg கடலட்டைகளுடன் இந்தியாவில் ஒருவர் கைது

மன்னார் குறூப் நிருபர்



இந்தியாவின் இராமேஸ்வரம் ஆற்றங்கரை கடற்கரை அருகே அம்மன் கோவில்

06

அருள் சத்தியநாதன்



உலகின் ஏனைய ஜனநாயக நாடுகளைப் போலவே சட்ட ரீதியாக ஆணும் பெண்ணும் சமம் என்றும் வாய்ப்புகளில் ஏற்றத்தாழ்வுகள் கிடையாது என்றும் இலங்கை அரசியல் அமைப்பு சட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இது உண்மை. ஆனால் நடைமுறையில் ஆணும் பெண்ணும் சமம் அல்ல. நூறு வருடங்களுக்கு முன்னர் பெண்களை ஆண்கள் வன்முறை வழிகளைப் பயன்படுத்தியும் பெண்களை இழிவுபடுத்தும் சமூக நம்பிக்கைகளையும் பயன்படுத்தியும் அடக்கு ஒடுக்கி வைத்திருந்தனர். இன்று, அன்றைய வழிமுறைகளை ஆண்கள் நேரடியாக பயன்படுத்துவதில்லை. ஆனால் அவையே மறைமுகமாக தொழிற்பாட்டில் உள்ளன.

## ஃபரீடா கொரயா மகளிர் விருது வழங்கும் விழா

# சாதனை மகளிருக்கு மட்டுமல்ல; அவர்களைப் பற்றி எழுதிய, எழுத்தாளர்களுக்கும் பரிசில்கள்!

### பரிசில்களை வென்ற லேக்ஹவுஸ் எழுத்தாளர்கள்



ஒரு தம்பதிக்கு குழந்தை பிறக்கவில்லை என்றால் அதற்குக் காரணம் பெண்ணே என்று பழிச் சொல் சுமத்தப்படுகிறது. அங்கவீன அல்லது உளக் குறைபாடு கொண்ட குழந்தைகள் பிறந்தாலும் அதற்குக் காரணம் பெண் என்பதாகவே கருதும் ஆண் தன் மனைவியிடமிருந்து பிரிந்து செல்ல அதையே சாட்டாக வைத்துக் கொள்கிறான்.

மாற்றுத்திறனாளிகளை போஷிக்கும் சுனேரா பவுண்டேஷன் தொண்டு நிறுவனத்தை நடத்திவரும் சுனேத்ரா டயஸ் பண்டாரநாயக்க பெண் உரிமை பற்றி குறிப்பிடும்போது, மூன்று பிள்ளைகளின் தாயாரான தன் அன்னையார் தன் 43ஆவது வயதில் கணவரை இழந்ததாகவும், அதுவரை குடும்பப் பெண்ணாக இருந்த அவர் திடீரென தீவிர அரசியலில் ஈடுபட நேர்ந்ததோடு நாட்டின் பிரதமராக பதவியேற்றதாகவும் தெரிவித்திருப்பதோடு, ஒரு சாதாரண குடும்பப் பெண்ணால் இரண்டு முறை நாட்டின் அதிகாரம் கொண்ட பிரதமராக விளங்க முடிந்ததைப் பெண்கள் முன் உதாரணமாகக் கொள்ள வேண்டும் என்பதை அழுத்தமாக சுட்டிக்காட்டினார்.

பெண்களை பூட்டி வைக்கும் மடமையைக் கொளுத்துவோம் என நூறு ஆண்டுகளுக்கு முன்னரேயே பாரதி பாடி வைத்துவிட்டான். ஆனால் பெண்களுக்கான வாய்ப்புகள் இன்றைக்கும் பூட்டி வைக்கப்பட்டிருப்பதாகவே சுனேத்ரா சொல்கிறார். பெண்கள் கையூன்றி எழ முயற்சிப்பதற்கு ஆண்கள் முட்டுக்கட்டையாக இருக்கிறார்கள். ஒரு தொழிலை தொடங்கும் போது பெரும்பாலும் அக்காணி அல்லது கட்டடம் அப் பெண்ணின் பெயரில் இருப்பதில்லை. வங்கிகளின் கடன் பெறுவதில் சிரமங்கள் உள்ளன. இவ்வகையில் ஃபிரீடா கொரயா விருதுகள் போன்ற உழைக்கும் மகளிரை கைதூக்கிவிடும் திட்டங்கள் மிகவும் அவசியம் என்கிறார் சுனேத்ரா பண்டாரநாயக்க.

அது என்ன, ஃபிரீடா கொரயா விருதுகள்?

சமூகத்தின் கீழ் மற்றும் நடுத்தர மட்டங்களைச் சேர்ந்த பெண்கள் தமது குடும்ப வறுமையில் இருந்து மீள்வதற்காக தனக்கான வாய்ப்புகளைப் பயன்படுத்தியும் சவால்களை எதிர்கொண்டும் வெற்றியீட்டி ஒரு தொழில் முயற்சியாளராக வாழ்க்கையில் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அத்தகைய முன்மாதிரியான பெண்களை அடையாளம் கண்டு அவர்களை மேலும் ஊக்கப்படுத்தும் அதே சமயம், அயர்ந்து போகாமல் முயற்சி செய்தால் பொருளாதார ரீதியாக எந்த மட்டத்துப் பெண்ணினாலும் முன்னேறி முன்னணிக்கு வரலாம் என்ற செய்தியை ஏனைய முன்னேறத் துடிக்கும் மகளிருக்கு வழங்கலாம் என்பதையும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே ஃபிரீடா கொரயா விருதுகள்.

இலங்கையின் பொருளாதார நிபுணரும் ஐ.நா.வில் உயர்பதவிகளை வகித்தவருமான காமினி கொரயாவினால் ஆரம்பிக்கப்பட்ட தொண்டு நிறுவனமே காமி கொரயா பவுண்டேஷன்.

17 ஆம் பக்கம் பார்க்க...

# எடிசன் திரை விருதுகளில் 2023 ஆம் ஆண்டின் சிறந்த நடிகர் யார்?









16 ஆவது ஆண்டு எடிசன் திரை விருது நிகழ்வு எதிர்வரும் மார்ச் மாதம் சென்னையில் நடைபெற உள்ளது. அந்நிகழ்விற்கான தேர்வுப் பட்டியல் கடந்த ஆண்டு வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் திரைப்படங்களில் சிறந்த நடிகர் தேர்வுப் பட்டியலில் மாஸ் ஹீரோ வரிசையில் ரஜினிகாந்த், விஜய், அஜித், விஷால் ஆகியோர் இடம்பிடித்துள்ளனர்.

சிறந்த நடிகருக்கான தேர்வுப் பட்டியல் வரிசையில் விக்ரம், தனுஷ், சிவகார்த்திகேயன், கார்த்தி, சிம்பு, ஜெயம் ரவி, ராகவா லோரன்ஸ், சித்தார்த் போன்றவர்களும் இடம் பெற்றுள்ளனர். மேலும் உலகத்தமிழர்கள் தங்களுக்கு பிடித்தமான நடிகர்களை தேர்ந்தெடுக்க வசதியாக எடிசன் அவார்ட்ஸ் செயலியில் மற்றும் www.edisonawards.in என்ற வலைதளம் மூலமாகவும் வாக்குகளை செலுத்த வசதி செய்யப்பட்டுள்ளது.


பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்கள் அறியும் வகையில் தினசரி நாளேடு பண்பலை சமூக ஊடகங்கள் மூலமாகவும் விளம்பரம் செய்யப்பட்டு வாக்குகளை பெற்று வருவதாக எடிசன் விருது குழுத் தலைவர் செல்வகுமார் தெரிவித்தார். மேலும், தமிழ் ரசிகர்கள் தாங்கள் வாக்களித்த நடிகர், நடிகைகளை எடிசன் விருதில் ரெட் கார்பெட்டில் நடக்கும் நிகழ்வுகளை உலகத் தமிழர்கள் அறியும் விதத்தில் பல்வேறு நாடுகளில் உள்ள சமூக ஊடகங்கள் IPTVகள் மூலமாக காணும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும் விபரங்களுக்கு +6016 6167708 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

# தேசிய தொழில் தகைமை சான்றிதழ் என்றால் என்ன?

தேசிய தொழில் தகைமை முறையை ஆங்கில மொழியில் National Vocational Qualification என்றும் அதனை சுருக்கமாக NVQ என்றும் குறிப்பிடுவது பிரபலமாகி உள்ளது.

தொழில் தகைமை சான்றிதழ் என்பது ஒருவரது ஏதேனும் பணி/ தொழில் ஒன்றுக்காக உள்ள தேர்ச்சியை அடையாளம் கண்டு அந்தத் தேர்ச்சி மட்டங்களை நிலையான முறைமைக்கு அமைய உறுதி செய்து வழங்கப்படும் சான்றிதழ் ஒன்றாகும்.

இங்கு தேர்ச்சி மட்டம் 1 தொடக்கம் 7 வரை 07 படிகளில் NVQ முறைமை செயற்படுகிறது. அதேபோன்று NVQ rான்றிதழ் தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் தொழில் பெறுவதற்கு அங்கீகரிக்கப்படுகின்ற சான்றிதழ் ஒன்றாகும். இந்த தேசிய தொழில் தகைமை சான்றிதழை வழங்கும் முழுமையான அதிகாரம் பெற்றவராக செயற்படுவது கல்வி அமைச்சின் திறன் அபிவிருத்தி, தொழில் கல்வி ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவின் கீழான மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவாகும்.



NVQ கற்கைகள் மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவில் பதிவு மற்றும் கற்கை அங்கீகாரத்தைப் பெற்ற அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும். NVQ கற்கைகளை நடத்துவதற்கு பதிவு செய்யப்பட்ட அனைத்து நிறுவனங்கள் தொடர்பிலான விபரம் மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவின் இணையதள பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இங்கு ஏேஞ சான்றிதழை பெற்றுக் கொள்ள முடியுமான 500 வரையான தொழில்கள் அளவில் கற்பதற்கு தேசிய தேர்ச்சி நிலையை மேம்படுத்தி இருப்பதோடு அது NVQ 1–4 சான்றிதழ் மட்டத்திற்கும் மற்றும் 5.'.6 டிப்ளோமா மட்டமாகவும் வகைப்படுத்தப்பட்டுள்ளது.

### NVQ சான்றிதழ் ஒன்றை பெற முடிவது எவ்வாறு?

பிரதானமாக பயிலுனர் நிலையில் உள்ளவர்கள் போன்று தொழில் ஈடுபடுகின்ற அனுபவம் பெற்ற தொழில்முறையாளர்களுக்கு ஏேஞ சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள முடியுமான 04 முறைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.




1. CBT (தேர்ச்சி அடிப்படையான பயிற்சி மூலம் பயிற்சி கற்கையை கற்றல்)
2. EBT (கைத்தொழில் பயிலுனர் பயிற்சி மூலம்)
3. RPL (முன் அறிவு அங்கீகார முறை)
4. FLM (தேர்ச்சி அலகுகளை கற்றல் முறை மூலம் - (Flexible Learning Method)

இங்கு மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு முறை மூலமும் பெற்றுக்கொள்ள முடியுமான NVQ மட்டங்களில் மாற்றம் உள்ளது.

| முறை | பெற முடியமாகு ஏேஞ மட்டம் |
|---|---|
| 1.CBT | 1-2-3-4-5-6 |
| 2.EBT | 1-2-3-4 |
| 3.RPL | 1-2-3-4 |
| 4.FLM | 1-2-3-4 |

ஏேஞ 7 மட்டம் பட்டப்படிப்பு கற்கை ஒன்றாகும் ஒன்பதோடு அதன் தகைமைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மூலம் அங்கீகரிக்கப்பட்ட இரத்மலானையில் அமைந்துள்ள தொழில்நுட்ப கல்லூரி மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த முறையின் கீழ் ஏேஞ சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொள்வதாயின் 16 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும். அந்தந்த தேர்ச்சி மட்டதிற்கு அமைய முழு நேர கற்கைக்காக எடுத்துக் கொள்ளும் காலம் பின்வருமாறு அமையும்

| தேர்ச்சி மட்டம் | நிறுவன பயிற்சி | தொழில்துறை பயிற்சி |
|---|---|---|
| L–1-3 | 06 மாதங்கள் நிறுவனத்தில் - பயிற்சி முறைக்கு அமைய கற்கை காலம் தீர்மானிக்கப்படும். | - |
| L–1-4 | 06 மாதங்கள் தொடக்கம் 12 மாதங்கள் | 06 மாதங்கள் |
| L–5 | 12 மாதங்கள் | 06 மாதங்கள் |
| L–6 | 12 மாதங்கள் | 06 மாதங்கள் |
| L–7 | 36 மாதங்கள் | 01 வருடம் |

* நிறுவனத்தின் பயிற்சி முறை மற்றும் தொழில் கற்கைக்கு அமைய கற்கை காலம் முடிவாகும்.

CBT முறையின் கீழ் நடைபெறுகின்ற கற்கைககள் மற்றும் நிறுவனங்களை தெரிந்துகொள்வதற்கு மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவின் இணைய பக்கத்தில் https://nvq.gov.lk/TVET_GUIDE/ மூலம் மற்றும் பட்டப்படிப்பு தொடர்பான விபரங்களை http://univotec.ac.lk மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.

### RPL முறை

முன் அறிவு மூலம் NVQ சான்றிதழை பெற்றுக்கொள்ளல்.

தேசிய தொழில் தகைமை முறை மூலம் தொழில்துறையில் அனுபவம் கொண்ட தொழில்முறையாளர்களுக்கு தேசிய தொழில் தகைமை 4 மட்டம் வரை சான்றிதழ் பெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி தேசிய தொழில் தகைமையை மேம்படுத்தி உள்ள அனைத்து தொழிலுக்காகவும் இந்த முறை மூலம் அங்கீகாரத்திற்கு உட்படுத்தப்பட்டு தேசிய தொழில் தகைமை சான்றிதழ் ஒன்றை பெற்றுக்கொள்ள முடியும்.

RPL- Recognition of prior Learning- **முன் அறிவின் அங்கீகாரம்.**

இந்த முறை மூலம் முறையான (Formal) முறையற்ற (Informal) சுயமான மற்றும் தம்முடைய அதாவது வர்த்தக நோக்கம் இன்றி சுய தொழில் ஒன்றில் ஈடுபட்டுள்ள தொழில் அனுபவத்தைக் கொண்டவர்களுக்கு NVQ சன்றிதழை பெற்றுக்கொள்ள முடியுமாக உள்ளது.

அதேபோன்ற மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவனம் ஒன்றில் பயிற்சி கற்கை ஒன்றை கற்றுள்ள மற்றும் தேசிய ஆரம்ப நிலை பயிற்சி பெறுவோருக்காகவும் அவர்கள் கற்கும் கற்கை காலத்தை அடிப்படையாகக் கொண்டு அனுபவ காலம் அடிப்படையில் NVQ3 மற்றும் 4 மட்ட சான்றிதழ்களை பெற்றுக்கொள்ள முடியும்.

மேலுள்ள முறைகள் மூலம் தேசிய தொழில் பயிற்சி சான்றிதழை பெற்றுக்கொள்ளும்போது விண்ணப்பதாரர்களினால் செய்வேண்டிய படிகள்,

- ✶ தமது அனுபவ தொழில் சான்றிதழை மேற்கொள்ளும் பணிகள் தொடர்பில் உறுதி/ அத்தாட்சி/ கிராம உத்தியோத்தர் சான்றிதழ்/ ஆவணங்கள் கொண்டதாக விண்ணப்பத்தை இலங்கை தொழில் பயிற்சி அதிகாரசபைக்கு (ஏவுயு), தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (NAITA) அல்லது கைத்தொழில் மற்றும் பயிற்சி திணைக்களத்தின் ((Technical college) கீழ் உள்ள தொழில்நுட்ப கல்லூரிக்கு சமர்ப்பித்தல்.
- ✶-குறித்த விண்ணப்பப் படிவம் மற்றும் ஆவணங்களை குறித்த மதிப்பீட்டுக்கு போதுமானதா என்பதை உறுதி செய்தல்.
  -தனி மதிப்பீட்டுக்கு அல்லது குழு மதிப்பீட்டுக்கு பங்கேற்பதா என்பதை தீர்மானித்தல்.
  -தற்போது பொது அறிவு மதிப்பீடு சார்ந்த 13 துறைகளுக்கு உரித்துடைய தொழில் ஆயின் பொது கோட்பாட்டு பரீட்சைக்கு தோனறி தகைமையை பெற்றுக்கொள்ளல்.
- ✶ தனியாக குறித்த கோட்பாட்டு மதிப்பீடு ஒன்றுக்கு முகம்கொடுப்பதற்கு தேவையாயின் கோரிக்கை விடுத்தல்.
- ✶ குறித்த தகைமையை பூர்த்தி செய்த பின் நியமிக்கப்படும் மதிப்பீட்டாளர் முன் ஆரம்ப மதிப்பீடு ஒன்றுக்கு முகம்கொடுத்து எதிர்பார்க்கப்படும் தேர்ச்சியை உறுதி செய்தல்.
- ✶ இறுதி மதிப்பீட்டுக்கு நியமிக்கப்படும் மதிப்பீட்டாளர்கள் இருவர் முன் தோன்றல் மற்றும் குறித்த பரீட்சையை பூர்த்தி செய்தல்.
- ✶ மதிப்பீட்டாளர்களினால் தமது திறனை மதிப்பிடுவது தொடர்பில் மற்றும் பூர்த்தி செய்யப்பட்ட தகைமைகள் தொடர்பில் உறுதி செய்து கொள்ளல்.
- ✶ குறித்த மதிப்பீட்டை சோதித்த பின் மதிப்பீட்டாளர்கள் முன்வைக்கும் ஆவணங்களை சரியாக மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவுக்கு சமர்ப்பித்த பின் தமது சான்றிதழை குறித்த மதிப்பீட்டை மேற்கொண்ட நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொள்ளல்.
- ✶ தமது சான்றிதழ் தொடர்பிலான விபரங்கள் மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழுவின் இணையப் பக்கத்தில் ஏேஞ ஊநசவகைஉையவந ர்ழடனநசள லிங்க் மூலமும் உறுதி செய்துகொள்ள முடியும்.

**வஜிர பண்டார விஜேசிங்க**
**(உதவிப் பணிப்பாளர்)**
**மூன்றாம் நிலைக்கல்வி, தொழில்கல்வி ஆணைக்குழு**
**Email-wijesinghe@tvec.gov.lk**
**Mobile- 0762370423**

TOUCH YOUR FUTURE
திறன்கள் போட்டி 2024

கல்வி அமைச்சின் திறன்கள் அபிவிருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க பிரிவு மற்றும் மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு கூட்டாக இணைந்து நடாத்தும் போட்டி, மாகாண ரீதியான கோட்பாடு/செயற்முறை மற்றும் இறுதிப் போட்டி என இரண்டு (02) கட்டங்களில் நடாத்தப்படும். இப்போட்டிக்காக பின்வரும் தொழில்களில் தகுதி பெற்றவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகிறது.

மாகாண கோட்பாட்டு கட்டம் / மாகாண செய்முறை கட்டம் → இறுதிக் கட்டம்

சம்பந்தப்பட்ட தொழில்கள்

1. வெதுப்பக்கலை விளைஞர் (Baker)
2. சமையற்கலை விளைஞர் (Cook/ Professional Cookery)
3. காய்ச்சியிணைத்தல் விளைஞர் (Welder)
4. பொறி விளைஞர் (Machinist)
5. நீர்க்குழாய் விளைஞர் (Plumber)
6. மரவேலை விளைஞர் (தளபாடம்) (Wood Craftsman – Furniture)
7. கட்டுமான விளைஞர் (மேசன்) (Construction Craftsman – Masonry)
8. அலுமினிய சட்டகவேலை விளைஞர் (Aluminum Fabricator)
9. மின்சாரவேலை விளைஞர் (Electrician)
10. கணினி வரைகலை விளைஞர் (Computer Graphic Designer)
11. மணப்பெண் அலங்காரவேலை விளைஞர் (Bridal Dresser)
12. மோட்டார் வாகனவேலை விளைஞர் (Automobile Technician/ Automobile Mechanic)
13. தையற்கலை விளைஞர் (Tailor)
14. தாதி உதவியாளர் (Nurse Assistant)

விண்ணப்பிப்பதற்கான தகைமைகள்

- 2024.02.29 திகதியன்று 17-35 வயதுக்கு இடைப்பட்ட இலங்கைப் பிரஜையாக இருத்தல்
- மேற்கூறிய NVQ பாடநெறியொன்றை 2019/2020/2021/2022/2023 ஆகிய ஆண்டுகளில் பயின்று 2024.02.29 திகதிக்கு முன்பு தேசிய தொழிற்திறன் தகுதி மட்டம் 04 (NVQ) சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது
- பாடநெறி தராதர அங்கீகாரம் (Accredited) பெற்ற பயிற்சி நிறுவனத்தில் 2023 ஆம் ஆண்டில் NVQ பாடநெறியை நிறைவுசெய்து மற்றும் தொழிலின் போதான பயிற்சியையும் (OJT) நிறைவு செய்துள்ள அல்லது தற்போது OJT இலுள்ள பயிலுநர்கள்
- மேற்கூறிய ஆண்டுகளில் நிறுவனஞ்சார் பயிற்சியை (EBT) பூர்த்திசெய்து NVQ மட்டம் 04 சான்றிதழைப் பெற்றிருத்தல் அல்லது பயிற்சிக் காலத்தின் 75% ஐ பூர்த்தி செய்திருத்தல்
- தொழில் அனுபவ முறையினூடாக (EBT) மேற்கூறிய ஆண்டுகளில் NVQ மட்டம் 04 சான்றிதழைப் பெற்றிருத்தல்

மேற்கூறிய வகையில் தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின்

மேற்கூறிய வகையில் தகைமைகளைப் பூர்த்தி செய்திருப்பின் உங்களது விண்ணப்பத்தை TVEC இன் இணைய தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து முறையாகப் பூர்த்திசெய்து TVEC யிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

- மேலதிக விபரங்களுக்கு TVEC இணைய தளத்திற்கு நுழையவும்.

www.tvec.gov.lk

முதல் பரிசுத்தொகை ரூ. 250,000
இரண்டாம் பரிசுத்தொகை ரூ. 150,000
மூன்றாம் பரிசுத்தொகை ரூ. 100,000

விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2024 மார்ச் 15 வரை

உடனடித் தொடர்புகளுக்கு 077 450 5040
e-mail skills@tvec.gov.lk

பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழு,
நிபுணதா பியச (03 ஆம் மாடி), 354/2, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 05.
தொலைபேசி இல : 011-760 8000, 011 760 8057 பெக்ஸ் : 011 – 255 5007
TVEC

# தலைமன்னார் சிறுமிக்கு நேர்ந்த கொடூரம்

மன்னார் குறூப் நிருபர் எஸ். றொசேரியன் லெம்பேட்

சிறுவர்கள் எதிர்கால இலங்கையின் தூண்கள். அவர்களின் பாதுகாப்பு என்பது நிச்சயம் உறுதி செய்யப்பட வேண்டும் என்பது பலரது கோரிக்கையாக உள்ளதோடு பெண்கள் சிறுவர்களுக்கு எதிராக இடம் பெறும் வன்முறைச் சம்பவங்களை கட்டுப்படுத்த அரசு பல்வேறு திட்டங்களை முன்னெடுத்து வரும் நிலையில் நாளுக்கு நாள் இலங்கையில் பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்களும் அரங்கேறிய வண்ணமே உள்ளது.

இந்த வகையில் மன்னார் மாவட்டம் தலைமன்னார் கிராம பகுதியில் வியாழக்கிழமை இரவு 10 வயதுடைய சிறுமி ஒருவ



ருக்கு கொடூரச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

தலைமன்னார் கிராம பகுதியில் கொலை செய்யப்பட்ட நிலையில் 10 வயதுடைய சிறுமி ஒருவர் வெள்ளிக்கிழமை (16) காலை சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் அப்பிரதேச மக்கள் மத்தியில் சோகத்தையும்,கொந்தளிப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

மன்னார் தலைமன்னார் கிராம பகுதியில் வசித்து வரும் அ.ஆன்கியான்சிதா (வயது 10) என்ற சிறுமி வியாழக்கிழமை (15) இரவு காணாமல் போன நிலையில் மறுநாள் வெள்ளிக்கிழமை (16) அதிகாலை குறித்த பகுதியில் உள்ள தென்னந் தோட்டம் ஒன்றின் பின் பகுதியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறுமியின் தாயார் தலைமன்னாரையும் தந்தையார் புத்தளம் பகுதியையும் சேர்ந்தவர்கள். குறித்த தம்பதியினருக்கு 4 பிள்ளைகள் உள்ளனர். நான்கு பிள்ளைகளையும் தலைமன்னார் கிராமத்தில் உள்ள தனது தாயிடம் அதாவது பிள்ளைகளின் அம்மம்மாவின் பாதுகாப்பில் விட்டு விட்டு, தாயும், தந்தையும் புத்தளம் மாவட்டம் பூங்குளம் பகுதியில் தங்கியிருந்து தொழில் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

உயிரிழந்த சிறுமி குடும்பத்தின் 3வது பெண் பிள்ளை. 2 அக்கா மற்றும் 1 தம்பியுடன் தனது அம்மம்மாவின் வீட்டிலேயே குறித்த நால்வரும் வசித்து வந்துள்ளனர். சம்பவ தினம் வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் சிறுமி தனது தம்பிக்கு சாப்பிட உணவு வாங்க அருகில் உள்ள கடைக்குச் சென்றுள்ளார்.

கடைக்குச் சென்ற சிறுமி நீண்ட நேரம் ஆகியும் வீடு திரும்பாத நிலையில் உறவினர்கள் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததோடு, பொலிஸார் சிறுமியை தேட நடவடிக்கை எடுத்தனர்.

அவர்களது வீட்டுக்கருகில் உள்ள தென்னந்தோட்டத்தில் சென்று வினவிய போது அங்கிருந்த நபர் தனக்கு எதுவும் தெரியாது என தெரிவித்த நிலையில் பொலிஸார் மீண்டும் தேடியுள்ளனர்.

பின்னர் அப்பகுதியில் உள்ள CCTV காணொளியை பரிசோதித்த போது சிறுமியின் பின்னால் அச்சிறுமியைப் பற்றி பொலிஸார் முதலில் விசாரித்த நபர் செல்வது தெரியவந்தது.

இந்த நிலையில் குறித்த நபரை கைது செய்து விசாரணைகளுக்கு உட்படுத்தி இரவு முழுவதும் தேடிய போதும் வெள்ளிக்கிழமை (16) அதிகாலை சிறுமியின் உடல் தனியார் தென்னந் தோட்டத்தின் பின் பகுதியில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபரிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த போது அவரது அடையாள அட்டையில் குச்சவெளி திருகோணமலை யைச் சேர்ந்தவர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் அந்நபர் தலைமன்னாரில் தனது பெயரை விஜேயந்திரன் என மாற்றி வசித்து வருவதும் தெரிய வருகிறது.

சந்தேக நபர் போதைக்கு அடிமையாகி மனைவியைப் பிரிந்து சென்றுள்ளார் என்பது தெரிய வந்துள்ளது.

கொலை செய்யப்பட்ட சிறுமியின் அம்மம்மா அண்மைய நாட்களாக அந்நபருக்கு உணவு வழங்கி வந்ததாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த மன்னார் பதில் நீதவான் சடலத்தை பார்வையிட்ட பின்னர் சடல பரிசோதனைக்காக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்க உத்தரவிட்டார்.

இதன் போது சட்ட வைத்திய அதிகாரி தடயவியல் நிபுணத்துவ பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்திருந்தனர். தலைமன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை தலைமன்னார் கிராமத்தை சேர்ந்த மக்கள் வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டதுடன் சந்தேகநபரை உடனடியாக தூக்கில் போடுமாறும் கோஷங்களை எழுப்பினர். சந்தேகநபருக்கு உரிய தண்டனையை விரைவில் வழங்குமாறு கோரி விசாரணைக்காக வருகை தந்த பதில் நீதவானிடம் மகஜர் ஒன்றை கையளித்தனர்.

குறித்த சிறுமி துஷ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளாரா? என்பது குறித்து தலைமன்னார் பொலிஸார் சந்தேக நபரிடம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சம்பவம் தலைமன்னார் பகுதி மக்கள் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. சடலம் சட்ட வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே சிறுமியின் மரணம் தொடர்பாக அறிந்து கொள்ள முடியும். சிறுமியின் கொலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கண்டனம்

சிறுவர்கள் பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகளுக்கு போதைப்பொருள் பாவனை பிரதான காரணமாக இருக்கிறது. சிறுமியின் மரணம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. பொலிஸார் சிறுமியின் கொலைக் குற்றவாளியை விரைவாக கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தி அதி உச்ச தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.


இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் ஆயிரக்கணக்கான முறைப்பாடுகள் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு கிடைத்துள்ளன. கடந்த வருடம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான 10,000 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 2,242 முறைப்பாடுகளும், பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான 472 முறைப்பாடுகளும், கடுமையான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான 404 முறைப்பாடுகளும், சிறுமிகள் பலாத்காரம் தொடர்பான 51 முறைப்பாடுகளும், சிறுவர்களை ஆபாசமான பதிவுகளில் பயன்படுத்தியமை தொடர்பான 06 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.



மேலும், போதைப்பொருள் கடத்தலுக்கு சிறுவர்களை பயன்படுத்துதல், தொழிலாளர்களாக பயன்படுத்துதல், குடும்ப வன்முறை, புறக்கணிப்பு, கடத்தல், காயப்படுத்துதல், சிறுவர்களை விற்பனை செய்தல், பாடசாலை கல்வி வழங்காமை தொடர்பிலும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபைக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக அதன் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் உதய குமார அமரசிங்க தெரிவித்தார். சிறுவர்கள் எதிர்கால இலங்கையின் தூண்கள். அவர்களின் பாதுகாப்பு என்பது நிச்சயம் உறுதி செய்யப்பட வேண்டும் என்பது பலரது கோரிக்கையாக உள்ளது.





# கோட்டே - நாவல ஊடான புதிய மேம்பாலம் நிர்மாணம்

ஒரு நாட்டின் அபிவிருத்தி பெருகுவதற்கு அந்நாட்டின் கல்வி, சுகாதாரம் மற்றும் பெருந் தெருக்கள் போன்ற மூன்று துறைகளும் கண்டிப்பாக முன்னேற்றமடைந்த நிலையில் இருக்க வேண்டும். எமது நாட்டின் எழுத்தறிவு உயர்ந்த மட்டத்தில் இருந்தாலும் பெருந்தெருக்கள் அபிவிருத்தியென்பது நீண்ட காலமாக ஆமை வேகத்திலேயே செல்கிறது.

நெடுஞ்சாலைகள் மற்றும் மேம்பாலம் என்ற எண்ணக்கரு கொண்டு வரப்பட்டாலும், அந்த நடவடிக்கைகளும் அவ்வப்போது தடைப்பட்டுப் போயின. அவ்வாறு தடைப்பட்டுப் போயிருந்த மற்றொரு மேம்பால வீதியாக அமைந்திருந்தது நாவல அங்கம்பிட்டி மேம்பால வீதியாகும்.

2019/2020 ஆண்டு காலப்பகுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முயற்சியினால் இதன் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது அப்பிரதேசத்துடன் தொடர்புடைய சில எதிர்க்கட்சி அரசியல்வாதிகளின் பொய்யான கதைகளை புறக்கணித்தேயாகும்.

நாவல, அங்கம்பிட்டி ஊடாக கோட்டே மற்றும் நாரஹேன்பிட்டியை இணைக்கும் வீதியொன்றை அமைக்கும் போது அது சுற்றாடல் பாதிப்புக்குள்ளான பிரதேசம் என்பதனால் பொருத்தமற்றது என பொய்யான கதைகள் பரப்பப்பட்டன.

என்றாலும் இதனை கொலன்னாவை கால்வாய் ஊடாக மேம்பாலமாக நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை அந்த போலிக் கதைகளை உருவாக்கியவர்களுக்குத் தெரியாது.

இந்தப் பாலத்தை 1500 மில்லியன் ரூபாய் செலவில் நிர்மாணிப்பதற்கு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. கொவிட் தொற்றுநோயின் பின் பாலத்தின் நிர்மாணப் பணி நிறுத்தப்பட்டது. மிகப் பெரும் செலவினைச் செய்து பணிகள் நிறைவடையும் நிலையில் இருந்த போதிலும், அதன் பின்னர் நான்கு வருடங்களாக இந்தப் பாலத்தின் பணிகள் முற்றாக தடைப்பட்டது. 6 வரிசை கொங்கிரீட் தூண்களில் ஒரு பகுதி மட்டும் அதாவது மேலும் 60 கொங்கிரீட் பீம்கள் பதிக்க வேண்டி இருந்த நிலையில் அது தடைப்பட்டது



இவ்வாறு சுமார் 4 வருடங்களாக நிர்மாணப் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டிருந்த நாவல அங்கம்பிட்டிய பாலத்தின் நிர்மாணப் பணிகளை மீள ஆரம்பிக்க வேண்டும் என கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி மதுர விதானகே பல சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியிருந்தார். இந்தப் பாலத்தை நிர்மாணிப்பதற்கு திட்டமிட்ட காலத்திலிருந்தே அதற்காக அவர் தன்னை அர்ப்பணித்து கடுமையாகப் பாடுபட்டதோடு, போலிக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்த எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுடன் கூட மோதிக் கொண்டார்.

இந்தப் பாலத்தின் நிர்மாணத்தினால் சுற்றுச் சூழல் அழிவு ஏற்படுவதோடு, சுற்றுப்புறப் பகுதி மிகவும் பாதுகாப்பற்றதாகவும், சட்டவிரோத நிர்மாணங்களை நோக்கிச் செல்வதாகவும் முன்வைக்கப்பட்ட போலிக் குற்றச்சாட்டுக்களோடு மதுர விதானகே எம்.பிக்கு மோத நேர்ந்தது.

போக்குவரத்து, பெருந்தெருக்கள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன, அந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்கான மீதிப் பணத்தை அமைச்சரவையின் ஊடாக அங்கீகரித்தார். அதனைத் தொடர்ந்தே அவரால் அந்தப் போலிக் குற்றச்சாட்டுக்களை முறியடிக்க முடிந்தது.

பத்தரமுல்லை புறக்கோட்டை வீதி மற்றும் நாவுல ராஜகிரியவை இணைத்து நாவல ராஜகிரிய கால்வாய் (கொலன்னாவ கால்வாய்) ஊடாக நிர்மாணிக்கப்படும் நாவல அங்கம்பிட்டி பாலத்தின் தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ள நிர்மாணப் பணிகளை துரிதமாக நிர்மாணித்து முடிப்பதற்காக இந்த வருடத்திற்கான வரவு செலவுத் திட்டத்தில் 900 மில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் பாலத்தின் கடைசிக் கட்டத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பிப்பதற்கு அப்பாலத்தினைப் பார்வையிடுவதற்காக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத் துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன உள்ளிட்ட அதிகாரிகள் குழுவினர் அப்பகுதிக்கு விஜயம் செய்தனர். அதனடிப்படையில் பாலத்தின் மிகுதி வேலைகளைத் துரிதமாக நிறைவு செய்ய வேண்டும் என அமைச்சரினால் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் அரச அபிவிருத்தி, நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் (SD & CC) அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

சுமார் 700 மீட்டர் தூரத்தைக் கொண்ட இந்தப் பாலம் 10.4 மீட்டர் அகலத்தைக் கொண்டதாகும். அதன் நிர்மாணத்திற்கான மொத்த செலவு 2600 மில்லியன் ரூபாய்களாகும்.

கொவிட் தொற்று காலத்திற்கு முன்னர் இதன் பணிகளுக்காக 1500 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் செயற்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் (SD & CC) மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. உள்நாட்டு அரசாங்க நிறுவனத்தின் ஊடாக இந்த நிர்மாணப் பணிகளை மேற்கொள்வது வெளிநாடுகளுக்குச் செல்லும் எமது பணத்தை மிச்சப்படுத்துகிறது.

இந்த நிர்மாணத்தின் மூலம் நாட்டின் பல துறைகளுக்கு நன்மை கிடைக்கும் என இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகள் தொடர்பில் அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனத்தின் (SD & CC) தலைவர் குசான் தேவிந்த தெரிவித்தார்.

“புதிதாகப் பாலம் ஒன்றை நிர்மாணிப்பது சாதாரணமான ஒரு விடயம் என பலர் நினைக்கிறார்கள். எனினும் நகரப் பகுதிகளில் இவ்வாறான பாலம் ஒன்றை நிர்மாணிப்பது என்பது அந்த நகரம், அதனை அண்மித்ததாக காணப்படும் மிகப் பெரும் போக்குவரத்து நெரிசல்களைக் குறைப்பதாகும். அதன் ஊடாக மக்களின் பெறுமதியான கால நேரங்கள் மீதப்படுத்தப்படுத்துவது மாத்திரமின்றி நாட்டின் எரிபொருள் இறக்குமதிக்கும் செலவிடப்படும் பெருமளவிலான வெளிநாட்டுச் செலாவணியின் அளவும் எமக்கு மீதப்படுத்தப் படுகின்றது.



இதற்கு நல்லதொரு உதாரணம், காலி வீதிக்குச் சமாந்தரமாக நிர்மாணிக்கப்பட்ட மெரைன் ட்ரைவ் வீதியாகும். அந்த வீதியில் அதிகளவில் பயணிப்பது இலகு வாகனங்களாகும். அது பஸ்களுக்கான வீதி அல்ல.

பம்பலப்பிட்டி புகையிரத நிலையத்திற்கு அருகில் பாலத்தை அப்புறப்படுத்துவதற்காக ஒரே ஒருநாள் தான் வீதி மூடப்பட்டது. அன்று காலி வீதியில் காணப்பட்ட போக்குவரத்து நெரிசலினால் எமக்கு பொலிஸாரிடமிருந்து மாத்திரமல்ல, பல துறைகளிலிருந்தும் நாட்டின் உயர் தரப்பினரிடமிருந்தும் கூட தொலைபேசி அழைப்புக்கள் வந்தன. சில மணி நேரமாக அவ்வீதியில் அதிக போக்குவரத்து நெரிசல் நிலவியது. எனினும் அவ்வாறான பாரிய சேவை ஒன்று அந்த வீதியின் ஊடாக வழங்கப்படுகின்றது என்பதைப் பார்க்கும் போது அது கஷ்டமாகத் தெரிவதில்லை.

அதேபோன்றுதான் இந்த நாவல கோட்டை வீதியும். தற்போது பாரிய போக்குவரத்து நெரிசல் கோட்டை, பத்தரமுல்ல, நாவல, நாரஹேன்பிட்ட நகரங்களில் காணப்படுகின்றது. குறிப்பாக காலையிலும் மாலையிலும் இந்நிலை உள்ளது. இது தொடர்பில் அறிக்கையைப் பெற்றுக் கொண்டதால் தான் இவ்வாறான பாலத்திற்கான தேவை தோன்றியிருக்கின்றது. அந்தத் தேவையின் அடிப்படையில்தான் இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

நீண்ட மேம்பாலமாக நிர்மாணிக்கப்படும் இந்தப் பாலமானது முழுமையாகவே தூண்களின் மீதே அமைக்கப்படுகின்றது. தூண்களின் மீது நிர்மாணிக்கப்படுவதால் எந்த வகையிலும் சுற்றாடல் பாதிப்புக்கள் ஏற்படப் போவதில்லை.

இந்த வீதியில் கனரக வாகனங்கள் பயணிக்க முடியும் என்றாலும் இலகு வாகனங்களின் போக்குவரத்தை மாத்திரமே நாம் எதிர்பார்க்கின்றோம். தற்போது ஆறு பொறியியலாளர்கள் உள்ளிட்ட 30 பேர் பாலத்தின் பணிகளை துரிதமாக முடிப்பதற்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். நாம் ஐந்து மாதத்திற்குள் மீதி வேலைகளை முடிப்போம். மிகக் குறுகிய வேலைகள் மீதமுள்ளன” என்றார்.

கடந்த பெப்ரவரி 08ஆம் திகதி இந்தப் பாலத்தின் பணிகளை மீள ஆரம்பிப்பதற்கான சிறிய நிகழ்வொன்று அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தனவின் தலைமையில் இடம்பெற்றது. பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி மதுர விதானகே உள்ளிட்ட தரப்பினர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தனர்.

நிர்மாணப்பணிகள் மீள ஆரம்பிக்கும் பணிகளைப் பார்வையிடுவதற்காக விஜயம் செய்திருந்த அமைச்சர் அதன் பணிகளைத் துரிதமாக முடிப்பதற்கு இருக்கும் தேவைகள் என்ன என்பதை ஆராய்ந்து பார்த்தார். கோட்டை பிரதேசத்தில் நிலவும் அதிக போக்குவரத்து நெரிசலுக்கான தீர்வாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் தயாரிக்கப்பட்ட திட்டத்திற்கு அமைவாக சுற்றாடலுக்கு சார்பான முறையில் தூண்களின் மீது நிர்மாணிக்கப்படும் இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகளை ஆரம்பித்ததாக அமைச்சர் இதன் போது குறிப்பிட்டார்.



“சுமார் 170 கோடி ரூபாய் செலவிடப்பட்டு பாலத்தின் நிர்மாணப்பணிகளை முன்னெடுத்துச் செல்லும் போது நாடு முகங்கொடுத்த கொவிட் தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் இந்த நிர்மாணப்பணிகள் முழுமையாக நின்று போயின.

விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் என்ற வகையில் பல சந்தர்ப்பங்களில் இந்த இடத்திற்கு விஜயம் செய்ததன் பின்னர் தற்போதைய ஜனாதிபதியிடம் விசேட அறிக்கையினைச் சமர்ப்பித்து இந்தத் திட்டத்தின் இறுதிக் கட்டத்தினை முடிக்காமல் இருப்பது பெரும் அநியாயம் என்பதை எடுத்துக் கூறினேன்.

மிகப் பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள நாடு என்ற வகையில் நாட்டை அன்றாடம் முன்னெடுத்துச் செல்லக் கூடிய மட்டத்திற்கான வருமானம் இதுவரை இருந்த எந்த ஒரு அரசாங்கத்திற்கும் கிடைக்கவில்லை. இதன் காரணமாக நீண்ட காலமாக செலவுகளைச் செய்து கொள்ள முடியாத நாடாக இலங்கை மாறியுள்ளது. சுதந்திரத்திற்குப் பின்னர் இன்று வரைக்கும் அரசாங்கத்தின் முதன்மைக் கணக்கில் மேலதிக இருப்பு இருந்தது ஆறு வருடங்கள் மாத்திரமேயாகும். எனவே நாட்டின் அனைத்து அபிவிருத்திப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பது உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்களைப் பெற்றேயாகும்.


இநத வருடத்தினுள் நிறைவு செய்யக் கூடிய பணியாக இந்தப் பாலத்தின் நிர்மாணப் பணிகளை நிறைவு செய்வதற்கு 90 கோடி ரூபாய் நிதியினை இந்த முறை வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி ஒதுக்கியுள்ளார். அதனடிப்படையில் இந்தப் பாலத்தின் இறுதிக்கட்டத்தை நிர்மாணிக்கம் பணிகளை ஆரம்பிப்பதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. வரும் ஜுன் மாதத்திற்குள் இந்தப் பாலத்தினை மக்கள் பாவனைக்கு விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வோம். இதற்காக அனைவரினதும் ஒத்துழைப்பும், பங்களிப்பும் தொடர்ச்சியாகத் தேவையாக உள்ளது.” என்றார்.

பாலம் முழுக்க முழுக்க தூண்களின் மீது கட்டப்பட்டுள்ளது. அதனால் சுற்றுச்சூழலுக்கு எந்த ஒரு பிரச்சனையும் ஏற்படப் போவதில்லை. அத்துடன் கொலன்னாவ கால்வாய் நீர்வாழ் தாவரங்களால் முற்றாக மாசடைந்துள்ளது. அந்தக் கால்வாயும் எதிர்காலத்தில் இதன் மூலம் சுத்தப்படுத்தப்படும்.

அங்கம்பிட்டி பாலத்திற்கு அருகில் இருந்து பார்த்தால் கொழும்பு போன்ற பரபரப்பான நகரத்தில் இருப்பது போல் உணர முடியாது. அது ரஜரட்ட காட்டினை நினைவுபடுத்தும் சூழலை கொண்டுள்ளது.

வரும்காலங்களில் வாகனப் போக்குவரத்து அதிகமாகும் போது அந்த பதற்றமான சூழல் பிராந்தியத்திற்கு எந்தப் பிரச்சினையும் ஏற்படாமலிருப்பது பாலம் முற்றாகவே தூண்களினால் நிர்மாணிக்கப்படுவதனாலாகும். இவ்வாறான பாலம் நிர்மாணிக்கப்படப் போவது அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அதிகமானோர் கூட அறியாதிருந்தமையையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

***தாரக விக்ரமசேகர***
***தமிழில் – எம். எஸ். முஸப்பிர்***







இலங்கை வானொலி நிலைய குமாரதுங்க முனிதாச கலையகத்தில் கடந்த வெள்ளிக் கிழமை நடைபெற்ற தென்றல் எப் . எம். வழங்கிய "மதுர கீதங்கள்'' இசை நிகழ்ச்சியில் தமிழகத்தில் வெற்றிவாகை சூடிய யாழ். இசைக்குயில் கில்மிஷா, தங்கப் பதக்கம், விருது மற்றும் "தமிழிசைக் குரல்" பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். பிரதம அதிதியான கல்வி ராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார் சிரேஷ்ட பாடகர் , கலைஞர் கலைக்கமல் உட்பட பலர் கில்மிஷாவை வாழ்த்தி மகிழ்வதையும், சபையோரையும் படங்களில் காணலாம்.



## பலஸ்தீன மக்களுக்காகவும், தாய்க்காகவும் பட்டத்தை பரிசளித்த ஓட்டமாவடி யஸீர் அறபாத்

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் 16வது பட்டமளிப்பு விழா கடந்த 10, 11ஆம் திகதிகளில் நடைபெற்றது.

அன்றைய தினம் (11) 5ஆவது அமர்வில் தனது கலைமாணி பட்டத்தைப் பெற்றுக்கொண்ட ஓட்டமாவடியைச் சேர்ந்த யஸீர் அறபாத், பட்டமளிப்பு விழா மேடையில் பலஸ்தீன சால்வையை அணிந்து தோன்றியமை பலரின் கவனத்தையும் ஈர்த்திருந்தது. தனது பட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் போது பலஸ்தீன சால்வையை அணிந்து கொள்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்த நிலையில், பட்டமளிப்பு முடிந்த கையோடு, அவர் விழா மேடையில் ஏறி பலஸ்தீன சால்வையை அணிந்து கொண்டார். இது தொடர்பில் அவர் கருத்துத்தெரிவிக்கையில், "கல்வி ரீதியாக ஒரு பட்டத்தைப் பெற்றுக்கொள்ளும் இந்த நாள் எனக்கு மகிழ்ச்சிகரமானது. என்றாலும், பலஸ்தீனத்தில் அப்பாவி மக்களும், குழந்தைகளும் இஸ்ரேல் தாக்குதலில் கொல்லப்படுவதை நினைக்கையில், இந்த சந்தோசத்தை முழுமையாக அனுபவிக்க முடியவில்லை" எனக்குறிப்பிட்டிருந்தார். எனவே தான், பலஸ்தீன மக்களுக்கான தனது ஆதரவையும் இஸ்ரேலுக்கான எதிர்ப்பையும், இது போன்றதொரு பெரிய மேடையில் வெளிப்படுத்துவது பொருத்தமாக இருக்குமென்பதற்காகவே பலஸ்தீன கொடியை தான் சால்வையாக அணிந்து அம்மேடையில் தோன்றியதாக அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

தனது இரண்டரை வயதில் தாயை இழந்த யஸீர் அறபாத் தனது தாயின் மூத்த சகோதரி மரியம் பீவியின் பராமரிப்பில் வளர்ந்து கல்வியையும் பெற்று பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.

நிகழ்வில் பட்டத்தைப் பெற்ற பின்னர் தன்னை வளர்த்து, தன் கல்விக்கு பக்கபலமாக இருந்து மரணித்த பெரியம்மாவின் புகைப்படத்தை கையிலேந்தி தன் பட்டத்தோடு புகைப்படம் எடுத்துக்கொண்டது காண்போரை மெய்சிலிர்க்க வைத்தது.

***எம்.வை தாஹிர்***



## அரசியல் அரங்கம்

அர்ஜுன்

# நிகழ்நிலை காப்புச் சட்டத்தை எதிர்ப்போரிடம் அமைச்சர் விஜயதாச முன்வைக்கும் கேள்வி!

**நிகழ்நிலை காப்புச் சட்டத்தை எதிர்ப்பவர்கள் ஒன்லைன் குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான பொறுப்பை ஏற்கத் தயாராக உள்ளனரா? என்று கேள்வி எழுப்பினார் – நீதி, சிறைச்சாலைகள் விவகாரம் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ. நிகழ்நிலைக் காப்புச் சட்டம் உள்ளிட்ட சட்டத் திருத்தங்கள் குறித்து எம்முடன் அவர் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.**



**கே: நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தின் சில பிரிவுகள் தொடர்பில் எதிர்க்கட்சிகளும் பல்வேறு சிவில் அமைப்புக்களும் கவலை வெளியிட்டுள்ளன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: எமது நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம் தொடர்பில் பல்வேறு நாடுகள் தமது கரிசனைகளை வெளிப்படுத்தியிருந்தன. சமூக ஊடகங்களால் சமூகத்துக்கு ஏற்படும் பாதிப்பைத் தடுப்பதற்கான முயற்சிகளை இந்த நாடுகள் மேற்கொண்டிருந்தன. இதேபோன்று, இலங்கையிலும் அவ்வாறானதொரு சட்டத்தைக் கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுத்தோம். தற்கொலை முயற்சிகள், கப்பம் கோருதல் மற்றும் போதைப்பொருள் வியாபாரம் உள்ளிட்ட பல்வேறு ஒன்லைன் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் 5,000 இற்கும் அதிகமான முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறான நிலையில் சட்டமொன்றைக் கொண்டுவந்து கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பது குறித்து கவலை வெளியிடும் நபர்கள், இந்நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். அத்துடன், பாதிக்கப்பட்டவர்களைப் பராமரிக்கவும் வேண்டும். உண்மையில் எடுத்துப் பார்த்தால், இது அவசரஅவசரமாகக் கொண்டுவரப்பட்டதொரு விடயமில்லை. நீதி அமைச்சராக நான் இருந்தபோது 2015ஆம் ஆண்டில் சட்ட ஆணைக் குழு இந்த வரைபைத் தயாரித்தது. அப்போது பல்வேறு கரிசனைகள் முன்வைக்கப்பட்டதுடன், இது தொடர்பில் தன்னார்வ நீதிமன்ற முறைமையொன்றுக்குச் செல்வதாகக் கூறியதால் சட்டத்தைக் கொண்டுவரும் முயற்சிகளை முன்னெடுக்காதிருக்க இணங்கினோம். அது மாத்திரமன்றி, ஊடக அமைச்சுடன் இணைந்து இதற்கான சட்டமொன்றைக் கொண்டுவருபது பற்றிய கலந்துரையாடல்கள் இடம்பெற்று, தொடர்ச்சியான கருத்தாடல்கள் முன்னெடுக்கப்பட்டன. சேவை வழங்குனர்கள் உள்ளிட்ட பல தரப்பினருடனும் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டன.

**கே: உயர்நீதிமன்றம் வழங்கிய பரிந்துரைகளில் 13 பரிந்துரைகளை அரசாங்கம் பாராளுமன்றத்தில் முன்வைக்கவில்லையெனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இந்த மாற்றங்களை சீர் செய்யவா திருத்தமொன்றுக்கு அரசாங்கம் முயற்சிக்கிறது?**

பதில்: நிச்சயமாக இல்லை. அவ்வாறான கருத்துக்கள் அடிப்படை அற்றவை. உயர்நீதிமன்றத்தின் பரிந்துரைகள் அனைத்தும் கடுமையாகப் பின்பற்றப்பட்டுள்ளன.

**கே: இந்தச் சட்டமூலம் 'மனித உரிமைகளுக்கு நீண்டகால எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தும்' என மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் அலுவலகம் கூறியுள்ளது. இவ்வாறான நிலையில் மனித உரிமைகள் கடமைகளுக்கு இணங்க சட்டத்தைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அது அழைப்பு விடுத்திருந்தது. இது பற்றிக் கருத்துக் கூற விரும்புகின்றீர்களா?**

பதில்: அவர்களின் ஆலோசனையை நாம் பின்பற்ற வேண்டியதில்லை. ஐ.நா மனிதஉரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் நடத்தையில் சாதகமான விளைவு எதுவும் இல்லை. அது எப்போதும் எதிர்மறையாக இருந்தது. நமது சிவில் சமூகம் சில சட்டங்கள் திருத்தப்பட வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளது, இதனால் நாங்கள் எங்கள் உள்நாட்டு சமூகங்களுடன் உரையாடலில் ஈடுபடுவோம், சர்வதேச நிபுணர்களுடன் அல்ல. உள்நாட்டு சமூகத்துடன் நாங்கள் தொடர்பு கொள்வோம், மேலும் சட்டத்தின் சில பிரிவுகளில் திருத்தம் செய்ய உள்ளோம்.

**கே: நிகழ்நிலைக் காப்புச் சட்டம் மற்றும் இதுபோன்ற பிற சட்டங்கள் மூலம் மக்களை அடக்க அரசாங்கம் முயற்சிப்பதாக அச்சமும் வெளியிடப்பட்டுள்ளது. அது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: நிகழ்நிலைக் காப்புச் சட்டம் மூலம் மக்களையும் எதிர்க்கட்சிகளையும் எப்படி அடக்குவது? இந்தக் காட்டுக் கழுதை சுதந்திரம் இருந்தபோது, எதிர்க்கட்சிகள் ஒடுக்கப்படவில்லை. அவர்கள் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தனர். மேலும், பயங்கரவாதத் தடைச் சட்டம் கொடூரமானது என்று அவர்கள் கூறினால், தற்போதுள்ள பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் புனிதமானதாக இருக்க வேண்டும், நாங்கள் அதைத் தொடர வேண்டும்.

**கே: நீதிமன்ற வழக்குகளைத் தீர்ப்பதற்கு பல ஆண்டுகள் எடுப்பது மற்றும் சட்டங்களில் மறுசீரமைப்புக்களை முன்னெடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக விளக்க முடியுமா?**

பதில்: சட்டத் தாமதங்களை நிவர்த்தி செய்வதற்கும் குறைப்பதற்கும் வரலாற்றில் இல்லாதளவு மறுசீரமைப்புக்களை மேற்கொண்டுள்ளோம். சிவில் வழக்கு என்று வரும்போது சிவில் நடைமுறைச் சட்டத்தில் திருத்தம் செய்துள்ளோம். முதல் சந்தர்ப்பத்தில் சமரசம் செய்ய முன்னர் விசாரணையை அறிமுகப்படுத்தியுள்ளோம். அழைப்பாணை சேவை தாமதம் தொடர்பாக மற்றொரு சட்டமூலத்தை நாங்கள் சமர்ப்பித்துள்ளோம்.

ஏராளமான விவாகரத்து வழக்குகள் குவிந்துள்ளன. பலரால் வெளிநாட்டில் உள்ள தங்கள் மனைவியின் முகவரியைக் கண்டுபிடிக்க முடியாதிருக்கிறது. பௌதிக ரீதியாக அழைப்பாணை வழங்குவது பெரிய பிரச்சினையாகவும், காலவிரயமாகவும் உள்ளது. இதில் ஏராளமான ஊழல்கள் காணப்படுகின்றன. எனவே இது குறித்த சட்டத்தில் திருத்தத்தை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம். மின்னணு முறைகள் மூலம் நாம் அழைப்பாணைகளை வழங்க முடியும். விவாகரத்து வழக்குகளில் நிறைய தாமதங்கள் உள்ளன மற்றும் சில வழக்குகள் 20 ஆண்டுகளுக்கும் மேலாக இழுபடுகின்றன. நாங்கள் முற்றிலும் புதிய சட்டத்தை உருவாக்கியுள்ளோம், மேலும் குஷான் டி அல்விஸ் தலைமையில் ஒரு நிபுணர் குழுவை நியமித்துள்ளேன். விவாகரத்து அத்தியாயத்தை முற்றிலுமாக ஒழித்துவிட்டு புதிய சட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளோம். உரிமை கோரல்கள் சிறியதாக இருந்தாலும், நேரத்தைச் செலவிடும் பல சிறிய வழக்குகள் உள்ளன. தற்போது நாங்கள் சிறிய உரிமைகோரல் நீதிமன்றங்களை நிறுவியுள்ளோம். கடந்த ஜனவரியில், நீண்ட வழக்குகளுக்கு செல்லாமல் புதிய வணிக மத்தியஸ்த சட்டத்தை நிறைவேற்றினோம். மத்தியஸ்தம் சட்ட அம்சங்களில் உலகம் முழுவதும் மிகவும் பிரபலமாகி வருகிறது. பெரிய முதலீட்டாளர்கள் நீதிமன்றங்களில் இந்த தாமதமான நீடித்த நடவடிக்கைகளுக்கு செல்ல விரும்பவில்லை, மேலும் அவர்கள் புதிய மத்தியஸ்த சட்டத்தின் மூலம் தீர்வு காண முடியும்.

2015 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்த பின்னர் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நில மத்தியஸ்தம் தொடர்பான முன்னோடித் திட்டமொன்றை நான் முன்னெடுத்திருந்தேன். அது 60 முதல் 70 வீதம் வரை வெற்றிகரமாக இருந்தது. இப்போது 16 மாவட்டங்களுக்கு அனைத்தையும் சேர்த்து அறிமுகப்படுத்தியுள்ளேன். மேலும் 9 மாவட்டங்களிலும் இது விரைவில் தொடங்கப்படும்.

நீதிமன்றங்களை டிஜிட்டல் மயமாக்கும் பணியையும் தொடங்கியுள்ளோம். டிஜிட்டல் மயமாக்கப்பட்ட முறையின் கீழ் முதற்கட்டமாக 100 நீதிமன்ற வீடுகளை அமைக்க உள்ளோம். அபராதம் செலுத்துவதற்கு ஆடம்பரமான இயந்திரங்களை அறிமுகப்படுத்தியுள்ளோம். இல்லையெனில், மக்கள் நீதிமன்றங்களில் பல மணி நேரம் வரிசையில் காத்திருக்க வேண்டியுள்ளது. புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட இயந்திரத்தின் உதவியுடன் மக்கள் கிரெடிட் கார்டைப் பயன்படுத்தி பணம் செலுத்தலாம் மற்றும் இரண்டு நிமிடங்களில் பரிவர்த்தனையை முடிக்கலாம். போக்குவரத்து பொலிசாருக்கும் அதை அறிமுகப்படுத்த முயற்சிக்கிறோம்.

குற்றவியல் வழக்குகள் என்று வரும்போதுகூட வழக்குகள் நிலுவையில் இருப்பது ஒரு பாரிய பிரச்சினையாகும். எவராலும் தீர்க்கப்படாத நமது சட்ட அமைப்பில் உள்ளார்ந்த குறைபாடு உள்ளது. உதாரணமாக, சிலர் நீண்ட காலத்திற்கு தண்டனைக்கு முன்பே தடுத்து வைக்கப்படுகின்றனர். அவர்கள் தண்டிக்கப்பட்டு, சில சமயங்களில் மேல்முறையீடு செய்தால், மீண்டும் பிணை வழங்கப்பட மாட்டாது.

அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்திலும் நிறைய தாமதங்கள் ஏற்பட்டுள்ளன. அத்தகைய தாமதங்கள் அனைத்தும் அடுத்த நான்கைந்து மாதங்களுக்குள் வரிசைப்படுத்தப்படும்.

**கே: 'யுக்திய' நடவடிக்கையில் போதைப்பொருளுடன் தொடர்புபட்ட பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை சிறைக்கு அனுப்புவதற்குப் பதிலாக புனர்வாழ்வு அளிப்பதற்கான திட்டம் உள்ளதா?**

பதில்: தற்போது இது ஒரு சிக்கலான சூழ்நிலையைக் கொடுத்துள்ளது. தண்டனைக் கைதிகளுக்கான தண்டனையை விதிக்கவும், தடுப்புக் காவலில் உள்ளவர்களைக் கவனித்துக் கொள்ளவும் சிறை உள்ளது. கடந்த 2015ஆம் ஆண்டு அம்பேபுஸ்ஸ மற்றும் பள்ளஞ்சேன நிலையங்களை நான் ஆரம்பித்தேன். சிறைச்சாலைகள் திணைக்களத்தின் மேற்பார்வையில் ஆறு அல்லது ஏழு நிலையங்கள் புனர்வாழ்வு நிலையங்களாகப் பராமரிக்கப்படுகின்றன.

அதுமட்டுமன்றி கடந்த ஆண்டு ஜனவரி மாதம் புனர்வாழ்வு பணியக சட்டத்தை நிறைவேற்றினோம். அதன் கீழ் மூன்று நிலையங்கள் உள்ளன. அவற்றில் பிரதானமானது கந்தக்காடு ஆகும். போதைப்பொருள் பயன்படுத்துவோரை நீதிமன்ற உத்தரவு இல்லாவிட்டால் மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்ப முடியாது. இப்போது அந்தச் சட்டத்தைத் தளர்த்தி, மக்கள் தாமாக முன்வந்து அங்கு சென்று புனர்வாழ்வு பெறுவதற்கு அல்லது மருத்துவரின் பரிந்துரையின் பேரில் புனர்வாழ்வுக்குச் செல்வதற்கான சட்டமூலமொன்றை விரைவில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளோம்.

சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் அவர்கள் அனைவரையும் மருத்துவரின் பரிந்துரையின் பேரில் புனர்வாழ்வு நிலையங்களுக்கு மாற்றுவதற்கான அதிகாரம் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்துக்கும் வழங்கப்பட்டுள்ளது. அந்த மூன்று புனர்வாழ்வு நிலையங்களை ஐந்து அல்லது ஆறாக விரிவுபடுத்த உள்ளோம். இதன் மூலம் சிறைக்கைதிகளின் எண்ணிக்கையை குறைக்க முடியும் என எதிர்பார்க்கிறோம். பொதுவாக, சட்டத்தைத் திருத்தியபோது சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 16,000 முதல் 18,000 வரை இருந்தது, பின்னர் அது 26,000 முதல் 28,000 வரை உயர்ந்தது. 'யுக்திய' நடவடிக்கை மூலம் அது 33,000 ஆக உயர்ந்துள்ளது. நீதிமன்ற காப்பகத்தில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் போதைப்பொருட்கள் திருடப்பட்டு விற்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் காணப்படுகின்றன.

இனிமேல் புதிய சட்டத்தின் கீழ், அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம் மாதிரிகளை மட்டுமே வைத்திருக்க வேண்டும். மீதமுள்ளவை நீதிபதி மற்றும் சட்டமா அதிபரின் மேற்பார்வையில் உடனடியாக அகற்றப்படும் என்ற புதிய விதிமுறையையும் நாங்கள் உருவாக்கியுள்ளோம்.

**சட்டமொன்று குறித்து கவலை வெளியிடும் நபர்கள், குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கான பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்டவர்களை அவர்கள் பராமரிக்கவும் வேண்டும்!**

**'சிறைக்கைதிகளின் எண்ணிக்கை 16,000 முதல் 18,000 வரை இருந்தது. பின்னர் அது 26,000 முதல் 28,000 வரை உயர்ந்தது. 'யுக்திய' நடவடிக்கை மூலம் அது 33,000 ஆக உயர்ந்துள்ளது'**

---

# முடிவுக்கு வருகின்றதா சோனியாவின் அரசியல்?

## காங்கிரஸ் கட்சி மீண்டெழுவதற்கு நீண்ட காலம் செல்லுமென்பதே ஊகம்!



காங்கிரஸ் கட்சிக்கு காலம் கடந்து கிடைத்த மிக முக்கியமான தலைவர் சோனியா காந்தி ஆவார். அவரது கணவர் ராஜீவ்காந்தி 1991ஆம் ஆண்டு ஸ்ரீபெரும்புதூர் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கொல்லப்படும் போது அவரது வயது 49.

இந்தியாவின் வசீகரமான தலைவராக இருந்த அவர், இளம் வயதிலேயே மரணம் அடைந்தார். அப்போது சோனியாவுக்கு 45 வயது. அப்போது ராகுல்காந்திக்கு சுமார் 20 வயது.

'இனிமேல் எங்கள் குடும்பத்திற்கு அரசியலே தேவையில்லை. மீண்டும் எங்கள் குடும்பத்திலிருந்து ஒரு உயிர்ப்பலி கொடுக்க நாங்கள் தயார் இல்லை. இதுவரை அனுபவித்த துன்பங்கள் போதும்' என்று சோனியா அமைதியாக குடும்ப வாழ்க்கைக்குள் நுழைந்தார்.

அப்போது சோனியாதான் அடுத்து கட்சியைத் தலைமையேற்று நடத்துவார் எனக் காங்கிரஸ் தொண்டர்கள் நம்பிக் கொண்டிருந்தனர். அந்த நம்பிக்கை மீது பெரிய குண்டைத் தூக்கிப் போட்டார் சோனியா காந்தி.

அதன் பின்னர் இந்தியத் தேசிய காங்கிரஸ் கட்சி சரியான தலைமை கிடைக்காமல் தள்ளாடியது. ஏறக்குறைய மூத்த காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான சீதாராம் கேசரி கட்சியைப் புதைகுழிக்குள் போட்டுப் புதைத்துக் கொண்டிருந்தார். அவர் கண்முன்னால் கட்சி அழிவை நோக்கி நடைபோட்டுக் கொண்டிருந்தது. காங்கிரஸ் சாதாரண கட்சி இல்லை. இந்திய நாட்டுக்கு ஜவஹர்லால் நேரு தொடங்கி, மன்மோகன் சிங் வரை 7 பிரதமர்களை அக்கட்சி உருவாக்கி உள்ளது. அதன் கூட்டணி மூலம் 4 பிரதமர்கள் உருவாகி உள்ளனர்.





ஏறக்குறைய 54 ஆண்டுகள் காங்கிரஸ் மட்டுமே இந்திய நாட்டை ஆட்சி செய்து இருக்கிறது. இந்திய விடுதலைக்குப் பின்னர் ஆச்சார்யா கிருபாளினி தொடங்கி மல்லிகார்ஜுன கார்கே வரை 20 பேர் தலைவர்களாக இருந்துள்ளனர். அவர்களில் 17 ஆவது தலைவராக 1998 இல் பொறுப்புக்கு வந்தவர் சோனியா காந்தி. அதாவது கணவர் இறந்து 7 ஆண்டுகள் கழித்து கட்சிக்குள் வந்தார் சோனியா காந்தி.

சோனியா காந்தியின் தேர்தல் அரசியல் பயணம் 1999 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினராக முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டதன் மூலம் தொடங்கியது. அன்று தொடங்கி 25 ஆண்டுகள் அவர் மக்களவை உறுப்பினராக இருந்து மக்கள் பணியாற்றி வந்துள்ளார். அந்தப் பயணம் இந்த மாதத்துடன் முடிவுக்கு வந்துள்ளது.

அவர் ராஜஸ்தானிலிருந்து மாநிலங்களவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிறார். இது வெறும் அவை மாற்றம் மட்டும் அல்ல; அரசியல் மாற்றம் ஆகும். எதிர்வரும் ஏப்ரல் அல்லது மே மாதங்களில் மக்களைவைத் தேர்தல் நடைபெற உள்ளது. அடுத்து நரேந்திர மோடிதான் மீண்டும் பிரதமராக வருவார் என ஊடகங்கள் கூறி வருகின்றன.

இந்த நிலையில் சோனியா சபையை காலி செய்து கொண்டு செல்ல இருக்கிறார். இப்போது 77 வயதை எட்டியுள்ள சோனியா காந்தி, 2004 மற்றும் 2009 ஆகிய நாடாளுமன்றத் தேர்தல்களில், காங்கிரஸ் கட்சி இரண்டு முறை வெற்றிவாகை சூடுவதற்கு வழிவகுத்துக் கொடுத்தவர்.

அதன் பின்னர் 2014 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு வெறும் 44 இடங்கள்தான் கிடைத்தன. வெற்றியை எப்படி அவரது காலத்தில் நேரடியாகச் சந்தித்தாரோ அதே அளவுக்குக் கட்சி வீழ்ச்சி பெற்றுவருவதையும் தொடர்ந்து இவர் பார்த்து வருகிறார். ஒரே சமயத்தில் உத்தரப் பிரதேசத்தில் உள்ள அமேதி தொகுதி மற்றும் கர்நாடகாவின் பெல்லாரி தொகுதி ஆகிய இரு தொகுதிகளிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.



இருப்பினும், தனது குடும்பத்தினரின் கோட்டையாகத் திகழ்ந்து வரும் அமேதியை தக்கவைத்துக் கொள்ள முடிவு செய்து பெல்லாரி தொகுதியை இராஜினாமா செய்தார். 2004 ஆம் ஆண்டு, தனது குடும்ப உறுப்பினர்களின் பிடித்தமான தொகுதியாக இருந்து வந்த அமேதி தொகுதியைக் கைவிட்டுவிட்டுத் தேர்தல் களத்தை ரேபரேலிக்கு மாற்றினார்.

தனக்குப் பதிலாக மகன் ராகுல் காந்தியை அமேதி தொகுதியிலிருந்து மக்களவையில் அறிமுகம் செய்து வைத்தார். அமேதி தொகுதி காங்கிரஸ் கோட்டையாகத் திகழ்ந்து வந்தது. 1984 முதல் 1991 வரை ராஜீவ்காந்தி அதன் முகமாக இருந்தார்.

அதன் பின்னர் 1999இல் சோனியா அதன் முகமானார். அவருக்குப் பின்னர் 2004 தொடங்கி 2014 வரை ராகுல் இந்தத் தொகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்தி வந்தார். 2006 ஆம் ஆண்டு, சோனியா காந்தி தேசிய ஆலோசனைக் குழுவின் தலைவர் பதவி வகித்தது தொடர்பான சர்ச்சையில் சிக்கினார். அதைத் தொடர்ந்து தனது எம்.பி பதவியை இராஜினாமா செய்தார்.

அதன் பின்னர், மே 2006 இல், சோனியா ரேபரேலியில் போட்டியிட்டு இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் மீண்டும் எம்.பி ஆக தேர்ந்தெடுக்கப்பட்டார். 2014 மற்றும் அதனையடுத்து 2019 ஆகிய இந்த இரண்டு நாடாளுமன்றத் தேர்தலிலும் நாடு முழுவதும் நரேந்திர மோடிக்கு ஆதரவாக அலை வீசியது. காங்கிரஸ் கட்சி தனது பல தொகுதிகளை இழந்தது. அப்போதும் கூட, சோனியா காந்தி தனது தொகுதியைத் தக்கவைத்துக் கொண்டார்.

இருந்தாலும் 2019 தேர்தலில் அமேதி தொகுதியை பா.ஜ.க கைப்பற்றியது. ஸ்மிருதி இரானி எம்.பி. ஆனார். காங்கிரஸ் கோட்டையான அமேதியில் பா.ஜ.க கொடி பறக்க ஆரம்பித்தது. இப்போது காங்கிரசின் அடுத்த கோட்டையாகத் திகழ்ந்து வரும் ரேபரேலியும் சோனியாவின் முடிவால் கைவிட்டுச் சென்றுள்ளது.

எதிர்வரும் 2024 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸின் கோட்டையான ரேபரேலியில் பிரியங்கா காந்தி போட்டியிடலாம் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தலைமுறை தலைமுறை யாக காங்கிரஸ் தக்க வைத்து வந்த ரேபரேலி தொகுதி பிரியங்கா மூலம் மீண்டும் வசப்படுமா என்பது மாபெரும் கேள்வியாக உள்ளது.

இவ்வாறான நிலையில், சோனியா காந்தியின் அரசியல் வாழ்வு முடிவுக்கு வந்துவிடுவதற்கான அறிகுறிகளே தென்படுகின்றன. அதுமாத்திரமன்றி, காங்கிரஸ் கட்சி மீண்டெழுவதற்கும் நீண்ட காலம் செல்லுமென்றே ஊகிக்க முடிகின்றது.

**அமெதி தொகுதியை பறிகொடுத்தது போன்று ரேபரேலி தொகுதியும் காங்கிரஸை விட்டு கைநழுவி விடும் அறிகுறி!**

எஸ்.சாரங்கன்...

# சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டிருக்கும் இரண்டு பிள்ளைகளின் தந்தையான கொழும்பு 15, ஆர். இராம சுப்பிரமணியம் (45 வயது) என்பவருக்கு சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக்கு மருத்துவர்கள் பரிந்துரை செய்துள்ளனர். இதற்கு O+,O,B+, B சிறுநீரகம் தேவைப்படுகிறது.

உறுப்பு தானம் வழங்குநர் 25 வயதுக்கும் 50 வயதுக்கும் இடைப்பட்ட ஆணாகவோ, பெண்ணாகவோ இருக்கலாம். மது மற்றும் புகைப்பழக்கம் இல்லாதவராகவும் நீரிழிவு போன்ற நோய்களினால் பாதிக்கப்படாதவராகவும் இருக்கவேண்டும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும். 076 698 9790 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உடுவில் இந்து இளைஞர் மன்றத்தின் நாவலர் விழா

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் நாவலர் விழா இன்று (18) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். இதன்போது உடுவில் மேற்கு பாலர் பாடசாலை மாணவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் நடைபெறும். உடுவில் இந்து இளைஞர் மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய ஆசிரிய ஆலோசகர் கணேசரத்தினம் ஆதித்தன், சிறப்பு விருந்தினராக அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் இணுவில் கிளை செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் ஆகியோர் கலந்துகொள்வர். இவ்விழாவில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு உடுவில் இந்து இளைஞர் மன்றம் அன்புடன் அழைப்பு விடுத்துள்ளது.

# தவக்கால சிந்தனை



## மனந்திரும்புங்கள்

இவ்வாண்டின் தவக்கால முதலாம் வார ஞாயிற்றுக்கிழமை நற்செய்தியினைப் படிக்கும் எவரும் புனித மாற்கு நற்செய்தியின் முக்கியத்துவத்தை விளக்குவதற்கு ஆசைப்படலாம்.

இன்றைய நற்செய்தியானது நான்கு வசனங்களில் சுருக்கித் தரப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் கூட அங்கு வழங்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் அதன் முக்கியத்துவம் என்பனவற்றை கருத்திற்கொண்டு, இந்த நான்கு வசனங்களும் இயேசுவின் வாழ்வு மற்றும் அவரது பணி ஆகியவற்றின் சுருக்கமாகும்.

இப்பகுதியில் இயேசு தமக்கென நேரத்தை எடுத்துக்கொண்டு, தனது பணி குறித்த வேண்டுதலுக்காக பாலைவனத்தினை நோக்கி செல்கின்றார். பாலைநிலத்தில் நாற்பது நாட்கள் தங்கியிருந்தார். அங்கு அவர் அலகையினால் சோதிக்கப்பட்டார். அங்கு காட்டு விலங்குகளிடையே வாழ்ந்தார். வானதூதர் அவருக்கு பணிவிடை புரிந்தனர்.

இங்கு தெளிவாக எடுத்துரைக்கப்படுகின்ற செய்தியானது இயேசு அலகையினால் சோதிக்கப்பட்டாலும் அச்சோதனைகளில் வீழ்ந்துவிடவில்லை அல்லது அதற்கு அடிபணிந்து விடவில்லை. தான் சந்தித்த சவாலைகளை இயேசு ஏற்றுக்கொண்டார். அவற்றை வெற்றி கொண்டார்.

வெற்றி கொண்டவராக நமக்கும் இத்தவக்காலமதில் அழைப்புத் தருகின்றார். இன்றைய நாளில் அவரது மறையுரையின் சுருக்கம் யாதெனில், "மனந்திரும்புங்கள், ஏனெனில் இறையரசு நெருங்கி வந்துவிட்டது" என்பதாகும்.


தவக்காலம் மனமாற்றத்திற்கான அழைப்பின் காலமாகும். இயேசு நாற்பது நாட்கள் அலகையினை வெற்றி கொண்டது போல நாமும் இத்தவக்காலமதில் வெற்றி கொள்வோம். வாழ்வின் மாற்றத்தினைக் கொணரும் விதமாக வேண்டாதவற்றை வாழ்வில் விட்டுவிடுவோம். கெட்டவற்றை பார்ப்பதையும், பேசுவதையும் தவிர்ப்போம். நல்லவற்றை பார்ப்போம் பேசுவோம். வாழ்வின் மாற்றத்தை இயேசுவோடு ஆரம்பிப்போம்.

அருட்தந்தை நவாஜி...

# புலிகள் புதைத்து வைத்த தங்கம் முல்லைத்தீவில் நாளை அகழ்வு

## கிளிநொச்சி நீதிமன்றம் அனுமதி

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)



முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டத்தின் எல்லைப்பகுதியிலுள்ள குமாரசாமிபுரம் பகுதியில் விடுதலைப் புலிகளின் தங்கம் புதைக்கப்பட்டுள்ளதாக நம்பப்படும் ஒரு இடத்தை அகழ்வு செய்வதற்கு கிளிநொச்சி நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

தர்மபுரம் பொலிஸார், நீதிமன்றத்தில் தாக்கல் செய்த வழக்கொன்றுக்கமைய கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம் நாளை 19ஆம் திகதி இப்பகுதியில் அகழ்வு செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

றெட்பான சந்திக்கருகில் காணப்படும் இப்பகுதியில் விடுதலைப் புலிகளின் நிதிப்பிரிவின் தங்க நகைகள் புதைக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த பகுதியில் பல தடவைகள் சட்டவிரோதமாக தோண்டும் முயற்சிகள் பல்வேறு தரப்பினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அது வெற்றியளிக்கததால் நீதிமன்ற அனுமதியுடன் தோண்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நீதிமன்றம் இதற்கான உத்தரவை 16.02.2024 அன்று வழங்கியுள்ளது.

நாளை 19.02.2024 அன்று பிற்பகல் 2.30 மணியளவில் நீதிபதி முன்னிலையில் பொலிஸார், பிரதேச தலைவர்கள், கிராம சேவையாளர்கள், பிரதேச சபையினர், தொல்பொருள் திணைக்களத்தினர் உள்ளிட்ட அரச திணைக்களங்களின் பிரசன்னத்துடன் தோண்டும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## இந்த ஆண்டுக்குள்...

என்ற பெயரில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் நலன்புரி வசதிகள் போன்ற பல சேவைகளை ஏற்பாடு செய்து வருகின்றன.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வொன்று நேற்று17ஆம் திகதி வெல்லவாய பொது விளையாட்டரங்கில் நடைபெற்றது. இன்று 18ஆம் திகதியும் நிகழ்வு நடைபெறுகிறது.

தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமார ஆகியோரின் தலைமையில் இந்நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

## டி.ஆர். விஜேவர்தனவின்...

வழங்கும் நிகழ்வு நடைபெறும். கோட்டை ஸ்ரீ சம்புத்தலோக்க விஹாரை மற்றும் ஹுனுபிட்டிய கங்காராம விஹாரையின் தேரர்கள் இதில் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

சமய அனுஷ்டானம் வழங்கும் நிகழ்வுக்கு தேரர்களை அழைத்து வரும் பெரஹர அன்று இரவு 8.45 மணிக்கு கோட்டை ஸ்ரீ சம்புத்தலோக்க விஹாரையிலிருந்து ஆரம்பமாகும்.

இந்த சமய அனுஷ்டானம் வழங்கும் நிகழ்வு தேசிய தொலைக்காட்சியிலும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலும் நேரடியாக ஒளி, ஒலிபரப்பு செய்யப்படும். 22ஆம் திகதி தானம் வழங்கும் நிகழ்வு நடைபெறும்.

## இலங்கை – இந்திய மீனவர்...

கடற்றொழிலாளர் 43 பேரை அமைச்சர் ஜீவன் நேரில் சென்று சந்தித்து நலம் விசாரித்ததுடன், இவர்களின் பிரச்சினைகளையும் கேட்டறிந்தார். இதன்போதே அமைச்சர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் (16) நடைபெற்ற இச்சந்திப்பு தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு அமைச்சர் கருத்துத் தெரிவித்த போது,

"யாழ்ப்பாணம் சிறையிலுள்ள தமிழக கடற்றொழிலாளர் 43 பேரை நான் நேரில் சென்று சந்தித்துக் கலந்துரையாடினேன். அதன்போது 43 கடற்றொழிலாளர்களில் இருவர் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையமை தெரியவந்தது.

ஏனைய 41பேருக்கும் இலங்கை அரசாங்கத்தின் மூலமோ அல்லது எம்மால் முடிந்த உதவிகளை நிட்சயமாக செய்வோம். இன்னும் 02 அல்லது 03 வாரங்களுக்குள் இந்தக் கடற்றொழிலாளர்கள் விடுதலை செய்யப்படுவார்களென்றும் நான் நம்புகிறேன். இலங்கை பொலிஸார் தம்மை நன்றாக நடத்துவதாக தமிழக கடற்றொழிலாளர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

இதேவேளை, வடமாகாணத்திலுள்ள கடற்றொழிலாளர்களும் யுத்தத்தால் பாதிக்கப்பட்டவர்கள். சிறிய படகுகளை வைத்துக் கொண்டே இவர்கள்தமது வாழ்வாதாரத்தை நடத்துகின்றனர். ஆகையால் இவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கக்கூடாது. தமிழக கடற்றொழிலாளர்களும் இழுவைப் படகுகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுகின்றனர். இதனால் இலங்கையின் கடல் வளமும் பாதிப்படைகின்றது. இது கடல்சார் சட்டத்தை மீறும் செயலாகும்" எனத் தெரிவித்தார்.

## ஹஜ் செயற்பாடுகளில்...

அரச ஹஜ் கமிட்டி உறுப்பினர் மில்பர் கபூர் தெரிவித்தார். அரச ஹஜ் கமிட்டி உறுப்பினராக கலாசார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ள மில்பர் கபூரை, ஹஜ் முகவர்கள் சீனன்கோட்டை இல்லத்தில் நேற்று சந்தித்தனர்.

இதன்போது முக்கிய விடயங்கள் தொடர்பில் ஆராயப்பட்டன. இச்சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மில்பர் கபூர், அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க என் மீது வைத்துள்ள நம்பிக்கையின் காரணமாகவே இப்பதவி எனக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதனால் நான் நீதியாக எவ்வித பேதமுமின்றி செயற்பட வேண்டியது எனது பொறுப்பாகும்.

அதனையே அவரும் விரும்புகிறார். ஹஜ் என்பது எமது மார்க்க கடமை. அதில் நான் அரசியல் செய்வதை ஒருபோதும் விரும்பவில்லை.

அதேபோல் ஹாஜிகளை அழைத்துச் செல்கின்ற முகவர்களும் இறைவனின் கடமை என்ற வகையில் நியாயமாக நடந்துகொள்ள வேண்டும் என்பதையே எமது ஹஜ் கமிட்டி எதிர்பார்க்கிறது.

முகவர்கள் தொடர்பில் நிறைய முறைப்பாடுகள் இருப்பதாக கேள்விப்படுகிறேன்.

எமது ஹஜ் கமிட்டி தலைவர் இப்ராஹீம் அன்ஸார் தலைமையிலான குழுவினர் இம்முறை இலங்கை ஹஜ்ஜாஜிகளுக்கு சிறந்த சேவையை வழங்கவுள்ளதோடு ஹஜ் முகவர்களின் நலன் தொடர்பிலும் விசேட கவனம் செலுத்தவுள்ளோம்.

இது விடயமாக நாம் விரைவில் அவர்களை சந்தித்து குறை, நிறைகள் தொடர்பில் பேச இருக்கிறோம். எந்த முகவராக இருந்தாலும் இறைவனின் கடமை என நினைத்து செயற்பட முன்வருமாறும் அவர் அழைப்பு விடுத்தார்.

## விண்ணப்பிக்காத எவருக்கும்...

கிடைக்காதென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 'அஸ்வெசும' இரண்டாம் கட்ட விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கை கடந்த 15ஆம் திகதி ஆரம்பமாகியது.

'அஸ்வெசும' முதல் கட்டத்துக்கான விண்ணப்பங்களை அனுப்பாத மற்றும் குடும்பங்கள் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த ஆனால் வீட்டுத் தகவல் கணக்கெடுப்புக்கு உட்படுத்தப்படாத அனைவரும் இரண்டாவது கட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியுமென்றும் அவர் தெரிவித்தார்.

'அஸ்வெசும' இரண்டாம் கட்டத்தில் தகுதியுடைய அனைவருக்கும் வெளியாரின் தலையீடுகள் இன்றி நலன்புரி கொடுப்பனவுகள் வழங்கப்படுமென நிதி இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

## காமினி ஜயவிக்கிரம பெரேரா...

கிராம சபை உறுப்பினரான இவர், 1968 முதல் தீவிர அரசியலில் ஈடுபட்டார். 1977 இல் பாராளுமன்ற உறுப்பினரான இவர், 1978 இல் குருநாகல் மாவட்ட அமைச்சராக செயற்பட்டார்.

1987 இல் வடமேல் மாகாண சபை முதலமைச்சராக நியமிக்கப்பட்டிருந்தார். 1994 இல் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த இவர், 1998 இல் எம்.பி. பதவியை இராஜினாமா செய்தார். இறுதியாக 2000ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டார்.

சுகவீனமுற்றிருந்த முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்கிரம பெரேராவின் நலன் விசாரிப்பதற்காக கடந்த பெப்ரவரி 11ஆம் திகதி கட்டுகம்பலையிலுள்ள அவரின் இல்லத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சென்றிருந்தார்.

இதன்போது முன்னாள் அமைச்சரின் நலன் பற்றி விசாரித்த ஜனாதிபதி, அவருடன் சிறிது நேரம் உரையாடலிலும் ஈடுபட்டதோடு, குடும்ப உறுப்பினர்களிடம் அவர் பற்றிய தகவல்களை கேட்டறிந்தார்.

## எலிசபெத் எம். அலன்...

இம்மாதம் 12ஆம் திகதி முதல் எதிர்வரும் 22ஆம் திகதிவரை ஜோர்தான், இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இவர் விஜயம் செய்யவுள்ளார்.

நாடுகளுக்கிடையிலான கூட்டாண்மை மற்றும் கூட்டணிகளை வலுப்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் அமெரிக்காவின் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதற்கும் இவரது இந்த விஜயம் அமைகிறது.

அமெரிக்க வெளியுறவுக் கொள்கை மற்றும் பொது இராஜதந்திர முயற்சிகளின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதுடன் கருத்துச் சுதந்திரம், பொருளாதாரத்துக்கு அதிகாரமளித்தல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும் அலனின் விஜயம் முக்கியத்துவமாக உள்ளது.

மூன்று நாடுகளுக்குமான விஜயத்தில் ஜோர்தானுக்கு சென்ற அலன், ஜோர்தானிய இளைஞர்கள் மீது ஆங்கிலமொழி திட்டங்களின் மாற்றத்தக்க தாக்கத்தை ஆராய்ந்தார்.

தேசிய பாதுகாப்புக்கான ஒரு கருவியாக ஒருங்கிணைந்த, புதுமையான மூலோபாய தகவல் தொடர்புகள் குறித்து ஆராய, அந்நாட்டு வெளியுறவுத்துறை பொது விவகார நிபுணர்கள் மற்றும் ஜோர்தான் அரசாங்க அதிகாரிகளுடன் சந்திப்புகளை நடத்தினார்.

அத்துடன் அமெரிக்க பொது இராஜதந்திர திட்டங்களின் முன்னாள் மாணவர்கள் மற்றும் சிவில் சமூகத் தலைவர்களுடன் பிராந்திய முன்னோக்குகள் குறித்தும் கலந்துரையாடினார்.

ஜோர்தானுக்கான விஜயத்தின் பின்னர் இலங்கைக்கு வருகை தரும் அலன், இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான அமெரிக்க ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தவும், சுதந்திரமான மற்றும் இந்தோபசுபிக் பகுதியை ஊக்குவிக்கும் நோக்கில் சந்திப்புக்களை மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கைக்கான விஜயத்தின் போது ஊடகவியலாளர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் மற்றும் இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் இளைஞர் மன்றம் உட்பட பலதரப்பட்டவர்களுடன் கருத்துச் சுதந்திரம் மற்றும் ஜனநாயக விழுமியங்கள் பற்றிய கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

அலனின் இறுதி விஜயமாக இந்தியாவுக்கான பயணம் அமைவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## 37ஆவது மாநாடு...

20ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் உள்ள 35 நாடுகளைச் சேர்ந்த விவசாய அமைச்சர்கள், துணை அமைச்சர்கள், அதிகாரிகள் உட்பட 300க்கும் மேற்பட்டோர் இந்த மாநாட்டில் பங்கேற்கவுள்ளனர். ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் 37ஆவது ஆசிய பசுபிக் மாநாட்டில் பங்கேற்பதற்காக 35 நாடுகளின் (17) அரச பிரதிநிதிகள் இலங்கை வருகின்றனர். ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் பணிப்பாளர் நாயகம் கு டோங்யு இன்று 18ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 250 Kg கடலட்டைகளுடன்...

குடியிருப்பு பகுதியிலுள்ள தோப்பில் இலங்கைக்கு கடத்தும் நோக்கில் பதுக்கி வைக்கப்பட்ட சுமார் 05 இலட்சம் ரூபா பெறுமதியான 250 கிலோகிராம் பதப்படுத்தப்பட்ட கடல் அட்டைகளுடன் சந்தேக நபர் ஒருவரை மெரைன் பொலிஸார் நேற்று முன்தினம் (16) கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் திடீர் சோதனை நடத்திய போது, இந்தக் கடல் அட்டைகளை இலங்கைக்கு கடத்துவதற்கு பதுக்கி வைத்திருந்தமை தெரியவந்தது.

இந்நிலையில் தோப்பின் உரிமையாளரையே பொலிஸார் கைது செய்துள்ளதுடன், சந்தேகநபரிடமிருந்து கடல் அட்டைகள் மற்றும் வாகனம், கடல் அட்டைகளை பதப்படுத்த பயன்படுத்தப்பட்ட பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

# எங்கள் கருத்து...

## மனிதநேயம் இல்லாத காட்டுமிராண்டித்தனம்!

சிறுவர் உரிமைகள் தொடர்பான சட்டதிட்டங்களை கண்டிப்பான முறையில் நடைமுறைப்படுத்துகின்ற நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும்.

ஆனால் இத்தனை சட்டதிட்டங்கள் நடைமுறையில் உள்ள போதிலும், சிறுவர் மீதான குற்றங்களை முழுமையாகக் கட்டுப்படுத்துவதென்பது இயலாத காரியமாகவே உள்ளது. அன்றாடம் நாம் வெகுஜன ஊடகங்களைப் பார்க்கின்ற போது இந்த உண்மை புரிகின்றது. சிறுவர் மீதான குற்றங்கள் ஆங்காங்கே தொடர்ந்தவாறுதான் உள்ளன.

சிறுவர் மீதான குற்றங்களை இழைப்பவர்கள் இளவயதினர் மாத்திரன்றி, வயது வந்தோராகவும் இருக்கிறார்கள். ஆங்காங்கே இடம்பெறுகின்ற சம்பவங்களில் அநேகமானவை பாலியல்ரீதியான குற்றங்களாகவே உள்ளன. சிறார்கள் உயிரிழந்துள்ள சம்பவங்களும் நடந்துள்ளன.

சிறார்களை உடல்ரீதியாக மாத்திரமன்றி, உளரீதியாக பாதிப்புக்குள்ளாக்குவதும் கடுமையான தண்டனைக்குரிய குற்றம் என்பதை பெரியவர்கள் அறிந்து வைத்துள்ள போதிலும், அவ்வாறான குற்றங்களை இழைத்துவிட்டு அக்குற்றவாளிகள் நீண்டகால சிறைவாசத்துக்குச் செல்வதுதான் வியப்பாக உள்ளது.

பிராணிகள் கூட தங்களது சின்னஞ்சிறுசுகளை எத்தனை பத்திரமாகப் பாதுகாத்து வளர்க்கின்றன என்பதை கல்மனம் படைத்த மனிதர்கள் முதலில் புரிந்துகொள்ள வேண்டும். ஆனால் சின்னஞ்சிறியோருக்கு தீங்கிழைக்கும் வன்மம் மனிதஇனத்தில் காணப்படுவது வெட்கத்துக்குரியது.

காட்டுமிராண்டித்தனமான சுபாவமுள்ளவர்கள் முதலில் அப்பாவித்தனம்மிக்க பிஞ்சுகளின் மனோநிலையை புரிந்து கொள்ள வேண்டும். மனப்பிறழ்வு கொண்ட இவ்வாறான குற்றவாளிகளின் உள்ளத்தில் சமூகநீதியையும், ஒழுக்கவிழுமியத்தையும் ஊட்டுவது நம் அனைவரினதும் கடமையாகும். இக்குற்றவாளிகளைத் தண்டிப்பதில் சட்டம் ஒருபோதுமே கருணை காட்டாதென்பதையும் அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

## நிந்தவூர் – ஒலுவில்...

படம் பிடித்து விளையாடிக்கொண்டிருந்த இரண்டு சிறுவர்கள் கடலுக்குள் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை (16) கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்ட இருவரும் கடலில் மூழ்கி காணாமற்போயினர். இருவரின் சடலங்களும் நேற்று மீட்கப்பட்டதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பவம் பற்றி தெரிய வருவதாவது,

பிரபல பாடசாலையொன்றின் 13 முதல் 15 வயதுக்குட்பட்ட 08 மாணவர்கள் நேற்று முன்தினம் (16) நண்பகல் ஜும்மா தொழுகையை முடித்துவிட்டு, சைக்கிள்களில் நிந்தவூர் ஒலுவில் எல்லை கடற்கரைக்குச் சென்று, கையடக்கத் தொலைபேசியில் படம் பிடித்து விளையாடிக்கொண்டிருந்தனர்.

அன்றையதினம் மாலை 4.20 மணியளவில் மாணவர்கள் இருவர் திடீரென்று கடல் அலையால் உள்ளிழுத்துச் செல்லப்பட்டதாக பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்துள்ளது. நேற்று முன்தினம் இயந்திரப்படகுகளின் உதவியுடன் சிறுவர்களை தேடும் பணியில் பொலிஸாரும் பிரதேசவாசிகளும் செயற்பட்டனர். இரவு வரை தேடுதல் நடத்தியும் சிறுவர்களை கண்டு பிடிக்க முடியாததால் தேடும் பணி கைவிடப்பட்டது.

எனினும் நேற்றுக் காலை மாளிகைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த சூர்தின் முஹம்மட் முன்சிப் எனும் மாணவனின் சடலம் கரையொதுங்கியுள்ளது. அத்துடன் மற்றைய சிறுவனை தேடும் பணி நேற்றுக் காலை ஆரம்பமானது. இதன்போது சாய்ந்தமருது பிரதேசத்தைச் சேர்ந்த முஹம்மட் இல்ஹம் (வயது 15) எனும் மாணவனின் சடலமும் மீட்கப்பட்டது.

## இலங்கையில் காணிகளின்...

கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான அனைத்துப் பயன்படுத்தப்படாத காணிகளையும் விவசாயம் மற்றும் கைத்தொழில் துறைகளுக்கு வழங்க அமைச்சரவை தீர்மானித்ததன் மூலமும் இந்த நிலைமை ஏற்படுமெனவும் நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். அதேவேளை இதுவரை திறந்த சந்தையாக இருந்த காணி வர்த்தகம் மூடப்படுவதன் மூலம் இந்நிலை ஏற்படுமென சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

20 இலட்சம் மக்களுக்கு அடமானம் வைக்கக்கூடிய காணி பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளமையினால் நாட்டின் சந்தையில் காணி வழங்கல் அதிகரித்துள்ளதன் காரணமாகவும் காணி விலையில் வீழ்ச்சி ஏற்படும் என்றே நிபுணர்கள் கூறுகின்றனர். அதோடு அரசாங்கத்துக்குச் சொந்தமான காணியை விவசாயம் மற்றும் தொழில்துறைக்கு தனியாரிடம் கொடுப்பதன் மூலம் மக்கள் தனியாரிடம் காணி வாங்கும் தேவை குறையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதுமட்டுமின்றி கடந்த வரவு, செலவுத் திட்டத்தில் ரயில்வே சிறிய நகரங்கள், வீட்டுத்திட்டங்கள், சுற்றுலா விடுதிகள், Station Plaza, மற்றும் வணிக வளாகங்களுக்கு, அதிகளவான காணிகளை வைத்திருக்கும் ரயில்வே திணைக்களத்துக்கு சொந்தமான காணியை குத்தகை அடிப்படையில் வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முடிவு செய்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த நடவடிக்கைகள் காரணமாக , காணி விலை குறைவை நேரடியாக பாதிக்கும் என்று பொருளாதார நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## வெளிநாட்டு கடனை மீள செலுத்த...

வெளிநாட்டு கடனை மீளச் செலுத்துவதற்கு அரசாங்கம் மும்முனை நிவாரணப் பொதிமுறையொன்றைதிட்டமிட்டுள்ளது. இந்த மூன்று கட்ட நிவாரணப் பொதியை மீளச் செலுத்துவதற்கான கால எல்லையை 56 வருடங்கள், 620 வருடங்கள் மற்றும் 20 வருடங்களென அமுல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

வெளிநாட்டு கடன் வழங்குநர்களின் ஆதரவுடன் இந்த கடன்களை திருப்பிச் செலுத்துவதற்கான சலுகைக் காலத்தை பெறுவதற்கு இலங்கை அரசாங்கம் செயல்பட்டு வருகிறது.

இந்த சலுகைக் காலத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான உடன்பாட்டைப் பெறுவதற்கான பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இதுவரை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளன. அந்த ஒப்பந்தங்கள் எட்டப்பட்டால் 56 ஆண்டுகளுக்குள் 37 வீத வெளிநாட்டுக் கடனையும், அடுத்த 620 ஆண்டுகளுக்குள் 51 வீத கடனையும், 20 ஆண்டுகளுக்குப் பிறகு மீதமுள்ள 12 வீத கடனையும் திருப்பிச் செலுத்த இலங்கை அரசுக்கு வாய்ப்பு கிடைக்கும்.

இவ்வகையில், கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கான சலுகைக் காலப் பொதியைத் தயாரிக்க, உலகப் புகழ்பெற்ற இரண்டு நிபுணத்துவ ஆலோசனை நிறுவனங்கள் இலங்கை அரசாங்கத்தின் சார்பாக செயற்படுகின்றன. Clifford Hance என்ற நிறுவனம் கடனைத் திருப்பிச் செலுத்துவதை ஒத்திவைக்க மற்றும் சட்ட நடவடிக்கைகளுக்காக கடன் வழங்குநர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது.

கடன் வழங்குநர்களுடன் கலந்துரையாடி சட்ட விவகாரங்களில் இலங்கை அரசாங்கத்திற்கு உதவுவதற்கு Lazard நிறுவனமும் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

இலங்கையில் எவர் ஆட்சிக்கு வந்தாலும், எவரொருவர் ஜனாதிபதியாக இருந்தாலும் இந்தக் கோரிக்கைகளுக்கமைய கடனை செலுத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டேயாக வேண்டுமென்றும் அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன மேலும் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியத்தின் அனுசரணையுடன் ஊடகத்துறை அமைச்சு ஏற்பாடு செய்திருந்த செயலமர்வு, கொழும்பு சினமன் லேக் சைட் ஹோட்டலில் நடைபெற்றது. நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

# ட்ரம்புக்கான பிரசாரத்தை பலப்படுத்தும் புடினின் பைடன் ஆதரவு



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

**2024 ஆம் ஆண்டு உலக அளவில் தேர்தல் ஆண்டாகவே அவதானிக்கப்படுகின்றது. ஏறத்தாழ 40 அரசுகளுக்கு மேல் தேர்தலை எதிர்கொள்கின்றது. பனிப்போர் அரசியலின் இருதுருவ ஏகாதிபத்திய அரசுகளான அமெரிக்கா மற்றும் ரஷ்யா தமது அரச தலைவருக்கான தேர்தலையும் இவ்வாண்டு எதிர்கொள்கின்றது.**

பனிப்போர் அரசியல் தகர்க்கப்பட்டாலும் பனிப்போருக்கு பின்னரான அரசியலிலும் அமெரிக்க மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான நெருக்கடிகள் சர்வதேச அரசியலில் பிரதான பேசுபொருளாகவே தொடர்கின்றது. குறிப்பாக ரஷ்ய ஜனாதிபதி புடினின் நகர்வுகள் பனிப்போர் அரசியலின் பிரதிபலிப்பாகவே சர்வதேச அரசியல் அவதானிகளால் விபரிக்கப்படுகின்றது. கடந்த 2016ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலிலும் குடியரசுக்கட்சியின் வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பின் வெற்றிக்கு பின்னால் ரஷ்ய அரசின் ஈடுபாடு காணப்பட்டதாக பரவலான குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இந்நிலையிலேயே 2024ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில், ரஷ்ய ஜனாதிபதி புடின் தற்போதைய அமெரிக்க ஜனாதிபதி பைடனுக்கு ஆதரவாக கருத்து தெரிவித்துள்ளார். இது சர்வதேச அரசியலில் அதிக பேசுபொருளாகவும் தேடலுக்குரிய விடயமாகவும் மாறியுள்ளது. இக்கட்டுரை ரஷ்ய ஜனாதிபதி புடினின் தேர்தல் பிரச்சாரத்தையும் அமெரிக்க தலைவரின் தேர்தல் மீதான கரிசனையையும் தேடுவதாகவே உருவாக்கப்பட்டுள்ளது.

ரஷ்ய ஜனாதிபதி தேர்தல் மார்ச் மாதம் நடுப்பகுதியிலும், அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நவம்பர் இறுதிப் பகுதியிலும் நடைபெற உள்ளது. இரு நாடுகளின் ஆட்சித்தலைவர்களும் நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் மீண்டும் களம் இறங்க உள்ளனர். இந்நிலையிலேயே அண்மையில் ரஷ்ய தொலைக்காட்சி நிருபர் பாவெல் ஜரூபின், “யார் சிறந்தவர், பைடனா அல்லது ட்ரம்பா?" என ரஷ்ய ஜனாதிபதி புடினிடம் கேட்டிருந்தார். “பைடன்” எனப்பதிலளித்த புடின் “அவர் மிகவும் அனுபவம் வாய்ந்தவர். அவர் கணிக்கக்கூடியவர். அவர் ஒரு பழைய பாணி அரசியல்வாதி." எனக்குறிப்பிட்டுள்ளார். மேலும், “நான் சுவிட்சர்லாந்தில் பைடனைச் சந்தித்தபோது, அது சில ஆண்டுகளுக்கு முன்பு, அவரால் செயல்பட முடியவில்லை என்று சிலர் ஏற்கனவே கூறினர். நான் அப்படி எதையும் பார்க்கவில்லை.” எனவும் புடின் பைடனின் முதுமை மீதுள்ள விமர்சனத்தையும் நிராகரித்துள்ளார். விளாடிமிர் புடினின் பைடனுக்கு ஆதரவான கருத்துகள் சர்வதேச அரசியல் அவதானிகளிடையே வாதப்பிரதிவாதங்களை உருவாக்கியுள்ளது. ஏனெனில் பைடனது ஆட்சிப்பரப்பிலேயே ரஷ்ய மற்றும் புடின் மீது கடுமையான எதிர்வினைகளை அவர் மேற்கொண்டிருந்தார். புடினை அமெரிக்க ஜனாதிபதி பைடன், “ஒரு கொலைகார சர்வாதிகாரி. ஒரு தூய குண்டர். நிலம் மற்றும் அதிகாரத்தின் மீது மோகம் கொண்டவர்" என்றெல்லாம் பல தடவைகள் பகிரங்க குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை இனப்படுகொலையாக சர்வதேச நீதிமன்றத்தில் பைடன் நிர்வாகம் குற்றம் சாட்டியிருந்தது. மேலும், ரஷ்யா மீது பொருளாதார தடைகளை விதித்ததுடன், ஏனைய நாடுகளையும் பொருளாதார தடைக்கு அழைப்பும் விடுத்திருந்தது.

இவ்வாறான அரசியல் நிகழ்வுகளின் பின்புலத்தில் புடினின் பைடனுக்கான ஆதரவு அதிக குழப்பங்களை உருவாக்கியுள்ளது. இவ்வாதரவை நேரான பார்வையில் பார்க்க முடியுமா? அல்லது எதிரான உள்நோக்கங்கள் கொண்டுள்ளனவா என்பதில் சர்வதேச அரசியல் அவதானிகள் தேடலை விஸ்தரித்துள்ளனர். குறிப்பாக எதிரான உள்நோக்கமே பரவலான அவதானிப்பாக காணப்படுகின்றது. இதற்கு கடந்த கால அனுபவங்களும் முதன்மை பெறுகின்றது.

2016ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் குடியரசுக்கட்சியின் வேட்பாளர் டொனால்ட் ட்ரம்பின் வெற்றிக்கு பின்னால் ரஷ்யாவின் புலனாய்வுத்துறை செய்பாடுகள் பிரதான வகிபாகத்தை செலுத்தியிருந்தது என்பது அமெரிக்க அரசியலின் பரவலான செய்தியாக உள்ளது. ரஷ்யா சமூக ஊடகங்களை பயன்படுத்தி அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயக கட்சி வேட்பாளருக்கு எதிராகவும், குடியரசுக்கட்சி வேட்பாளருக்கு ஆதரவாகவும் செயற்பட்டமைக்கான ஆதாரங்களின் தொகுப்பு 2018இல் அமெரிக்காவின் முதன்மை செய்தியாக காணப்பட்டது. ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ் பர்க்கில் உள்ள திட்டத்தில் பணிபுரியும் சுமார் 80 ரஷ்யர்களில் ஒருவரான இரினா வி. காவர்சினா என்பவர் சில செய்திகளுடன் குடும்ப உறுப்பினருக்கு மின்னஞ்சல் அனுப்பியுள்ளார். “எங்களுக்கு இங்கே வேலையில் ஒரு சிறிய நெருக்கடி இருந்தது. FBI எங்கள் செயல்பாட்டை முறியடித்தது. எனவே, சக ஊழியர்களுடன் சேர்ந்து தடங்களை மறைப்பதில் நான் ஆர்வமாக இருந்தேன். இந்த படங்கள் மற்றும் இடுகைகள் அனைத்தையும் நான் உருவாக்கினேன். மேலும் இது மக்களால் எழுதப்பட்டது என்று அமெரிக்கர்கள் நம்பினர்." என ரஷ்யாவின் திட்டத்தைப் பற்றி அவர் மின்னஞ்சலில் எழுதியுள்ளார். இம்மின்னஞ்சலை அடிப்படையாய் கொண்டு 37 பக்க குற்றப்பத்திரிக்கை, 2018, பெப்ரவரி16அன்று அமெரிக்காவின் அடிப்படை நீதித்துறை அலகான கிராண்ட் ஜுரியால் வாஷிங்டனில் ஒப்படைக்கப்பட்டது. அமெரிக்க அரசியல் முரண்பாட்டைத் தூண்டுவதற்கும், ஹிலாரி கிளிண்டனின் ஜனாதிபதி பிரச்சாரத்தை சேதப்படுத்துவதற்கும், மறுதளத்தில் எதிர் வேட்பாளர்களான பெர்னி சாண்டர்ஸ் மற்றும் ஜில் ஸ்டெய்ன் ஆகியோருடன் சேர்ந்து டொனால்ட் ட்ரம்பின் வேட்புமனுவை வலுப்படுத்துவதற்கும், கவனமாக திட்டமிடப்பட்ட மூன்றாண்டு கால ரஷ்ய திட்டத்தை இந்த குற்றச்சாட்டு முன்வைத்தது.

ரஷ்சியர்கள் அமெரிக்க குடிமக்களின் அடையாளங்களை திருடி, அரசியல் ஆர்வலர்களாக காட்டிக்கொண்டு, குடியேற்றம், மதம் மற்றும் இனம் ஆகியவற்றின் பிரதான புள்ளிகளைப் பயன்படுத்தி பிரசாரத்தை கையாண்டுள்ளனர். அதில் அந்த பிரச்சினைகள் ஏற்கனவே குறிப்பாக பிளவுபட்டன என்று வழக்குரைஞர்கள் தெரிவித்தனர். நீதிமன்ற ஆவணங்களின்படி, ரஷ்யர்களில் சிலர் ட்ரம்ப் பிரச்சாரத்துடன் தொடர்புடைய அறியாத நபர்களுடன் தொடர்பு கொண்டிருந்தனர் என்று தெரிவித்துள்ளது.



விசாரணைக்கு தலைமை தாங்கும் சிறப்பு ஆலோசகரான ராபர்ட் எஸ். முல்லர் III, ட்ரம்ப் அல்லது அவரது கூட்டாளிகள் தெரிந்தே சதித்திட்டத்தின் ஒரு பகுதி என்று எந்த குற்றச்சாட்டையும் முன்வைக்கவில்லை. “ரஷ்ய சதிகாரர்கள் அமெரிக்காவில் முரண்பாட்டை ஊக்குவிக்கவும், ஜனநாயகத்தின் மீதான பொதுமக்களின் நம்பிக்கையை குறைமதிப்பிற்கு உட்படுத்தவும் விரும்புகிறார்கள் என்றே குற்றப்பத்திரிகை குற்றம் சாட்டுகிறது" என விசாரணையை மேற்பார்வையிடும் துணை அட்டர்னி ஜெனரல் ராட் ஜே. ரோசன்ஸ்டீன் ஒரு சுருக்கமான செய்தி மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

இவ்வரலாற்று குற்றச்சாட்டினை முன்வைத்தே புடினின் பைடனுக்கான ஆதரவை அவதானிக்க வேண்டி உள்ளது. கடந்த காலங்களில் ரஷ்யா ஹிலாரி கிளின்டனை எதிர்த்தமைக்கு பின்னால், அவர் ஒபாமா ஆட்சிக்காலப்பகுதியில் வெளிவிவகார செயலாளராக ரஷ்யாவிற்கு எதிராக கடுமையான நிலைப்பாடுகளை முன்னெடுத்தமையே காரணமாகின்றது. ஹிலாரி கிளின்டன் வெளியுறவுத்துறை செயலாளராக இருந்தபோது, பெரிய அளவிலான அரசியல் எதிர்ப்புகளை எதிர்கொண்டதால் ரஷ்யாவில் அமைதியின்மையை தூண்டியதாக புடின் குற்றம் சாட்டியிருந்தார். இவ்வாறான பின்னணியில் 2016 தேர்தலில் ஹிலாரி கிளின்டனுக்கு எதிராக பிரசாரத்தை மேற்கொண்டிருந்த ரஷ்யா, இனப்படுகொலை குற்றச்சாட்டை முன்வைக்கும் பைடனை ஆதரிப்பதன் முரண்நகையான மாற்றத்தை நுணுக்கமாக அவதானிக்க வேண்டி உள்ளது.

17 ஆம் பக்கம் பார்க்க...

# மீண்டும் திருத்தப்படும் நிகழ்நிலை காப்பு சட்டம்



பாராளுமன்ற விவாதங்களிலிருந்து...

லோரன்ஸ் செல்வநாயகம்

**பல்வேறு விமர்சனங்கள், வாத விவாதங்கள், சர்ச்சைகளுக்கும் உள்ளாகியுள்ள நிகழ்நிலை காப்பு சட்டம் மீண்டும் திருத்தங்களுக்குள்ளாக்க முடிவு செய்யப்பட்டு அதற்கு அமைச்சரவையின் அனுமதியும் கிடைத்துள்ளது.**

ஏற்கனவே நிகழ்நிலை காப்புச் சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்த சட்ட மூலம் தேசிய ரீதியில் மட்டுமன்றி சர்வதேச ரீதியிலும் கவனத்தை ஈர்த்துள்ள நிலையில் முன்வைக்கப்பட்டு வரும் கருத்துக்கள் விமர்சனங்கள் ஆகியவற்றை கருத்திற்கொண்டே மீண்டும் அதில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

2024 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க நிகழ்நிலை காப்பு சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. போலியான தகவல்கள் பகிரப்படுவதை தடுத்தல் உள்ளிட்ட புதிய பல சட்டங்களை உள்ளடக்கி இந்த சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் கீழ், பொய்யான தகவல்கள் பரப்பப்படுவதைத் தடுப்பதற்கான அதிகாரம் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட புதிய ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த ஆணைக்குழுவினால் இனங் காணப்பட்டு வழக்குத் தொடரப்பட்டால் குறைந்தபட்சம் ஐந்து வருட சிறைத் தண்டனை வழங்க இச்சட்டம் வழிவகுக்கிறது.

எனினும் இச் சட்டம் பல்வேறு தரப்பினரின் எதிர்ப்புகளையும் மீறி அவசர அவசரமாக பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளமை பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாக காரணமாகியுள்ளது. அந்த வகையில் இலங்கையில் மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் அந்த சட்டம் தொடர்பில் கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. நிகழ்நிலை காப்பு சட்டத்தை உருவாக்கும் செயற்பாடுகளில் காணப்பட்ட இரகசியத் தன்மையையும் அதனை அவசர அவசரமாக நிறைவேற்றியதையும் கண்டித்துள்ள அந்த நிலையம் இச் சட்டத்தை கொண்டு வருவதன் நோக்கம் மற்றும் பின்னணி தொடர்பிலும் கேள்விக்குட்படுத்தியுள்ளது.

குறிப்பிட்ட சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றம் முன்வைத்த திருத்தங்களை அரசாங்கம் முழுமையாக கவனத்திற்கொள்ள தவறியுள்ளதாகவும் அது முறையான வகையில் உரிய உள்ளடக்கத்துடன் நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் அந்த நிலையம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கிணங்க சட்டமா அதிபர் திணைக்களம் உறுதிப்படுத்திய பின்னரே நிகழ்நிலை காப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் அலுவலகம் தெரிவித்தது. பாராளுமன்றத்தின் சட்டம் இயற்றும் நடவடிக்கைகள் சட்ட மாஅதிபர் திணைக்களம் சட்டவரைவாளர் திணைக்களம் ஆகியவற்றுடன் இணைந்து முன்னெடுக்கப்படுவதால் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்திற்கு மாறாக அல்லது அரசியலமைப்பிற்கு முரணாக செயற்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை எனவும் அந்த அலுவலகம் தெரிவித்தது.

இத்தகைய பின்னணியில் இந்த சட்ட நடைமுறையின் போது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மீது தவறாகப் பயன்படுத்தப்படலாம் என மனித உரிமை ஆர்வலர்கள் ஆட்சேபனைகளை முன்வைத்து வருகின்றனர். அனைத்துக்கும் அப்பால் தற்போது நிகழ்நிலை காப்பு சட்டம் நடைமுறைக்கு வந்துள்ள நிலையில் சமூக ஊடகங்களின் பயன்பாட்டாளர்கள் மிகுந்த அவதானத்துடன் செயற்படுவது அவசியமாகிறது.

அதேபோன்று இன, மத முரண்பாடுகளுக்குத் தூபமிடும் வகையில் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துவோரைப் பொறுத்த வகையில் இச் சட்டம் அவர்களுக்கு கடுமையானதாக அமையும் என்பதில் சந்தேகமில்லை.

### திருத்தங்களுக்கு அமைச்சரவை அனுமதி

சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னரும் அது தொடர்பில் வெளியிடப்பட்டு வரும் பாரதூரமான விமர்சனங்களை கருத்திற்கொண்டு நிகழ்நிலை காப்பு சட்டத்தில் மேலும் திருத்தங்களை கொண்டு வர அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அந்த வகையில் அதனை திருத்துவதற்கான சட்டமூலமொன்றை தயாரிக்குமாறு சட்டவரைஞருக்கு ஆலோசனை வழங்குவது தொடர்பில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் முன் வைத்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நிகழ்நிலை காப்பு சட்டத்துடன் தொடர்புடைய சில திருத்தங்கள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

அவ்வாறு 30 ற்கும் மேற்பட்ட திருத்தங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நீதிமன்றத்தை அவமதிக்கும் அல்லது நீதித்துறையின் அதிகாரம் மற்றும் பக்கச்சார்பின்மையின் பேணுகைக்குப் பங்கமாகவுள்ள கூற்றுக்களின் தொடர்பாடலிலிருந்தான பாதுகாப்பை உறுதிப்படுத்தலும்;

இச்சட்டத்தின்கீழ் தவறுகளைப் புரிவதற்காக நிகழ்நிலை கணக்குகள் மற்றும் தன்னியக்கச் செய்நிரல்களின் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக அவற்றைக் கண்டுபிடிப்பதற்கான, தடுப்பதற்கான மற்றும் பேணிக்காப்பதற்கான வழிமுறைகளை அறிமுகப்படுத்துதலும், அத்துடன் நாட்டின் நிகழ்வு பற்றிய பொய்யான கூற்றுக்களை மீண்டும் மீண்டும் அறிவிக்கின்ற நிகழ்நிலை அமைவிடங்களுக்கு நிதியளித்தல், அவற்றைமேம்படுத்தல் மற்றும் வேறு ஆதரவைத் தடுத்தலும் ஆகும்.

நீதிமன்ற அவமதிப்பாக அமைகின்ற பொய்யான அறிவிப்பு, கலகம் விளைவிப்பதற்கு காரணமாகும் பொய்யான கூற்று மூலம் தேவையின்றி ஆத்திரமூட்டல், பொய்யான கூற்றொன்றின் மூலம் மத நல்லிணக்கத்தைக் குழப்புதல், மத உணர்வுகளைப் புண்படுத்தும் நோக்கோடு வெளியிடப்படும் பொய்யான கூற்று, ஆள்மாறாட்டஞ் செய்து ஏமாற்றுதல் அமைதிக்குப் பங்கம் ஏற்படுத்தும் வகையில் பொய்யான கூற்றுகள் மூலம் வேண்டுமென்றே நிந்தை செய்தல், அரசுக்கெதிரான தவறான கூற்றைப் பரப்புதல், தவறிழைத்தல்

17 ஆம் பக்கம் பார்க்க...

VEHICLE VALUATION REPORTS
ACCEPTED BY LEASING AND FINANCE COMPANIES, BANKS, GOVERNMENT & NON- GOVERNMENTAL INSTITUTIONS
AA CEYLON Estd. 1904
CALL:-
Automobile Association of Ceylon
40, Sir M.M.M. Mawatha, Colombo 03
Tele. No: 011 7 555 557 (Ext. 214)

RAJARATA UNIVERSITY OF SRI LANKA
Centre for Distance and Continuing Education (CDCE)
DIPLOMA IN ENGLISH (EXTENSION) - YEAR 2024/2025 (INTAKE 24)
(Online or Physical mode) conducted by
Department of English Language Teaching
Faculty of Social Sciences & Humanities

Applications are invited for the above program from those employed in the public and the private sectors and school leavers. Applicants should possess the following entry requirements :

A. Candidates should have passed General Certificate of Education (Advanced Level) Examination, **or** an equivalent qualification **or** a course equivalent to SLQF Level 2 (Sri Lanka Qualifications Framework) or NVQ 4 (National Vocational Qualification ) **and**
a. A pass **(S)** for General English at GCE (A/L) **or**
b. A credit pass **(C)** for English at GCE (O/L) **or**
c. Basic or Professional English Certificate from a recognized university **or**
d. A pass at the National Certificate in English (NCE) **or**
e. A pass at the compulsory English examination conducted by a university as a requirement for the award of a degree **or**
f. A degree in English medium from a recognized university **or**
Any other qualification, the Board of Studies may, on case-by-case evaluation, consider suitable, and acceptable to the Senate OR
B. An Advanced Certificate in English from a recognized university

In addition, candidates have to sit for a written or oral selection test conducted by the University.

**Duration**
One Year ( Saturday or Sunday)

**Course**
This course includes lessons and activities to improve advanced Listening, Speaking, Reading and Writing skills and Grammar. The course includes a Literature component as well.
The course is conducted both in the physical/in-campus mode and the online mode according to the preference of the candidate. The examinations are conducted in-campus physically.

**Fees**
Course Fee - Rs. 30,000/=
Examination Fee - Rs. 2,500/=
Registration Fee - Rs. 1000/=
Total - Rs. 33,500/= (With the option of paying in 2 installments : Rs. 21,000/= + Rs.12, 500/=)

**Applications**
Application forms and further information could be downloaded from www.rjt.ac.1k/notice or http://cdce.rjt.ac.lk/cdce/news.php or obtained by personally visiting the university. Completed application should be sent to **Deputy Registrar, Centre for Distance & Continuing Education, Rajarata University of Sri Lanka, Mihintale** along with a copy of the birth certificate, copies of educational certificates and the bank slip after depositing the **selection fee of Rs.500.00** credited to Account No. 5022233 of Rajarata University of Sri Lanka, Bank of Ceylon, Mihintale Branch (Payment could be made at any branch of Bank of Ceylon).

**Closing Date of Applications: 30.04.2024**

*Inquiries : Coordinators - 0716858691, 0714349191*
*Department of English Language Teaching - 0252266802*
*Center for Distance and Continuing Education - 0252260120*

**Registrar**
**Rajarata University of Sri Lanka**
**Mihintale**
18.02.2024

தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சு
இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்

குருநாகல், கரந்தெனிய பிரதேச செயலகங்களில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் (SLBFE) பதிவு செய்துகொண்டு புலம் பெயர்ந்துள்ள தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு ஒரு வருட காலத்திற்கு பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள் (முன் பள்ளிகள்) மற்றும் பகல்நேரக் காப்பகங்களை செயற்படுத்துவதற்கான சேவை வழங்குநரைத் தெரிவு செய்தல்

பெறுகை அறிவித்தல்

காலி மாவட்டத்திலுள்ள கரந்தெனிய பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் குருநாகல் மாவட்டத்திலுள்ள குருநாகல் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்துகொண்டு புலம்பெயர்ந்துள்ள தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையங்கள் (முன் பள்ளிகள்) மற்றும் பகல்நேரக் காப்பகங்களை செயற்படுத்துவதற்காக சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

பிள்ளைப்பருவ அபிவிருத்தி தொடர்பான தேசிய செயலகத்தினால் வெளியிடப்பட்ட தேசிய பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையத்திற்கான தரம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பகல்நேரக் காப்பகத்திற்காக இலங்கை தேசிய வழிகாட்டியில் உள்ளடக்கப்பட்டுள்ள சகல தேவைப்பாடுகளின் பிரகாரம் ஒரு மாதத்தில் 25 நாட்களுக்கு சுமார் 40 பிள்ளைகளுக்கு நாளாந்தம் இரண்டு வேளை உணவு மற்றும் மேலதிக உணவு பானங்களை இரண்டு முறை வழங்குவதற்காகவும், அதற்குத் தேவையான வசதிகள் மற்றும் பாதுகாப்புகளை வழங்குதல் என்பன இந்த சேவையில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்தத் தேவைப்பாடுகள் தொடர்பான மேலதிக தகவல்கள் விலைமனு ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் பிரகாரம் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

மீளளிக்கப்படாத 2,500.00 ரூபா கட்டணத்தை 2024.02.16ஆம் திகதி முதல் 2024.03.11ஆம் திகதி வரையில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணிக்கிடையில் செலுத்தி மற்றும் எழுத்துமூலமான வேண்டுகோள் ஒன்றுடன் நிறுவனத்தின் வியாபாரப் பதிவுச் சான்றிதழின் (BRC) மூலப்பிரதி மற்றும் புகைப்படப் பிரதியொன்றையும் சமர்ப்பித்து பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், 2ம் மாடி, (பெறுகை) முகாமையாளரிடமிருந்து விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம். வியாபாரப் பதிவுச் சான்றிதழின் மூலப்பிரதி உறுதிசெய்துகொண்டதன் பின் அதே நாளில் மீளளிக்கப்படும்.

விலைமனுதாரர்கள் ஒவ்வொரு நிலையத்திற்காகவும் இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட 487,000.00 ரூபாவிற்கான வங்கி உத்தரவாதமொன்றை இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைவரின் பெயரில் பெற்று விலைக்கோரல் பிணை முறியாக விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும். ஒரு விலைமனு ஆவணத்தில் ஒரு நிலையத்திற்கு அல்லது இரண்டு நிலையங்களுக்கும் விலைக்கோரல்களை வழங்கலாம்.

விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம், 2ம் மாடி, பெறுகை பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

கிடைக்கப்பெற்றுள்ள விலைமனுக்கள் 2024.03.12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் கிடைக்கப்பெற்றுள்ள விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடன் உடன் திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் இந்த இடத்திற்கு விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.

எந்தக் காரணத்தைக் காட்டாமல் எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை திணைக்கள பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது என்பதுடன் எந்தவொரு விலைமனுவையும் தயாரித்தல் தொடர்பிலான நேரடியான அல்லது மறைமுகமான எவ்விதமான செலவையும் மீள்செலுத்தும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. இது தொடர்பில் திணைக்களப் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் 2ஆம் மாடியிலுள்ள பணிப்பாளர் சபை அறையில் 2024.02.27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு இடம்பெறும்.

மேலதிக விபரங்களை பத்தரமுல்ல, கொஸ்வத்த, இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியக பெறுகை முகாமையாளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
தொலைபேசி: 011-2887585, தொலைநகல்: 0112880564
மின்னஞ்சல்: mgr_procurement@slbfe.lk

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**www.slbfe.lk**
**தொ. இல. (Moble): 011 2887585, 011 2880564**
**மின்னஞ்சல்: mgr_procurement@slbfe.lk**

‘‘அக்கரையில் மாண்புற இக்கரையில் கைகோர்ப்போம்”

# இலங்கையின் சுற்றுலாத்துறை, வர்த்தகம் வளர்ச்சியடையும் வாய்ப்பு!




**இந்து சமுத்திரத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் அமைந்திருக்கும் இலங்கை பொருளாதார ரீதியில் சவால்களுக்கு முகங்கொடுத்துள்ள போதும், நாட்டின் மீதான சர்வதேசத்தின் அவதானத்தில் குறைவு ஏற்படவில்லை. நாட்டை சவால்களிலிருந்து மீட்டெடுப்பதற்கு அரசாங்கம் முன்னெடுத்துள்ள பிரயத்தனங்களுக்கு சர்வதேசத்தின் ஒத்தழைப்பும் அவ்வப்போது கிடைத்து வருகிறது.**

இந்த வரிசையில் 'பிக் பிரதர்' என வர்ணிக்கப்படும் எமது அயல்நாடு இந்தியா இலங்கைக்கு வழங்கிவரும் ஒத்துழைப்பு மற்றும் பாராட்டிவரும் நட்பு தற்போதைய நிலைமையில் மிகவும் முக்கியமானதாகும். இரு நாடுகளுக்கும் இடையிலான நெடுங்கால நட்புறவுக்கும் ஒத்துழைப்புக்கும் பல்வேறு முன்னுதாரணங்கள் இருக்கின்றபோதும், அண்மைய காலத்தை எடுத்துக் கொண்டால் குறிப்பாக பொருளாதார நெருக்கடியின் போது இந்தியா வழங்கிவரும் ஒத்துழைப்பு பரஸ்பர நன்மை அளிக்கும் விதத்தில் அமைந்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.



2022 ஆம் ஆண்டு பொருளாதார நெருக்கடியின் காரணமாக எரிபொருள், சமையல் எரிவாயு, அத்தியாவசியப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களுக்கான தட்டுப்பாடுகள் நிலவியபோது, இந்தியா வழங்கிய கடனுதவியே நாட்டுக்குப் பேருதவியாக இருந்தது. நாடு படிப்படியாக ஓரளவு சீரான நிலைக்குத் திரும்புவதற்கு இந்தியாவின் உதவி பெரிதும் கைகொடுத்தது.

இந்தியாவின் குறுகியகால உதவிக்கு அப்பால் நீண்டகால நோக்கத்திலான உதவிகளும் படிப்படியாக வழங்கப்படுகின்றன. நாட்டைக் கட்டியெழுப்புவதில் இந்தியா அர்ப்பணிப்புடன் உதவி செய்து வருகிறது. நாட்டைப் பொருளாதா ரீதியில் மீட்பதற்கு இலங்கைக்குக் காணப்பட்ட சிறந்த தெரிவான சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவியைப் பெறும் விடயத்திலும் இந்தியா இலங்கைக்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்கியது.

அதற்கும் அப்பால், சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாவது கடன்தவணையைப் பெற்றுக் கொள்வதற்கான முட்டுக்கட்டையாக விளங்கிய வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்புக்கு இந்தியா மனப்பூர்வமாக இணங்கித் தனது ஒத்துழைப்பை வழங்கியிருந்தது.

நேரடியான உதவிகளுக்கு அப்பால் நாட்டின் முன்னேற்றத்துக்கான முதலீடுகளை மேற்கொள்வதிலும் இந்தியா ஆர்வம் காட்டியுள்ளது. இலங்கைக்கு அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் துறையில் பிரதானமாக விளங்கும் சுற்றுலாத்துறைக்கு இந்தியாவின் ஒத்துழைப்பு குறிப்பிடத்தக்கதாகும். இந்தியாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் பேசிய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், 'உங்களுக்கு எனது முதல் அறிவுரை, அடுத்த முறை நீங்கள் விடுமுறை எடுக்க விரும்பினால், இலங்கைக்குச் செல்லுங்கள். தயவு செய்து இலங்கைக்கு செல்லுங்கள். உங்கள் அனைவருக்கும் இதைச் சொல்கிறேன்' எனக் கூறியிருந்தார்.

அண்மைக் காலமாக இலங்கைக்கு இந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகையும் அதிகரித்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவ்வாறான நிலையில் இரு நாட்டுக்கும் இடையிலான உறவுகளையும், சுற்றுலாத்துறையையும் வலுப்படுத்தும் நோக்கில் மற்றுமொரு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை வரும் இந்திய சுற்றுலாப் பயணிகளுக்கு கியூ ஆர் குறியீட்டின் மூலம் (QR Code) ஊடாக ஒருங்கிணைந்த கட்டண முறை எனப்படும் UPI ஊடாக பணம் செலுத்தும் முறை அறிமுகப்படுத்தப்பட்டிருப்பதே அதுவாகும். இது தொடர்பான நிகழ்வு ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றதுடன், இதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நிகழ்நிலையின் ஊடாகக் கலந்து கொண்டிருந்தார்.

## எமது நாட்டின் அந்நிய செலாவணி அதிகரிக்கும் அறிகுறி!

NNPCI International Payments Limited மற்றும் இலங்கை NLankaPay நிறுவனம் என்பன இணைந்து முன்னெடுக்கும் இந்த வேலைத்திட்டத்தை விரைவாக விஸ்தரிக்கும் நோக்கத்துடன் 10,000 வர்த்தக நிலையங்களில் இந்த கட்டண முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த வசதியை மேலும் விரிவுபடுத்துவதன் மூலம், இந்த வர்த்தக நிலையங்களின் எண்ணிக்கை மார்ச் 2024 இற்குள் 65,000 ஆகவும் உயர்த்தப்படவுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தனது அண்மைய உத்தியோகபூர்வ இந்திய விஜயத்தின் போது வெளியிடப்பட்ட 'தொலைநோக்கு அறிக்கையின்' பிரகாரம் இரு நாடுகளுக்கும் இடையில் தற்போதுள்ள இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் ஒன்றிணைந்த கொடுப்பனவு முறைமை (UPI) அறிமுகப்படுத்தப்பட்டது.

இலங்கையில் டிஜிட்டல் கொடுப்பனவுகளை அறிமுகப்படுத்தியதன் மூலம், LankaQR ஊடாக UPI பரிவர்த்தனைகள் அறிமுகப்படுத்தப்படும். ஏற்கனவே உள்ளூர் பரிவர்த்தனைகளுக்கு உகந்த முறையான LankaQR ஆனது QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் பணம் செலுத்துவதை எளிதாக்குகிறது. அதன்படி, UPI கைபேசி செயலியைப் தடையின்றி பயன்படுத்தி இலங்கை முழுவதும் உள்ள வணிகர் சமூகத்திற்கு கொடுப்பனவுகளை செலுத்த முடியும்.



## ஒருங்கிணைந்த கட்டண முறை (UPI) அறிமுகத்தினால் கிடைத்துள்ள அனுகூலங்கள்!

மேலும் இந்த ஏற்பாடு நாட்டில் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாமல் இந்திய – இலங்கை பொருளாதார உறவுகளையும் வலுப்படுத்தும். மேலும், இலங்கையில் உள்ள சுமார் 20 உள்ளூர் வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் இதற்கு தங்கள் ஆதரவை வழங்க ஒப்புக்கொண்டுள்ளன. மேலும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பகுதிகளுக்கு இந்தச் சேவையை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

டிஜிட்டல் மயப்படுத்தலில் உயர்ந்த இடத்தில் இருக்கும் இந்தியா தனது அனைத்து நிர்வாகச் செயற்பாடுகளையும் டிஜிட்டல் ரீதியான கொடுக்கல் வாங்கலுக்குள் கொண்டுவந்துள்ளது. குறிப்பாக டிஜிட்டல் கரன்சியை அறிமுகப்படுத்தும் விடயத்தில் நரேந்திர மோடி அரசாங்கம் கடுமையான விமர்சனங்களுக்கு உள்ளாகியிருந்தபோதும் எடுத்த காரியத்தில் விடாப்பிடியாகவிருந்த மோடி நிர்வாகம் சாதித்துக்காட்டியுள்ளது.

'ஆதார் அட்டை' என்ற தனித்துவமான அட்டையின் அடிப்படையில் ஒவ்வொருவரினதும் கொடுக்கல்வாங்கல்களையும் டிஜிட்டல் மயப்படுத்தியுள்ள இந்தியா, வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் டிஜிட்டல் துறையில் முன்னணியில் காணப்படுகிறது. இதுபோன்ற துறைகளில் இலங்கைக்கு முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்கவும் அந்நாடு தயாராகவுள்ளது.

எரிபொருள் நெருக்கடி இலங்கையில் நிலவியபோது நிலைமையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் கியூ ஆர் குறியீடு அறிமுகப்படுத்தப்பட்டு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காணப்பட்ட நீண்ட வரிசைகள் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டன.

இதுபோன்று ஏனைய துறைகளிலும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதானது இலங்கைக்கு சிறந்த பலாபலன்களைத் தரும் என்பதில் ஐயமில்லை. தற்பொழுது இலங்கையும் இந்தியாவும் இணைந்து ஒருங்கிணைந்த கட்டண முறை எனப்படும் UPI ஐ இங்கு அறிமுகப்படுத்தியிருப்பது இரு நாட்டுக்கும் பரஸ்பர நன்மைகளை வழங்கும்.

தமது நாட்டில் பயன்படுத்தப்படும் செயலியைக் கொண்டே கொடுக்கல் வாங்கல்களை இலங்கையில் மேற்கொள்ள முடியும் என்பதால் இந்தியச் சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருவதில் ஆர்வம்காட்டுவர். இதனால் இலங்கையின் அந்நியச் செலாவணி அதிகரிப்பதுடன், பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்டெடுக்க சுற்றுலாத் துறையின் பங்களிப்பை மென்மேலும் வளர்க்க முடியும்.

**பி.ஹர்ஷன்...**

# 14 இலட்சம் பலஸ்தீனர்கள் தஞ்சமடைந்துள்ள ரபா நகரம் மீது தாக்குதல் ஆரம்பிக்கும் வியூகம்!



காஸாவின் தென்பகுதியில் அமைந்துள்ள ஒரு நகர் ரபா ஆகும். இந்நகரின் மொத்த பரப்பளவே 64 சதுர கிலோ மீற்றர்தான். இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் மக்கள் தொகையைக் கொண்ட இப்பிரதேசத்தில் தற்போது 14 இலட்சத்துக்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் உள்ளனர். ஒரு சதுர கிலோ மீற்றர் பரப்பில் 16 ஆயிரம் பேர் என்றபடி மக்கள் தங்கியுள்ளதாக பலஸ்தீன செம்பிறைச் சங்கம் மதிப்பீடு செய்துள்ளது.

கடந்த 2023 ஒக்டோபர் முதல் காஸா மீது கடல், தரை மற்றும் ஆகாய மார்க்கங்கள் ஊடாக இஸ்ரேல் முன்னெடுத்துவரும் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்துள்ள பலஸ்தீனியர்களே இவர்களாவர். அடிப்படை வசதிகளற்ற கூடாரங்களிலும் முகாம்களிலும் இம்மக்கள் தங்கியுள்ளனர்.

இஸ்ரேலுக்குள் ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பதற்காகவும், ஹமாஸ் பிடித்துச் சென்றுள்ள பணயக் கைதிகளை விடுவிப்பதற்காகவும் எனக்கூறி இப்போரை ஆரம்பித்து நான்கு மாதங்களுக்கும் மேலாக முன்னெடுத்து வருகிறது இஸ்ரேல்.

365 சதுர கிலோமீற்றர் பரப்பளவைக் கொண்ட காஸாவானது 41 கிலோ மீற்றர் நீளமும் 6 முதல் 12 கிலோ மீற்றர் அகலமும் கொண்ட ஒரு பகுதியாகும். 23 இலட்சம் மக்கள் தொகையைக் கொண்ட இப்பிரதேசத்தின் சனத்தொகையில் 17 இலட்சம் பேர் பலஸ்தீனில் ஏற்கனவே இடம்பெயர்ந்துள்ளவர்களாவர்.

இந்த யுத்தத்தினால் இற்றைவரையும் 28 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காஸா மக்கள் காவு கொள்ளப்பட்டுள்ளனர். 68 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர். அத்தோடு காஸாவின் அரச கட்டடங்கள், மக்கள் குடியிருப்புக்கள், அகதி முகாம்கள், பள்ளிவாசல்கள், கிறிஸ்தவ தேவாலயங்கள் என அனைத்தும் தாக்குதல்களுக்கு இலக்காகி உருக்குலைந்துள்ளன. முழு காஸாவுமே சுடுகாடாக காட்சியளிக்கிறது.

2023 ஒக்டோபர் 13 ஆம் திகதி வடக்கு காஸா மீது தரைவழி யுத்தத்தை ஆரம்பித்த இஸ்ரேல், மத்திய காஸா, ஜபலியா, கான் யூனுஸ் என கட்டம் கட்டமாக தொடராக யுத்தத்தை முன்னெடுத்து வருகிறது. இந்த ஒவ்வொரு பிரதேசத்தின் மீதும் யுத்தத்தை தொடங்கும் போதும் மக்களைப் பாதுகாப்பான பகுதிகளுக்கு வெளியேறுமாறு அறிவுறுத்திய இஸ்ரேல் ஆகாயத்தில் இருந்து துண்டுப் பிரசுரங்களைப் போடத் தவறவில்லை. அத்தோடு மக்கள் வெளியேறுவதற்கான பாதுகாப்பான பாதைகளையும் கூட இஸ்ரேலே அறிவித்தது. இச்சமயங்களில் ரபா பாதுகாப்பான பிரதேசம் என இஸ்ரேலால் அவ்வப்போது அறிவிக்கப்பட்டது.

அதற்கேற்ப வடக்கு காஸாவில் யுத்தம் தொடங்கியது முதல் அங்கிருந்த மக்கள் அடங்கலாக ஒவ்வொரு பிரதேசத்தையும் சேர்ந்த பலஸ்தீனியர்கள் ரபாவுக்கு கட்டம் கட்டமாக இடம்பெயர்ந்தனர். இங்கு போதிய அடிப்படை சுகாதார வசதிகளோ, தண்ணீர் வசதியோ, உணவு வசதியோ, மருந்து பொருட்களோ இல்லாத நிலைமை காணப்படுகிறது. குறுகிய நிலப்பகுதிக்குள் பெருந்தொகை மக்கள் தங்கியிருப்பதன் விளைவாக அங்கு ஹெப்படைடிஸ் ஏ, வயிற்றோட்டம், தோல் நோய்கள் போன்றன தீவிரமடையக்கூடிய அபாயம் காணப்படுவதாக ஐ.நா. நிவாரண மற்றும் பணிகள் முகவரகம் ஏற்கனவே அறிவித்துள்ளது.

## மனிதப்பேரழிவுக்கு வழிவகுக்குமென உலகம் அச்சம்!



ஹமாஸ் மேற்கொண்ட தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பதற்காகவென ஆரம்பிக்கப்பட்ட யுத்தம் நான்கு மாதங்கள் கடந்தும் முடிவுற்றதாக இல்லை. அதேநேரம் ஹமாஸ் பிடித்துள்ள பணயக் கைதிகளில் அவர்கள் விடுவித்தவர்கள் தவிர்ந்த ரபாவில் மீட்கப்பட்ட இருவரைத் தவிர எவரையும் இன்னும் விடுவித்ததாகவும் இல்லை.

இந்நிலையில்தான் சனநெரிசல் மிக்க ரபா மீது யுத்தத்தை முன்னெடுக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள இஸ்ரேல் கடந்த திங்களன்று (12.2.2024) ரபாவில் மேற்கொண்ட தாக்குதலில் மாத்திரம் சுமார் 100 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அத்தோடு இஸ்ரேல் ரபா மீது யுத்தத்தை விரிவுபடுத்தப் பேவதாகவும் அறிவித்துள்ளது.

காஸா மீதான தரைவழி யுத்தத்தை ஆரம்பித்தது முதல் மக்கள் இடம்பெயருவதற்கான பாதுகாப்பாக இடமாக இஸ்ரேல் குறிப்பிடப்பட்டு வந்த ரபா மீது போரை விஸ்தரிக்க மேற்கொள்ளும் முயற்சி உலகின் கவனத்தை பெரிதும் ஈரத்துள்ளது.

இடம்பெயர்ந்துள்ள காஸா அகதிகள் செறிவாக உள்ள ரபா மீது யுத்தத்தை முன்னெடுக்கக் கூடாதென ஐ.நா உட்பட உலகின் பல நாடுகளும் வலியுறுத்தி வருவதோடு கண்டனங்களையும் தெரிவித்து வருகின்றன. அந்த யுத்தம் ரபாவில் மனிதப் பேரழிவுக்கு வித்திடும் என்றும் அந்நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன. இஸ்ரேலிய மக்களும் கூட ரபா மீதான போருக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இவை எதனையும் கவனத்தில் கொள்ளாத இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, 'ரபாவுக்கு யுத்தம் விரிவுபடுத்தப்படும். அங்குள்ள மக்களைப் பாதுகாப்பாக வெளியேற எமது பாதுகாப்பு படையினர் வழி செய்வர். அதற்கான திட்டங்களைத் தயாரிக்கவும் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளன' என்றுள்ளார்.

## மனிதாபிமானம் கருதி யுத்த வியூகத்தை நிறுத்துமாறு இஸ்ரேலுக்கு சர்வதேசம் வலியுறுத்தல்!

ஆனால் வடக்கு மற்றும் மத்திய காஸா பிரதேசங்களில் இருந்து மக்கள் வெளியேற பாதுகாப்பாக வழியென இஸ்ரேல் அறிவித்த வீதி வழியாகப் பயணித்தவர்கள் மீது கூட இஸ்ரேலியப் படையினர் ஏற்கனவே தாக்குதல் நடாத்தியுள்ளனர்.

இதேவேளை ரபாவுக்கு இடம்பெயர்ந்துள்ள மக்களைப் பாதுகாப்பாக வெளியேற்ற ஐ.நா. நிவாரண அமைப்புக்கள் எம்முடன் ஒத்துழைக்க முன்வர வேண்டும் என்று இஸ்ரேலே கேட்டுள்ளது.

ஆனால் ஹமாஸ், 'ரபா மீது போர் விஸ்தரிக்கப்பட்டால் பணயக் கைதிகள் விடுதலை நெருக்கடிக்கு உள்ளாகும்' என்றுள்ளது.

பலஸ்தீன அதிகார சபையும் 'இஸ்ரேல் ரபாவுக்கு யுத்தத்தை விரிவுபடுத்தக் கூடாது. இது விடயத்தில் சர்வதேசம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும்' என்று கோரியுள்ளது.

ஐ.நா. பொதுச் சபையின் தலைவர் டென்னிஸ் பிரான்சிஸ், 'தெற்கு காஸாவிலுள்ள ரபாவில் இஸ்ரேலின் தீவிர இராணுவ நடவடிக்கை திட்டத்தினால் ஏற்படக்கூடிய பேரழிவு குறித்து ஆழ்ந்த கவலை அடைந்துள்ளேன். இது மனிதாபிமான பேரழிவின் மற்றொரு கட்டமாக அமையும். நிலையான அமைதிக்கான பாதை இதுவல்ல' எனக்கூறியுள்ளார்.

இந்நிலையில், ரபா மீதான யுத்தத்தை உடனடியாக நிறுத்துமாறு சீனா வலியுறுத்தியுள்ள அதேநேரம் சனநெரிசலான பகுதி மீது யுத்தத்தை முன்னெடுப்பது குறித்து மீள்பரிசீலனை செய்யுமாறு பிரித்தானியாவும் இஸ்ரேலைக் கேட்டுள்ளது. அத்தோடு ஜேர்மனியின் வெளிவிவகார அமைச்சர் அன்னலெனா பேர்பாக், 'காஸா மக்கள் காற்றில் மறைந்துவிட முடியாது. ரபா மீதான இஸ்ரேலின் யுத்தம் மனிதாபிமான பேரழிவாக அமையும்' என்று எச்சரித்துள்ளார். இப்படை நடவடிக்கை திட்டத்திற்கு பிரான்ஸும் நோர்வேயும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய மூன்று நாடுகளும் ரபாவுக்கு யுத்தத்தை விரிவுபடுத்துவதற்கு எதிராக எச்சரிக்கை விடுத்துள்ளதோடு உடனடி யுத்தநிறுத்தத்தையும் வலியுறுத்தியுள்ளன.

காஸாவிலுள்ள பலஸ்தீனியர்களை வெளியேற்றுவதற்கான ஒரு முயற்சியாகவே ரபா மீதான இஸ்ரேலிய படை நடவடிக்கையை நோக்குவதாகக் குறிப்பிட்டுள்ள துருக்கி, அந்த மக்கள் வெளியேற்றப்படுவதை நாங்கள் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்றும் தெரிவித்துள்ளது.

இவ்வாறான சூழலில் அல்ஜீரியா, ரபா மீது படை நடவடிக்கையை விஸ்தரிக்க இஸ்ரேல் மேற்கொள்ளும் முயற்சி குறித்து ஆராயவென உடனடியாக ஐ.நா. பாதுகாப்பு சபையைக் கூட்டுமாறு கோரிக்கை விடுத்துள்ளது.

இதேநேரம் தென்னாபிரிக்கா, ரபாவுக்கு யுத்தத்தை விஸ்தரிக்க இஸ்ரேல் மேற்கொள்ளும் முயற்சி தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு சர்வதேச நீதிமன்றத்தில் கடந்த திங்களன்று மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளதோடு, மக்கள் செறிவாகக் காணப்படும் பிரதேசத்திற்கு யுத்தத்தை விரிவுபடுத்தும் திட்டத்தினால் ஏற்படக் கூடிய பேரழிவில் இருந்து பலஸ்தீனியர்களைப் பாதுகாக்க அவசர நடவடிக்கைகளின் அவசியத்தையும் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்நிலையில் இஸ்ரேலுக்கும் ஹமாஸுக்கும் இடையில் யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்தும் நோக்கில் எகிப்து, அமெரிக்கா, கட்டார், இஸ்ரேல் என்பன கடந்த செவ்வாயன்று கெய்ரோவில் கூடி மேற்கொண்ட மற்றொரு முயற்சியும் இணக்கப்பாடின்றி முடிந்துள்ளது.

இவ்வாறான நிலையில் எந்த நேரம் என்ன நடக்குமோ என்ற அச்சம் ரபாவிலுள்ள அகதிகளைச் சூழந்திருக்கிறது. அதேநேரம் ரபா மீது யுத்தத்தை விரிவுபடுத்தப் போவதாக இஸ்ரேல் அறிவித்தத்தைத் தொடர்ந்து அங்கு இடம்பெயர்ந்திருந்த பலஸ்தீனியர்கள் ரபாவுக்கு அருகிலுள்ள பிரதேசங்களையும் டயர் அல் பலாஹ், நுசைரத் அகதி முகாம்களையும் நோக்கி மீண்டும் இடம்பெயரத் தொடங்கியுள்ளனர் என்று ஐ.நா. மனிதாபிமான முகவரகம் தெரிவித்திருக்கிறது.

என்றாலும் ரபாவுக்கு அருகிலுள்ள எகிப்துக்கு தரைவழியாக காஸா மக்கள் இடம்பெயர முடியாது. அந்தளவுக்கு உறுதியான உருக்கு முட்கம்பி வேலியை எகிப்து ரபா எல்லையில் 14 கிலோ மீற்றர் நீளத்திற்கு அமைத்து வைத்திருக்கிறது. அத்தோடு இஸ்ரேலின் இந்த அறிவிப்பைத் தொடர்ந்து ரபா எல்லைப் பகுதியின் பாதுகாப்பையும் எகிப்து பலப்படுத்தியுள்ளது.

இந்நிலையில் பலஸ்தீன வாசியொருவர், "இதன் பின்னர் நாம் இடம்பெயர்வதாயின் மத்திய தரைக்கடலுக்குள் தான் குதிக்க வேண்டும்" என்றுள்ளார்.

மனிதாபிமானத்தை நேசிக்கும் அனைத்துத் தரப்பினரும் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி பணயக் கைதிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி வருகின்றனர்.



**மர்லின் மரிக்கார்...**

வார இறுதி அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

# தேர்தல் நெருங்கும் வேளையில் பேரம் பேசும் சக்தியை இழக்கும் நிலையில் தமிழரசுக் கட்சி!

**இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத் தெரிவு மற்றும் அதனைத் தொடர்ந்து நிர்வாகிகள் தெரிவு என்பன சர்ச்சையை ஏற்படுத்தியிருந்த நிலையில், இடைநிறுத்தப்பட்ட கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கு மற்றுமொரு குறுக்கீடு தற்போது ஏற்பட்டுள்ளது.**



இம்மாதம் 19ஆம் திகதி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மாநாட்டை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதும், இதற்கு எதிராக திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் நீதிமன்றங்களில் மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதனை விசாரணைக்கு எடுத்த நீதிமன்றம் மாநாட்டை நடத்துவதற்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது.

தமிழரசுக் கட்சிக்குள் தோன்றியிருந்த உள்ளக முரண்பாடு மேலும் உக்கிரமடைந்திருப்பதன் வெளிப்பாடாக இந்த இடைக்காலத் தடையுத்தரவு அமைந்துள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தலைமைத்துவத்துக்கான தெரிவுப் போட்டி இதுகாலவரை நடைபெறவில்லை. இதுவரை கட்சிக்குத் தலைமைவகித்த அனைவரும் போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டிருந்த நிலையில், முதல் தடவையாக தலைமைத்துவத்துக்கு மூவர் போட்டியிட்டனர்.

இந்தப் போட்டியானது கட்சியின் ஜனநாயகத்தை பறைசாற்றும் விடயமாக அமையும் எனக் கூறப்பட்டாலும், பதவி நிலைகளில் உறுப்பினர்களுக்கு ஏற்பட்ட மோகமே போட்டி நிலைமைக்கும் காரணம் என்பது புலனாகியது.

அதுமாத்திரமன்றி, அக்கட்சிக்குள் ஒருவர் மீது ஒருவர் உட்பகைமை கொண்டிருந்ததும் தெரியவந்தது.

தலைவர் பதவிக்கு மும்முனைப் போட்டி காணப்பட்டது. சிறிதரன் எம்.பி, சுமந்திரன் எம்.பி ஆகியோருடன் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரனும் களமிறங்கினார்.

மூவர் போட்டியிட்டாலும் சுமந்திரனுக்கும், சிறிதரனுக்கும் இடையிலேயே கடுமையான போட்டி நிலவியது. இரு தரப்பினரும் தமக்கு ஆதரவு வேண்டி கட்சி உறுப்பினர்கள் மத்தியிலும், அதில் தாக்கம் செலுத்தக் கூடிய புலம்பெயர் சமூகத்தின் மத்தியிலும் பிரசாரங்களை முன்னெடுத்தனர். இதனால் கட்சி ஆதரவாளர்கள் சிறிதரன் அணி, சுமந்திரன் அணி எனப் பிளவுற்றனர்.

தலைமைத்துவத்துக்கு நடத்தப்பட்ட தேர்தலில் சிறிதரன் தனது பெரும்பான்மையை நிரூபித்தார். இதன் பின்னர் கட்சியின் பொதுச்செயலாளர் உள்ளிட்ட நிர்வாகிகள் தெரிவுக்கான முயற்சியும் குழப்பத்திலேயே முடிவடைந்தது.

தலைவர் பதவி போட்டியில் முடிந்ததால், ஏனைய பதவிகளையாவது போட்டியின்றி இணக்கப்பாட்டுடன் தெரிவு செய்வதற்கான முயற்சிகளை தலைமைத்துவம் எடுத்திருந்தது. இருந்தபோதும் இந்த முயற்சி கைகூடவில்லை.

தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவம் வடக்குக்கு வழங்கப்பட்டால் பொதுச்செயலாளர் பதவி கிழக்குக்கு வழங்கப்படுவது என்பது அவர்களால் பின்பற்றப்பட்டுவரும் ஓர் சம்பிரதாயமாக இருந்தது. அந்த வகையில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஒருவரை நியமிப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும், குறித்த பதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற முனைப்புடன் பலர் இருந்தமை மாநாட்டில் புலப்பட்டது.

கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கிடையிலேயே ஒற்றுமை இல்லையென்பதும், பலர் கட்சியின் ஒற்றுமையைவிட பதவி நிலைகளைப் பெற்றுக்கொண்டு தம்மை பலப்படுத்துவதிலேயே ஆர்வம் கொண்டுள்ளனர் என்பதும் வெளிப்படையாகத் தெரிந்தது.

தலைமைத்துவத்துக்கான போட்டியில் தோல்வியடைந்த தரப்பு கட்சிக்குள் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கும், தேர்தல்களின் போது வேட்புமனுக்களில் கைச்சாத்திடுதல் உள்ளிட்ட அதிகாரம் மிக்க செயற்பாடுகளில் செல்வாக்கைச் செலுத்தும் பொதுச்செயலாளர் பதவியைப் பெற்றுக் கொள்வதற்கும் முயற்சிப்பதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

இதுவரை காலமும் தலைமைத்துவம் தொடர்பிலோ அல்லது பதவிகள் குறித்தோ தமிழரசுக் கட்சியில் உள்ளவர்கள் தமக்கிடையில் பகிரங்கமாக முரண்பாடுகளைத் தெரிவித்திருக்கவில்லை.

இருந்தபோதும் தற்பொழுது பதவிகளுக்காக உறுப்பினர்கள் தமக்கிடையில் முட்டிமோதிக் கொள்வது தமிழர் தரப்புக்கு ஆரோக்கியமான அரசியலுக்கு வழிவகுப்பதாக அமையாது என்று தமிழ்ப் புத்திஜீவிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கட்சியின் ஒற்றுமையைக் குலைப்பதற்கு சில தீய சக்திகள் முயற்சிப்பதாக மூத்த தலைவர் இரா. சம்பந்தன் கருத்துத் தெரிவித்துள்ளார். பொதுவான இணக்கப்பாட்டின் அடிப்படையில் நிர்வாகிகளைத் தெரிவுசெய்ய முடியாவிட்டால், தேர்தலை நடத்தியாவது அப்பதவிகளுக்கு ஆட்களைத் தெரிவுசெய்யுமாறு அவர் அறிவுறுத்தியிருந்த நிலையில், கட்சியின் ஒற்றுமையை சீர்குலைக்கும் சதி முயற்சிகள் இடம்பெறுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.



## தலைவர், பொதுச்செயலாளர் தெரிவுகள் இழுபறியைத் தொடர்ந்து கட்சிக்குள் இன்னும் முடிவுக்கு வராத உள்வீட்டு யுத்தம்!

அதேநேரம், எந்த வழக்கையும் எதிர்கொள்ளத் தாம் தயார் என்றும், தமக்கு எதிரான சூழ்ச்சிகள், தடைகளை மக்களின் ஆத்மபலத்துடன் முறியடிப்போம் என்றும் தமிழரசுக் கட்சியின் தலைவர் சிறிதரன் தெரிவித்துள்ளார். தன்னையும் தனது கட்சியையும் குழப்பும், அச்சுறுத்தும் வகையில் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவற்றைக் கண்டு அஞ்சப் போவதில்லை. தன்னைத் தலைவராக ஏற்றுக்கொண்ட கட்சியையும் மக்களையும் இப்படியான சூழ்ச்சிகளால் முடக்க முடியாது. எத்தனை வழக்குகள் வந்தாலும் அதனை எதிர்கொள்ளத் தாம் தயாராகவே இருப்பதாகவும் சிறிதரன் எம்.பி மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் நடைபெறும் வருடமாக 2024ஆம் ஆண்டு காணப்படுவதால் எதிர்காலத் தேர்தல்களில் எவ்வாறு செயற்படுவது, தென்னிலங்கைக் கட்சிகளுடன் பேரம்பேசும் அரசியலை எவ்வாறு வலுப்படுத்துவது என்பது குறித்து சிந்திக்க வேண்டிய இன்றைய தருணத்தில் கட்சியின் பதவிகளுக்காக உறுப்பினர்கள் தமக்கிடையில் முரண்பட்டுக்கொள்வது பேரம் பேசும் சக்தியை சீர்குலைக்கும்.

அது மாத்திரமன்றி, அரசாங்கத்தின் அறிவிப்பின்படி முதலில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதற்கான சாத்தியக் கூறுகளே தென்படுகின்றன. எனவே, தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய, தமிழ் மக்களுக்கு மிகவும் பொருத்தமான வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவதா அல்லது தமிழ்த் தரப்பினரை ஒன்றிணைத்து முன்னோக்கி நகர்ந்து செல்வதா என்பது குறித்த கலந்துரையாடல்களும் திட்டமிடல்களுமே தற்பொழுது தேவையாகவிருக்கின்றன.

இவ்வாறான பின்னணியில் தலைமைத்துவத்தின் பதவிகளுக்கு இழுபறிப்பட்டு நிற்பதும், கட்சியின் மாநாட்டை நடத்துவதற்கு நீதிமன்றத்தினை நாடிச் செல்வதும் போன்ற செயற்பாடுகள் ஒட்டுமொத்த தமிழ் மக்களுக்குமே பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவை என்பதை அக்கட்சியின் அரசியல்வாதிகள் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும் என்கின்றனர் தமிழ்ப் புத்திஜீவிகள்.

மறுபக்கத்தில், தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைத்து செயற்பட வேண்டியதன் அவசியமும் நன்கு உணரப்பட்டுள்ளது. இதற்கான பாரிய பொறுப்பு தமிழரசுக் கட்சிக்கு இருக்கும் நிலையில், இதுபோன்ற உள்ளக முரண்பாடுகள் அந்தப் பொறுப்பை பலவீனமாக்கலாம். விடுதலைப் புலிகளின் காலத்தில் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் செயற்பட்டுவரும் நிலையில், இதனை மேலும் வலுப்படுத்தி ஏனைய அரசியல் கட்சிகளையும் அதில் ஒன்றிணைத்து பலம்பொருந்திய கூட்டணியாகச் செயற்படுவதற்குப் பதிலாக தமக்கிடையில் முரண்பட்டுக் கொண்டிருப்பது பற்றியும் தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் சிந்திக்க வேண்டும்.

தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் என்ற ரீதியில் தனித்தனியாகப் பிரிந்துநின்று செயற்படுவது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மக்கள் சார்பில் பேரம்பேசும் சக்தியை ஏற்படுத்தி விடாது.

நடைபெறக்கூடிய தேர்தல்கள் இலங்கையின் அரசியல் வரலாற்றில் முக்கிய தேர்தல்களாக அமையும் என்பதில் ஐயமில்லை. இந்த நிலையில் ஏற்கனவே கட்சியின் உள்ளக முரண்பாடுகளினால் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கக் கூடிய வேட்பாளர்களில் யாருக்கு ஆதரவு தெரிவிப்பது என்பதில் மேலும் பிளவு ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றன.

ஒரு தரப்பு ஒரு வேட்பாளருக்கும் மற்றைய தரப்பு பிறிதொரு வேட்பாளருக்கும் ஆதரவு வழங்க வேண்டும் என முடிவெடுக்கும் பட்சத்தில் தேர்தலில் தமிழ் மக்களின் பலம் குறித்து தென்னிலங்கைக் கட்சிகள் குறைத்து மதிப்பிடுவதற்கான சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன.

எனவே, தமிழரசுக் கட்சி விரைவில் தமக்கிடையிலான உள்ளக முரண்பாடுகளை சுயநல நோக்கத்தில் மாத்திரம் அணுகாமல், ஒட்டுமொத்த தமிழ் மக்களின் நிலைப்பாட்டிலிருந்து அணுக வேண்டும். இதற்கு அவர்கள் சுமுகமான முறையில் பிரச்சினைகளைத் தீர்த்து ஒற்றுமையுடன் முன்னேறி தமது கட்சியையும், ஏனைய தமிழ் கட்சிகளையும் ஒருங்கிணைத்து முன்னேறிச் செல்ல வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களின் உண்மையான எண்ணம் ஆகும்.



**தமிழ் மக்களுக்குப் புரிந்துள்ள யதார்த்தம், தமிழ் அரசியல்வாதி–களுக்கு இன்னும் புரியவில்லை!**





# பத்திரிகை சாம்ராஜ்ஜியத்தின் சொந்தக்காரர் டீ.ஆர்.விஜயவர்தன

## பெப்ரவரி 23ஆம் திகதி அமரர் டீ.ஆர்.விஜயவர்தனவின் பிறந்த நாளாகும்

வஜிர லியனகே
தமிழில் எம். எஸ். முஸப்பிர்

அரசியலுக்கு வருவதற்கு முன்னர் ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் இந்நாட்டு பத்திரிகைத் துறையில் முக்கியமான ஒருவராகவிருந்தார். இந்த இளைஞரான ஆனந்த திஸ்ஸ தனது இளமைக்காலத்தில் டீ.ஆர்.விஜயவர்தனவின் கீழ் லேக்ஹவுஸ் நிறுவனத்தில் பணியாற்றினார். லங்காதீப ஆரம்பமானது 1986ஆம் ஆண்டில் டீ.ஆர்.விஜயவர்தனவின் பிறந்த தினத்திலாகும். ஒரு எழுத்தாளராக ஆனந்த திஸ்ஸவுக்கு விஜயவர்தன தனது பத்திரிகையில் எழுதுவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

இற்றைக்கு 34 வருடங்களுக்கு முன்னர் 1990ம் ஆண்டில் ஆனந்த திஸ்ஸ, விஜயவர்தனவைப் பற்றிய தனது நினைவுகளை இவ்வாறு எழுதியிருந்தார்.

“மிகுந்த ஆச்சரியம். விஜயவர்தனவின் பத்திரிகை குழுமத்திற்குச் சவாலாக அன்று ஆரம்பிக்கப்பட்ட லங்காதீப சில காலத்தின் பின்னர் நின்று போனது. அவ்வாறு நிறுத்தப்பட்டிருந்த லங்காதீப மீண்டும் ஆரம்பமானது “விஜய” பப்ளிகேசன் என்ற பெயரிலாகும். இது ஆச்சரியமானது என்பதோடு, இதனை விதியின் விளையாட்டாகக் கருத முடியும். மிகப் பெரிய பத்திரிகை நிறுவனம் மூன்று மொழிகளிலும் பத்திரிகையினை வெளியிட்ட விஜயவர்தனவை நான் எமது பத்திரிகை அடித்தளமாகவே காண்கின்றேன். எனினும் நாம் மற்றொரு பக்கத்தை மறந்துவிட்டோம். அதுதான் அரசியல் சுதந்திரத்தை ஆழப்படுத்தத் தொடங்கிய வணிகங்களின் பின்புலத்திலிருந்து தேவையான பலத்தை வழங்கிய நபர் அவர் என்பதாகும்"

ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் டீ.ஆர்.விஜயவர்தனவின் எழுத்துலக நினைவுகளைப் பற்றி இவ்வாறு எழுதியுள்ளார்.

“ஒரு தடவை நான் லேக்ஹவுஸ் நூல் நிலையத்தில் பணியாற்றும் போது எழுத்தாளர் ஒருவர் வந்து அதற்கு முன்னைய வாரத்தில் “லண்டன் டைம்ஸ்” பத்திரிகையில் வெளியான லண்டன் நகரில் உள்ள தகனக் கிரியை நிலைய திறப்பு விழா தொடர்பான செய்தியைக் கேட்டார். நான் பத்திரிகையை பல தடவைகள் பார்த்த போதும் அவ்வாறான ஒரு செய்தி பிரசுரமாகியிருந்ததை என்னால் காண முடியவில்லை என நான் அவரிடம் கூறினேன். அதற்கு அவரது பதில், “எம். டி. (மெனேஜிங் டிரக்டர்) அந்தப் பத்திரிகையில் அந்தச் செய்தி இருப்பதாகக் கூறினால் அச் செய்தி இருக்கவே வேண்டும்” என்பதாக இருந்தது. பின்னர் மீண்டும் கவனமாகப் பார்த்ததில் அந்தச் செய்தி பத்திரிகையின் ஒரு பக்கத்தில் கீழ் பகுதியில் தலைப்புக் கூட இல்லாமல் இரண்டு வரிகளில் பிரசுரமாகியிருந்ததைக் கண்டேன்.

விஜயவர்தனவுக்கு அவ்வாறான சிறப்பு நினைவாற்றல் இருந்தது. அவரது நினைவாற்றலைப் பற்றி ஏனைய பணியாளர்களிடத்தில் பெரும் நம்பிக்கை இருந்தது. இலங்கையில் இவ்வாறானதொரு தகனக் கூடத்தின் அவசியத்தை சுட்டிக்காட்டி ஆசிரிய தலையங்கம் எழுதும் வகையில் அந்தச் செய்தியைப் படிக்குமாறு ஆசிரிய தலையங்க எழுத்தாளருக்கு விஜயவர்தன அறிவித்திருந்தார்.



“நாம் அறியாத பல செய்திகளை எம். டி. அறிந்திருக்கின்றார்” அப்போது விஜயவர்தனவுடன் தினசரி கலந்துரையாடலுக்குச் சென்று வரும் பத்திரிகை ஆசிரியர்கள் அடிக்கடி பேசிக் கொள்வதைக் கேட்க முடிந்தது. அதற்குக் காரணம், அவர் ஒரு உண்மையான பத்திரிகையாளரைப் போன்று நாட்டின் மூலை முடுக்குகளில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் அவதானத்துடன் இருப்பதனாலாகும். ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் என்ற எழுத்தாளர் தன்னை ஒரு எழுத்தாளராக ஆக்கியதைப் பற்றி டீ. ஆர். விஜயவர்தனவுக்கு நன்றி தெரிவித்திருப்பது தனது முதலாவது வெளியீடான “யளி எளிவென்ன எபா” (மீண்டும் வெளிச்சமாக வேண்டாம்) என்ற புத்தகத்தில் என்பது இன்று அதிகமானோர் அறியாத ஒன்றாகும்.

இந்நாட்டில் வெளியீட்டில் ஈடுபடும் எழுத்தாளர் ஒருவர் ஜனாதிபதி பதவிக்கு தெரிவாகியது ஆர். பிரேமதாச என்ற இரண்டாவது நிறைவேற்று அதிகாரமிக்க ஜனாதியாகவாகும். ஒரு எழுத்தாளராக தனது முதலாவது கட்டுரையை ஆர். பிரேமதாச எழுதியிருப்பது டீ. ஆர். விஜயவர்தன காலத்தில் சிலுமின பத்திரிகையிலாகும். அது ஹிக்கடுவை ஸ்ரீலால் லியனகே சிலுமினவின் ஆசிரியராகப் பணியாற்றிய காலமாகும்.

டி.ஆர். விஜயவர்தனாவின் 100வது பிறந்தநாள் நினைவேந்தலில் ஆர். பிரேமதாச அது பற்றி இவ்வாறு நினைவு கூர்ந்திருந்தார்.

“சிறியதாக ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை நிறுவனம் லேக்ஹவுஸ் பத்திரிகை குழுமமாக பிரமாண்டமான வெளியீட்டகமாக கட்டியெழுப்பப்பட்டது அவரால் மட்டுமே சாத்தியமானது. அவர் ஒரு சட்டத்தரணியாகத் தொழில் செய்து வந்தாலும், அந்தத் தொழிலால் அடையக்கூடிய பெருமையை அவர் நிராகரித்தார். அந்நிய ஆட்சியில் இருந்து தனது தாய்நாட்டை விடுவிக்க அக்கால விடுதலை கீதத்தை நோக்கி ஈர்க்கப்பட்டார். தனது தாய்நாடு சுதந்திரம் அடைய உதவுவதில் அவரது நிறுவனம் மிகவும் பங்காற்றியது. அவர் முக்கியமானதாகக் கருதியது நிறுவனத்தின் அளவை அன்றி, ஆனால் அதன் தரத்தினையேயாகும். பத்திரிகை செய்ய வேண்டியது செய்திகளை வெளியிடுவது மாத்திரமல்ல. அது அறிவைக் கொண்டு வரும் மற்றும் பொதுமக்களுக்கு கல்வியை வழங்கும் ஊடகமாக அல்லது ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாக இருக்க வேண்டும் என்று அவர் நம்பினார்.

“பியசேன நிஸ்ஸங்க, மார்ட்டின் விக்ரமசிங்க, ஸ்ரீலால் லியனகே, டப்ளிவ். ஏ. சில்வா, மீமன பிரேமதிலக, ஹேமபால முனிதாச போன்ற மொழிகள், இலக்கியம், கலை தொடர்பில் போதிய அறிவு மற்றும் புரிந்துணர்வைக் கொண்ட பத்திரிகையாளர்களைத் தனது பத்திரிகையின் மூலம் அறிமுகப்படுத்தி பெரும் புரட்சியை ஏற்படுத்தினார். பத்திரிகை நிறுவனத்தினுள்ளேயும் அவரது சேவைகள் வெளிக் காட்டப்படும். சிலுமின பத்திரிகையானது பத்து சத பல்கலைக்கழகம் என்ற பெயரில் பிரபலமடைந்திருந்தது அதனால்தான்.

மார்ட்டின் விக்கிரமசிங்கவின் எழுத்துத் திறமையைக் கண்டு அவரை லேக்ஹவுஸில் டி.ஆர். விஜயவர்தன இணைத்துக் கொண்டார். விக்கிரமசிங்க முதன் முதலில் தினமினவுக்கு கட்டுரை எழுதியது 1916 ஜனவரி 21ம் திகதியாகும். "தாவரங்களும் விலங்குகளும்" என்ற கட்டுரையின் எழுத்தாளரது பெயர் மார்ட்டின் விக்கிரமசிங்க என்றில்லாமல், மலலகம எம். டபிள்யூ. என்றே எழுதப்பட்டிருந்தது. அந்நேரம் விக்கிரமசிங்க மட்டக்களப்பில் ஒரு இளம் வர்த்தகராகும்.

தினமின பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் இணைந்தபோது, விக்கிரமசிங்கவுக்கு முப்பது வயதாகும். அப்போது ஒரு சாதாரண பத்திரிக்கையாளர் பெற்றிருக்காத அளவு வாசிப்பனுபவமும், அறிவுச் செல்வமும் அவரிடத்தில் குவிந்திருந்தது. அத்தோடு, அவரிடத்தில் மனித வாழ்வு, உலகம் மற்றும் விலங்குகள் பற்றிய நிறைய அனுபவமும் இருந்தது.

டி.ஆர். விஜயவர்த்தனவின் பாத்திரத்தை மார்ட்டின் விக்கிரமசிங்கவின் தினமின பின்வருமாறு பதிவு செய்துள்ளது.

“இன்று பிரபலமிக்க எழுத்தாளராக இருக்கும் மார்ட்டின் விக்கிரமசிங்க மட்டக்களப்பின் ஒரு இளம் வர்த்தகராகவே செயற்பட்டார். அந்தக் காலத்திலும் அவர் பல்வேறு விடயங்கள் தொடர்பில் எழுதப்பட்ட புத்தகங்களை வாசித்து ஒரு கற்றறிந்த எழுத்தாளராக இருந்தார். கிராமத்தில் வேரூன்றியிருந்தாலும், நகர்ப்புற வாழ்க்கையும் அவருக்குப் பரிச்சயமில்லாததல்ல. மறுபுறம், மட்டக்களப்பில் கூட அவர் அரை நகர்ப்புற வாழ்க்கையையே வாழ்ந்தார். எனவே, நகரம் விக்கிரசிங்கவுக்கு பரிச்சயமில்லாத இடமாக இருக்கவில்லை. மறுபுறம், அவரது இளமையில், நகரம் இன்று போல் சிக்கலான மற்றும் மக்கள் அடர்த்தியாக வாழும் இடமாக இருக்கவில்லை. எவ்வாறாயினும், ஒரு பத்திரிகையாளனாக வாழ்க்கையைச் சம்பாதித்துக் கொள்வதற்காக இரண்டாவது முறையாக கொழும்பில் தங்கியிருப்பதற்கு வந்த விக்கிரமசிங்க கிராமத்திற்கும் நகரத்திற்கும் இடையில் ஊசலாடும் வாழ்க்கையை வாழ்ந்தார். இது ஒருவித அரை தூக்கம் போன்றதாகும். அவர் எந்த சித்தாந்தத்தையும் கடைப்பிடிக்கவில்லை என்றாலும், அவரது உலகக் கண்ணோட்டமும் அணுகுமுறையும் உண்மையில் பகுத்தறிவு பண்புகளால் வளர்க்கப்பட்டன.

மார்ட்டின் விக்கிரமசிங்க சிலுமின பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றியுள்ளார். டீ. ஆர். விஜயவர்தன பத்திரிகை ஆசிரியர்களைப் பற்றி தெரிவித்த கருத்துக்களை “பிறப்பிலிருந்து” என்ற புத்தகத்தில் விக்கிரமசிங்க இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

விஜயவர்தன தனது பத்திரிகையின் மூலம் லியோனார்ட் வுல்பின் படைப்புகளுக்கு பாரிய விளம்பரத்தை ஏற்படுத்திக் கொடுத்தார். அதோடு நின்று விடாமல், லியனார்ட் வுல்பின் சேவைகளை ஒரு எழுத்தாளராக வழங்கி அவர் இந்நாட்டு மக்களிடையே எழுத்தாளராக பிரபலமடையச் செய்தது டி.ஆர். விஜயவர்தனவாகும். லியோனார்ட் வுல்ப் எழுதிய பத்தேகம என்ற புத்தகம் சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்ட பின்னர், லியோனார்ட் வுல்ப் இலங்கை பற்றிய மூன்று புத்தகங்களை வெளியிட்டார். டீ.ஆர்.விஜயவர்தனவின் மரணத்தையடுத்து இந்த மூன்று புத்தகங்களில் ஒன்று கூட சிங்களத்தில் மொழிபெயர்க்கப்படவில்லை என்பது வேதனைக்குரிய விடயமாகும்.



தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
තිනකරන් වාරමන්ජරී

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## வர்த்தகம்

### 209 வியாபார ஸ்தலம் வாடகைக்கு/ குத்தகைக்கு

நாவல 176 பஸ் பாதைக்கு அருகில் 1100 ச.அடியுள்ள வியாபார நிலையம் வாடகைக்கு விடப்படும். 0768961104 011568

### 233 இயந்திராதிகள்/ கை கருவிகள் விற்பனைக்கு

வெல்டிங் உற்பத்திகள் ஹாட் பேசிங் இலக்ரோட்ஸ் மிக் வயர்கள் கவர்ச்சியான விலை. தொடர்பு கொள்ளவும். 076 7353201 011701

Hand Pallet truck சிறந்த நிலை கவர்ச்சியான விலை மற்றும் விசுவாசமான சேவை தொடர்பு கொள்ளவும். 076 7353201. 011700

PC 30 Komatsu Excavator இயந்திரங்களுக்கான Track rollers, track group Idlers, sprockets, tooth pi n மற்றும் ada ptors விற்பனைக்கு உண்டு. உடன் தொடர்பு கொள்ளவும். 076 7353201. 011703

3 CX மற்றும் 3 DX JCB பக்கோ இயந்திரங்களுக்காக bucket tooth side cutters, cutting edges nut மற்றும் bolts விற்பனைக்கு உண்டு. தொடா்பு கொள்ளவும். 076 7353201. 011702

adz.lk
it's what you want
The Trusted Market place for Buying & Selling

## வேலைவாய்ப்பு

### 317 வெற்றிடங்கள் டெயிலர்கள்/ டிரஸ்மேக்கர்கள்

கொழும்பு 12 சுற்றிலிருந்து வீட்டுக்கு வந்து ஜுகி மிஷின் மூலம் தைக்கக் கூடிய அனுபவமுள்ள பெண் ஒருவரைத் தேடுகிறோம். 0777 888358. 011532

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கம்பனி பணிப்பாளரின் வீட்டில் வேலை செய்யக்கூடிய சமையல் வேலை தெரிந்தவர் ஒருவர் தேவை. தொலைபேசியில் கதைக்கவும் 0777347486 011547

வீட்டுப் பணிப்பெண் மற்றும் சுத்திகரிப்பாளர்கள் தேவை. வயது 17 முதல் 40. சம்பளம் 25000 மற்றும் உணவு, தங்குமிடம் தரப்படும். தொடர்பு 75/ 1, WA சில்வா மாவத்தை , கொழும்பு 06. அழையுங்கள் 001 25 9 1 169, 0777 452447, 075 5091379. 010119



### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

அம்பலங்கொட புதிதாக ஆரம்பிக்கவுள்ள இந்திய ரெஸ்டூரண்ட் இற்கு (Indian Restaurant) இந்திய உணவு பானங்கள் பற்றிய அறிவுடைய திறமையான முகாமையாளர்கள் இந்திய உணவு பானங்கள் தயாரிக்கத் தெரிந்த கோக்கிமார், காசாளர், வெயி ட்டர் ஆண்/பெ ண் சமையலறை உதவியாளர்கள், ஜுஸ் , டீமேக்கர்கள் உடன் சேர்த்துக் கொள்ளப்படுவர். தமிழ் ஊழியர்கள் விரும்பத்தக்கது. ஆண், பெண் இருபாலாரும் சேர்க்கப்படுவ ர். இல. 379, மஹ வீதி, அம்பலங்கொடை. 0777 230204, 0777 255014. 011745

ரெஸ்டூரண்ட் ஒன்றிற்கு தமிழ் தம்பதி தேவை. ரொட்டி அப்பம், ரோல்ஸ், இடி யப்பம் வேறு உணவு வகைகள் தயாரிப்பதற்கு தனி நபர்களும் அழைக்கலாம். 0701530530, 0773696645. 011890

### 325 தொழில்துறை பொது

தொழிற்சாலைக்கு (இன்ஜெக்சன் மோல்டிங்), கொலிட்டி சுப்பர்வைசர், டெக்னீசியன்கள், மெசின் பெக்கிங் இற்கு ஆண், பெண் நிரந்தர தொழிலுக்காக வருகை தாருங்கள். களுபோவில. 077 2298899, 0777 356708 011689

நிக்கவெரட்டியில் அமைந்துள்ள விலங்குப் பண்ணைக்கு அனுபவமுள்ள ஊழியர்கள் தேவை. தம்பதி விரும்பத்தக்கது, மேலும் தோட்ட வே லைக்கும் ஊழியர்கள் தேவை. 077 6030002. 011704

புறக்கோட்டையில் அமைந்திருக்கும் திருமண அழைப்பிதழ் மற்றும் அச்சுக் கடதாசி விற்பனை செய்யும் கடைக்கு விற்பனையாளர்கள் தேவை. வேலைக்கு ஆண்/ பெண் இருபா லாரும் தேவைப்படுகின்றனர். மேலதிக தொடர்புகளுக்கு. 0777313478 011190

புறக்கோட்டையில் உள்ள அச்சிக்கடதாசி விற்பனை செய்யும் கடை ஒன்றிற்கு (க்ளீனிங்) வேலை செய்யக்கூடிய முன் அனுபவமுள்ள ஆண் ஒருவர் தேவை. தங்குமிடவசதி வழங்கப்படமாட்டாது. 0777313478 011186

வத்தளையில் அமைந்துள்ள தொழிற்சாலைக்கு அலுவலகத்தில் வேலை செய்ய அலுவலக உதவியாளர் (Office Peon) தேவை. இலவச தங்குமிட வசதியுடன் சகாய விலையில் மூன்று நேரமும் உணவும் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18, வெளிஅமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொ லைபே சி 076 6200300. 011799

27 வயதிற்குக் குறைந்த தங்கியிருக்கக்கூடிய ஆண் ஒருவருக்கு வேலை வாய்ப்பு, உண வு, தங்குமிடம் உண்டு. சிங்களம் கதைக்க க்கூடிய ஒருவருக்கு ச ம்ப ளம் 35000/ 0 76 5396675. 011852

## பொது

### 431 நானாவிதப் பொருட்கள் விற்பனைக்கு

Heidelberg ஜேர்மன் ஓப்செட் அச்சடிக்கும் இயந்திரம் Kord 46x64 (மஞ்சள் பட்டன்) ஜேர்மனியிலிருந்து கொண்டுவரப்பட்ட இயந்திரம் உடன் விற்பனைக்கு. விசாரணை 0741216734 அல்லது வட்ஸ்அப் 0033781996510 011145

## காணி/தோட்டம்

### 607 எஸ்டேட் விற்பனைக்கு

ஹந்தபான்கொட போருவதண்ட பஸ் பாதைக்கு முகப்பாக 7 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. 077 4833849. 012065

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

தெஹிவளை கௌடான புரோட்வேயில் காணி விற்பனைக்கு. 6.09 பேர்ச் ஓர் வீட்டுடன் அழையுங்கள் 071 1911885. 011447

தினகரன் வாரமஞ்சரி
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

### 618 வீடு சொத்து களுத்துறை மாவட்டம் விற்பனைக்கு

எம்பிலிப்பிட்டிய 300 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.03.03 இற்கு முன்பு. விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவ ரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை ரூபா.26.2 மில்லியன். 0773427535 011850

களுத்துறை காலி வீதி ஜும்மாப் பள்ளிக்கு எதிராக 29.3 பேர்ச்சஸில் ஆறு அறைகளைக் கொண்ட பெரிய வீடு விற்பனைக்கு. வியாபார நோக்கிற்கும் உகந்தது. 0779812299 012082

பாணந்துறை 19 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட மூன்று மாடி வீட்டுடன் காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.03.03 இற்கு முன். விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவ ரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை ரூபா.26 மில்லியன். 0773427535 011847

### 619 வீடு சொத்து குருணாகல் மாவட்டம் விற்பனைக்கு

அளவ்வ, நாரம்மல வீதி 7 ஏக்கர் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.03.03 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவ ரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை ரூபா.15.75 மில்லியன். 0773427535 011842

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

0777 282147
சிாிதலதா மாளிகையின் மணியோசை கேட்கும் தூரத்தில் விடு, வெற்றுக் காணி ஹோட்டல், தோட்டம், பல்வேறு வியாபாரஸ்தலம் கொள்வனவு செய்வதற்கும் விற்பனை செய்வதற்கும் உத்தேசித்திருப்பின் அழையுங்கள். சிங்கள, தமிழ், முஸ்லிம் எவருக்கும் பொருத்தமானது. 0777 438169. 011583

### 629 வீடு சொத்து இரத்தினபுரி மாவட்டம் விற்பனைக்கு

பலாங்கொட புத்தஜயந்தி மாவத்த 25 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.03.03 இற்கு முன்பு. விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவ ரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை ரூபா 2.5 மில்லியன். 0773427535 011854

பலாங்கொட புத்த ஜயந்தி மாவத்த 10.6 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.03.03 இற்கு முன்பு. விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவ ரிக்கு குறைந்தபட்ச கோரிக்கை ரூபா 1.1 மில்லியன். 0773427535 011856

### 631 வீடு சொத்து மாத்தறை மாவட்டம் விற்பனைக்கு

தெனியாய, மொரவக்க 153. 35 பேர்ச் நேஷன் டிரஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட காணி விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.03.03 இற்கு முன்பு, விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனி யன் பிளேஸ், கொழு ம்பு 02, என்ற முக வரி க்கு, குறைந்தபட்ச கோரிக்கை ரூபா. 1 3 .3 மில்லியன். 0773427535 011845

மாத்தறை, தங்கல்ல வீதி 12 பே ர்ச் நேஷன் டிர ஸ்ட் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட 03 காணித்துண்டுகள் விற்பனைக்கு. விலை விசாரணைகள் 2024.03.03 இற்கு முன்பு விசேட சொத்துக்கள் முகாமைத்துவப் பிரிவு, 242, யூனியன் பிளேஸ், கொழும்பு 02 என்ற முகவரிக்கு ஒரு துண்டு ரூபா 4.2 மில்லியன். 0773427535 011860



வாரமஞ்சரி திருமண சேவைகள்
பலவருடங்களாக நம்பிக்கையுள்ள சேவை

## மணமகன்

களுத்துறை மாவட்டம் பிறப்பிடமாகக் கொண்ட இந்து நாடார் 1972இல் பிறந்த தனியார் துறையில் தொழில்புரியும் மணமகனுக்கு நல்லொழுக்கமுடைய மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். விருப்பமானவர்கள் தொடர்பு கொள்ளவும். G213334

களுத்துறை மாவட்டம் மத்துகமை பிரதேசத்தை பிறப்பிடமாகக் கொண்ட இந்து நாடார் வயது 45 மணமகனுக்கு சாதாரண குடும்பத்தைச் சேர்ந்த மணமகளை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். கொங்கிறிட் வேலைத்தலத்தில் 20 வருடமாக தொழில்புரிகிறார். விருப்பமானவர்கள் தொடர்பு கொள்ளவும். G213335



தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 200
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk





அக்கரைப்பற்று 'வோக்கேர்ஸ் யூனியன்' அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர்களான திருகோணமலை மாவட்ட உயர் நீதிமன்ற நீதிபதி அல் ஹாபில் என்.எம். அப்துல்லாஹ் மற்றும் கல்முனை மாவட்ட நீதிபதி எம்.எஸ்.எம். சம்சுடீன் ஆகியோர் சட்டத்துறையில் முதுமாணிப்பட்டம் பெற்றமையைபாராட்டி கௌரவிக்குமுகமாக ஒழுங்குசெய்யப்பட்ட வைபவமொன்று அக்கரைப்பற்று தனியார் விடுதியொன்றில், அமைப்பின் சிரேஷ்ட உறுப்பினர் யு.எல் கலீலுர் ரகுமான் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் உயர் நீதிமன்ற நீதிபதி அல் ஹாபில். அப்துல்லாஹ் மாவட்ட நீதிபதி சம்சுடீன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி நினைவுப்பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படங்கள்.
(படங்கள் : அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

# களுத்துறை சிறைச்சாலைக்கு முஸ்லிம் பிரமுகர்கள் விஜயம்



ரமழான் காலங்களில் களுத்துறை சிறைச்சாலையில் சிறைக்கைதிகளாக இருக்கின்ற முஸ்லிம் கைதிகளின் நலன்களை கவனிப்பதற்காகவும் அவர்களது இப்தார், ஸஹர் உணவு மற்றும் தராவீஹ் தொழுகை போன்ற அவசிய தேவைகளை ஏற்பாடு செய்வதற்குமான ஒரு கலந்துரையாடல் (14) களுத்துறை சிறைச்சாலையில், சிறைச்சாலை அத்தியட்சகர் ரோஹன கலப்பத்தி தலைமையில் நடைபெற்றது. இச்சந்திப்பில், களுத்துறை சிறைச்சாலை முஸ்லிம் கைதிகள் நலன்புரி அமைப்பின் தலைவரும் முன்னாள் பேருவளை காதி நீதவானுமாகிய சாமஸ்ரீ மிர்ஸூக் பளீல் தலைமையிலான நலன்புரி அமைப்பின் அங்கத்தவர்கள் கலந்துகொண்டனர். சிறைச்சாலைக்கு விஜயம் செய்த நலன்புரி அமைப்பினர் முஸ்லிம் கைதிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் உட்பட எதிர்வரும் ரமழான் மாதத்தில் அவர்களுக்கு நோன்பு நோற்பதற்கான உதவிகளையும் செய்து கொடுக்குமாறு சிறைச்சாலை அதிகாரிகளை கேட்டுக்கொண்டனர். இச்சந்திப்பில் பேருவளை பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி நஸ்ரின் நஸீர், அகதிய்யா சங்க உறுப்பினர் உவைன் ஹாஜியார், சீனன் கோட்டை ஜனாஸா சங்க உறுப்பினர் பைஸர் ஹஸன் மற்றும் களுத்துறை பள்ளிவாசலின் மௌலவி இர்பான், நபீல் ஆகியோரும் கலந்துகொண்டனர்.


வாரமஞ்சரி BUDGET adz
It suits your budget
Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

MEDAGAMA
BANDARAGAMA - PILIYANDALA ROAD
10 perch land and Ground floor with 02 rooms, Verandah, two bathrooms - up-stair 03 rooms, 02 Bathrooms -parking for 2 Vehicles, Separate staircase entrances, Fully tiled, Ground floor two pantries
30m to main road. (Main 162 Bus route Bandaragama Pitakotuwa), 9 km to Piliyandala, 4.5 km to Bandaragama, 5 km to Galenigama Highway interchange
ALL BANKS, SCHOOLS, HOSPITALS AND OTHER ESSENTIAL SERVICES CLOSE BY, 150 METRES TO FILLING STATION
CONTACT FOR MORE DETAILS
0702 423 896 / 0777 288 308

கறையான்களை கட்டுப்படுத்துவதற்கான தீர்வு
FREE INSPECTION
Solution to Get rid of Termites
Pre & Post Construction treatments For Termites
RODENT CONTROL
To Minimize the Pest Attack & Usage of Pesticide Keep Your environment Clean
COCKROACHES, FLIES MOSQUITOES, ANTS BED BUGS, WOOD BORES
Hotline: 074 031 5517
Licence No - RP/PCR/WP/100, Approved by Registrar of Pesticides
Leemaka Industries (Pvt)Ltd.
(PV 120625) No. 374/5, Robert Gunawardana Mw, Battaramulla.
Tel - 0112 785344, Email - Leemakaindustries@gmail.com

අමානෝ වැහිපිලි සහ සෙවිලි
(Zinc Aluminium Sheet)
වැහිපිලි සහ සෙවිලි
0777 394 679 | 070 663 33 88

WENNAPPUWA (Little Italy)
PRIME COMMERCIAL LAND
පර්චස් 267
කොටස් දෙකකට බෙදා විකිණේ.
පර්චස් 1ක මිල ලක්ෂ 85 සිට*
Price Negotiable / මිල සාකච්ඡාකරගත හැක.
WhatsApp - 0771 930 456

ஒறுகொடவத்தையில்
பெறுமதிமிக்க வர்த்தகத்திற்கான காணி விற்பனைக்கு
418 பேர்ச் காணி லோ-லெவல் வீதிக்கு முகப்பானது
விசாரணை:
0773 972 991/ 0763 555 640
0742 797 689

TWO STOREY HOUSE FOR SALE
AT KANDAWALA ROAD, RATMALANA
30p, 2900 sq.ft. Fully Tiled, 5 Bedroom, Hot water, Remote gate, 200m to Galle Road.
Can be sold as 2 parts
Land value only
Rs. 63 Million
Contact - 0779 964 706

ELIXIA MALABE
APARTMENT FOR SALE
Brand New Luxury apartment 2 Bed 1 Bath 771 Sqft., with all common facilities close to IT Hub, Int Schools, Universities, Neville Fdo Hospital and Expressway.
0710792192

MATALE PALAPATHWELA
2 LANDS FOR SALE...
1. 3 ACRES AND 45 PERCHS
2. 127 PERCHS
2km from Palapathwela town. 1km bus route and 1km internal. Electricity, Pipe borne water available. Stream within the 3 acre property. Views of the beautiful Laggala mountains. Full of trees and forested. perfect for Villa development or meditation centre.
Tel - 0778 742 100

KATARAGAMA LAND & LUXURY BUNGALOW FOR SALE
Tourist Board approved Garden with agricultural project water and power main line with big bungalow
140 PERCH / 14 MILLION
Price Negotiable
0777 283 001
0707 283 003

GREEN VALLEY - PANAGODA
APARTMENT FOR SALE
Brand New unoccupied apartment 2 Bed 1 Bath 688 Sqft., at Green Valley – Jalthara Panagoda in a peaceful green environment, close to NSBM Green University, Lanka Tile factory
0710792192

SYNCOATES
LEADING WOOD COATING SOLUTION PROVIDER
WE ARE SPECIALIZED IN MANUFACTURING AND SUPPLY OF FINISHING PRODUCTS
- Sealer/ Lacquer (NC/AC/PU/UV)
- Pigmented Colours
- Waterbase Stain/ Lacquer
- Wood Flooring Lacquer
- Glass paints
- Outdoor paints etc...
Mobile +94 714 103 668
SYNCOATES LANKA (PVT) LTD
No. 19 Undurugoda, Polgasowita.
Contact - +94 112 634 914, +94 112 623 326
Web : www. syncoates.com.my

HOUSE FOR SALE
RATHMALANA
10 PERCH UPSTAIR HOUSE FOR SALE
4 BEDROOMS, 3 BATHROOMS, 1 SERVANT BATHROOM, 2 PANTRIES, 2 BALCONIES, PARKING FOR TWO VEHICLES, 100M FROM GALLE ROAD
0775 931 766

இரத்மலானவிலுள்ள
பெறுமதிமிக்க வர்த்தக காணி விற்பனைக்குண்டு.
முதலீடு ஒன்றிற்கான உகந்த சந்தர்ப்பமாகும். 520 பேர்ச் காணியுடன் 80,000 ச.அடி கட்டிடம் 40 அடி வீதிக்கான முகப்புடன். பிரதான வீதிக்கு 50 மீட்டர்கள்
விசாரணை:
0773 972 991/ 0763 555 640
0742 797 689

MODIFIED HOTEL SITUATED AT
KELANIYA
FACING MAIN KANDY ROAD
is available to run as a Franchise coffee shop, pastry shop, full scale bakery, food outlet. It may be a partnership with the owner or any other Business, Rent Lease basis for a long period
Call - 0773 629 237
starhotelsr@yahoo.com

மாத்தளை பல்லேதன்ன
SL ORGANIC CERTIFIED
40 ஏக்கர் பயிர் செய்கைக் காணி
முதிர்ச்சியடைந்த மிளகு மற்றும் கறுவா, அகர்வுட், பாற்கடலை, பலா மற்றும் சாதிக்காய்
தொடர்பிற்கான இலக்கம்:
0768 232 151

BATTARAMULLA - KOSWATTE
LAND FOR SALE
Devala Road
10.7 | 6.4 | 6.2 Perches.
Very close to LAUGFS, HNB Koswatte and Koswatte Junction
0710792192

சேதன தேங்காய் பால்
இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்டது
ஏற்றுமதிக்கான தரமுடையது 400 மி.லீ. சேதன தேங்காய் பால் இலங்கையின் உற்பத்தி உடனடியான விற்பனைக்கு உள்ளது
EXPORT QUALITY
தெங்கு அபிவிருத்தி சபை மற்றும் CU இனால் அங்கீகரிக்கப்பட்டது
மொத்த விற்பனை அல்லது சில்லறை விற்பனை ஏற்றுக் கொள்ளப்படும்
மொத்தக் கொள்வனவு மற்றும் ரொக்கப்பணக் கொடுப்பனவிற்கு விஷேட கழிவு
AALAM HOLDINGS (PVT) LTD.
NO.20/1, KOTHALAWELA AVENUE.COLOMBO 4.
மேலதிக விபரங்களுக்கு பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
0712 727 920 அல்லது 0117 173 864

கண்டியில்
அழகான 1 ஏக்கர் காணி
விற்பனைக்குண்டு
ஹந்தான இடஒதுக்கீட்டு நிலத்திற்கான எல்லையில் அத்துடன் லோட் மவுண்ட் பேட்டன் பங்களாவிற்கு அடுத்ததாகவுள்ளதுடன் ஹோட்டல் அமயா ஹில்ஸ் இலிருந்து 150 மீற்றர் தூரத்திலும் ஹீரஸ்கல வீதிக்கு முகப்பாகவும் கண்டி நகருக்கு 4 கி.மீற்றரிலும் உள்ளது. விசாரணைகளுக்கு
0777 366 202
0712 616 647
''தனியார் விடுமுறை பங்களாவிற்கு அல்லது சுற்றுலாத்துறை செயற்றிட்டத்திற்கு உகந்தது''.

ARIYARATHNE CONSTRUCTIONS
දිවයිනේ සියළුම ප්‍රදේශයනට
- අමානෝ වහල
- වීදුරු වහල
- ඍජු වහල
- විවිධ වහල සහ සැනපි
- සියලුම ජලබඳ පද්ධති අලුතින් දැමීම සහ අලුත්වැඩියාව
අත්තිවාරමේ සිට සියලුම නිවාස ඉදිකිරීම
Warehouse Construction
සියලුම ඇලුමිනියම් වැඩ
POLYCARBONATE
අමානෝ ෂීට් 0.47 (mm)
විශ්වාසයෙන්, වගකීමෙන් හා උසස් නිමාවෙන්...
0777 24 23 19 / 0711 24 23 19
senakaariyarathne@yahoo.com
www.ariyarathneconstructions.com
www.facebook.com/ariyarathneconstruction

VICTORIAN GUEST
Bandarawela
victorianbungalow.lk
1 Person Full Night Rs. 1000/-
2km Away from Railway Station
Rs. 20,000/-
(Full Bungalow) A Cook available
Welimada Road, Gaswatta Junction.
බණ්ඩාරවෙල නිවාඩුවක් ගත කරන ඔබට සුන්දර නිවාඩු නිකේතනයක්...
077 3 711 196
070 2 536 896

# நாட்டு மக்களிடம் இப்போதாவது மன்னிப்புக் கேட்குமா ஜே.வி.பி?


யாழ். நகரில் விடுதலைப்புலிகளின் தளபதி ரஹீம் என்பவருடன் விஜயகுமாரதுங்க

தான் எவ்வாறு கொலை செய்தேன் என நடித்துக் காட்டிய லயனல் விஜய குமாரதுங்கவின் கொலையின் காரணகர்த்தாக்கள் தொடர்பிலும், கொலையைச் செய்தவர் தொடர்பிலும் கொலை இடம் பெற்ற ஆறு மாதங்களில் பொலிஸாருக்குப் போதுமான தகவல்கள் கிடைத்திருந்தன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட ஜேவிபி செயற்பாட்டாளர்களில் சிலரை உளவாளிகளாக வைத்துக்கொண்டு செயற்படும் முறை பொலிஸாரிடம் இருந்தது. அத்துடன், ஜே.வி.பி.யின் கீழ்மட்டத்தில் இருந்த சிலரும் பொலிஸாருக்குத் தகவல்களைக் கொடுத்தனர். அவ்வாறு கிடைத்த அனைத்து தகவல்கள் மற்றும் பொலிஸாரின் விசாரணைகளிலிருந்தும் விஜயவின் கொலையாளி லயனல் ரணசிங்க என்பது தெரியவந்தது. என்றாலும் அவன் எங்கிருக்கிறான் என்பது குறித்து பொலிசாருக்கு எந்த தகவலும் கிடைக்கவில்லை. லயனல் ரணசிங்க ஹொரணை கொள்ளைச் சம்பவத்தில் கைது செய்யப்பட்ட போது எடுக்கப்பட்ட புகைப்படம் மற்றும் லயனல் ரணசிங்கவை நேரில் கண்ட சாட்சிகளைக் கொண்டு கணனியில் வரையப்பட்ட புகைப்படம் நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தது. இந்த இரண்டு புகைப்படங்களும் விஜயவின் கொலை தொடர்பில் விசாரணையை நடத்தும் பொலிஸ் அதிகாரிகளிடம் எப்போதும் இருந்தது.

விஜயவின் கொலையை விசாரிக்க மூன்று குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்ததோடு, அதில் ஒரு குழு உப பொலிஸ் பரிசோதகர் விமலரத்னவின் கீழ் இயங்கியது. மார்ச் 14ஆம் திகதி காலை வேறொருவர் தொடர்பில் தேடுவதற்காக விமலரத்னவின் குழுவைச் சேர்ந்த டயஸ் மற்றும் பசில் ஆகியோர் வெளியேறிச் சென்றனர். கொழும்பு பல்கலைக்கழகத்திற்கு அருகில் வரும் ஒருவர் தொடர்பான தகவலைப் பெற்றுக் கொள்வதே டயஸிடம் ஒப்படைக்கப்பட்ட பணியாகும். அதற்காக பசிலுடன் டயஸ் புறப்பட்டுச் சென்றிருந்தார். காலை ஒன்பது மணியளவில் கிரேகரி வீதியூடாக நடந்து சென்ற அவர்கள் பௌத்தாலோக மாவத்தையை அடைந்து துன்முல்லை நோக்கி திரும்பினர். முன்னால் வந்த இருவர் அகில இலங்கை பௌத்த சங்க கட்டடத்தை கடந்து சென்று கொண்டிருந்தனர். இதற்கிடையில் ஒருவர் எதிரே வந்து கொண்டிருந்தார்.

இனந் தெரியாத துப்பாக்கிதாரிகள் பலர் மனிதக் கொலைகளைச் செய்வதற்காக டி.56 துப்பாக்கியை துணிப் பைகளில் வைத்தே எடுத்துச் செல்வர். இதன் காரணமாக அவ்வாறான பைகளை எடுத்துச் செல்வோர் தொடர்பில் மிகவும் அவதானமாக இருக்குமாறு பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தது. டயஸுக்கு சந்தேகம் எழுந்தது. அவர் மனதில் பதிந்திருந்த உருவம் ஒன்று நினைவுக்கு வந்தது. குறித்த நபர் துணிப் பையை எடுத்துச் சென்றதால் டயஸின் சந்தேகம் வலுத்தது. "அதோ வருவது லயனல்" டயஸ் தனது நண்பர் பசிலிடம் கூறினார். அந்நேரம், சந்தேகமடைந்த நபர் அவர்கள் இருவருக்கும் அருகே நின்றிருந்தார்.

“லயனல்! எங்கே போகிறீர்கள்...?” சார்ஜென்ட் டயஸ், தந்திரமாகக் கேட்டார். ஒரு நபரின் உண்மையான பெயரைச் சொல்லி அழைக்கும் போது அவர் எவ்வாறான வெளிப்பாடுகளை வெளிப்படுத்துவார் என்று பொலிஸ் அதிகாரிகள் நன்கு அறிந்திருந்தனர். "லயனல்..." என அழைத்ததும் அவர், தனது பெயரைக் கூறி அழைப்பதை அறிந்து கொண்டு சமிக்ஞை காட்டுவதை பொலிஸார் அவதானித்தனர்.

“நான் லயனல் அல்ல, பெர்னாண்டோ...” என பதிலளித்து, தன்னிடமிருந்த அடையாள அட்டையை எடுத்து பொலிஸாரை நோக்கி நீட்டினார். ஹொரனகே பியசிரி பெர்னாண்டோ என அந்த அடையாள அட்டையில் அவரது பெயர் குறிக்கப்பட்டிருந்தது.

குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் வழங்கப்பட்ட லயனலின் புகைப்படம் மற்றும் விஜய குமாரதுங்கவைக் கொலை செய்த கொலையாளியின் கணனியில் காணப்பட்ட உருவப்படம் என இரண்டும் அந்நேரம் இரு அதிகாரிகளின் சட்டைப் பையிலும் இருந்தன. உடன் செயற்பட்ட டயஸ் சந்தேக நபரின் முதுகுக்குப் பின்னால் கையை நீட்டி அவரது இடுப்புப் பட்டியை கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். அருகில் இருந்த முச்சக்கரவண்டியில் அவன் ஏற்றப்பட்டான்.

சந்தேக நபரை வாகனத்திலிருந்து இறக்கிய டயஸ், அவனைப் பிடித்துக் கொண்டு “லயனலைப் பிடித்து விட்டோம்” எனக் கூறியவாறு அலுவலகத்தினுள் நுழைந்தார். அந்நேரத்தில் அங்கிருந்த அனைத்து உத்தியோகத்தர்களும் லயனல் என்பவன் யார் என்பதைப் பார்ப்பதற்காக அங்கு ஒன்று கூடினர். லயனலை அழைத்துக் கொண்டு டயஸ் நேரே சென்றது பணிப்பாளரின் அறைக்குள்ளாகும். “சேர், லயனலைப் பிடித்து விட்டோம்...” பணிப்பாளர் முன் அறையிலிருந்த பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரேராவுடன் பேசினார். அவரும் அவ்விடத்திற்கு வந்தார். அதன் பின்னர் சந்தேக நபரைப் பரிசோதித்த போதிலும் தான் ஹொரணையைச் சேர்ந்த பியசிரி பெர்னாண்டோ என்றே அவன் கூறினான்.


“நான் நண்பர் ஒருவரைச் சந்திப்பதற்காக வை.எம்.பீ.ஏ கட்டடத்திற்கு அருகில் வந்தேன். நான் லயனல் அல்ல. நீங்கள் தவறாக என்னைப் பிடித்திருக்கின்றீர்கள். நான் பியசிரி...” சந்தேக நபரை விட அதிகாரிகள் புத்திசாலிகள். பொலிஸாருக்கே உரிய முறையில் விசாரணைகள் ஆரம்பமானது. சந்தேக நபரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தியதில், தான் லயனல் என்பதை அவன் ஒப்புக் கொண்டான். லயனல் ரணசிங்க எனும் மஹிந்த அல்லது ஜயதிலக்க என்ற காமினியால் அதற்குமேலும் தனது அடையாளத்தை மறைக்க முடியாமல் போனது. பொலிஸாரிடம் இருந்த அவனது புகைப்படத்தை காட்டியபோது இனிமேல் தன்னிடம் மறைக்க எதுவும் இல்லை என்பதை உணர்ந்த அந்த இனந் தெரியாத நபர் தன்னை லயனல் என வெளிப்படுத்தினான்.

விஜயகுமாரதுங்க உள்ளிட்ட நாட்டின் முக்கிய மானவர்கள் பலரைக் கொலை செய்தமை தொடர்பில் பொலிஸாரால் தேடப்பட்ட லயனல் ரணசிங்க கைது செய்யப்பட்டமை கொழும்பு பிரதேசத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரின் ஊடாக பொலிஸ்மா அதிபர் ஆர்னஸ்ட் பெரேராவுக்கு அறியக் கிடைத்தது. அது தொடர்பில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவுக்கு அறிவிப்பதற்கு பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுத்தார். ஜே.வி.பியை அடக்குவது தொடர்பில் கடும் முயற்சி எடுத்த அமைச்சர் விஜேரத்ன அன்றைய தினம் மாலை பொலிஸ் மாஅதிபர் ஏனர்ஸ்ட் பெரேராவுடன் விஜயகுமாரதுங்கவைக் கொலை செய்தவனைப் பார்ப்பதற்காக கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்திற்கு விஜயம் செய்தார். லயனல் ரணசிங்கவுடன் நீண்ட நேரம் அமைச்சர் உள்ளிட்ட தரப்பினர் பேசினர். லயனலைச் சந்தித்ததன் பின்னர் அமைச்சர் விஜேரத்ன, பொலிஸ் மாஅதிபர் உள்ளிட்ட சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் அறையில் சந்திப்பொன்று இடம்பெற்றது. லயனல் ரணசிங்கவை சி.ஐ.டியினர் அழைத்துச் சென்று 48 மணித்தியாலங்களின் பின்னர், அதாவது மார்ச் 18ஆம் திகதி மாலை 4.45 மணியளவில் இரகசிய பொலிஸ் பணிப்பாளர் சந்திரா ஜயவர்தனவினால் அவரிடம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.




விஜயகுமாரதுங்க சுடப்பட்ட போது அவரது வீட்டின் அருகே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டட்சன் ரக பிக் அப் வாகனம்.


லயனல் ரணசிங்க தனது வீட்டில்


விஜயகுமாரதுங்கவை படுகொலை செய்வதற்காக வந்தபோது மோட்டார் சைக்கிளை செலுத்திய பயாகல டாசன் வீரசிங்க என்றழைக்கப்படும் ஹேரத்


லயனல் ரணசிங்க 1987 ஏப்ரல் 12 ஆம் திகதி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின்

முழுப்பெயர் பாலம்முல்லகே லயனல் ரணசிங்க எனும் காமினி எனும் மஹிந்த எனும் ஜயதிலக. வயது 27 வருடங்கள். இனம் / சமயம் சிங்களம் / பௌத்தம் தொழில் நிலக்கடலை வியாபாரம் வதிவிடம் இல. 5/2, தேசிய வீடமைப்புத் திட்டம், முணகம, ஹொரணை வர்த்தகப் பிரிவில் உயர் கல்வியை தொடர்வதில் ஆர்வம் கொண்டிருந்த லயனல் தனது குடும்பத்துடன் ஹொரணைக்கு வந்த பின்னர் ஹொரண வித்யாரத்னவில் உயர்கல்வி பயின்றான். இந்தக் காலப்பகுதியில் லயனல் ஜே.வி.பி.யில் இணைந்தாலும் அதற்குத் தேவையான பின்னணி அவரது வீட்டில் அமைந்திருந்ததாகத் தெரிகிறது. லயனலின் தாயார் 90களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஜே.வி.பி.யை பிரதிநிதித்துவப்படுத்தி இருந்தார். லயனல் தனது குடும்பப் பின்னணியில் இருந்து ஜே.வி.பி.யுடன் தொடர்பு வைத்திருந்தான்.

ஹொரண வித்யாரத்னவில் லயனலை விட சிரேஷ்ட மாணவரான ஜயசிறி என்ற யகிரல பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவர் லயனலை ஜேவிபியுடன் இணைத்தார். ஜயசிறியும் ஜே.வி.பி உறுப்பினராக இருந்ததோடு, லயனல் ஜே.வி.பியுடன் இணைந்தது ஹொரணை ஷீலரத்ன வீதியிலுள்ள வீடொன்றில் அமைந்துள்ள ஜே.வி.பி அலுவலகத்தின் ஊடாகவாகும். இதன் அமைப்பாளராக இருந்தது யட்டியந்தோட்ட சந்திரசிறியாகும். சந்திரசிறி கொழும்பு பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தில் கல்வி கற்றார். 1979/80 காலத்தில், அதன் மாணவர் சங்கத் தலைவராகச் செயற்பட்டதும் சந்திரசிறியாகும். லயனல் ஷீலரத்ன வீதியில் அமைந்துள்ள அலுவலகத்தில் ஜே.வி.பி அரசியல் வகுப்புகளில் கலந்து கொண்டார். லயனலுடன் இந்த வகுப்புகளில் கலந்துகொண்ட மற்றுமொருவர் ஹொரனை எல்லகந்த தோட்டத்தில் வசிக்கும் அபேசிங்க ஆவார்.

1986ம் ஆண்டின் இறுதியில், படகொடகமகே ஜயவர்தனவை லயனல் சந்தித்தார். ஷீலரத்னா வீதியில் வசித்து வந்த அவர், ஷீலரத்னா வீதியிலுள்ள ஜே.வி.பி அலுவலகத்தின் அமைப்பாளராகவும் இருந்தார். முன்பிருந்த அறிமுகத்தின் அடிப்படையில் லயனலுடன் சேர்ந்து கொண்ட ஜயவர்தன, தனது பயணச் செலவு மற்றும் உணவுக்காக பல தடவைகள் லயனலிடம் பணம் பெற்றுக் கொண்டிருந்தார். அத்துடன் கட்சிக்காக நிதி திரட்டும் சந்தர்ப்பங்களின் போது நன்கொடைப் பத்திரங்களுக்காக லயனலிடம் இருந்து பணத்தையும் பெற்றுக் கொண்டார். "

லயனல் நிலக்கடலை விற்பனையில் ஈடுபட்டிருக்கும் போது கட்சியின் பலரையும் ஜயவர்தன அவருக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். கருணாதரத்ன, சுனில் மற்றும் ஹேரத் போன்றோரை அவ்வாறு அறிமுகப் படுத்தி வைத்தது லயனலுக்கு நினைவில் உள்ளது. ஹேரத் மத்திய போக்குவரத்துச் சபைக்குரிய களுத்துறை தெற்கு டிப்போவின் பஸ்ஸின் சாரதியாக பணியாற்றிக் கொண்டிருந்துள்ளார். அவர் பஸ்ஸில் ஹொரணைக்கு வரும் போது நடைபாதையில் நிலக்கடலை சாப்பிட்டுக் கொண்டு லயனலுடன் பேசுவார். திருமணமான ஹேரத் களுத்துறை யட்டதொல வீதியில் வசித்து வந்துள்ளார். ஹேரத் என அறிமுகப்படுத்தப்பட்டாலும் அவரது உண்மையான பெயர் டாசன் வீரசிங்கவாகும். ஹேரத் மற்றும் திஸ்ஸ என்ற இரண்டு பெயர்களும் அவருக்கு கட்சியினால் வழங்கப்பட்டிருந்தது. குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர், பொலிஸ் அத்தியட்சகர் சந்திரா ஜயவர்தனவிடம், முதல் நாள் விசாரணையின் போது லயனல் ரணசிங்க சுமார் நான்கு மணித்தியாலங்களாக வழங்கிய வாக்குமூலத்தை சந்தேகத்திற்கு இடமின்றி அவ்வாறே குறிப்பிட முடியும். முதலாவது இலக்கை லயனல் விருப்பத்துடன் ஏற்றுக் கொண்டார்.

89ம் ஆண்டு மார்ச் 19ம் திகதி மாலை 4.10 மணியளவில் குற்ற விசாரணைத் திணைக்களத்தில் இரண்டாவது நாளாக லயனல் ரணசிங்கவிடம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன.

பம்பரகந்த பிரதேசத்தில் நடாத்தப்பட்ட கட்சியின் முகாமில் லயனல் ஜயவர்தனவினால் அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். அது 1986ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் இடம்பெற்றிருந்தது. துப்பாக்கியால் சுடும் முறைகள் உள்ளிட்ட விடயங்கள் பயிற்சியாளர்களால் பயிற்றுவிக்கப்பட்டன. அந்தப் பயிற்சி அளிக்கப்பட்ட விதத்திற்கு அமைய பயிற்சியாளர் இராணுவத்தைச் சேர்ந்தவர் என்பதை லயனல் புரிந்து கொண்டார்.

மார்ச் மாதம், கட்சியின் ஆயுதப் பிரிவுக்கு பயிற்சி அளிப்பதற்காக ஸ்ரீபாதவில் நடத்தப்பட்ட மற்றொரு முகாமில் லயனல் கலந்து கொண்டார். ஒவ்வொரு நபருக்கும் ஒரு இலக்கம் வழங்கப்பட்டிருந்தது. அந்த இலக்கத்தினால் மட்டுமே எவரையாவது அழைக்க முடியும். துப்பாக்கி சுடும் பயிற்சிக்காக அங்கு இரண்டு துப்பாக்கிகள் இருந்தன. ஏனைய பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது துப்பாக்கி வடிவத்திலான மரத் துண்டுகளைக் கொண்டாகும். ஏழு நாள் பயிற்சியின் முடிவில் கட்சியின் தற்போதைய நிலை மற்றும் அதன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பில் உரையும் நிகழ்த்தப்பட்டது. வரும் காலத்தில் கட்சியை ஒடுக்குவதற்கு அரசாங்கம் ஆயுதங்களை கொண்டு வரும் எனவும், எனவே அடக்குமுறையை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும் எனவும் அவர் குழுவிடம் தெரிவித்தார். பயிற்சி முடிந்து வரும்போது லயனல் மற்றும் அவரது குழுவினர் சமணலகந்த மலையில் ஏறி சிறீபாதவில் வழிபாட்டில் ஈடுபட மறக்கவில்லை. லயனல் உள்ளிட்ட ஏனைய தரப்பினரை ஈடுபடுத்தி கட்சியின் எதிர்கால நடவடிக்கைகளுக்குத் தேவையான பணத்தை ஈட்டுவது, உயர் மட்டத்தில் இருந்த ஜேவிபி தலைவர்களின் தேவையாக இருந்தது.

ஹொரணையில் அமைந்திருந்த திலகாசிறி ஸ்டோர்ஸின் பாணந்துறை கிளையில் கொள்ளையடிப்பதே இக்குழுவின் திட்டமாக இருந்தது. அதற்காக அவர்களிடம் இரண்டு கல்கட்டாஸ் துப்பாக்கிகள், தோட்டாக்கள் இல்லாத கைத்துப்பாக்கி ஒன்று, மூன்று வெள்ளை இரும்புக் கத்திகள் மட்டுமே இருந்தன. பணத்தைக் கொள்ளையிட்டுச் செல்ல வந்த வாகனத்துடன் கடைக்குச் சொந்தமான மற்றொரு லொறி அவ்விடத்திற்கு வந்ததால் அந்த நடவடிக்கை வெற்றியடையவில்லை. முயற்சி தோல்வியடைந்ததால், ஒரு பிளின்ட்லாக், கைத்துப்பாக்கி என்பன ஜெயவர்த்தனவினால் லயனலிடம் ஒப்படைக்கப்பட்டன. திட்டம் தோல்வியடைந்ததால் அவர்கள் கொண்டு வந்த ஆயுதங்கள் அனைத்தையும் துணிப்பை ஒன்றுக்குள் போட்டு ஜயவர்தனவினால் லயனலிடம் ஒப்படைக்கப்பட்டது.

தனது புத்தகங்களை வைத்திருந்த, டிரங்க் பெட்டியினுள் அந்த அனைத்தையும் மறைத்து வைத்திருந்த லயனல், மறுநாள் நிலக்கடலை வியாபாரத்திற்குச் செல்லாமல், வீட்டில் உள்ள சமையலறையில் சில திருத்த வேலைகளில் ஈடுபட்டார். சிங்களப் புத்தாண்டு நெருங்கிக் கொண்டிருந்ததால், லயனலுக்கு சமையலறையை சீரமைக்க வேண்டியிருந்தது. அன்றைய தினம் மதியம் இரண்டு மணியளவில் லயனலின் வீட்டிற்கு வந்த ஜயவர்தன, அன்று இரவு ஹொரணை நகரில் சந்திக்குமாறும், வரும் போது இரண்டு பைகளையும் எடுத்து வருமாறும் கூறிவிட்டு உடனடியாக அங்கிருந்து வெளியேறினான். அன்றைய தினம் இரவும், முன்னைய நாளும் டாசன் வீரசிங்க எனும் ஹேரத் வெள்ளை நிற ஹையெஸ் வேனில் வந்திருந்தான். அந்த வேனில் லயனல் ஏறிய போது வேனின் உட்புறத்தில் சுனில், கருணாரத்ன மற்றும் ஜயவர்தன ஆகியோர் இருந்தனர். திலகசிறி ஸ்டோர்ஸில் கொள்ளையடிப்பதே இக்குழுவினரின் நோக்கமாக இருந்தாலும், அப்போதிருந்த சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, செரண்டிப் வெளிநாட்டு மதுபான விற்பனை நிலையத்திலிருந்து பணத்தை எடுத்துச் செல்லும் போது, அப்பணத்தைக் கொள்ளையிட அவர்கள் முடிவு செய்தனர்.

ஆயுதங்களுடன் ஹொரணை நகரில் வேனில் அவர்கள் இருந்த போது எதிர்பாராத வகையில் பொலிஸ் குழுவொன்று வேனையும் அதிலிருந்தவர்களையும் சோதனையிட ஆரம்பித்தது. வேனில் இருந்த ஆயுதங்களை பொலிசார் கண்டுபிடித்ததும், வேனிலிருந்த அந்த நான்கு பேரையும் வேனுடன் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் சென்று அடைப்பதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர்.

நால்வரையும் தனித்தனியாக பொலிசார் விசாரணைக்கு உட்படுத்தினர். லயனலிடம் விசாரணை நடத்திய போது “நாங்கள் அனைவரும் ஜேவிபிக்காரர்கள்... இன்று திலகசிறி ஸ்டோர்ஸ் அல்லது செரண்டிப் மதுபான நிலையத்தில் கொள்ளையடிப்பதற்காக வந்தோம்... நேற்று பாணந்துறையில் திலகசிறி ஸ்டோர்ஸில் கொள்ளையடிக்க சென்ற போதும் அது சரிவரவில்லை...” எனக் கூறியுள்ளான்.

இவைகளின் காரணமாகவே குறித்த குழுவினர் ஹொரணை நீதவான் நீதிமன்றத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். அத்துடன், ஹொரணை பொலிசார் அனைத்து நபர்களின் புகைப்படங்களையும் கைரேகைகளையும் எடுத்துக் கொண்டனர்.

லயனல் வெளிப்படுத்திய இந்த சம்பவம் நாட்டில் ஒரு சர்ச்சைக்குரிய நிகழ்வாக இருந்தோடு, 1987 ஏப்ரல் 16ம் திகதி திவயின பத்திரிகையின் முதல் பக்கத்தின் முக்கிய தலைப்புச் செய்தியாகவும் அமைந்திருந்தது. "தடைசெய்யப்பட்ட கட்சியைச் சேர்ந்த ஐந்து பேர் ஆபத்தான ஆயுதங்கள் மற்றும் புரட்சிகர புத்தகங்களுடன் கைது செய்யப்பட்டனர்." எனக் குறிப்பிடப்பட்டிருந்த அந்தச் செய்தி தொடர்பில் மற்றொரு செய்தி 1987 ஏப்ரல் 18ம் திகதி திவயின பத்திரிகையில் வெளியானது. “ஹொரணை பொது தபால் நிலையத்திற்கு அருகில் கடந்த 12ம் திகதி ஹொரனை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்ததாகக் கூறப்படும் ஐந்து பேரின் வீடுகளில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது, சந்தேகநபர் ஒருவரின் வீட்டிலிருந்து சில காலத்திற்கு முன்னர் திருடப்பட்ட இரு மோட்டார் சைக்கிள்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பயங்கரமான ஆயுதங்கள் மற்றும் மக்கள் விடுதலை முன்னணிக்குரிய புத்தகத்துடன் கைது செய்யப்பட்ட இவர்கள் பயணித்த 40 ஸ்ரீ 3182 என்ற இலக்கத்தை உடைய வெள்ளை நிற ஹையெஸ் வேன் தற்போதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஓசித அத்தநாயக்க
தமிழில் முஸப்பீர்

# வவுனியா புகையிரத நிலையத்தில் நூலக, சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள்!









பயணிகளின் நலன் கருதி வவுனியா புகையிரத நிலையத்தில் நூலக வசதி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள் இன்று (16.02) ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. அதிகளவிலான பயணிகள் தினமும் வந்து செல்லும் வவுனியா, புகையிரத நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் நூலக வசதிகள் உள்ளிட்ட இதர வசதிகள் இல்லாத நிலைமை தொடர்ச்சியாக காணப்பட்டு வந்தது.

இந்நிலையில் பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் வவுனியா புகையிரத நிலையத்தினர் தொடர்பு கொண்டு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பல்வேறு நலத்திட்டங்கள் மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளன. அந்த வகையில் வீ.வீ.கே நிறுவனத்தினருடைய அனுசரணையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியும் நூலகத்திற்கான அலுமாரி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

வீவீகே நிறுவனத்தினர் கடந்த வருடம் முதன் முதலில் மாங்குளம் புகையிரத நிலையத்திற்கு குடிநீர் வசதியும், நூலக வசதியும் ஏற்படுத்திக் கொடுத்தனர். அதன் பின் பளை புகையிரத நிலையத்திற்கும் தமது சேவையை வழங்கினர். அதனைத் தொடர்ந்து வவுனியா புகையிரத நிலையத்திற்கு அவ் வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

புகையிரத நிலைய அதிபர் அகிலேஸ்வரனின் கோரிக்கையின் பேரில் வீவீகே நிறுவனத்தின் நிர்வாக குழுமத்தைச் சேர்ந்த மருத்துவர் க.உதயசீலன், வீவீகே கணக்காய்வு நிறுவனத்தின் வவுனியா கிளை முகாமையாளர் சஜிந்தன், மாங்குளம் முன்னாள் புகையிரத நிலைய அதிபர் க.கலைவேந்தன், புகையிரத நிலைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# செல்... வா ....சேர் நினைவேந்தல் இதழ் வெளியீடு



ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரியின் ஓய்வு பெற்ற உப பீடாதிபதியும் பிரபல ஆசிரியருமான வ.செல்வராஜா காலம் சென்று நாற்பது நாட்கள் நிறைவில் தினகரன் நோட்டன் வாசகர் வட்டம் வெளியீடாக வந்திருக்கும் செல்.. வா ..சேர் நினைவுச் சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு தலவாக்கலை நண்பர்கள் வட்டத்துடன் இணைந்து தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் அதிபர் கிருஸ்ணசாமி முன்னிலை வகிக்க சாகித்ய ரத்ன மு.சிவலிங்கம் தலைமையில் நடைபெற்றது. திருமதி சுகிர்தகலா செல்வராஜா ஆசிரியை அவரது துணைவர் வ.செல்வராஜாவின் உருவப்படத்துக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி தீபம் ஏற்றி அஞ்சலி செலுத்த வருகை தந்த அனைவரும் மெழுகுவர்த்தி ஏந்தியும் மலர் தூவியும் அன்னாருக்கு மிகவும் உணர்வுபூர்மாக தமது அஞ்சலியை செலுத்தினர்.

தலவாக்கலை நண்பர் வட்டத்தின் சார்பாக குணரட்ணம் வரவேற்புரையை வழங்க தலைமையுரையை சாகித்தியரத்னா மு.சிவலிங்கம் ஆற்றினார். ஆசிரியராக மாத்திரம் அல்லாமல் அரசியல் வாதியாகவும் செல்வராஜா எவ்வாறு இயங்கினார் என்பதையும் தன்னை கட்சி அரசியல் செயற்பாடுகளுக்குள் இழுத்து வந்தவர் எம்.நாகலிங்கம் மற்றும் வ.செல்வராஜா ஆகியோரே என்பதையும் பதிவு செய்தார். அத்தோடு ஸ்ரீ பாத கல்வியியல் கல்லூரி உருவாக்கத்துக்கு செல்வராஜாவின் பங்களிப்பு எவ்வாறு அமைந்திருந்தது என்பதையும் பெய்த்திலி தோட்டத்தில் காணியைப் பெற்றுக் கொள்வதில் செல்வராஜா வகித்த பங்களிப்பு மகத்தானது என்றும் பின்னாளில் இது ஒரு மலையகப் பல்கலைக்கழகத்திற்கான அடித்தளமாக அமைய வேண்டும் என்பதிலும் அவரது அக்கறை இருந்தமையையும் எடுத்துரைத்தார்.

முன்னிலை வகித்து உரையாற்றிய பாடசாலை அதிபர் கிருஷ்ணசாமி தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய உருவாக்கத்துக்கும் அபிவிருத்திக்கும் தம்மை அர்ப்பணித்துக்கொண்ட குடும்ப உறுப்பினரான செல்வராஜாவின் நினைவேந்தலையும் மலர் வெளியீட்டையும் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலயத்தில் நடத்துவதில் பெருமை அடைகின்றோம் என்று குறிப்பிட்டார். ஆசிரியர் செழியன் கவிதாஞ்சலி செலுத்தினார், ஆசிரியர் தாஸ் பெர்னாண்டோ அஞ்சலியாக பாடல் பாடினார்.

ஆசிரியர் செல்வராஜா இசையை எந்தளவு நேசித்தார் என்பதையும் எடுத்துக் கூறினார்.

வெளியீட்டுரை நிகழ்த்திய நூலைப் பதிப்பித்த பாகயா பதிப்பக நிறுவனர் மல்லியப்புசந்தி திலகர், பன்முக ஆளுமை கொண்ட செல்வராஜா ஆசிரியரிடம் அடி வாங்கிக் கற்ற அவரது முதலாவது தொகுதி மாணவர்கள் தாங்கள் எனக் குறிப்பிட்டதுடன் அவரது பல்கலைக்கழக வாழ்க்கை குறித்த கட்டுரைகளும் படங்களும் இந்த தொகுப்பில் சேர்க்கப்பட்டிருப்பது சிறப்பு எனத் தெரிவித்தார். அவரது பல்கலைக் கழக நண்பர்களான சிவா முருகுப்பிள்ளை, சேரன் உருத்திரமூர்த்தி, அகியோரின் கட்டுரைகள் நமக்கு தெரியாத அவரின் பக்கங்கங்களைக் காட்டி நிற்கின்றன. கவிஞர் சேரன், ஈழத்தின் பெருங்கற்பண்பாட்டு அகழ்வாய்வில் பேராசிரியர் ரகுபதி தலைமையில் செல்வராஜா வழங்கியிருக்கக் கூடிய பங்களிப்பு மகத்தானது எனக் குறிப்பிட்டுள்ளார். இன்று சேரன் கனடா பல்கலைக்கழகம் ஒன்றில் பேராசிரியராக இருக்கிறார். நாம் செல்வராஜாவை தமிழாசிரியராக மாத்திரமே அடையாளம் கண்டோம். அவரது வரலாற்றுத் தொல்லியல் ஆய்வுப்பின்னணி, கல்வியியற் கல்லூரி உருவாக்க பின்னணி எனப்பார்க்கும்போது மலையகத்தில் உருவாகியிருக்கவேண்டிய பல்கலைக்கழகத்தின் உப வேந்தராக வந்திருக்க வேண்டியவர் வ. செல்வராஜா என உரைத்தார்.

ஸ்ரீ பாத கல்வியியற் கல்லூரியின் உப பீடாதிபதி அந்தனி மெத்யூஸ் கல்லூரியில் செல்வராஜாவின் செயற்பாடுகள் பங்களிப்புகள் குறித்து குறிப்பிட்டதோடு, அந்தக் கல்லூரியின் பதில் பீடாதிபதியாக செல்வராஜா சில காலம் பணி புரிந்திருந்தார் என்றும், அரசியல்வாதியின் அனுசரணை இருந்தால் அந்தப்பதவி நிரந்தரமாக்கப் பட்டிருக்கும் என்ற நிலையில் அதனை மறுத்து அவர் பீடாதிபதியாக வரவில்லை. ஆனாலும் ஆயிரமாயிரம் ஆசிரிய மாணவர்களின் அன்புக்குப் பாத்திரமான ஆசானாகத் திகழ்ந்தார் என்று குறிப்பிட்டார். நினைவிதழ் குறித்த ஆய்வுரையை ஆசிரியரும் வ.செல்வராஜாவின் முதன்மை மாணவர்களில் ஒருவருமான ஸ்ராலின் சிவஞானசோதி நேர்மையான விமர்சனத்தையும் ஆதங்கங்களையும் பகிர்ந்து கொண்டார். கூடவே தனது அபிமான ஆசியருடனான தனது அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டார்.

கருத்துரை வழங்கிய கொத்மலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் சு.இங்கர்சால், எங்களது ஆசான் வ.செல்வராஜா சேர் மலையகத்தினுடைய அடையாளம். ஓர் அடையாளத்திற்கான நிகழ்வு தான் இது. இன்று இந்நிகழ்வுக்கு வருகை தந்தவர்களுக்கும் ஒரு பெருமை இருக்கின்றது. என்று கூறிய அவர், இந்த தொகுப்பு நூலை வெளிக்கொணர்ந்தவர்கள் பாராட்டுக்குரியவர்கள் என்றும் போற்றப்படக் கூறியவர்கள் என வாழ்த்தி விரிவான பலகருத்துக்களை முன்வைத்தார். அவற்றைச் சுருக்கமாக இங்கு தருகின்றாம், சமூகத்திற்கு நல்ல மாணாக்கனை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் கல்வியுடன் சமூக உணர்வையும் கற்றுக்கொடுத்த சிறந்த ஆசான் செல்வா சேர். உண்மையில் ஓர் ஆய்வாளன், ஒரு விமர்சகர் எவ்வாறு இருக்க வேண்டும் என்றால் அது செல்வராஜா சேர் போல இருக்க வேண்டும். அவரை மிஞ்சிய ஒருவரை மலையக சமூகத்தில் பார்ப்பது தற்போது கடினமாக இருக்கின்றது. அந்தளவிற்கு ஒரு நேர்மையான விமர்சகராக அவரை எனது அறிவுக்கெட்டியவரை நான் பார்த்திருக்கின்றேன் என்றார்.

விரிவுரையாளர் அகிலன் உரையாற்றுகையில், இவ்வாறானதொரு இதழ் விரைவில் வெளி வந்தமையை வரவேற்றுக்கொண்டு, செல்வா சேரின் வீட்டாரது அனுமதியுடன் சேரினால் எழுதப்பட்டுள்ள முக்கிய ஆவணங்கள் நூலுருப் பெறவேண்டும். அதற்கு நாம் அனைவரும் முன்வர வேண்டும். குறுகிய காலத்தில் இவ்வாறான இதழ் வெளிவந்தது சமூகத்தின் வெற்றி எனக் குறிப்பிட்டார். சிறப்பிதழ் குறித்த உரைகள் என்றவகையில் இவர்கள் மூவரினதும் உரைகள் தனியாக எழுத்தில் பதிவு செய்யப்பட வேண்டியவை.

ஆசிரியர் மோகன் வழங்கிய அஞ்சலிப் பாடலைத் தொடர்ந்து திருமதி சுகிர்தகலா செல்வராஜாவின் நன்றியுரை அமைந்தது. தனது கணவரையும் பிள்ளைகளின் தந்தையையும் இழந்த குடும்பத்துக்கு அவசியமான பகிர்வாக அமைந்த உரை அவருடையது. ஒரு சமூக ஜீவியான செல்வராஜா குடும்பத்தில் எப்படி இணைந்திருந்தார் என்பதையும் அவர்களது எதிர்பார்ப்பு என்னவாக இருந்தது என்பது பற்றியும் தன்னைத் தானே ஆற்றுப்படுத்தல் செய்துகொண்ட உரையாகவும் சமூகத்துக்கு எடுத்துச்சொல்ல வேண்டிய உரையாகவும் அமைந்தது. இறுதியாக சிறப்பிதழ் வெளியீட்டு முயற்சியில் பங்குகொண்ட நோட்டன் வாசகர் வட்டத்தின் தலைவர் பிராந்திய ஊடகவியலாளர் மு. ராமச்சந்திரன் தமது பங்களிப்புகளைக் கூறியதுடன் இதழ் தொகுப்பில், பதிப்பில், வெளியிட்டு நிகழ்வில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். தொகுப்பாசிரியர் ஜீவா சதாசிவம் நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கினார். வருகை தந்த அனைவருக்கும் சிறப்புப் பிரதிகள் வழங்கப் பட்டன. அச்சுச் செலவுகள் அதிகரித்துள்ள இந்த கால கட்டத்தில் மிகக் குறைந்த அளவான பிரதிகளே அச்சிடப்பட்டுள்ளன என்றும் பிரதிகள் தேவைப்படுவோர் தங்களிடம் கோரிக்கை விடுக்கும் பட்சத்தில் அச்சிட்டுத் தரமுடியும் என்றும் இதழ் தொகுப்பாசிரியர் தெரிவித்தார். மிகக் குறுகிய காலத்தில் வ.செல்வராஜா நினைவுகளைப் பதிவு செய்யும் அவரது மாணவர்கள், குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள், அபிமானிகள் என பலரும் எழுதிய 40க்கும் மேற்பட்ட ஆக்கங்களைக்கொண்டதாகவும் அரிய பல புகைப்படங்களைக் கொண்டதாகவும் வெளிவந்துள்ள 'செல்..வா.. சேர்' சிறப்பிதழ் வாசிப்பதற்க மாத்திரமல்ல வைத்துப் பாதுகாக்கவும் வேண்டிய ஒரு வரலாற்று ஆவணம் என்பதில் ஐயமில்லை.

தொகுப்பு
*நோட்டன் பிரிட்ஜ் நிருபர்*







# கே.ராஜலிங்கம்: மலையக மக்களின் உதிரத்தில் ஜனித்த தலைவன்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால், லண்டனில் நிகழ்ந்த 'மலையக இலக்கிய மாநாட்டில்' மலையக நூல் அறிமுகத்தில், 'சிங்களத் தீவினில் தீனர்களின் தொண்டர் கே.இராஜலிங்கம்' என்ற நூலை அறிமுகம் செய்து பேசினேன். மலையகத்தில் நாங்கள் செய்திருக்கவேண்டிய ஒரு பெரும் பணியைத் தமிழகத்திலிருந்து ஆலம்பட்டு சோ.உலகநாதன் செய்திருக்கிறார் என்று அவரைப் பாராட்டியிருந்தேன். அந்த நூல்கள் விலைப்படாமல் தேங்கி நிற்கிறது என்பது எனக்குப் பெருங் கவலையை ஏற்படுத்தியது.

கே.ராஜலிங்கம் (1909 _1963)பற்றி எழுதப்பட்ட ஒரே ஒரு நூல் நமது அக்கறை இன்றி முடங்கிக் கிடந்தது வேதனையாக இருந்தது. ஆலம்பட்டு சோ.உலகநாதன் மிகச் சுவையாக இந்த நூலை எழுதியிருக்கிறார். அமரர் ராஜலிங்கத்தையும் அவரது குடும்பத்தினரையும் நன்கறிந்த சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சே.ந.ஜெயசீலனிடமிருந்து பெற்ற தகவல்கள், ஆவணங்கள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு ராஜலிங்கம் பற்றிய அரிய நூலை உலகநாதன் நமக்குத் தந்திருக்கிறார். மலையகம் கண்ட அரசியல், சமூகத் தலைவர்களில் கே.ராஜலிங்கத்துக்கு நிகராக இன்னொருவரைச் சொல்வதற்கில்லை.

கே.ராஜலிங்கம் பற்றிய அற்புதமான சித்திரத்தை 1958 ஆம் ஆண்டில் 'தினகரன்' பத்திரிகையில் தந்திருக்கிறார் சி.வி.வேலுப்பிள்ளை. 'மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்' (2022) என்ற சி.வி.யின் நூலில் அந்தக் கட்டுரை கிடைக்கிறது. 'மக்கள் இல்லாமல் அவருக்கு வாழ்வில்லை' என்கிறார் சி.வி.

மலையக மக்கள் மத்தியில் இத்தகைய தன்னலமற்ற, அடக்கமான, தற்பெருமை கிஞ்சித்தும் இல்லாத, விளம்பரம் தேடாத பெருமகனை நாம் சந்தித்ததில்லை. 'எனக்குச் சொர்க்கமும் வேண்டாம், தேயிலைத் தோட்டமும் வேண்டாம், தேயிலை, இறப்பர் தோட்டங்களில் வேலை செய்யும் ஏழைத் தொழிலாளர்களுக்குத் தொண்டு செய்யும் பாக்கியம் கிடைத்தால் போதும்' என்று கணமும் தயங்காமல் சொல்லக்கூடியவர் ராஜலிங்கம் என்று 'தீனர்களின் தொண்டர்' என்று அவரைப் பாராட்டி எழுதியிருக்கிறார் கல்கி கிருஷ்ணமூர்த்தி.

மலையக மக்கள் மத்தியில் கல்வி விழிப்புணர்வு ஏற்படுவது மிக மிக அவசியம் என்ற உயரிய கொள்கையோடு, சங்குவாரித் தோட்டத்திக்கும் புசல்லாவைக்கும் இடையில் 1932 இல் 'சரஸ்வதி வித்தியாலயம்' என்ற பெயரில் மலையகக் குழந்தைகளுக்கெனப் பள்ளியை நிறுவிய பெருமகனை மலையகம் ஒருபோதும் மறந்துவிடாது. இருபத்து மூன்று வயதில் ஓர் இளைஞன் செய்திருக்கக்கூடிய உயர்ந்த பட்ச இலட்சியச் சாதனை இது. 'கல்வி மூலம் தான் மலைநாட்டு மக்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்று அவர் அன்றும் உறுதியாக நம்பினார். இப்பொழுதும் நம்பி வருகிறார்' என்று சி.வி, மலையகத்தின் கல்வித்தந்தை ராஜலிங்கத்தைச் சரியாகவே அடையாளங் காண்கிறார்.



தோட்டம் தோட்டமாக நடந்து போய், பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புங்கள் என்று பெற்றோரிடம் மன்றாடியிருக்கிறார். அப்பாடசாலையின் வளர்ச்சிக்காக தன் குடும்பச் சொத்து, குடும்ப நகைகள் என்று அனைத்தையுமே அர்ப்பணித்திருக்கிறார். ஓராயிரம் ஆண்டுகளில் எப்போதாவதுதான் இம்மாதிரி மாணிக்கங்கள் ஒரு சமுதாயத்திற்கு வந்து கிடைக்கிறார்கள். 'வாராது வந்த மாமணி' என்று இத்தகையோரைப் பாடுகிறார் பாரதி.

அமரர் ராஜலிங்கத்தின் அரசியல், சமூக ஈடுபாடுகளைப் பார்க்கும்போது, நமது முன்னைய தலைமுறையினர் எத்தகைய செழுமையான, அர்த்தபுஷ்டிமிக்க அரசியல் பாரம்பரியத்திற்குச் சொந்தக்காரர்களாக இருந்திருக்கிறார்கள் என்று நாம் உறுதியாகப் பெருமைப்பட முடியும்.

காந்தி, நேரு, ராஜாஜி, அம்பேத்கர், சத்தியமூர்த்தி, கே.பி. எஸ். மேனன், வி.வி.கிரி போன்ற பெரும் அரசியல் ஆளுமைகளோடு தொடர்பு கொண்டிருந்தவர் ராஜலிங்கம். 1956 ஆம் ஆண்டு அண்ணல் அம்பேத்கர் இலங்கைக்கு விஜயம் செய்திருந்தபோது, அவரை கே.ராஜலிங்கமும் எஸ்.எஸ்.சோமசுந்தரமும் சந்தித்து உரையாடியிருக்கிறார்கள். இருவரதும் அர்ப்பணிப்பை உணர்ந்த அம்பேத்கர், இருவரையுமே இந்தியா வருமாறும், அங்கு உங்கள் தொண்டு தேவைப்படுகிறது என்றும் அழைப்பு விடுத்திருக்கிறார். இந்திய வம்சாவளித் தொழிலாளர்களின் திக்கற்ற நிலையை விளக்கி, தங்களுக்கு இங்கு ஆற்ற வேண்டிய பணிகள் உள்ளன என்று அம்பேத்கருக்கு விளக்கியுள்ளனர்.

'பண்டித நேருவுக்கு இரண்டாவதாக வரும் இராஜாஜி நுண்ணிய சிந்தனை வல்லாரான இராஜாஜி இராஜலிங்கத்தின் இயல்பான புத்திக் கூர்மையை வளப்படுத்தியுள்ளார். ஆனால், கற்றுத் தேர்ந்த டாக்டர் அம்பேத்கார் வளர்த்த தீயில் அவர் குளிர் காய்வதுதான் இதிலுள்ள முரண்பாடாகும்' என்கிறார் சி.வி.

இந்தியாவின் அதியுன்னத ராஜதந்திரியான கே.பி.எஸ். மேனன், இலங்கைக்கான இந்திய அரசின் முகவராக 1929 –1933 ஆண்டுக்காலப் பகுதியில் பணியாற்றிய காலத்தில், தனது சரஸ்வதி வித்தியாலயத்தின் ஆரம்ப விழாவுக்கு மேனனையும் அவரது பாரியாரையும் சிறப்பு விருந்தினராக அழைத்திருக்கிறார் ராஜலிங்கம். அவரின் அழைப்பை ஏற்று மேனன் தம்பதியினர் அந்த விழாவிற்குச் சிறப்புச் சேர்த்திருந்தனர்.

1939 ஆம் ஆண்டில் 'இலங்கை இந்திய காங்கிரஸ்' தோற்றங் கொண்டபோது, அதன் முதல் பொதுச் செயலாளராகப் பொறுப்பேற்றவர் ராஜலிங்கம். நெருக்கடி மிக்க காலப்பகுதி அது.

நாவலப்பிட்டித் தொகுதியின் பாராளுமன்ற அங்கத்தவராகவும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவராகவும் செயற்பட்ட ராஜலிங்கம், 1952 இல் ஜெனீவாவில் சர்வதேசத் தொழிலாளர் சம்மேளன மாநாட்டில் பங்குகொண்டு, மலையகத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை முன்வைத்தார். 28 ஆகஸ்ட் 1951, 5 நவம்பர் 1951 ஆகிய திகதிகளில் ராஜலிங்கம், சர்வதேசத் தொழிலாளர் சம்மேளனத்திடம் முன்வைத்த இரண்டு மகஜர்களில் தோட்டத் தொழிலாளர்கள் இலங்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தெளிவாகக் குறிப்பிட்டார். இலங்கையில் வாழும் பெரும்பான்மை இனத்துக்கு வழங்கப்படும் உரிமைகள் இந்திய வம்சாவளித் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுவதில்லை என்றும் அவர்கள் இனரீதியாகப் பாரபட்சமாக நடத்தப்படுகிறார்கள் என்றும் ஆதாரங்கள் காட்டி வாதிட்டிருக்கிறார். மற்ற மகஜரில் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளுக்கு இலங்கை அரசு ஏற்படுத்தும் தடைகள் பற்றி விரிவாகப் பேசுகிறார். தோட்டங்களுக்குள் தொழிற்சங்கங்கள் செல்ல அனுமதிக்கப்படுவதில்லை என்றும், தோட்டத்தில் வேலை இல்லாது போனால் தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களைத் தோட்டத்திலிருந்து வெளியேற்றி விடுகிறதென்றும் குற்றச் சாட்டுகளை முன்வைத்தார். இலங்கையில் இந்திய வம்சாவளித் தொழிலாளர்களின் நிலையை அறிவதற்கு உண்மை அறியும், நல்லிணக்க ஆணைக்குழு (Fact finding and Conciliation Commission) விசாரணை மேற்கொள்ளவேண்டுமென்றும் அல்லது சர்வதேசத் தொழிலாளர் சம்மேளனம் இலங்கைக்கு ஓர் ஆணைக்குழுவை நியமித்து, ஆய்வு மேற்கொள்ளவேண்டுமென்றும் ராஜலிங்கம் கோரிக்கை முன்வைத்திருக்கிறார்.

1948 இலிருந்து மூன்று ஆண்டு காலம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவராக ராஜலிங்கம் செயற்பட்ட காலம் சோதனை மிகுந்த காலமாகும். ராஜலிங்கத்தின் அரசியல், சமூகப் பயணம் மலர்ப் பாதையாக ஒருபோதுமே இருந்ததில்லை. கல்லும் முள்ளும் செறிந்த முள்வெளிப்பாதையாகவே இருந்திருக்கிறது. அந்த இருள்வெளியில்தான் தளராமல், ஓய்வின்றி ஒளியை நாடிப் பயணித்திருக்கிறார் அந்தப் பெருமகன். தன்னலமற்ற அரசியற் பெருமக்களின் வழி காட்டலில் மலையக அரசியல் ஊற்றுக்கண்டிருக்கிறது என்பது உண்மைதான்.

*மு.நித்தியானந்தன்,*
லண்டன்

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் சில்மியா ஹாதி

இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் எதிர்வரும் 20 ஆம் திகதி (20.02.2024) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம் நிகழ்ச்சித் தொடரில்" சிரேஷ்ட கலைஞர், இலங்கை வானொலி அறிவிப்பாளர் சில்மியா ஹாதி அதிதியாக கலந்து கொள்கிறார். நீண்ட காலமாக இலங்கை வானொலி முஸ்லிம் சேவைக்கு, தன் எழுத்துகளால், குரல் வளத்தால் பங்களிப்புச் செய்து வரும், முஸ்லிம் சேவையின் சிரேஷ்ட கலைஞர் சில்மியா ஹாதி 1998இல் இலங்கை வானொலி தேசிய சேவையின் பகுதி நேர அறிவிப்பாளரானார்.



**இலங்கை வானொலி முஸ்லிம் சேவைக்கு, தன் எழுத்துகளால், குரல் வளத்தால் பங்களிப்புச் செய்து வரும், முஸ்லிம் சேவையின் சிரேஷ்ட கலைஞர் சில்மியா ஹாதி**

தனது இளமைப் பருவத்தில் "சிறுவர் மலர்", முஸ்லிம் சேவையின் "பிஞ்சுமனம்" நிகழ்ச்சிகளுக்கு குரல் கொடுத்தும், ஆக்கங்கள் எழுதியும் தனது வானொலிப் பயணத்தைத் தொடர்ந்தார். முஸ்லிம் சேவையில் நீண்ட காலமாக "மாதர் மஜ்லிஸ்" நிகழ்ச்சியினைத் தொகுத்தளித்து வரும் இவர், நாடகங்கள் பல எழுதியதோடு நடித்தும் வருகிறார். முஸ்லிம் சேவையில் பல்வேறு வெளிக்கள நிகழ்ச்சிகளை தொகுத்தளித்த சில்மியா ஹாதி, மூத்த பெண் ஆளுமைகளை நேர்காணல் செய்தும் வருகிறார். எம். அஷ்ரப்கானின் தயாரிப்பில் இவரது "விடியாத பொழுது" எனும் தொடர் நாடகம் 35 வாரங்களாக தொடராக ஒலிபரப்பாகியது. பெருநாள் சிறப்புக் கவியரங்களிலும் கவிதை பாடியுள்ளார். தமிழ் தேசிய வர்த்தக சேவைகளிலும் நாடகங்கள் பல நடித்துள்ளார். வர்த்தக சேவையில் ஒலிபரப்பான தொடர் நாடகத்திலும் பங்கேற்றுள்ளார். மிரிஸ்வத்த தமிழ் வித்தியாலயம், தர்ஹா நகர் அல்ஹம்ரா மஹா வித்தியாலயம், கொழும்பு பம்பலப்பிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரி ஆகியவற்றில் ஆசிரியராக பணியாற்றினார்.

இந்நிகழ்ச்சியினை சிரேஷ்ட ஒலிபரப்பாளர் எம். எஸ். எம். ஜின்னா தொகுத்தளிக்க, முஸ்லிம் சேவை அதிகாரி எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.



## இயற்கை

இயற்கை ஒரு விந்தை – அதில்
மயங்கும் எமது சிந்தை
குளிர் நமக்கு தரும் மனக்குளிர்ச்சி
இயற்கை நமக்கு தரும் மனமகிழ்ச்சி

பச்சைப் பசேலென வனங்கள் அதில்
பற்பல வர்ணப் புள்ளினங்கள்
பயமுறுத்தும் கொடூர மிருகங்கள்
நுரை பொங்க வழியும் அருவிகள்

இயற்கை என்றாலே – ஆஹா
அதை வர்ணிப்பதென்றாலே – ஓஹோ
இயற்கை என்பது சிறப்பு
அதனைக் காப்பது எமது பொறுப்பு

எம்.எச். ரகீப் அல் ஹாதி
தரம் 09, ஸாஹிரா கல்லூரி

## கனவு மெய்ப்பட வேண்டும்

இ த ய ங் க
ளின்
பரிமாற்றத்தில்
இன்னல்கள்
தோன்றிடினும்
உதயங்களை
இலக்காக்கி
உண்மையாய் வென்றிட
வேண்டுமென்ற
காதலர் கனவும்

புத்திர பாக்கியம் தொலைந்து
குத்திடும் வார்த்தையால்
மனம் வெந்து நல்
சித்திரம்போல் சிசுவொன்றை
சீக்கிரமாய் பெற்றிட வேண்டு
மென்ற
தம்பதியர் கனவும்

வரமாய் பெற்ற பிள்ளைகள்
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்திட
வழிகளைத் துலக்கி
வலிகளைக் களைந்திடும்
பெற்றோரின் கனவும்

குடும்பத்தின் பாரமதை
குதூகலமாய் சுமந்து
பெற்றோரைப் பேணி
மற்றோரிடமும்
பெயரெடுத்திட
வேண்டுமென்ற
பிள்ளையின் கனவும்

மதிப்பெண்ணில் மாலைசூடி
மதிக்கப்படும் மாணாக்கனாகி
விதிக்கப்படும் நல் கட்டளைகளை
விருப்பத்துடனே நோக்கிடும்
மாணாக்கரின் கனவும்

ஏழ்மையின் பிடியினிலே
எட்டாக்கனியாகிய திருமணம்
கட்டாயம் விரைவினிலே
காத்திரமாய் நடக்க வேண்டுமென்ற
கன்னியின் கனவும்

விளைச்சலில் பெருக்கத்தை
விருப்பமாய் நோக்கி
அறுவடையில் அமோகத்தை
அள்ளிடவே அவாக் கொள்ளும்
விவசாயியின் கனவும்



பதுக்கலைப் பாவ
மாக்கி
கொடுக்கல்
வாங்கலை
நேர்மையாக்கி
நாணயமானவன்
நானெனெ
நாலுபேரும் மதித்திட
வேண்டுமென்ற நல்
வியாபாரியின் கனவும்
மெய்ப்பட
வேண்டும்.

உசனார் எம்.பஷீர்,
ஏறாவூர்.

## வாழ்வென்றால் அப்படித்தான்

நீண்ட இப் பிரபஞ்சத்திலே...
நான் நானாகவே இருந்து விடுகிறேன்..!

நீல வானத்திலே...
கோடையும் மாரியும் வருவதுபோல...!

நீண்ட வாழ்க்கைப் பயணத்தில்
எதுவும் நடக்கலாம்..!

இன்றைய நாளைப் போன்று...
நாளைய நாள் இல்லாமலிருக்கலாம்..!

கடலில் எழும் பூகம்பம் போல்...
அகத்தில் அலைகள் தோன்றலாம்..!

சிறு தூறலும் பெருமழையும் போல்...
வாழ்வில் எதுவும் நடக்கலாம்..!

அப்படித்தான்...!
வாழ்வென்றாலே அப்படித்தான்..!

நான் நானாகவே
இருந்து விடுகிறேன்..!

எனது வாழ்வை நானே வாழ்ந்து....
என்னை நானே செதுக்கியும் கொள்கிறேன்..!

என்னால் விரும்பப்பபடாத... நாவுகளில்
வரும் சொற்களை பொறுக்கி...
கவிதைகளை விதைத்துக் கொள்வேன்..!

பார்க்கும் பார்வைகளை பிடித்து
விழியம்பாய் மாற்றிக்கொள்வேன்..!

எனக்காக விடியும் பொழுதுகளை...
நானாகவே வாழ்ந்து விடுகிறேன்..!

யாரைப்போலும் வாழ்ந்து
என் வாழ்வை தொலைக்கமாட்டேன்..!

என்னை உங்கள் விருப்பம்போல்...
செதுக்க சொற்களை உருவாக்காதீர்கள்..!

தடைகளை ஓரமாய் ஒதுக்கி
செல்பவளல்ல நான்..!

ஒவ்வொன்றையும் உரமாய் சேகரித்து
வெற்றிக்கு விதை போடுபவள்..!

எனது சொற்களில்
என் வாழ்வை தேடாதீர்கள்..!

எனது சொற்கள்
தன்னைவிட பிறருக்காகத்தான்
அதிகம் பேசிக்கொண்டிருக்கும்..!

மஜினா உமறு லெவ்வை
மாவடிப்பள்ளி



## பூங்காற்றிலே உன் சுவாசம்...!

வீசிடும் தென்றலுடன்
பேசிடும் உன்னினைவு
காய்ந்திடும் நிலவுடன்
தேய்ந்திடும்
என்னிளமை

உன் மடிசாய்ந்தே
கதைத்திட ஆயிரமிருக்கு
என் சோடியாகிட
அழைக்கிறேன்

துயரமிழந்த
என்னை வாழவைக்கும்
உயிரும் நீயல்லவா
பூங்காற்றிலே உன்
சுவாசம்
மேன்மையல்லவா

சிந்திடும் புன்னகையில்
துளிர்க்கிறேன் காதல
னாய்

நீந்திடும் கனவில்
களிக்கிறேன் ஆவலாய்
கைகோர்த்திடு
பெண்ணே
தொட்டிடுவோம்
விண்ணை
மையலாகிடு என்னில்
வென்றிடலாம் உலகை

ஏரூர் கவிமாமணி
எம்.ரி.எம்.அன்ஸார்
ஏறாவூர்




## சுதந்திர நாடு

நம் நாட்டின் சுதந்திரப் பறவைகள்
நாம் என்று இறக்கை விரித்து
மேல் வானில் பறக்கும் ஆசைகள்
ஆயிரம் மனதிலே தோன்றுதே!


நம் பறவைகள் பறக்க முயலும்
அத் தருணம் வெள்ளை இனப்பறவை
கூட்டம் தாக்குதலை வசமாக்கி
நம் பறவைகளை அடிமையாக்க!

சுதந்திர வாசமே தெரியாமல்
இருண்ட குடிசைக்குள்
அடைபட்டு வாழவும் முடியாமல்
சாகவும் முடியாமல் நடைப்பிணமாய்!

நம் அடிமை சங்கிலியை
நாமே உடைக்க வேண்டும் என
நம் தேசத்தலைவர்கள் போராடி
சுதந்திரம் பெற்றுத்தந்தனர்

இன, மத ஒற்றுமையால்
உயரும் நம் தாய் நாடு
வாழ்க இலங்கை நாடு
வளர்க நம் தேசம்.

தி. திருஷன் ,
புளியங்குளம், வவுனியா



## நீர்த்துப் போன நிஜங்கள்

பண மூட்டைக்குள்
படுத்துறங்கும் நிஜங்கள்
குணம் அதனால்
வெளிவரவு மில்லை
அதிகாரப் பிடியில்
அமுழ்ந்துகின்ற நிஜங்கள்
அம்பலம் வரவும்
அடியெடுக்க வில்லை

அறக்கொடி யதனை
ஏந்திப் பிடிக்காது
மறத்தின் மகுடத்தை
அலங்காரம் செய்ய
கல்லறை யதனில்
காப்பற்றுக் கிடக்கும்
விடியலை நோக்காத
விழிப்பற்ற நிஜங்கள்

வஞ்சனை செய்வார்க்கு
வழியது விட்டு
வளத்தினைச் சேர்ப்பார்க்கு
நலமது கூட்டி
சுருதி ஏற்றிச் சுகமளிக்கும்
சுதந்திர மற்ற
சூடிழந்த நிஜங்கள்

ஒளிதனை ஓர்ந்து
விரும்பும் நலிந்தவர்க்கு
ஒருகணம் ஏனும்
உதவிகள் செய்யாது
உப்புக்குச் சப்பாணியாய்
இருக்கும் வர்க்கத்திற்கு
உதவிகள் செய்திடும்
ஊமையான நிஜங்கள்

ஒரு முறையேனும்
குரல்தனை உயர்த்திட்டும்
நீர்த்துப் போன
நிஜங்கள் என்றேனும்
புதுப்பிறவி எய்து
புவிதனை மீட்கட்டும்
நாம் வணங்கும் நிஜங்கள்.

தமிழ்க்கீரன்
கல்மடு, கல்குடா.

## புது யுகம் மலரட்டும்..!



இப் புவியெங்கும்
இன்பம் காணவேண்டுமெனில்
புது யுகம் ஒன்று மலரட்டும்....
அகிலத்தை அழிக்கும்
ஆயுத கலாசாரத்தை
இல்லாது ஒழிப்போம்...
இவ் அழகிய பூமியிலிருந்து,
மேலும் இப் பூமியிலுள்ள
அணுகுண்டு ஆயுத
தொழிற்சாலைகளை அழித்து
அன்பின் அடையாளமான
அழகிய நறுமண மலர்களை நட்டு
மேலும் அழகுபடுத்துவோம்
இவ் அழகிய பூமியை
ஒவ்வொரு மனிதரும்
நற்கனி கொடுக்கும்
பயனுள்ள மனிதர்களாய்,
நல் வாழ்வு வாழ்ந்து...
புது யுகம் படைக்கும்
புனிதர்களாவோம்......!!!

சி.மௌனேஷ்
மட்டக்களப்பு

# பாரதிய ஜனதாவுக்கு இறங்குமுகமா?

இந்தியா ஒரு நோக்கு
வாராந்த அலசல் 06
நந்தவனம் சந்திரசேகரன்



மோடியின் வாக்குறுதியினை மக்கள் நம்பக் கூடாது. சர்வாதிகாரி போல் செயல்படும் அவருக்கு ஜனநாயகத்தில் நம்பிக்கைக் கிடையாது என்று குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பாஜகவின் பத்தாண்டு கால ஆட்சியில் அவர்கள் அளித்த வாக்குறுதிகள் எதையுமே நிறைவேற்றவில்லை. மோடியின் வாக்குறுதியை நம்பினால் நாட்டில் ஜனநாயகம் அழிந்துவிடும் என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

பாஜகாவின் அண்மைகால நகர்வுகள் மக்கள் மத்தியிலும், எதிர்க்கட்சிகள் மத்தியிலும் அதிருப்தியையும், வெறுப்பையும் உண்டாக்கியிருக்கிறது என்பதும் உண்மையே. நாட்டில் பல்வேறு பகுதிகளில் மக்களுக்கு எதிரான அநீதி நிகழ்கிறது. இதனால் ஒரு புறம் அமைதி சீர்குலைகிறது. மறுபுறும் மக்களிடையே வெறுப்புணர்வு திட்டமிட்டு உருவாக்கப் படுகிறது. இதன் மூலம் வன்முறை தூண்டிவிடப்படுகிறது. மத்திய அரசுக்கு எதிராக கேள்வி எழுப்பினாலும். தவறுகளைச் சுட்டிக்காட்டினாலும் அவர்கள் மீது சிபிஐ அமுலாக்கத் துறை, வருமான வரித்துறை உள்ளிட்ட விசாரணை அமைப்புகள் ஏவிவிடப்படுகின்றன என்று ராகுல் காந்தி முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளையும் மக்கள் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

மக்கள் தங்களைத் தாங்களே சில கேள்விகளைக் கேட்டுக் கொள்ள வேண்டும். நாட்டின் பொது நிதியிலிருந்து தினமும் நமக்கு எவ்வளவு கிடைக்கிறது. நாம் பல்வேறு பொருள்களை வாங்கிப் பயன்படுத்துவதன் மூலம் அரசுக்கு எவ்வளவு வரி செலுத்துகிறோம் என்பதை கணக்கிட வேண்டும். இப்படிச் செய்தால் 10 நாட்களில் மிகப்பெரிய உண்மை நமக்குத் தெரிய வரும் நாட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர் மட்டுமே வளமாக வாழும் வகையிலே இந்த அரசு செயல்படுகிறது என்பதை உணர முடியும் என்ற ராகுல் காந்தியின் எச்சரிக்கையையும் மக்கள் அவதானிக்கத் தொடங்கியுள்ளனர். பாஜகவை பின்னுக்குத் தள்ளும் முக்கியமான பிரச்சினைகளின் ஒன்று விவசாயிகள் பிரச்சினை மத்திய அரசு கொண்டு வந்த மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராக





2020ஆம் ஆண்டில் டில்லி எல்லைகளை முற்றுகையிட்டு விவசாயிகள் சுமார் ஒன்றரை ஆண்டு நடத்திய போராட்டம் கலவரத்தில் முடிந்தது. இந்தப் போராட்டத்திற்கு இதுவரையில் தீர்வு எட்டப்படாததால், தற்போது மீண்டும் விவசாயிகள் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். போராடும் விவசாயிகள் பொலிசாரின் தடுப்புகளை மீறிச் செல்ல முற்பட்டதால் விவசாயிகள் மீது ஹரியானா பொலிஸார் ட்ரோன்கள் மூலம் கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும் தண்ணீரைப் பீச்சி அடித்தும் கலைக்க முற்பட்டதால் மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. இது தேர்தலிலும் எதிரொலிக்கலாம் என்று பாஜகவுக்கு தற்போது பயமும் வந்திருக்கிறது.

இந்தப் போராட்டத்தை அடக்குமுறையால் அடித்து நொறுக்கப் பார்த்தாலும் பிரச்சினை தான் நீடிக்க விட்டாலும் பிரச்சினைதான். தேர்தல் நேரத்தில் அழுத்தம் கொடுத்தால் மட்டுமே தங்களின் கோரிக்கை நிறைவேற்றப் படும் என்ற விவசாயிகளின் போராட்டம் வெற்றியடைய வேண்டும் என்ற எதிர்பார்ப்புதான் மக்களிடமும் இருக்கிறது

விவசாயப் பொருள்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலையை கேட்டுவரும் விவசாயிகளின் கோரிக்கைகளை நிறைவேற்ற தற்போது முடியாது. ஏனென்றால் இது குறித்து மாநில அரசுகள் அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா தெரிவித்துள்ளார்.

தேர்தல் நெருங்கி வரும் நேரத்தில் இது சாத்தியமில்லை என்பது சரிதான் என்றாலும் இந்தனை காலமும் இதை கிடப்பில் போட்டு வைத்தது ஏன்? என்று மக்கள் எழுப்பும் கேள்வியும் நியாயமானது தானே. எப்படிப் பார்த்தாலும் பாஜகவுக்கு இது நெருக்கடியாகத்தான் இருக்கும் இதனால் பாஜக எதிர்பார்க்கும் தேர்தல் வெற்றியும் பாதிக்கப்படலாம்.

காங்கிரஸ் கட்சியில் இருந்து பல தலைவர்களை பாஜக தன்பக்கம் இழுத்து வருவதும். பாஜக ஆட்சியில் இல்லாத மாநிலங்களுக்கு நெருக்கடிகளைக் கொடுத்துவருவதும் பாஜகவுக்கு சாதகமாக அமையும் என்ற அவர்கள் எதிர்ப்பில் எதிர்வினையும் ஏற்படலாம். ஏனென்றால் யார் நல்லவர் யார் கெட்டவர் என்பதை மக்கள் கவனித்துக் கொண்டேதான் இருக்கிறார்கள். மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி வெற்றி பெற்று விடலாம் என்ற பாஜகவின் எண்ணம் இறங்கு முகமாகவே இருக்கிறது என்பது தான் தற்போதைய சூழல்.

பாஜகவுக்கு ஆதரவாக உள்ள ஊடகங்களை வைத்து 400 தொகுதிகளில் வெற்றி பெறுவோம் என்று கருத்துக் கணிப்பு நடத்தியதால் மட்டுமே வெற்றியை எதிர்பார்க்க முடியாது.

ஏனென்றால் மக்களின் மனநிலையை இப்போது உறுதியாகக் கணக்கிட முடியாது. பத்தாண்டுகளில் பட்ட கஷ்டங்களிலிருந்து விடுபட மாற்றம் வேண்டும் என்று மக்களின் முடிவும் மாறலாம்.

பாஜக சர்வாதிகாரப் போக்கை தொடர்ந்து கடைப்பிடிக்குமானால் மக்களின் வெறுப்புக்கு ஆளாவார்கள் என்பதை அவர்கள் உணரவேண்டும். எத்தனை நாளைக்குத்தான் வெறுப்பு அரசியலை சகித்துக் கொண்டிருக்க முடியும், சர்வாதிகாரம் தொடர்ந்து வெற்றி பெற்றதாய் சரித்திரமில்லை. மக்களுக்கு ஆட்சியை மக்களே தேர்ந்தெடுப்பார்கள்.

# ஜோசப் வாஸ் மன்றத்தின் திறந்தவெளி சிலுவைப்பாதை

கொழும்பு புனித ஜோசப் வாஸ் மன்றம் வருடாந்தம் நடத்தும் தவக்கால திறந்த வெளி பெரிய சிலுவைப் பாதை இம்முறையும் இன்று 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

கொழும்பு உயர்மறை மாவட்ட துணை ஆயர் பேரருட்திரு பி. அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் இன்றைய தினம் பிற்பகல் 3 .15 மணிக்கு திறந்தவெளி பெரிய சிலுவைப் பாதை நிகழ்வுகள் ஆரம்பமாகவுள்ளன.

இன்று பிற்பகல் 3 .15 மணிக்கு புதுச்செட்டித் தெரு புனித வியாகுலமாதா ஆலயத்திலிருந்து சிலுவைப் பாதை பவனி ஆரம்பமாகவுள்ளது.

சிலுவைப்பாதை பவனி கொழும்பு ஜெம்பட்டா வீதி, கண்ணாரத் தெரு, ஜிந்துப்பிட்டி மற்றும் விவேகானந்தர் மேடு வழியாக கொட்டாஞ்சேனை புனித லூசியாள் பேராலயத்தை சென்றடையவுள்ளது. சிலுவைப் பாதையில் 14 திருநிலைகள் தியானிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து பேராலய முன்றலில் சிறப்புத் திருப்பலியுடன் இந்த திறந்தவெளி பெரிய சிலுவைப் பாதை நிகழ்வுகள் நிறைவடையவுள்ளன.

சிலுவைப்பாதை தியானத்தின் போது அருளுரைகளை மன்றத்தின் ஸ்தாபகர் அருட்பணி ஆனந்தன் பெர்னாண்டோ புள்ளே அடிகளாரின் தலைமையில் அருட் பணியாளர்கள் பலரும் வழங்குவர்.

இறுதி சிறப்புத் திருப்பலி பூசை துணை ஆயர் பேரருட்திரு அன்டன் ரஞ்சித் ஆண்டகையின் தலைமையில் 6.30 மணியளவில் ஒப்புக்கொடுக்கப்படும்.

# சுதந்திர தினத்தை #ProudSriLankan உடன் கொண்டாடிய TikTok




டிஜிட்டல் யுகத்தில், TikTok போன்ற தளங்கள் கலாசார மையங்களாக உருவாகியுள்ளன, இடைவெளிகளைக் குறைக்கின்றன மற்றும் ஆன்லைனில் ஒற்றுமை உணர்வை வளர்க்கின்றன. இலங்கை தனது 76ஆவது சுதந்திர தினத்தை நினைவுகூரும் போது, நாட்டின் வளமான பாரம்பரியத்தை கொண்டாடும் வகையில் பன்முகத்தன்மை, உள்ளடக்கம் மற்றும் படைப்பாற்றல் ஆகியவை ஒன்றிணைந்த ஆற்றல்மிக்க கற்றல் தளத்தில் TikTok மையமாக உள்ளது.

அழகான தீவுதேசம் அதன் கலாசார செழுமைக்காக அறியப்படுகிறது மற்றும் TikTok Onlineஇல் பலவிதமான வெளிப்பாடுகளுக்கு உருகும் பாத்திரமாக வேகமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. தளத்தின் குறுகிய வடிவ வீடியோக்கள் இலங்கையின் அடையாளத்தை உருவாக்கும் எண்ணற்ற உள்ளூர் இனங்கள், மொழிகள் மற்றும் மரபுகளைப் படம்பிடித்துக் காட்டுகின்றன. அதன் பாவனையாளர்கள் தங்களை வெளிப்படுத்த பாதுகாப்பான மற்றும் உள்ளடக்கிய இடத்தை வழங்குவதன் மூலம், அனைத்து சமூகங்களைச் சேர்ந்த தனிநபர்களும் தங்கள் தனித்துவமான கலாசார முன்னோக்குகளைப் பகிர்ந்து கொள்கிறார்கள், TikTokஇன் பார்வையாளர்களிடையே அதிக புரிதலையும் பாராட்டையும் வளர்க்கிறார்கள்.

இலங்கையின் சுதந்திர தினம் என்பது வெறுமனே ஒரு தேசிய நிகழ்வாக மட்டும் இல்லாமல், ஒவ்வொரு இலங்கையர்களிடமும், பின்னணியைப் பொருட்படுத்தாமல் எதிரொலிக்கும் ஒரு கொண்டாட்டமாகும்.

அனைத்து தரப்பு பாவனையாளர்களும் மெய்நிகர் அணிவகுப்புகளில் பங்கேற்கலாம், தனிப்பட்ட கதைகளைப் பகிர்ந்து கொள்ளலாம் மற்றும் சுதந்திரத்திற்கான கூட்டுப் பயணத்தை மதிக்கும் உரையாடல்களில் ஈடுபடக்கூடிய உள்ளடக்கத்தை TikTok வழங்குகிறது. தளமானது பௌதீக எல்லைகளைக் கடந்து, அனைத்து இலங்கையர்களையும் ஒன்றிணைத்து அவர்களின் அடிப்படைகளை கொண்டாடுவதற்கும் ஒற்றுமை உணர்வைப் பகிர்ந்துகொள்வதற்கும் ஒன்றாக உள்ளது.

# Pinnacle Junior ஐ அறிமுகப்படுத்தியுள்ள DFCC வங்கி




DFCC வங்கி தனது செல்வந்த வாடிக்கையாளர்களுக்காக பிரத்தியேகமாக அறிமுகப்படுத்திய வங்கிச்சேவை முன்மொழிவான DFCC Pinnacle, தற்போது DFCC Pinnacle Junior ஐ அறிமுகப்படுத்தி அதனை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. Pinnacle வாடிக்கையாளர்களின் பிள்ளைகளுக்காக பிரத்தியேகமாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள இப்புத்தாக்கம்மிக்க வங்கிச்சேவை முன்மொழிவானது இளம் சேமிப்பாளர்களுக்கு தங்குதடையற்ற நிதியியல் பயணத்தை உறுதிசெய்து, வியப்பூட்டும் மற்றும் பிரத்தியேகமான சலுகைகளுக்கு உத்தரவாதமளிக்கின்றது.

DFCC வங்கியின் உப தலைவரும், Pinnacle/கிளை வங்கிச்சேவை திட்டமிடல் மற்றும் நடைமுறைப்படுத்தலுக்கான தலைமை அதிகாரியுமான ஷேரா ஹசன் இதன் மூலமாகக் கிடைக்கும் வாய்ப்புக்கள் குறித்து கருத்து வெளியிடுகையில், “DFCC Pinnacle Junior ஐ நாம் அறிமுகப்படுத்துகின்ற இத்தருணமானது, முன்னரை விடவும் மேம்பட்ட வகையில் நிகரற்ற வங்கிச்சேவை அனுபவங்களை வழங்கவேண்டும் என்ற எமது அர்ப்பணிப்பை உரத்து எடுத்துச் சொல்வதாக அமைந்துள்ளது.” என்று குறிப்பிட்டார்.

படைப்பாற்றலை மேம்படுத்தி, தொடர்ந்தும் கற்பதன் மீதான ஆர்வத்தை அதிகரித்து, இளம் தலைமுறையினருக்கு வலுவான அத்திவாரமொன்றை வழங்கவேண்டியதன் முக்கியத்துவத்தை DFCC Pinnacle Junior தெளிவாக இனங்கண்டுள்ளது. வெற்றி, புத்தாக்கம் மற்றும் மகத்துவம் ஆகியவற்றைக் குறிக்கும் எதிர்காலத்தை நோக்கி இளம் சிந்தனைகளை வழிகாட்டி, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு பிரத்தியேகமான மேடையாக DFCC Pinnacle Junior காணப்படுகின்றது.

இளம் தலைமுறையை விருத்தி செய்வதில் அர்ப்பணிப்புடன் உள்ள DFCC வங்கி அதனையிட்டு பெருமை கொள்வதுடன், இத்திட்டத்தினூடாக எதிர்கால சவால்களுக்கு முகங்கொடுப்பதற்காக எமது DFCC Junior வாடிக்கையாளர்களை வலுவூட்டி, தலைமைத்துவப் பண்பினை வளர்ப்பதே எமது நோக்கம்.

எக்செல் கொழும்பு மாநாட்டு மையம்:

# நிகழ்வுகளை நடத்துவதற்கான புதியதோர் அமைவிடம்



கொழும்பின் வரலாற்றுச் சிறப்புவாய்ந்த கட்டடங்களில் ஒன்றை அனைத்தும் புதிதாக அமையப்பெற்ற ஒன்றுகூடல்களுக்கான கவர்ச்சிகரமான அமைவிடமாக Excel Colombo Convention Centre என மாற்றியமைத்தமை பற்றி எக்செல் வேர்ல்ட் பெருமையுடன் அறிவித்தது. சமகாலத்திற்குப் பொருத்தமானதும் இடவசதியுடன் கூடியதுமான இம்மாநாட்டு மண்டபத்தில் பெப்ரவரி 1ஆம் திகதியன்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின் போது பிரமாண்டமான இத்தொடக்க வைபவம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. முக்கிய நிறுவனங்களின் பிரமுகர்கள், நிகழ்வு முகாமையாளர்கள் மற்றும் பிரவுன்ஸ் குழுமத்தின் அதிகாரிகள் கலந்து கொண்ட ஊக்கம்மிக்க இந்நிகழ்வானது, பாரம்பரிய கட்டடத்திற்கான புதிய சகாப்தத்தின் விடியலைக் காட்சிப்படுத்தியது.

30,000 சதுர அடிகளைக் கொண்டதும் பரந்த வாகனத் தரிப்பிட வசதியுடனும், எக்ஸெல் கொழும்பு மாநாட்டு மண்டபம் கட்டடக்கலை நுணுக்கத்திற்கான சான்றொன்றாக விளங்குகிறது. 1000 விருந்தினர்கள் வரை விருந்தளிக்கும் கொள்ளளவு கொண்ட இவ்விடம், கொழும்பில் ஒப்பற்ற உணவு மற்றும் குடிபான வசதி வழங்களுடன்கூடிய மாநாடுகள், கண்காட்சிகள், காலா விருந்துகள், உள்ளரங்க நிகழ்சிகள், வருடாந்தப் பொதுக்கூட்டங்கள் மற்றும் வர்த்தக கண்காட்சிச் சந்தைகள் உள்ளடங்கலாக பல்வேறு வகையான நிகழ்வுகளின் மையமாக தோற்றம்பெற்றுள்ளது. எக்செல் கொழும்பு மாநாட்டு மண்டபத்தில் உள்ள நிபுணர் குழு, எந்தவொரு ஒன்றுகூடலுக்கும் ஆரம்பம் முதல் இறுதி வரை நேர்த்தியான வசதி வழங்கலை உறுதிசெய்யும் வகையில் கடமைகளை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணித்துள்ளனர். கேமிங், உணவகங்கள் மற்றும் பொழுதுபோக்கு தெரிவுகளைக் கொண்ட முனைப்பான கலவையுடன், எக்செல் வேர்ல்ட், குறிப்பாக வார இறுதி நாட்களில் பன்முக மற்றும் கிரமமாக வருகைதருபவர்களை ஈர்க்கிறது.

# NDB வங்கியின் CEOவாக கெலும் எதிரிசிங்க நியமனம்



நிதித்துறையில் தலைசிறந்து விளங்கும் NDB வங்கி, 2024 பெப்ரவரி 1ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் தமது பணிப்பாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியாகத் திரு. கெலும் எதிரிசிங்க நியமிக்கப்பட்டதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது.

30 ஆண்டுக்கால புகழ்பெற்ற துறைசார் அனுபவத்தைக் கொண்டுள்ள எதிரிசிங்க, இலங்கை மற்றும் மாலைத்தீவுகளில் HSBC வங்கியின் சிறப்பான பதவிக்காலத்தை வகித்ததன் பின்னர் NDB இல் இணைந்துள்ளார். அவரது அனுபவ வளமானது HSBC இல் தலைமை இடர் அதிகாரியாக விளங்கியதுடன், அங்கு அவர் இடர் குழுவின் தலைவராகவும் செயற்பட்டமை உள்ளிட்ட முக்கிய மூத்த நிர்வாகப் பதவிகளைக் கொண்டுள்ளது.

எதிரிசிங்க, அவரது கனதியான வங்கித்துறை பயணம் முழுமையிலுமாக, நிறுவன அளவிலான இடர் முகாமைத்துவம், வணிக வங்கி, நிதி முகாமைத்துவம், கடன் மறுசீரமைப்பு, நிதி பகுப்பாய்வு மற்றும் கிளை வங்கியியல் உட்பட பல்வேறு பிரிவுகளில் பல்துறை தலைமைத்துவத்தை வெளிப்படுத்தியுள்ளார். அவரது கல்வி அடைவுகளானது மென்செஸ்டர் பல்கலைக்கழகத்தில் பட்டய வங்கியாளர் நிறுவனத்துடன் இணைந்து Bsc மற்றும் அவுஸ்திரேலியாவின் எடித் கோவன் பல்கலைக்கழகத்தில் Msc முதலிய பட்டங்களை உள்ளடக்குகின்றது. மேலும், அவர் பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர் சங்கத்தில் நிதி முகாமைத்துவத்தில் டிப்ளோமா மற்றும் இலங்கை மத்திய வங்கியின் திறைசேரி மற்றும் அந்நிய செலாவணி செயற்பாடுகளில் சான்றிதழைப் பெற்றுள்ளார்.

# வோக் ஜுவல்லர்ஸின் பெப்ரவரி சலுகைகள்!



அன்பையும், காதலையும் வெளிப்படுத்தும் அடையாளத்தின் மாதம் மலர்ந்துள்ள நிலையில், இந்த காதலர் தினத்தில் ஆடம்பரம் மற்றும் காலத்தால் அழியாத அழகின் நேர்த்தியுடன் பேராவலைத் திருப்திப்படுத்துவதை உறுதிசெய்யும் வகையில், தனித்துவமான ஊக்குவிப்பு சலுகைகள் மற்றும் புதிய தெரிவுகளை அறிமுகப்படுத்தவுள்ளதாக வோக் ஜுவல்லர்ஸ் அறிவித்துள்ளது.

மிகவும் பிரபலமான OG (பழைய தங்கத்திற்கு பதிலாக புதிய தங்கம்) என்ற ஊக்குவிப்பு சலுகையையும் வோக் ஜுவல்லர்ஸ் பெப்ரவரி மாதத்தில் மீண்டும் முன்னெடுக்கின்றது. அந்த வகையில், 2024 பெப்ரவரி 7 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரையில் வைர நகைகள் மற்றும் விலைமதிப்பற்ற கற்களின் ஜொலிக்கும் கொண்டாட்டத்தை வோக் ஜுவல்லர்ஸ் வழங்கியது.

OG (பழைய தங்கத்திற்கு பதிலாக புதிய தங்கம்) என்ற தனது பிரபலமான ஊக்குவிப்புச் சலுகையை மீண்டும் ஒரு தடவை 2024 பெப்ரவரி 08 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை வோக் ஜுவல்லர்ஸ் வழங்குகின்றது.

இது மிகவும் விசேட விலையுடன், நீங்கள் உங்களுடைய பழைய தங்கத்திற்கு பதிலாக புதிய ஆபரணங்களை அல்லது தங்கப்பாளங்களைப் பெற்றுக்கொள்ள இடமளிப்பதுடன், ஒப்பற்ற பெறுமதி மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்பினை வழங்குகின்றது.

பழைய தங்க ஆபரணங்கள் அல்லது தங்கப்பாளங்களுக்கு பதிலாக புதிய மற்றும் தனித்துவமான, நேர்த்தியான ஆபரணங்களை வோக் ஜுவல்லர்ஸின் கைதேர்ந்த நகைக்கலைஞர்களின் அற்புதமான கைவண்ணத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.

# பட்டம் பயிலும் மாணவர்களை வலுவூட்டும் யூனியன் அஷ்யூரன்ஸ்



இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகளை வழங்கும் யூனியன் அஷ்யூரன்ஸ், வயம்ப பல்கலைக்கழகத்தின் காப்புறுதி மற்றும் விலை மதிப்பீடு திணைக்களம் ஆகியன புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டுள்ளதாக அறிவித்துள்ளன.

புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு வயம்ப பல்கலைக்கழகத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம மக்கள் அதிகாரி இம்தியாஸ் ஆனிஃப் மற்றும் வயம்ப பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் உதித் ஜயசிங்க ஆகியோர் கலந்து கொண்டு, உடன்படிக்கையில் கைச்சாத்திட்டனர்.

பட்டம் பயிலும் மாணவர்களுக்கு சிறந்த சூழலை ஏற்படுத்திக் கொடுப்பது என்பது இந்த கைகோர்ப்பின் பிரதான இலக்காக அமைந்துள்ளதுடன், ஆயுள் காப்புறுதித் துறையில் பிரயோக அனுபவம் மற்றும் வெளிப்பாட்டை பெற்றுக் கொள்ள வாய்ப்பளிக்கின்றது. இந்தப் பங்காண்மையினூடாக கல்விசார் உள்ளம்சங்களுடன் இணைந்த தொழிற்பயிற்சிகளை வழங்குவதற்கு யூனியன் அஷ்யூரன்ஸ் தன்னை அர்ப்பணித்துள்ளது.

நிபுணத்துவமான சூழலில் தமது கோட்பாட்டு ரீதியான அறிவை பிரயோகிக்கவும், உலகத்தரமான வாய்ப்புகள் வழங்குவதாகவும் அமைந்துள்ளது.

கைகோர்ப்பு தொடர்பில் யூனியன் அஷ்யூரன்ஸ் பிரதம மக்கள் அதிகாரி இம்தியாஸ் ஆனிஃப் கருத்துத் தெரிவிக்கையில், “ஆயுள் காப்புறுதித் துறையின் இளம் திறமைசாலிகளின் எதிர்காலத்தை சீரமைப்பதற்காக வயம்ப பல்கலைக்கழகத்துடன் கைகோர்ப்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

அடுத்த தலைமுறை தொழிற்துறை தலைவர்களை தயார்ப்படுத்தும் வெற்றிகரமான செயற்பாட்டுக்கு அவசியமான திறன்கள் மற்றும் அனுபவங்களை வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பை இந்த கைகோர்ப்பு மேலும் உறுதி செய்துள்ளது.” என்றார்.

# 100+ மொழிகளில் அறிமுகமாகும் ஹைபிரிட் GenAI இயங்குதளம்



முன்னோடியான செயற்கை பொது நுண்ணறிவு (AGI) நிறுவனமான QX Lab AI, இன்று மக்களுக்கு AI ஐ அணுகக்கூடியதாக மாற்றுவதற்கான உலகின் முதல் ஹைபிரிட் ஜெனரேட்டிவ் AI தளமான Ask QX ஐ அறிமுகப்படுத்தியது. Nod அடிப்படையிலான கட்டமைப்பைக் கொண்ட இந்த முதல் Ask QX ஆனது 100 க்கும் அதிகமான மொழிகளில் கிடைக்கிறது.

ஆங்கிலம் தவிர, Ask QX ஆனது, மற்ற உலகளாவிய மொழிகளின் ஒரு தொகுப்பின் மத்தியில் அரபு, பிரஞ்சு, ஸ்பானிஷ், ஜப்பானிய, ஜெர்மன், இத்தாலிய, கொரியன், போர்த்துகீசியம், ரஷ்யன் மற்றும் சிங்களம் போன்ற பல உலகளாவிய மொழிகளிலும் கிடைக்கிறது. இது QX Lab AI இன் எதிர்கால பார்வை மற்றும் இந்தியா மற்றும் மத்திய கிழக்கு மற்றும் இலங்கை போன்ற அண்டை சந்தைகளில் வளமான மொழியியல் செழுமை பற்றிய ஆழமான புரிதலுக்கு ஒரு சான்றாக இருக்கிறது.

2024 ஆம் ஆண்டின் முதல் காலாண்டிற்குள் உரை மற்றும் ஆடியோ வடிவங்கள் உடனுக்குடன் கிடைக்கும் மற்றும் படம் மற்றும் வீடியோவின் வரவிருக்கும் செயல்பாடுகளுடன், QX Lab AI தெற்காசியாவிற்கு ஒரு செயல்பாட்டு GenAI தளத்தை கொண்டு வருவதில் முன்னோடியாக உள்ளது. Ask QX ஏற்கனவே இயங்குதளம் தொடங்கும் நேரத்தில் 8 மில்லியனுக்கும் அதிகமான பாவனையாளர்களின் பயனர் தளத்தைக் குவித்துள்ளது.

# பேண்தகைமையான சூழலின் பொறுப்பை ஏற்கும் HNB FINANCE



இலங்கையில் ஒரு முன்னணி நிதி நிறுவனம், பேண்தகைமையான தனது பொறுப்பை முன்னெடுத்து, மின்கழிவு நிர்வகிப்புக்கான புதிய தீர்வை நடைமுறைப்படுத்தியுள்ளது. சமூகப் பொறுப்புள்ள நிறுவனமாக, HNB FINANCE இந்த தீர்வு மூலம் சுற்றுச் சூழலுக்கு மின் கழிவுகளால் ஏற்படும் சேதத்தை குறைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

HNB FINANCE தலைமை அலுவலகம் மற்றும் கிளை அலுவலகங்களில் சேகரிக்கப்படும் இக்கழிவுகள் ஒரு திட்ட அமைப்பின் மூலம் வரிசைப்படுத்தப்பட்டு, மின் கழிவுகள் N.S Green Links Lanka (Pvt.) Ltd நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும். மத்திய சுற்றுச்சூழல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்ட இந்த நிறுவனம், சுற்றுச்சூழலில் உள்ள மின்னணு கழிவுகளை முறையாக அகற்றுகிறது.

N.S Green Links Lanka (Pvt.) Ltd உடனான இந்த மூலோபாய ஒத்துழைப்பில், HNB FINANCE ஆனது நிலையான சுற்றுச்சூழல் நிர்வகிப்பிற்கான அதன் எதிர்கால அர்ப்பணிப்பை பிரதிபலிக்கும் மற்றும் சமூகம் மற்றும் சுற்றுச்சூழலுக்கு மிகவும் பயனுள்ள பணியை மேற்கொள்ளும்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய HNB FINANCE PLC இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத், "இந்த ஒத்துழைப்பை நிறுவனத்தின் வணிக நடைமுறைகள் மூலம் நிலையான சூழலுக்கான எங்கள் அர்ப்பணிப்பை நிரூபிக்க ஒரு வாய்ப்பாக அறிமுகப்படுத்தலாம். எனத் தெரிவித்தார்.

# பதவிய மகாசென் ஆரம்பப் பாடசாலைக்கு Seylan Developments PLC யின் நீர் சுத்திகரிப்புத் திட்டம்



செலான் Developments PLC, முக்கியமானதொரு நிறுவன சமூகப் பொறுப்புணர்வு (CSR) முயற்சியின் பணிகளை நிறைவு செய்துள்ளதாக அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. பதவிய மகாசென் ஆரம்பப் பாடசாலைக்கு Seylan Developments PLC நீர் சுத்திகரிப்புத் திட்டத்தை வழங்கியுள்ளது.

545 மாணவர்களையும் 20 ஆசிரியர்களையும் உள்ளடக்கிய பதவியா மகாசென் ஆரம்பப் பாடசாலையானது தொடர்ந்து நீர் தொடர்பான பிரச்சினைகளை எதிர்கொள்வதோடு மட்டுமல்லாது இதன் காரணமாக பிராந்தியத்தில் சிறுநீரக நோய்களின் பரவலுக்கும் முகம் கொடுக்கின்றது. தற்போது பாடசாலையில் முறையான குடிநீர் வசதி இல்லாததால், நாள் முழுவதும் வகுப்பறைகளில் உள்ள மட்பானைகளை நிரப்ப வேண்டிய கட்டாயத் தேவைக்கு பெற்றோர் ஆளாக்கப்படுகின்றனர். இந்தக் கடினமான செயலுக்கு நேரத்தை ஒதுக்குவதில் பெற்றோர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

பதவியா சமூகத்தில் சுத்தமான மற்றும் இலகுவாக கிடைக்கக்கூடிய குடிநீரின் தேவையை உணர்ந்து, CSR முயற்சியின் மூலம் இந்தப் பிரச்சனையைத் தீர்க்கும் பொறுப்பை செலான் Developments PLC ஏற்றுக்கொண்டுள்ளது. பதவியா மகாசென் ஆரம்பப் பாடசாலையில் நீர் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவும் பொருட்டு நிறுவனம் குறிப்பிடத்தக்க தொகையாக ரூபாய் 1 மில்லியனை முதலீடு செய்துள்ளது.

இந்த முயற்சியானது, நிலைபேறான மற்றும் சமூகத்தை மையமாகக் கொண்ட அபிவிருத்திக்கான செலான் Developmentsஇன் அர்ப்பணிப்புடன் ஒத்துப்போகிறது.

# உதயவானம்

விடிவதற்கு அந்தா இந்தா என்றிருக்கும் அதிகாலை வேளை. அடுப்பில் சுடவச்ச பழைய சோற்றுடன் வற்றிப்போன கறியையும் சேர்த்து அதை ஒரு டப்பாவுக்குள் போட்டு கையில் கொடுத்து அடைக்கலத்தை தோணியடிக்கு அனுப்பிவைத்தாள் சின்னாத்தா.

மீன்பாடு பெரும்பாடு என்பதால் கிடைத்த பத்துவரி காசில் முதல்நாள் இரவு குடிச்சு ஏற்பட்ட போதையினால் தலை கிறுகிறுப்பு அவனை இன்னும் வாட்டி வதைத்துக் கொண்டிருந்தது. அந்த வெறி அவனை விட்டு இன்னும் விலகவில்லை.

நாலுபேருடன் கரைவலை தொழிலுக்கு போனால் ஏன்தான் பேய்ப்புத்தி வருகிறதோ தெரியவில்லை. இந்த வகையான பேர்வழிக்கு காசுபணம் கிடைச்சால் அப்பணத்தை பத்திரமாக வீட்டில் சேர்க்க வேண்டுமென்ற நினைப்பு கொஞ்சம்கூட வராது அந்த மக்குகளுக்கு. அந்தப் பணத்தை கூடுவாரோட கூடி கும்மாளம் அடிச்சா நம்ம குடும்பத்த ஓட்டுவதெப்படி என்ற நெனப்பும் வராது. நாலு பேருக்கு முன்னால் சந்தி சிரிக்க நடந்து கொள்ளுவாங்க இந்த குடிகார பசங்க.

ஏன்தான் புத்தி கெட்டு நடக்கிறாங்க என்பது கொஞ்சங்கூட தெரியவில்லைங்க என்றாள் சின்னாத்தா. என்னங்க, உங்கள நம்பி நானும் புள்ளைங்களும் இருப்பத கொஞ்சம் நீங்க யோசிச்சு நடக்க பாருங்க. நீங்க இழுப்பு வலைப்பணத்த பத்திரமாக வீட்டுக்கு எடுத்து வரப்பாருங்க. ஒங்களுக்கு சல்லிப் பணம் கிடைச்சதும் கண்மண் தெரியாமல் நடக்காதீங்க. நம்மளப் பார்த்து மத்தவங்க காறித் துப்புமளவுக்கு நடப்பது ஞாயமா? என்று தனது துயரத்தை கொட்டித் தீர்த்தாள் சின்னாத்தா. இதைக் கேட்ட அடைக்கலம் கல்லுப்பிள்ளையாராக நின்றான். என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தான்.

தான் ஒரு மகாக்குடிகாரனாக இருப்பது தவறு என்பதை மனதளவில் ஏற்றுக்கொண்டதால் தன் மனைவி சின்னாத்தாவின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் தலை குனிந்தான். இவனின் பேச்சுக்கு எதிர்மறையான கருத்து தெரிவிப்பது புத்திசாலித்தனம்.

“இந்தா, பாருங்க, நா நம்ம வீட்டில மத்தவங்கபோல நாலு பணம் சம்பாதித்து ஒழைத்து வாழத்தான் நினைக்கிறேன். வாடி வேலைக்குப் போறேன். கால் கடுக்க, கை, தலை, முதுகு வலிக்க, கை காலில் மீனின் முள்குத்த வேலை செஞ்சி மாடா உழைக்கிறீங்க, ஆனால் உங்களுக்கு குடும்பப் பொறுப்பு கொஞ்சமும் இல்ல. குடித்து கும்மாளம் அடிச்சு வாழ்க்கையை நாசமாக் குறதுதான் உங்க வேலைங்க. சீ! கேடு கெட்டுப்போன உங்கள போன்ற ஆட்களோட வாழ்றது ரொம்பக் கஷ்டம்” என்று சொல்லிக் கொண்டே தன் வீட்டை பூட்டிய கையோடு சின்னாத்தா வாடியை நோக்கி விரைந்தாள்.

சின்னாத்தாவின் ஏச்சையும் பேச்சையும் கேட்டு நின்ற அடைக்கலம் நைசாக நழுவினான்.

போத்தி சம்மாட்டியாரின் வாடி வேலையென்பது விறுவிறுப்புடன் ஆறு நாட்களாக நடக்கும். ஒருநாள் வேலைக்கு வராவிட்டால் தண்டப்பணம் அறவிடப்படும். அதனால் சின்னாத்தா வாடி வேலையை ‘கட்’ பண்ண மாட்டாள்.

என்னதான் உழைப்பு வேலையென்று ஓடி ஆடி பணத்தை சம்பாதித்தாலும் தமது வாழ்வில் விமோசனம் இல்லையென்பதை சின்னாத்தா தெரிந்து தான் வைத்திருந்தாள்.

கடலே தமக்கு வாழ்க்கை என நம்பி வாழும் உடப்பை அண்மித்துள்ள அந்தாரைப்போன்ற இடங்களில் வாழும் மக்களின் முன்னேற்றம் என்பது பெரும்பாலும் கனவு தான்.

அப்பா செய்யும் தொழிலை தமையனும் செய்யத்தான் வேண்டுமா? தம் குலத் தொழிலை செய்யாமல் மாற்றுத்தொழிலை செய்தால் என்ன என்ற எண்ணம் பலருக்கும் இல்லை.

குடிப்பழக்கம் இருந்தாலும் அடைக்கலம் மோசமானவன் இல்லை. தன் மகனைப் படிக்க வைத்து சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு கொண்டுவர வேண்டும் என்ற கனவு அவனுக்கு இருந்தது.

தொழிலாளர்களை ஏமாற்றி வயிறுபிடைத்து வாழும் போத்தி சம்மாட்டி போன்றவர்களின் நோக்கமே கடற்றொழில் செய்யும் தொழிலாளர்களின் பிள்ளைகள் தகப்பன் செய்யும் தொழிலைத்தான் செய்ய வேண்டும் என்பதாக இருந்தது.

“இந்தா பாரு அடைக்கலம்! இந்த காலத்தில் புள்ளைங்க படித்து கிழிப்பதினால் ஒன்றும் நடக்காதப்பா. ஏனப்பா உன்ர பிள்ளைய படிக்க வச்சி அவன்ர வாழ்வை நாசமாக்கிற? இது உனக்கு நல்லதா படுதா? நா சொல்வத கொஞ்சம் கருத்தில எடுத்துப் பார். யோசித்துப்பாரு” என்று ஒரு நாள் ஆரம்பித்தார் போத்தி சம்மாட்டி.

“இன்னைக்கு உன்ற புள்ள வலை இழுத்தா கை நிறைய சல்லியும் மடி நிறைய சமைக்க மீனும் கொண்டு போவாப்பா. உனக்கு நா சொல்றது கேக்குதா அடைக்கலம். புத்தியுடன் நடக்கப்பாரு” என அவர் வலை விரித்தார்.

என்னதான் அடைக்கலத்தின் மனதை மாற்றமுயற்சி செய்தாலும் போத்தி சம்மாட்டி இந்தா சல்லி என்று கொடுத்தாலும் அடைக்கலம் தன் எண்ணத்தை மாற்றுவதாக இல்லை.

“இந்தாங்க நீங்க சம்மாட்டியரிடம் போய் தொழில் செய்றீங்க. அதற்கு கூலியாக பணம் தாராங்க என்ற எண்ணத்துடன் நடந்து கொள்ளுங்க” என்ற மனைவியின் அறிவுரையை அப்படியே ஏற்றுக் கொள்வான்.

பணத் திமிருடன் நடந்துகொள்ளும் சம்மாட்டியாரின் அடாவடித்தனத்துக்கும் அவரின் பசப்பு வார்த்தைகளுக்கும் முடிவு கட்டியாக வேண்டுமென்று தொழிலாளர்கள் உள்ளூர நினைத்துக் கொள்வார்கள்.

பணத்துக்கும் மதுவுக்கும் அடிமைப்பட்ட கட்டமைப்பிலிருந்து விடுபட்டு படித்த சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதே சின்னாத்தாவின் எண்ணமாக இருந்தது. அதன்படியே இருவரும் உழைத்தார்கள்.

கடற்கரை ஓரத்தை அண்டிய ஒலைக் குடிசை. அதனுடன் அமைக்கப்பட்ட முன் விறாந்தையுடன் கூடிய கட்டடம். ஒச்சாப்பு இறக்கிய குசினியுடன் சின்னாத்தாவின் இல்லம் அமைந்துள்ளது.

கரைவலைத் தொழிலும் வாடி வேலை உழைப்பும் கொண்ட அளவான குடும்பம் அது. தேர்தல் காலங்களில் அந்நகர் களை கட்டும். விழாக் கோலம் பூண்டுநிற்கும். இவ்வூர் தொழிலாளர் நிலைகண்டு பச்சாதாபத்தை வெளிபடுத்துவார்கள். வாக்குறுதிகளை அள்ளி வீசுவார்கள். அரசியல்வாதிகள், மின்சாரம் இல்லாத வீடுகளுக்கு மின் இணைப்பைத் தருவோம், வீடுகள் இல்லாதவர்களுக்கு புதுமனை கட்டித் தரப்படும், தண்ணீர்த் திட்டத்தை கொண்டு வருவோம். படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு நிவாரண திட்டத்தில் தெப்பம், வலை. போட் என்பனவற்றை தருவோம் என்ற பசப்பு வார்த்தைகள் அக் கிராமத்தில் கரைபுரளும்.

இந்த பொய்யான வாக்குறுதிகளை கேட்டு சாமானிய தொழிலாளர்கள் நம்பி நிற்பதில் வியப்பொன்றுமில்லை. இவையெல்லாம் தமிழ்ப் பகுதிகளில் வாக்குகளை சூறையாடும் தந்திரம்.

ஆனால் எம் கிராமத்தை அண்டியுள்ள பெரும்பான்மை மக்கள் வாழும் பகுதிகளில் அபிவிருத்தித் திட்டங்கள், நிவாரணங்கள், கொடுப்பனவுகள் எல்லாம் நல்லபடியாகத் தான் நடந்து கொண்டிருக்கிறது. அப்பப்பா! இவ்வசதிகள் எல்லாம் எங்கள் கிராமத்தில் முயற்கொம்பான சங்கதிகள் என்பது அடைக்கலம் குடும்பத்துக்கு மட்டுமல்ல அந்தக் கிராமத்துக்கே தெரியும். அடைக்கலம் தொழிலுக்குப் போகத் தயாரானான். பாசப்பிணைப்பின் காரணமாக அவளை உணர்ச்சிப் பிரவாகத்துடன் நெஞ்சார அணைத்து ஆலிங்கனம் செய்தான். இவ்வகையான உணர்ச்சிப் பிரவாகங்கள் கடற்தொழிலாளர்களிடத்தில் காணப்படுவது வழமை.

அவளும் கொஞ்சலாக, “இந்தாங்க, உங்களத்தான் கேக்குதா? கடல் சாந்தமாகத்தான் இருக்கு, காத்தும் அவ்வளவாக இல்லைங்க. மீன்படும் போல கெடக்கு. அப்படி இருந்தாலும் மீன்மடி மடியாக கிடைத்தால் சந்தோசம் என்ற போர்வையில் உங்களுக்கு கசிப்பு ஊத்துவான் அந்தப் பாழாய்ப்போன போத்தி சம்மாட்டி. பாத்து நடந்து கொள்ளுங்க” என்று புத்தி புகட்டியபடியே கொஞ்சலாக சொன்னாள் சின்னாத்தா.

“ஏண்டிபுள்ள உனக்கிட்ட ஒன்ன சொல்றேன். அடியே இன்று பாரிப்பாடு பாட்டுக்கும் போக வேண்டுமடி. நா முந்தி நீ முந்தி போய் ஆகவேண்டும். முந்திப்போனால் தானடி பங்குச்சல்லியுடன் மேப்பங்கு சல்லியும் கெடைக்கும். அப்போ தான் குடித்து நம்ம காலத்தை ஓட்டலாம்” என்று சொல்லி முடிப்பதுக்குள் டிரக்டர் சத்தம் கேட்டது.

“அடியேபுள்ளே, டெக்டர் சத்தம் கேக்குதடி.” அவன் ஓடி வந்து டிரக்டரில் பாய்ந்து ஏறி ஆட்களுடன் ஆட்களாக ஓர் மூலையில் அமர்ந்து கொண்டான்.

விரைந்தோடிய டிரெக்டரில் அங்குமிங்குமாக புரண்ட அடைக்கலத்துக்கு சலிப்பாக இருந்தது. இந்த மண்டாடி காளியப்புவின் ஏச்சையும் பேச்சையும் எவ்வளவு காலத்துக்குத்தான் கேட்டு நிற்பதென்று அடைக்கலம் முகத்தை சுளித்தான்.

உழைப்பு உழைப்பு என்று ஓடி உழைத்தாலும் கையில் பணம் மிஞ்சுவது மிகக் கஷ்டமாக இருந்தது. ஊரின் இக்கரைதொழில் சீசன் காலாவதியாகி விட்டதனால் அக்கரை தொழில் சித்திரை மாதத்துடன் களைகட்டும். இந்த தொழிலாளர்கள் அலம்பல், முல்லைத்தீவு போன்ற இடங்களுக்கு சென்று தொழில் புரிவது வழமை.

முல்லைத்தீவு பகுதியில் கரைவலைத் தொழிலில் பேர் போனவர் சவரியப்பு சம்மாட்டி. தொழிலாளர்களை ஏமாற்றி வேலை வாங்குவதில் கில்லாடி.

அதற்கு அவர் ஒரு உபாயம் வைத்திருந்தார். அதுதான் முற்பணம். இப்பணத்தை கை நீட்டி வாங்கினால் தொழிலை தொழிலாக நேர்த்தியாக செய்யவேண்டும். லீவு என்ற பேச்சுக்கே இடமில்லை. மூன்று நேரச் சாப்பாடு, குடித்து வெறிக்க கசிப்பு.

இக்கரை என்று சொல்லப்படும் உடப்புப்பகுதி தொழில் சித்திரை முதலாம் திகதியுடன் முடிவு பெறும். இத்தொழில் முடிந்தவுடன் அக்கரைத் தொழிலை நாடுவது இப்பகுதி தொழிலாளர்களின் வழக்கம்.

அடைக்கலம் தனது வறுமை காரணமாக இரண்டு லட்சம் ரூபாவை முற்பணமாக சவரியப்பு சம்மாட்டியிடம் கை நீட்டி வாங்கினான். அதன்படி அடைக்கலம் அலம்பில் என்ற இடத்திற்கு சவரியப்பு சம்மாட்டியாரின் கரைவலை வாடியை போய்ச்சேர்ந்தான்.

ஆனால் அடைக்கலத்துக்கு காத்திருந்தது புதிய இடம், புதிய சூழல். புதிய முகங்கள். இவற்றுடன் தொழில் முறையிலும் நடைமுறைப்பழக்கங்களிலும் வித்தியாசங்களைக் கண்டான். அடைக்கலம் புதியவன் என்பதால் சக தொழிலாளர்கள் உதவிகளையும் ஒத்தாசைகளையும் செய்யப் பின்நிற்கவில்லை.

அவன் எதிர்பார்த்தது போல் சாப்பாட்டுக்கு பஞ்மில்லை. மனதை தேற்றிக் கொள்ள கசிப்பும் கிடைத்தது. இதைக்கண்ட அடைக்கலம் திருப்தி அடைந்தான்.

கசிப்பை உள்ளே விட பழக்கப்பட்டவன் குடிபோதையில் தொழிலை மாடாக செய்வான். அதனால் மற்ற தொழிலாளிகளை விட மாத சம்பளம் இரட்டிப்பாகக் கிடைத்தது. மனத்திருப்தி அடைந்த அடைக்கலம், வாங்கிய இரண்டு இலட்சத்தை ஆறு மாதத்தில் திருப்பிச் செலுத்தி விட்டான்.

அக் கிராமம் பின் தங்கிய நிலையில் காணப்பட்டாலும் இங்கும் சம்மாட்டிமார்களின் ஆதிக்கம், கையோங்கித்தான் இருந்தது. இதனால் தொழிலாளர்கள் எடுப்பார் கைப் பிள்ளைகளாக இருந்தனர். இதற்கு முடிவு கட்ட வேண்டுமென சின்னாத்தா பாடுபட்டாள். தொழிலாளர்கள் சுய தொழில் செய்ய வேண்டும். தத்தம் பிள்ளைகளை படிப்பித்து முன்னேற்றத்தைக் காண வேண்டும். தொழிலாளர்களின் பிள்ளைகள் தகப்பன் செய்யும் கரைவலைத் தொழிலில் இருந்து விடுபட்டு அரச தொழிலை மேற்கொள்ள வேண்டுமென கனவு கண்டாள்.

அக்கனவு வீண் போகவில்லை. மகன் கட்டப்பா படித்து முன்னேறி அரச தொழிலான ஆசிரியர் தொழிலைப் பெற்று கொண்டான்.

போத்தி சம்மாட்டியாரின் எண்ணமெல்லாம் தொழிலாளர்களின் பிள்ளைகள் படித்து முன்னேறக்கூடாது என்பதுதான். அந்த எண்ணம் படிப்படியாக உடையத் தொடங்கியது.

காலமும் மாறத் தொடங்கியது. ஏதோ காரணத்தால் கரைவலையில் மீன்படுவது குறைந்து போனது. போத்தி சம்மாட்டியாருக்கு பல பிரச்சினைகள் முளைக்க, வழக்கு, வம்பு, குடும்பப் பிரச்சினைகள் என அவர் அலைக்கழிந்து போனார். ஒரு தொழிலாளி மட்டத்துக்கு இறங்கிப் போனார்.

இதே சமயம், அப்பாடசாலையில் படித்து பட்டதாரி ஆசிரியனான கட்டப்பாவுக்கு பாடசாலையில் பாராட்டு விழா நடைபெற்றது. அந்த விழாவில் அடைக்கலமும் சின்னாத்தாவும் முக்கிய பிரமுகர்களாக அழைக்கப்பட்டு முன் வரிசையில் அமர்த்தப்பட்டனர். அது அவர்களுக்கு மறக்க முடியாத நாள்.

அடைக்கலம் இப்போதும் தொழிலுக்கு போகிறான். சின்னாத்தாவும் தொழிலை விடவில்லை. முன்னரைப்போல் இப்போது சண்டை சச்சரவு இல்லை. அடைக்கலம் இப்போதெல்லாம் எப்போதாவதுதான் குடிக்கிறான். ஏனென்றால் இப்போது அவனுக்கு ஊரில் ஒரு மரியாதை இருக்கிறது. இப்போது அவன் அடைக்கலம் சேர்.



உப்பூர் வீரசொக்கன்

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல: 109

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | 04 | 05 | ■ | 06 |
| 07 | | ■ | 08 | | | ■ | |
| 09 | | ■ | 10 | | | 11 | |
| | ■ | 12 | | ■ | 13 | | |
| ■ | 14 | ■ | ■ | 15 | | | ■ |
| 16 | | 17 | | | ■ | 18 | 19 |
| 20 | | | ■ | 21 | 22 | | |
| 23 | | | | ■ | | ■ | |

திரு/திருமதி.செல்வி ..........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)
முகவரி ..........................................
..........................................
..........................................

.................... ....................
திகதி கையொப்பம்

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 109
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 109

### இடமிருந்து வலம்

01. எதனையும் பொருட்படுத்தாத தன்மை
07. முன்னைய காலத்தில் தயிர் முட்டிகளை இதில்தான் தொங்கவிடுவார்கள் (திரும்பியுள்ளது)
08. பூ (குழம்பியுள்ளது)
09. முன்பு நடைமுறையில் இருந்த நீட்டலளவை கணிப்பீட்டில் இதுவுமொன்று.
10. இந்தியாவில் பேசப்படும் மொழிகளில் இதுவும் ஒன்று (குழம்பியுள்ளது)
12. பறவை (திரும்பியுள்ளது)
13. செல்வம்
15. மூத்த சகோதரி திரும்பிவிட்டாள்.
16. இணக்கமான முடிவினால் ஏற்படும் அமைதிநிலை
18. அசுத்தம்
20. சமயம்
21. பாம்பு (குழம்பியுள்ளது)
23. செருக்கு (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

01. அறிவாற்றல் இல்லாத நிலை
02. காய்ந்த நிலை (குழம்பியுள்ளது)
03. முற்காலப் பெண்கள் காலில் அணிவது வழக்கம்
04. கூற்றுவன்
05. விவாதம் அல்லது வாக்குவாதம் என்றும் சொல்லலாம் (குழம்பியுள்ளது)
06. முகம்
11. வீடு முதலான சொத்துக்களை ஈடாக வைத்து பணம் பெறும் முறை(குழம்பியுள்ளது)
14. சுணக்கம்
15. உறைப்புத் தன்மை (குழம்பியுள்ளது)
16. போர்
17. கை முறிந்துவிட்டது
19. காலடிப் பதிவு
22. ஆற்றுநீரைத் தேக்கி வைத்திருக்கும் பாதுகாப்பு அமைப்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 108

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. வெகுமதி
4. கோதுமை
7. கயிறு
8. வினா
9. மையல்
10. சாமை
12. வில்லிசை
15. தம்பி
17. புகை
18. காடு
19. கன்னி
21. தலைப்பு
23. கவலை
26. புத்தன்
27. மாசி

**மேலிருந்து கீழ்**

1. வெறுமை
2. குயில்
3. மயக்கம்
5. துவி
6. மைனா
10. சாவி
11. மைல்
13. புலி
14. சைகை
15. தடுப்பு
16. பித்தன்
18. புகார்
20. கனி
22. தலை
24. வரி
25. மாலை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 108

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **என்.எஸ். ராஜீவ்,** பிரதேச செயலகம், முசலி | **பரீனா. சீ. மொஹம்மட்,** இல 273, பொல்கஹயாய, நாரம்மல | **எம்.ஆர்.எம். நஜாத்,** 96 பி, அப்துல் லத்தீப் மாவத்தை, தோட்டம் மல்வானை |

### பாராட்டு பெறுவோர்

1. **எஸ் சஞ்சனா,** வந்தாறுமூலை
2. **எம்.பி அகிலன்,** திருகோணமலை
3. **எஸ். லீயா ஸ்ரீ** மட்டக்களப்பு
4. **கே. தர்மரட்ணம்** கரடியனாறு
5. **ஏ.எஸ்.எம் பாஹிம்** யட்டியாந்தோட்டை
6. **மல்லிகாதேவி பத்மநாதன்** பசறை
7. **என்.கே. வேணி** பலாங்கொடை
8. **சஜிந்த பிரதீப்** மல்வத்தை
9. **அப்ராஸ் பகுர்டீன்** கண்டி
10. **எம்.ஏ. லத்தீப்** அக்கரைப்பற்று

# அன்னை புவனேஸ்வரியின் நினைவாக 9ஆவது ஆண்டாகத் தொடரும் அறப்பணிகள்





சமூக சேவை என்பது பல வகைப்படும். அவற்றில் இவ்வுலகில் இருந்து நீங்கிய நிலையிலும் புகழுடன் திகழ்பவர்களின் நினைவாக இடம்பெறுகின்ற சேவைகள் முக்கியமானவை. அது, உயிர் நீத்த பின்னும் உயிருடன் வாழ்வதற்கு நிகரானது. இத்தகைய பேறு எல்லோருக்கும் கிட்டிவிடுவதில்லை.

உயிருடன் வாழ்ந்தபோது குடும்பத்தின் மீது அதிகப் பற்றுடையவராக அன்புமழை பொழிந்தது மட்டமல்லாமல் அயலவர்கள் மீதும் சமூகத்தின் மீதும் அளவற்ற பாசம் கொண்டு செயற்பட்டதனால் புவனேஸ்வரி அக்கா என்று பலராலும் அன்னை புவனேஸ்வரி அழைக்கப்பட்டார்.

தொலைதூர தேசமாகிய லண்டனில் தனது பிள்ளைச் செல்வங்களுடன் வாழ்ந்த நிலையில் அவரது உயிர் பிரிந்த போதிலும், அவருடைய உள்ளம் என்னவோ அவர் வாழ்ந்த வவுனியா குடியிருப்பு கிராமத்தையும் அதனைச் சூழ்ந்த பகுதிகளிலுமே நாடியிருந்தது. இந்த சமூகப் பற்றின் காரணமாகவே அவரது புகழுடல் அவரது குடும்ப வாரிசுகளினால் குடியிருப்பு இல்லத்திற்குக் கொண்டு வரப்பட்டு இறுதிக்கிரியைகள் நடத்தப்பட்டன.

வசதிகள் வாய்ப்புக்கள் இருந்த போதிலும் பிறந்த மண்ணையும் கூடி வாழ்ந்தவர்களையும் நினைவுகூர்ந்து அந்த சமூகத்துடன் ஒன்றித்திருக்க வேண்டும் என்ற உயரிய நோக்கம் கொண்ட அன்னை புவனேஸ்வரியின் பிள்ளைச் செல்வங்கள் அவருடைய புகழுடலை பூந்தோட்டம் மயானத்தில் சாதாரண ஒருவருக்குச் செய்வதைப் போன்று பாரம்பரிய முறையில் விறகுகள் அடுக்கப்பட்ட சிதையில் தீயுடன் சங்கமிக்கச் செய்தனர்.

அத்துடன் அவர்கள் தமது சமூகப் பற்றையும் பாரம்பரிய மரபு நெறிகளையும் நிறுத்திக் கொள்ளவில்லை. வவுனியா பூந்தோட்டத்தில் அன்னை புவனேஸ்வரிக்கென ஓர் இல்லத்தை அமைத்து, அதற்கு அன்னை புவனேஸ்வரி இல்லம் எனப் பெயர் சூட்டி, பல்வேறு சமூகப் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர். காண்போர் எல்லோரது கருத்தையும் கண்ணையும் கவரும் வகையில் அன்னை புவனேஸ்வரி இல்லம் கம்பீரமாக உயர்ந்து நிற்கின்றது. பௌதிக ரீதியாக மட்டுமன்றி, கல்வி, மருத்துவம், சமூக நலன் எனப் பல்வேறு வழிகளில் ஆண்டுதோறும் அவருடைய வருடாந்த நினைவுதினத்தன்று சமூகப் பணிகளை ஆற்றி பாதிக்கப்பட்டவர்களையும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களையும் அன்புடன் அரவணைத்து அவர்களுக்கான அத்தியாவசிய உதவிகளை அந்த இல்லத்தின் ஊடாக அவரது மக்கள் வழங்கி வருகின்றனர். புகழுடன் தோன்றி சமூகத்தில் பெரும் செல்வாக்குப் பெற்று வாழ்ந்த பலர் இவ்வுலகில் இருந்து மறைந்தபின்னர் அவர்களின் நினைவுகளும் பணிகளும் மறைந்து விடுகின்றன. இதுவே எமது சமூகத்தின் நிலை. அதற்கு நேர்மாறாக இவ்வுலக வாழ்க்கையை நீத்த பின்னரும் அன்னை புவனேஸ்வரி அவருடைய சமூகத்தில் அன்பைப் பொழிபவராகவும் ஆதரவற்றவர்களையும் உதவிகள் தேவைப்படுவோரையும் அணைத்து ஆதரவளிப்பவராகவும் மக்கள் மனங்களில் வாழ்ந்து வருகின்றார்.

அந்த வகையில் அன்னை புவனேஸ்வரியின் அறப்பணிகள் ஆண்டுதோறும் அவரது நினைவு தினத்தன்று முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதற்கமைய வசதி குறைந்த மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கல், வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கான மருத்துவ முகாம் ஒன்றின் ஊடாக மூக்குக் கண்ணாடிகள் வழங்கல், பாடசாலைக்குச் செல்வதற்கு வசதியின்றித் தவிக்கும் மாணவர்களின் போக்குவரத்து வசதிக்கான துவிச்சக்கர வண்டிகளை வழங்கல், உயர் கல்வி வாய்ப்பைப் பெற்று பல்கலைக்கழகத்திற்குச் சென்று கல்வி பயில வசதியற்ற மாணவர்களைத் தேடிக் கண்டறிந்து அவர்களில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு மாதாந்த நிதியுதவி வழங்கல் உள்ளிட்ட பணிகள் தொடர்ந்து இடம்பெறுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. அன்னை புவனேஸ்வரியின் உயர் கல்வி உதவி நிதியின் மூலம் பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை நிறைவு செய்த மாணவர்கள் அரச துறைகளிலும் தனியார் நிறுவனங்களிலும் நல்ல நிலையிலான பதவிகளை வகித்து வருகின்றனர் என்பதும், வசதியற்ற மாணவர்களின் பல்கலைக்கழகக் கல்விக்கான நிதியுதவி தொடர்ந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்த வகையில் 2024 ஆம் ஆண்டுக்கான அன்னை புவனேஸ்வரியின் ஒன்பதாம் ஆண்டு நினைவாக இன்று 18.02.2024 ஆம் திகதி அவர் பெயரிலான அறப்பணிகள் வவுனியா பூந்தோட்டம் நினைவாலயத்தின் இடம்பெறவுள்ளன.

# கொஸ்கமவில் மனத்தூய்மைக்கான தியான பயிற்சி மார்ச் 10ஆம் திகதி



சுமார் 2500 ஆண்டுகளுக்கு முன்னர் கௌதம புத்தரால் வடிக்கப்பட்டு, பர்மாவைச் சேர்ந்த ஊ.பா. கின்னிடமிருந்து கற்று, இந்தியா மற்றும் உலகம் முழுவதும் விபாசனா கற்று தந்த ச. கோயங்கா வினால் நடத்தப்படும் மனத்தூய்மைக்கான தியான முறை பற்றிய அறிமுகம் இடம்பெறவுள்ளது.

குருஜி எஸ்.என். கோயங்காவின் வழிவந்த தியான ஆசிரியர்கள், சுப்பிரமணியம், ஜானகி மற்றும் சிவக்குமார் ஆகியோரால் தமிழ், ஆங்கில மொழிகளில் மார்ச் 10ஆம் திகதி முதல் 21ம் திகதி வரை பத்து நாட்கள் தியான பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளது.

இவர்களது பயிற்சி நெறியில் 18 வயதுக்கும் மேற்பட்ட அனைவரும் கலந்து கொள்ளலாம். கொஸ்கம, பஹலா கொஸ்கம, தம்மசோபா விபாசனா தியான மையத்தில் நடைபெறவுள்ளது.

கோயங்கா ஜி யின் சிஷ்யர்களான சுப்பிரமணியம், ஜானகி சுப்பிரமணியம் ஒருங்கிணைக்கும் இப்புனித நிகழ்வை ஏற்பாடு செய்துள்ளனர். விபாசனா தியான மையத்தில் இணைந்து கொள்ள விரும்புவர்கள் 0772448608, 0773504491, 0774935850 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். மேலும், www.sobha.dhamma.org என்ற இணையத்தில் பதிவுசெய்து கொள்ளவும் முடியும்.

மனத்தூய்மைக்கான இந்த தியான பயிற்சி நெறியில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

எச். எச்.விக்கிரமசிங்க

## வலம்புரி கவிதா வட்டத்தின் 97 ஆவது கவியரங்கம்



வலம்புரி கவிதா வட்டத்தின் 97 ஆவது கவியரங்கம் இம்மாதம் 23ஆம் திகதி (23/02/2024) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும். கவிஞர் இளநெஞ்சன் முர்ஷிதீன் கவியரங்குக்கு தலைமையேற்று நடாத்துகிறார். நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழகணேஷ் (பொருளாளர் )071 756 3646 உடன் தொடர்பு கொள்ளவும்.

## ஃபரீடா கொரயா மகளிர் விருது வழங்கும் விழா

(02 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந் நிறுவனமே, வாழ்வில் வறுமையை வெற்றி கொண்ட மகளிரை அடையாளம் கண்டு அவர்களை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் ஃபிரீடா கொரயா விருதுகளுக்கான போட்டியை நடத்த முன்வந்தது. இந்தப் போட்டி இதுவரை எவருமே முன்வைக்காத ஒரு வழிமுறையை முன்னெடுத்தது. அதாவது, தான் வசிக்கும மாகாணத்தைச் சேர்ந்த ஒரு முன்மாதிரியான சாதனைப் பெண்மணியை ஒரு எழுத்தாளர் தேடிக் கண்டுபிடித்து, கைவிடப்பட்டும், வாய்ப்புகள் முற்றிலும் அடைக்கப்பட்ட நிலையிலும் அப்பெண்மணியினால் எவ்வாறு சவால்களை வென்று சாதனைப் பெண்ணாக வர முடிந்தது என்ற வெற்றிக் கதையை எழுதி போட்டிக்கு அனுப்பி வைக்க வேண்டும். அக் கதைகளின் மூலமே திறந்த சாதனைப் பெண்மணி தெரிவு செய்யப்படுவார்.

இச்சாதனைப் பெண்மணிகளுக்கு பரிசுகள் வழங்கப்படும் போது அவர்களை தேடிக் கண்டறிந்த எழுத்தாளர்களுக்கும் பரிசுகள் வழங்கப்படுவது இப்போட்டியின் முக்கியத்துவம் வாய்ந்த அம்சமாகும். சாதனைப் பெண்களைக் கைதூக்கிவிடும் எந்தவொரு போட்டியும் எழுத்தாளர்களை கௌரவித்ததில்லை. இக் கட்டுரைகளில் இருந்து பெறப்படும் விஷயங்கள், பெண்களின் துயரங்கள், அவற்றுக்கான காரணங்கள், முன்னேற்றத்துக்கு தடையாக அமையும் காரணிகள், சவால்கள் என்பன கண்டறியப்பட்டு, அவை ஒரு கொள்கை பத்திரமாக தயாரிக்கப்படவுள்ளது. பெண்கள் தொடர்பாக எவ்வாறான சாதகமான தேசிய கொள்கைகள் எதிர்காலத்தில் வகுக்கப்பட வேண்டும் என்பதைத் தீர்மானிக்கும் அரசின் கொள்கை வகுப்பாளரின் பார்வைக்காக இக் கொள்கைப் பத்திரம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதை ஃபிரீடா விருதுகளின் மற்றொரு சிறப்பம்சம்.

ஃபிரீடா கொரயா, காமினி கொரயாவின் தாயாராவார். அவரது பெயரிலேயே இவ் விருதுகள், சாதனைப் பெண்களுக்கும் அவர்களை அறிமுகம் செய்த எழுத்தாளர்களுக்கும் வழங்கப்பட்டது. கடந்த வியாழக்கிழமை 15ஆம் திகதி இந்த விருது வழங்கும் வைபவம் வெகு விமரிசையாக கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மண்டபத்தின் ஜெஸ்மின் அரங்கில் பி.ப. 2 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது. சுனேத்ரா பண்டாரநாயக்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இவ்விழாவில் ஒன்பது மாகாணங்களைச் சேர்ந்த மூன்று சாதனைப் பெண்மணிகள் மற்றும் மூன்று எழுத்தாளர்கள் என்று மொத்தம் 54 பேர் விருதுகளைப் பெறும் தகுதி கொண்டிருந்தனர். வட மாகாணத்தில் முதல் இடத்தைப் பெற்ற சாதனைப் பெண்மணியாக வவுனியாவைச் சேர்ந்த நிஷாந்தன் ஷோபனா தெரிவாகி நான்கு லட்சம் ரூபாவை பரிசாகப் பெற்றார். அவரை அறிமுகம் செய்த எழுத்தாளரான சிறீ தர்ஷிகா வேணுகாந்தன் இரண்டு லட்ச ரூபாவை பரிசாகப் பெற்றார். இரண்டாம் இடத்தை சாஜிராணி கிருஸ்ணதாஸ் பெற்றார். எழுத்தாளராகப் பரிசு பெற்றவர் லோககீதா கவாஸ்கர். மூன்றாம் இடத்தைப் பெற்றவர் மதிவதணன் தர்மலக்ஷ்மி. அவரை வெளிக்கொண்டு வந்து பரிசு பெற்ற எழுத்தாளர் கே.பி.புஷ்பராஜ். கிழக்கு மாகாணத்தில் முதல் இரண்டு இடங்களுக்கும் பரிசு வழங்கப்படவில்லை. மூன்றாம் இடத்தைப் பெற்றவர் கந்தசாமி விஜயநிலா அவரை சாதனைப் பெண்மணியாக அறிமுகம் செய்தவர் மைக்கல் கொலின். லேக்ஹவுஸ் நிறுவனத்தைச் சேர்ந்த படைப்பாளர்களுக்கும் விருதுகள் கிடைக்கப்பெற்றமை குறிப்பிடத்தக்கது. மத்திய மாகாணத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்ற தொழில் முயற்சியாளரான மாலா ஏக்கநாயக்கவின் சாதனைகளை வெளிக் கொண்டு வந்தவர் தினகரன் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த வி.என்.ஆர்.வயலட். வட மத்திய மாகாணத்தைச் சேர்ந்த ஆயஷா மங்களிகா அபேரேக்காவை கம்பீரமாக அறிமுகப்படுத்தி அவருக்கு முதல் வரிசை வாங்கிக் கொடுத்த எழுத்தாளர் லேக்ஹவுசை சேர்ந்த இனோகா பெரேரா. வட மாகாணத்தில் மூன்றாம் இடத்துக்கான பெண்மணியை அறிமுகம் செய்த புஷ்பராஜ் தினகரன் கொழும்பு செய்தியாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இசைத்துறையில் ஆர்வமுள்ள இளம் பெண்களுக்கு வாய்ப்பு

இசைத்துறையில் ஆர்வம் கொண்டு இசைக்கருவிகளை இசைக்கப் பழகியவர்களுக்கும் கற்றுக் கொடுப்பவர்களுக்கும் வாய்ப்பளிக்கும் முகமாக புதிய அலை கலை வட்டம் கொழும்பில் முற்றுமுழுதாகப் பெண்களைக் கொண்ட இசைக்குழு ஒன்றை ஏற்பாடு செய்கிறது.

இதில் இணைந்து தத்தமது திறமைகளை வளர்த்துக் கொள்ள விரும்புவோர் உடன் 0754880172 என்ற வட்சப் இலக்கத்திற்கு விண்ணப்பங்களை அனுப்பி வைக்கலாம். குறிப்பாக கீபோர்ட், கிற்றார், புல்லாங்குழல்,வயலின் மற்றும் தோல் வாத்திய கருவிகளை இசைக்க கூடியவர்களும் சிறந்த குரல் வளம் கொண்ட பாடகிகளும் பாடகர்களும் விண்ணப்பிக்கலாம்.




## மீண்டும் திருத்தப்பம் நிகழ்நிலை...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளிட்ட இத்தகைய குற்றங்களுக்கு, 5 ஆண்டுகள் விளக்க மறியல் தண்டனை அல்லது தண்டம் அல்லது 3 ஆண்டுகள் சிறைத் தண்டனைக்கும் தண்டப்பணம் செலுத்துதலுக்கும் ஆளாகலாம். பிரிவு 32 இன் படி, மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட தடவைகள் தடைசெய்யப்பட்ட கூற்றுக்களைப் பரப்பும் எந்தவொரு தளத்தையும் நிகழ்நிலை காப்புச் சாட்டத்தின் கீழ் அபாயமான அமைவிடங்களாக நீதவான் நீதிமன்றம் பட்டியலிட முடியும்.

"நிகழ்நிலை அபாய அமைவிடம்" என்பது கணணி, இணையம், இணைய தளம், வலைத்தளம், உசாத்துணை இணையத்தளம் அல்லது அரங்கு போன்ற தொகுத்தளிக்கப்படுவதும் இணைய வழிவகைகள் மூலம் பார்க்கப்படமுடியுமானதும் கேட்கப்படமுடியுமானதும் அல்லது வேறு வகையாக உய்த்தறியக்கூடியதுமானது என்று பொருள்படும்.

தடைசெய்யப்பட்ட கூற்றுக்களின் தொடர்பாடலினால் சிக்கல்களை எதிர்நோக்க நேரும் எந்தவொரு நபரும் அத்தகைய கூற்றுக்கள் புழக்கத்தில் விடப்படுவதைத் தடுப்பதற்கான கட்டளையொன்றைப் பெறுவதற்காக, மனு மற்றும் சத்தியக் கடதாசி மூலம் நீதவான் நீதிமன்றத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

**போலியான நிகழ்நிலைக் கணக்குகளைத் தடுத்தல்**

போலியான நிகழ்நிலைக் கணக்குகள் உருவாக்கப்படுவதையும், ஒழுங்கமைக்கப்பட்ட உறுதிப்படுத்தப்படாத நடத்தையைத் தடுக்க, அத்தகைய கணக்குகளை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இடைநிறுத்த இணைய இடையீட்டாளர் சேவைக்கு அறிவிப்பதற்கு ஆணைக் குழுவுக்கு அதிகாரம் உள்ளது.

**சமூக ஊடக தளங்களைப் பதிவுசெய்தல்**

இலங்கையில் உள்ள சமூக ஊடக வலைத்தளங்கள் மற்றும் தளங்கள் பிரிவு 11 (ஓ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முறையில் பதிவு செய்ய வேண்டும்.

**நிகழ்நிலைக் காப்பு ஆணைக்குழு**

நிகழ்நிலை காப்பு என்ற இந்த ஆணைக்குழுவானது ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஆறு பேர் கொண்ட குழுவாகும்.

**ஆணைக்குழுவின் அதிகாரங்கள்**

இந்த சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட கூற்றுக்களைத் தொடர்பாடல் செய்யும் நபர்களுக்குப் பணிப்புரைகளை வழங்குதல், ஆட்கள், இணைய சேவை வழங்குநர்கள் அல்லது இணைய இடையீட்டாளர்களுக்குப் பணிப்புரைகளை வழங்குதல், சமூக ஊடக தளங்களை பதிவு செய்வது தொடர்பான பணிப்புரைகளை வழங்குதல், சமூக ஊடக தளங்களுக்கான நடத்தை நெறிமுறைகளை அறிமுகப்படுத்துதல் தடை செய்யப்பட்ட கூற்றுக்களை வெளியிடும் நிகழ்நிலைத் தளங்களை முடக்க இணைய சேவை வழங்குநர்கள் மற்றும் இணைய இடையீட்டாளர்களுக்கு அறிவித்தல், இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தடைசெய்யப்பட்ட கூற்றுக்களுக்கான குற்றங்களை வரையறுக்க முடியாது.

மேலும் அவை பரந்த பொருளைக் கொடுக்கலாம். இது கருத்து வெளியிடும் உரிமையைக் கட்டுப்படுத்தலாம்.

சமூக ஊடகத் தளங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்று சட்டமூலம் கூறுகிறது, இந்த சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றாத சமூக ஊடகங்கள் நாட்டின் பாவனையிலிருந்து வெளியேற்றப்படலாம் என்றும் ஆணைக்குழுவுக்கான அதிகாரங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் தொடரும் விமர்சனங்கள் பிரசாரங்களுக்கு மத்தியில் நிகழ்நிலை காப்பு சட்டம் மூலம் மீண்டும் திருத்தத்திற்கு உள்ளாக்கப்படவுள்ளது. அதற்கான அனுமதியை அமைச்சரவை வழங்கியுள்ளது.

அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நாட்டின் நன்மைக்காக அது நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே எதிர்க்கட்சி உட்பட அனைவரதும் எதிர்பார்ப்பாகும்.

## ட்ரம்புக்கான பிரசாரத்தை பலப்படுத்தும்...

(07 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விளாடிமிர் புடினின் நேரடியான பைடனுக்கான ஆதரவுக் கருத்துரை, மறைமுகமாக ட்ரம்புக்கு நேரான விளைவை உருவாக்குவதாகவே அமைகின்றது. ஏனெனில் 2016 தேர்தலில் கிளாரி கிளின்டனுக்கு எதிரான ரஷ்யாவின் பிரசாரத்தின் நேரான விளைவை பெற்றவராக டொனால்ட் ட்ரம்பே காணப்படுகின்றார். ஆதலால் ட்ரம்ப் எதிர்ப்பாளர்கள் மத்தியில் ரஷ்யாவின் ஆதரவுடனேயே ட்ரம்ப் அமெரிக்க ஜனாதிபதியானார் எனும் பிரசாரம் முதன்மைப்படுத்தப்படுகின்றது. 2024ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலிலும் குடியரசுக்கட்சியின் வேட்பாளராக களமிறங்க ட்ரம்ப் முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றார். இந் நிலையிலேயே புடின் பைடனுக்கு ஆதரவாக கருத்துரைப்பது, ட்ரம்ப், புடின் பிரசாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க ஏதுவாக அமையக்கூடிய வாய்ப்புகளாக எதிர்வுகூறப்படுகின்றது. ட்ரம்ப் மற்றும் பைடன் ஆட்சிக்காலப்பகுதிகளில் ட்ரம்ப் இனுடைய காலப்பகுதியே ஒப்பீட்டளவில் ரஷ்யா மற்றும் புடினுக்கு நன்மையானதாக அமைந்துள்ளது. ட்ரம்ப் ஆட்சிக்காலப்பகுதியில் புடினை, “புத்திசாலி மற்றும் மேதை" என விழித்துள்ளார். மேலும், அண்மையில் நேட்டோ உறுப்பு நாடுகள் பற்றி ட்ரம்ப் தெரிவித்த கருத்தின் விளைவு ரஷ்யாவுக்கே சாதகமானதாகும். மேற்கத்திய இராணுவக் கூட்டணியினான நேட்டோவின் உறுப்புரிமை கட்டணத்தைச் செலுத்தத் தவறிய எந்தவொரு நேட்டோ உறுப்பினரையும் தாக்க ரஷ்யாவை ஊக்குவிப்பதாக ட்ரம்ப் பரிந்துரைத்துள்ளார். இவ்வாறனதொரு ஆட்சியாளர் அமெரிக்க ஜனாதிபதியாக வருவதனையே புடினும் விருப்பம் கொள்வார்.

எனவே, புடினின் பைடனுக்கான ஆதரவு பிரச்சாரம் என்பது புடினின் தந்திரோபாய நகர்வாகவே அமைகின்றது. 2016 தேர்தலில் சமூக வலைத்தளங்களூடாக ஹிலாரி கிளின்டனுக்கு எதிரான பிரச்சாரங்களை மேற்கொண்டு ஹிலாரி கிளின்டனை தோற்கடித்திருந்தார். 2024ஆம் ஆண்டு தேர்தலில் பைடனை ஆதரித்து மேற்கொள்ளும் ஊடகப்பிரச்சாரத்தினூடாக பைடனை தோற்கடிப்பதற்கான முயற்சியை மேற்கொண்டுள்ளார் என்பதே சர்வதேச அரசியல் அவதானிகளின் பொதுவான அவதானிப்பாக காணப்படுப்படுகின்றது. டொனால்ட் ட்ரம்ப் 2024 ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சியின் அதிகாரபூர்வ வேட்பாளராக மாறினால், அவரிடம் புடின் மற்றும் ரஷ்யா பற்றிய கேள்விகளே முதன்மை பெறும். எனினும் தற்போது ட்ரம்ப் மற்றும் அவரது பிரச்சாரக்குழு பைடனைப் பற்றிய புடினின் கருத்துகளைச் சுட்டிக்காட்டி, ட்ரம்ப் கிரெம்ளினின் தேர்வு என்ற தவிர்க்க முடியாத குற்றச்சாட்டுகளைத் திசைதிருப்ப ஏதுவாக அமையும். ட்ரம்ப்க்கு மாத்திரமின்றி பைடனின் எதிரணியினருக்கும் புடினின் ஆதரவு பிரச்சாரம் பலமான பொறியாக அமையப்பெற்றுள்ளது.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வியாழன் 2024.02.15
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5391
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 39,155,448.00
ஆங்கில எழுத்து L
வெற்றி இலக்கங்கள் 5 4 2 8 4 6

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3633
சீட்டிழுப்பு திகதி 2024.02.15
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,665,085.52
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 21 50 60 61
விசேட எழுத்து F
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 90320

Mega POWER
சீட்டிழுப்பு இலக்கம் 1739
2024.02.15
92548
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.424,101,354.00
ஆங்கில எழுத்து Y
சுப்பர் இலக்கம் 08
வெற்றி இலக்கங்கள் 08 09 31 45
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP
திகதி 2024.02.15
சீட்டிழுப்பு இலக்கம் 0217
ஆங்கில எழுத்து P
L7 எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 9 1 6 3 0 2
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.25,316,346.00

ராசி சுப பலன்
திகதி 2024.02.15
சீட்டிழுப்பு இலக்கம் 700
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 4,229,558.80
வெற்றி இலக்கினம் தனுசு
வெற்றி இலக்கங்கள் 11 17 53 60
தனயோக இலக்கம் 33007
நாளுக்கான விதி எண் 28

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1421
2024.02.15
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 136,093,438.40
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 02 36 37 69
விசேட எழுத்து W
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 16940

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக

ஆர்வ வெளிப்பாடு (EOI)

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனையில் (UHKDU) உதவி இனப்பெருக்க தொழில்நுட்பம் (ART) மற்றும் இருபாலியல் பிரிவு.

விலைமனுக்கோரல் இலக்கம் <<இலக்கம் வழங்கப்படும்>>

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனையில் (UHKDU) உதவி இனப்பெருக்க தொழில்நுட்பம் (ART) மற்றும் இருபாலியல் பிரிவினை அரசு தனியார் பிரிவின் கீழ் இணைந்து நடாத்திச்செல்வதற்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்த (தேசிய மற்றும் சர்வதேச) முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
நிபந்தனை விதிமுறைகள் மற்றும் மேலதிக விபரங்களை **www.uhkdu.lk** மற்றும் **www.kdu.ac.lk** எனும் இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

துணைவேந்தர் / தளபதி,
ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகம்,
கந்தவல வீதி,
இரத்மலானை,
இலங்கை.

தொ.பே : 0112044555
பெக்ஸ் : 0112044593
மின்னஞ்சல் : mmc53uhkdu@gmail.com

www.kdu.ac.lk

ICONIC

MANAGEMENT CORPORATION CONDOMINIUM PLAN No.: 13047

இராஜகிரிய, பாராளுமன்ற வீதி, 110 ஆம் இலக்கத்திலுள்ள ஐகொனிக் தொடர்மாடி கட்டிடம் சேவைகளை வழங்குவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கான அழைத்தல்

இராஜகிரிய, ஐகொனிக் தொடர்மாடி கட்டிடம் பின்வரும் சேவையை நிபுணத்துவ ரீதியாக வழங்குவதற்காக புகழ்வாய்ந்த வழங்குநர்களிடமிருந்து Management Corporation Condominium Plan No. 13047 இன் சார்பாக முகாமைத்துவ சபையானது முன்மொழிவுகளை அழைக்கின்றது.

**ஆதன முகாமைத்துவம்/முகவரின் சேவைகளை முகாமைப்படுத்தல்**

வேலையின் நோக்கம்/அளவை அளவிடல் மற்றும் மேலதிக விபரங்கள் நிர்ணயிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னராக **iconimccp@gmail.com** என்ற மின்னஞ்சல் வழியாக மேற்கொள்ளப்படும் கோரிக்கையின் மூலம் இராஜகிரிய, பாராளுமன்ற வீதி, 110 ஆம் இலக்கத்திலுள்ள ஐகொனிக் அபார்ட்மெண்ட்ஸ் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**முன்மொழிவுகள் பின்வரும் விபரங்கள் மற்றும் ஆவணங்களினால் சான்றுபடுத்தப்படல் வேண்டும்.**

(அ) நிகரான விடயங்களில் வாடிக்கையாளர்களின் பெயர்களுடனான உரித்தான அனுபவம்.
(ஆ) அவ்வாறான சேவைகளை வழங்குவதற்கான தொழில்நுட்ப தேர்ச்சி
(இ) நிறுவனத்தின் பதிவுச் சான்றிதழ் மற்றும் படிவம் 1 இன் பிரதிகள்
(ஈ) நிறுவனத்தின் நிதி நிலைமை

எமது பணியின் நோக்கம்/ அளவை அளவிடல் தொடர்பான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள்/ விலைமனுக்கோரல்கள் **Secretary, Management Corporation Condomonium Plan No.: 13047, ICONIC Apartments, 110, Parliament Road, Rajagiriya** என முகவரியிடப்பட்டு 2024 பெப்ரவரி 29 ஆம் திகதியன்று பி.ப. 5 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் ஐகொனிக் மனேஜ்மெண்ட் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.

**தொடர்பெண்கள்: 077 447 0292 அல்லது 077 741 3770.**

## தோட்டம் (ESTATE)/ விவசாய நிலங்கள் தேவை

பின்வரும் பகுதிகளில் எமக்கு 10-50 ஏக்கர் தோட்டம்/விவசாய நிலங்கள் தேவை (ஆறு அல்லது நீர்வீழ்ச்சியை அண்டியிருப்பது விரும்பத்தக்கது).

- நுவரெலியா மாவட்டத்தில் வட்டவளை, ரொசெல்ல, கினிகத்தேனை, ஹட்டன்
- கண்டி மாவட்டத்தில் நாவலப்பிட்டி, கலஹா
- பதுளை மாவட்டத்தில் பெரகல, ஹப்புத்தளை
- புத்தளம் மாவட்டம்

மக்கள் குடியிருப்பு பிரதேசங்களிலிருந்து இந் நிலங்கள் வெகு தொலைவில் அமைந்திருக்க வேண்டும் மற்றும் பிரதான வீதியில் இருந்து லொரிகள் செல்லகூடிய வகையில் நல்ல பாதைகள் இருக்க வேண்டும், மேலும் மின்சார வழங்களை பெறகூடிய முறையில் இருக்க வேண்டும்.

நிலத்தின் புகைப்படங்கள், எதிர்பார்க்கப்படும் விலை போன்றவற்றுடன் கிடைக்கக்கூடிய பொருத்தமான நிலங்களின் விவரங்களை insaf@bairaha.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

எங்களை நேரடியாகத் தொடர்பு கொள்ள விரும்பினால், வாட்ஸ்அப் அல்லது SMS வழிகளில் **மட்டும்** 0742073431 என்ற இலக்கத்தில் திரு. இன்சாப்பைத் தொடர்புகொள்ளலாம்.

பைராஹா ஃபார்ம்ஸ் பிஎல்சி
கொழும்பு




Green Light for Online Transfer
Lake House Branch Acc. No. 000000377
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 | 011 2 429 342/ 343


## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### வீதிகளை மூடும் அறிவித்தல்

Kandy Multimodal Transport Terminal Project என்பதன் ஆரம்பத்தை முன்னிட்டு மறு அறிவித்தல் வழங்கும் வரையும் 2024.02.18 ஆம் திகதியிலிருந்து பின்வரும் பிரிவானது பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மூடப்பட்டிருக்கும் என்பதை அனைத்து பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தரப்படுகின்றது. எனவே, அனைத்து பொதுமக்களும் கண்டி நகரை அண்மிக்கும் போது கீழே குறிப்பிட்டுள்ள மாற்று வீதிகளை பாவிக்குமாறு அறிவுரை வழங்கப்படுகின்றனர்.

**மூடப்பட்டுள்ள பிரிவு:**

| வீதிப் பெயர் | இருந்து | வரையும் |
|---|---|---|
| S.W.R.D. பண்டாரநாயக்க மாவத்தை (குட்ஷெட் வீதி) | கண்டி பிரதான தபால் அலுவலகம் | சம்போதி மாவத்தை நுழைவாயில் |

**மாற்று வழிகள்**

| கண்டி நகரை நோக்கி கொழும்பு-கண்டி (ஏ1) வீதியில் பயணம் செய்யும் பயணிகள் |
|---|
| அவர்கள் ஏ1 வீதி வழியாக மணிக்கூட்டு கோபுரம் வரை முன்னேறிச் செல்லலாம் (பண்டாரநாயக்க மாவத்தைக்கான வலது பக்கம் திருப்பம் மூடியிருக்கும்) |
| **சம்போதி மாவத்தைக்கு செல்லும் பயணிகள்** |
| சம்போதி மாவத்தைக்கு திருப்பப்படும் பயணிகள் வில்லியம் கொபல்லாவ மாவத்தை நுழைவாயிலை பாவிக்கலாம். |

**பணிப்பாளர் நாயகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை

## பதவி வெற்றிடம்

### கணக்காளர் பதவி

**(POST OF ACCOUNTANT)**

பின்வரும் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள் மற்றும் அனுபவம்** : பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தகம், முகாமைத்துவம், கணக்கியல் அல்லது பொருளியலில் ஒரு பட்டம்.

**அல்லது**

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் இடைநிலை அல்லது உரிமம் அல்லது உயர் பரீட்சை

**அல்லது**

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் நடாத்தப்படும் உயர் பரீட்சை அல்லது முகாமைத்துவம் மற்றும் கிரயம் பகுதி I மற்றும் பகுதி II பரீட்சை

**அல்லது**

ஐக்கிய இராச்சியத்தின் சான்றுபடுத்திய கணக்காளர் நிறுவனத்தின் 1ஆம் தொழில்சார் நிலை அல்லது உயர் நிலை பரீட்சை

**அல்லது**

ஐக்கிய இராச்சியத்தின் சான்றுபடுத்திய பட்டயக் கணக்காளர் சங்கத்தின் பகுதி 1 மற்றும் பகுதி II பரீட்சை அல்லது உயர் நிலை பரீட்சை

**அல்லது**

இலங்கை கணக்காளர் சேவையின் கணக்காளர்

**மற்றும்**

நிகரான கொள்ளளவில் 03 வருட கால அனுபவம்.

**வயது** : 30 வயதிற்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**சம்பள அளவு** : ரூபா 64,280 - 10x1800 - 8x2200 - 17x2930 - 149,690.00 அத்துடன் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்.

**வேலை வாய்ப்பின் நியதிகள்:**
ஒப்பந்தம் மற்றும் சேமலாப நிதி அடிப்படையில் அல்லது இரண்டாம் நிலை அடிப்படையில் அரச சேவையில் உள்ள ஊழியர்கள் விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாக அனுப்புதல் வேண்டும். அதன் பிரதியை நேரடியாக அனுப்பலாம். விண்ணப்பதாரர் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என நிறுவனத் தலைமையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

நியமனத்தை வழங்கும் / வழங்காமல் விடும் உரிமையை ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை சபை தன்னகத்தே கொண்டுள்ளது. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் கட்டாயம் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் 2024 மார்ச் 04ஆம் திகதி அல்லது அதற்கு முன் தமது முழுமையான சுய தரவுகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு (02) சான்று பகர்வோரின் பெயர்களுடன் தமது விண்ணப்பங்களை கீழே கையொப்பமிட்டுள்ளவருக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும்.

**தலைவர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தலபத்பிட்டிய, நுகேகொடை.**

Repeat Your ad For Better Offers

## மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC)

கல்வி அமைச்சு

### நாடு பூராவும் காணப்படும் கணனி வசதிகளுடன் கூடிய நிறுவகங்களை அறிவுசார் கணிப்பீட்டு மத்திய நிலையங்களாக பதிவு செய்வதற்கான விண்ணப்பம் கோரல்

மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC) நாடு பூராவும் காணப்படும் கணனி வசதிகளுடன் கூடிய நிறுவகங்களை அறிவுசார் கணிப்பீட்டு மத்திய நிலையங்களாகப் பதிவு செய்யும் பொருட்டு ஆர்வமுடைய நிறுவகங்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

TVEC ஆனது 15 தொழில்கள் தொடர்பாக அறிவுசார் கணிப்பீடுகளை நடாத்தி வருவதுடன் அது NVQ மட்டம் 04 தகைமையினை விருதளிப்பதற்கான இறுதிக் கணிப்பீட்டிற்குத் தோற்றுவதற்குரிய ஓர் அடிப்படைத் தகைமையாகக் காணப்படுகின்றது. TVEC இனால் ஆன்லைன் மூலமாக அவசியான சந்தர்ப்பங்களில் அறிவுசார் கணிப்பீடுகளை நடாத்தவதற்குரிய முறைமையானது அண்மையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் TVEC ஆனது நாடு பூராவும் காணப்படும் கணனி வசதிகளுடன் கூடிய நிறுவகங்களை அறிவுசார் கணிப்பீட்டு மத்திய நிலையங்களாகப் பதிவு செய்யவதற்குத் தீர்மானித்துள்ளது.

#### விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான நிபந்தனைகள்

TVEC ஆனது கீழே தரப்பட்டுள்ள தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யும் நிறுவகங்களை அறிவுசார் கணிப்பீட்டு மத்திய நிலையங்களாகப் பதிவு செய்யும்.
நிபந்தனைகள் பின்வருமாறு

a. ஆகக் குறைந்தது 15 கணனிகள் செயற்படும் நிலையில் காணப்படுதல்
b. Broadband/ Leased Line இணைய வசதி காணப்படல்
c. மின்பிறப்பாக்கி/ மாற்று மின் வழங்கல் ஏற்பாடு காணப்படல்
d. கணிப்பீடு இடம்பெறும் காலப்பகுதியில் ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளரின் பங்களிப்பு காணப்படுதல்
e. வளிச்சீராக்கி வசதிகள் காணப்படல்

#### நிறுவகங்களைப் பதிவுசெய்தல்

கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் TVEC ஆனது நிறுவகம் தொடர்பான பௌதிக மதிப்பீட்டினை மேற்கொண்டு அதனடிப்படையில் ஆரம்பத்தில் நிறுவகத்தினை ஒரு வருட காலத்திற்கு பதிவுசெய்வதுடன் பின்னர் பதிவினை வருடாந்தம் புதுப்பிக்கும்.

#### அறிவுசார் கணிப்பீடுகளை நடாத்துதல்

TVEC ஆனது கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட நிறுவகங்களில் அறிவுசார் கணிப்பீடுகளை நடாத்தும்.

#### நிறுவகங்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல்

அறிவுசார் கணிப்பீடுகளின் நிறைவில் TVEC ஆனது கணனி ஒன்றின் பொருட்டு தடவை ஒன்றிற்கு ரூபா 500.00 வீதம் நிறுவகத்திற்கான கொடுப்பனவினை மேற்கொள்ளும். அத்துடன் நாளொன்றுக்கு அதிகபட்சம் கணனி ஒன்றினை மூன்று தடவைகள் பயன்படுத்துவதற்குஉத்தேசிக்கப்பட்டுள்ளது.

#### விண்ணப்பங்களை மேற்கொள்ளல்

ஆர்வமுள்ள மற்றும் மேற்கூறப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் நிறுவகங்கள் கீழே தரப்பட்டுள்ள Google Form இணைப்பினுள் பிரவேசித்து தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

**Google Form link : https://bit.ly/49IwoEy**

**விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி**

விண்ணப்பங்கள் எதிர்வரும் 15.03.2024 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் TVEC நிறுவகத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக தகவல்களுக்கு : 0117608066 / priyanga@tvec.gov.lk
0117608073 / samanmalie@tvec.gov.lk

**பணிப்பாளர் நாயகம்**
**மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு (TVEC),**
**354/2, "நிபுணதா பியச", எல்விட்டிகல மாவத்தை, நாரஹேன்பிட்டி, கொழும்பு 05**
**தொலைபேசி: 0117608000/தொலைநகல் : 011255500/மின்னஞ்சல்: info@tvec.gov.lk**

Uva Wellassa University

## பெறுகை அறிவித்தல்

### 13வது பொதுப் பட்டமளிப்பு விழாவில் புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்தல்

UWU/NCB/R/24/01

தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதில் அர்ப்பணிக்கின்றது

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகமானது இளங்கலை, சிறப்பு, பெரு நிறுவன மற்றும் தொடர்ச்சியான கல்வி ஆகியவற்றில் தேசிய வளத் தளத்திற்கு மதிப்பை சேர்ப்பதில் கவனம் செலுத்துவதன் மூலம் புதிய போக்குகளை அமைத்து வருகிறது. பல்கலைக்கழகத்தின் கல்வித்திட்டங்கள், புதிய தலைமுறை பட்டதாரிகளை உருவாக்கும் திறனில் திறமையானவர்களை அவர்களது தொழில்தருநர்களுக்கு கொண்டுவரும் வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளன. இப் பாரிய தேசிய முயற்சியில் நீங்களும் பங்காளராகலாம்.

இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் "13வது பொதுப்பட்டமளிப்பு" விழா 2024 மார்ச் 15ஆம் திகதி ஹம்பாந்தோட்டை, மாகம் ருஹுனுபுர சர்வதேச மாநாட்டு நிலையத்தில் (MRICC) நடைபெறவுள்ளது. எந்த பொது பட்டமளிப்பு விழாவிலும் புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்தலில் குறைந்தபட்சம் மூன்று நிகழ்வுகளில் திருப்திகரமான அனுபவத்தை கொண்டுள்ள நிறுவனங்களிலிருந்து இந்த நிகழ்வை புகைப்படம் எடுத்தல் மற்றும் வீடியோ பதிவு செய்தலுக்காக விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

இப்பல்கலைக்கழகத்தின் காசாளருக்கு ரூபா 1000.00 செலுத்துவதன் பேரில் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை சமர்ப்பிப்பதன் பேரில் அல்லது இலங்கை வங்கியின் 3114820 எனும் கணக்கிலக்கத்திற்கு பணத்தை நேரடியாக வைப்புச் செய்வதன் மூலம் அத்துடன் "பிரதி நிதியாளர் (வழங்கல்கள்) அவர்களுக்கு ஓர் எழுத்து மூல வேண்டுகோளைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024 பெப்ரவரி 19ஆம் திகதி முதல் 2024 மார்ச் 04ஆம் திகதி வரை மற்றும் 2024 மார்ச் 05ஆம் திகதி வரையான வார நாட்களில் பி.ப. 12.30 மணி வரை கேள்விப் படிவங்களை கொள்வனவு செய்யலாம். விலைமனுதாரர் ஆவணங்களை http://www.uwu.ac.lk/procurement என்ற பல்கலைக்கழக இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். விலைமனு ஆவணங்களை பதிவிறக்கம் செய்பவர்கள், கட்டணத்தை இலங்கை வங்கியின் எந்தக்கிளையிலும் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் 3114820 எனும் கணக்கிலக்கத்திற்குச் செலுத்தலாம் அல்லது ஓர் மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000.00 ரூபாவிற்கு "ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின்" பெயரில் வரையப்பட்ட வங்கி வரைவுடன் பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். காசுப் பற்றுச்சீட்டு/வைப்புச் சீட்டை விலைமனு ஆவணங்களுடன் இணைத்தல் வேண்டும். விலைமனுதாரர்கள் 2024 பெப்ரவரி 19ஆம் திகதி முதல் 2024 மார்ச் 04ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் இலவசமாக விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை 2024 மார்ச் 05ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் "பதுளை, பஸ்ஸர வீதி, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், "பிரதி நிதியாளர் (வழங்கல்கள்)'' என முகவரியிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பலாம் அல்லது பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பொதுப்பட்டமளிப்பு புகைப்படம் எடுத்தல், வீடியோ பதிவு செய்தல்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகள் முடிவுறுத்தப்பட்டவுடன் உடனடியாக அவை திறக்கப்படும்.

மேலதிக விபரங்களை பிரதி நிதியாளர் (வழங்கல்கள்) அவர்களிடமிருந்து 055-2226475 எனும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,**
**பதுளை.**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377

சுகாதார அமைச்சு

## இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

SPMC

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### சர்வதேச போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

### Bid Ref.: SPMC/01/2024 - 2024 மார்ச் 26 ஆம் திகதியன்று மூடப்படும்

### மருந்தாக்கல் மூலப் பொருட்களின் பெறுகை

1. 2024 மார்ச் 26 ஆம் திகதி மு.ப. 10 மணி வரையும் இலங்கை, இரத்மலானை, கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபன பெறுகைக் குழு தலைவரினால் மருந்தாக்கல் மூலப் பொருட்களின் வழங்கலுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.

| | உருப்படி | அளவு (கிலோகிராம்) | மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம் (இ.ருபாவில்) |
|---|---|---|---|
| 01. | Amoxicillin Trihydrate BP 2020 | 27,000.00 | 40,000.00 |
| 02. | Atorvastatin Calcium IP | 1,000.00 | 8,000.00 |
| 03. | Benzhexol Hydrochloride BP 2020 | 75.00 | 1,000.00 |
| 04. | Carbamazepine BP 2020 | 2,000.00 | 9,000.00 |
| 05. | Cetirizine Dihydrochloride BP 2020 | 300.00 | 1,500.00 |
| 06. | Ciprofloxacin Hydrocholoride USP 42 | 1,000.00 | 2,000.00 |
| 07. | Clarithromycin USP 42 | 2,500.00 | 25,000.00 |
| 08. | Dilltiazem Hydrochloride USP 42 | 2,500.00 | 12,000.00 |
| 09. | Domperidone Maleate BP 2020 | 300.00 | 1,500.00 |
| 10. | Enalapril Maleate USP 42 | 300.00 | 4,000.00 |
| 11. | Famotidine USP 42 | 2,000.00 | 7,000.00 |
| 12. | Gabapentine USP 42 | 2,500.00 | 6,000.00 |
| 13. | Gliclazide BP 2020 | 18,000.00 | 42,000.00 |
| 14. | Indometacin BP 2020 | 100.00 | 1,000.00 |
| 15. | Losartan Potassium BP 2020 | 10,000.00 | 28,000.00 |
| 16. | Mebebdazole USP 42 (Polymorph Type "A") | 700.00 | 2,500.00 |
| 17. | Metformin Hydrochloride BP 2020 | 27,000.00 | 9,000.00 |
| 18. | Phenoxymethylpenicillin Potassium BP 2020 | 1,500.00 | 4,500.00 |
| 19. | Prednisolone BP 2020 | 1,000.00 | 20,000.00 |
| 20. | Propranolol Hydrochloride BP 2020 | 800.00 | 2,000.00 |
| 21. | Salbutamol Sulphate BP 2020 | 350.00 | 3,500.00 |
| 22. | Spironolactone USP 42 | 1,000.00 | 14,000.00 |
| 23. | Sulfamehoxazole BP 2020 | 4,000.00 | 4,500.00 |
| 24. | Trifluoperazine Hydrochloride BP 2020 | 50.00 | 1,500.00 |
| 25. | Trimethoprim BP 2020 | 800.00 | 25,000.00 |
| 26. | Verapamil Hydrochloride BP 2020 | 400.00 | 3,000.00 |
| 27. | Ammonio Methacrylate Copolymer (Type B) USNF 42 | 3,000.00 | 12,000.00 |
| 28. | Colloidal Silicon Dioxide USP 42/USNF 37/BP 2020 | 7,000.00 | 1,500.00 |
| 29. | DC Lactose (Lactose Anhydrous USNF 37/USP 42) | 14,000.00 | 7,000.00 |
| 30. | Di Basic Calcium Phosphate (Dihydrate) USP 42/BP 2020 | 5,000.00 | 1,000.00 |
| 31 | Hydroxypropyl Cellulose-L Type USP 42/BP 2020/USNF 37 | 1,000.00 | 4,500.00 |
| 32 | Hydroxypropylmethyl Cellulose (Hypromellose) USP 42 | 1,000.00 | 1,000.00 |
| 33 | Lactose Monohydrate BP 2020/USNF 37 (100 Mesh) | 1,500.00 | 500.00 |
| 34 | Lactose Monohydrate BP 2020/USNF 37 (200 Mesh) | 80,000.00 | 14,000.00 |
| 35 | Magnesium Stearate BP 2020/(Tabletting Grade) | 2,000.00 | 500.00 |
| 36. | Maize Starch BP 2020 | 36,000.00 | 2,000.00 |
| 37. | Maleic Acid BP 2020 | 50.00 | 500.00 |
| 38. | Microcrystalline Cellulose USNF 37/BP 2020/USP 42 | 12,000.00 | 2,500.00 |
| 39. | Microcrystalline Cellulose USNF 37 (PH 200 LM) | 10,000.00 | 3,000.00 |
| 40. | Polyethylene Glycol USP 42/NF 37 | 300.00 | 500.00 |
| 41. | Povidone K-30 USP 42/BP 2020 | 2,000.00 | 2,500.00 |
| 42. | Purified Talc BP 2020 (Tabletting Grade) | 7,000.00 | 1,000.00 |
| 43. | Sodium Starch Glycolate BP 2020 (Type A) USNF 37 | 4,000.00 | 1,500.00 |
| 44. | Stearic Acid BP 2020 (Grade 50) | 500.00 | 500.00 |
| 45. | Titanium Dioxide BP 2020 | 700.00 | 500.00 |

2. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களில் நகல்பிரதி மற்றும் மூலப் பிரதியென இரு பிரதிகளில் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், பெறுகைக் குழு, அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், இல. 11,சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, கந்தவள தோட்டம், இரத்மலானை, இலங்கை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது இலங்கை, இரத்மலானை, கந்தவளதோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபன தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
3. பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து 2024.02.15 ஆம் திகதியிலிருந்து 2024.03.25 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மேலேயுள்ள முகவரியிலிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
   - இலங்கை, இரத்மலானை,கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபன திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்தல்.
   - SPMC இன் கணக்கிடல் பிரிவிற்கு ரொக்கப் பணத்தில் மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்துதல்.
4. விலைமனுக்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளினால் நிர்வகிக்கப்படுவதனால் விலைமனுதாரர் அவரது சார்பாக முகவரொருவரை, உபமுகவரொருவரை, பிரதிநிதியொருவரை, பெயர் குறிப்பிடப்படுபவரொருவரை அமர்த்துவாராயின், அப்படியான பொது ஒப்பந்தத்தின் போது பொது ஒப்பந்தசட்ட 10 ஆம் பிரிவிற்கமைவாக பதிவு செய்த பின்னர் அவ்வாறான செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழை இக்கேள்வி தொடர்பான எந்தவொரு கொடுக்கல் வாங்கல் வேளையிலும் அல்லது விலைமனுக்கோரலின் காலப்பகுதியின் எக்கட்டத்தின் எந்தவொரு நடவடிக்கையின் போதும் சமர்ப்பித்தல் வேண்டும்.
5. விலைமனுக்கள் அவைகளை மூடியபின்னர் இரத்மலானை SPMC இல் திறக்கப்படுவதுடன் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
6. விலைமனுக்கோரல் ஆவணங்களை SPMC இல் இலவசமாக பரீட்சிக்கலாம்.
7. மேலதிக தகவலை 2623298 என்ற தொலைபேசி எண்ணினூடாக SPMC திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளர் இடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

www.spmc.lanka.lk என்ற **எமது இணையதளத்தில் விலைமனுக்களின் விபரங்களை பார்வையிடலாம்.**

வெளிநாட்டு முதன்மையாளர்கள் எமது இணையதளத்திலிருந்து விலைமனுவை பதிவிறக்கம் செய்யலாம்.(உள்ளூர் முகவர்களினால் பிரதிநிதிப்படுத்தப்படாதவர்களின் முன்வைப்புகள் விலைமனுவின் கொடுப்பனவுக் கட்டணமாக அஜடொலருக்கு நிகரான பெறுமதி/பெறுமதிகளுக்கான வங்கி வரைவொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்)

**தலைவர்,
பெறுகைக் குழு,
அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்,
இல.: 11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை:
கந்தவள தோட்டம், இரத்மலானை, இலங்கை.**
**தொலைபேசி :** (00) 94-11-2635353/(00) 94-11- 2637574 / (00) 94-11-2636966/**(00) 94-11-2636967**
**மின்னஞ்சல் : chairman@spmc.gov.lk**
**இணையதளம் :** www.spmc.gov.lk
**தொலைநகல்: :** (00) 94-11- 2634771, 2626621

---

**வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிற்கு 'SUPPLY, INSTALLATION, CONFIGURATION AND MAINTENANCE OF A NEW CONFERENCE SYSTEM AND INTERIOR REDESIGNING TO MATCH THE ACOUSTIC PROPERTIES OF THE MAIN CONFERENCE HALL OF THE MINISTRY OF FOREIGN AFFAIRS - COLOMBO 01" சேவைகளுக்கான விலைமனுக்கோரல்**

இது குறித்த நிபந்தனைகளையும், பதிவிற்கான விண்ணப்பப்படிவத்தையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் www.mfa.gov.lk எனும் இணையதளத்தில் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். விலைமனுக்கோரல்கள் 2024.03.12 ஆந் திகதி அன்று பி.ப. 2.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மேலதிக விபரங்களுக்கு 011-7711109 (கொள்முதல் பிரிவு) அல்லது 011-2333449 (துணை இயக்குநர்) என்ற தொ.பே. இலக்கத்தைத் தொடர்பு கொள்ளவும்.

---

**எனது இலக்கம் DSM/LAND/ AQVSN/04/01/06**

## காணி சுவீகரிக்கும் சட்டத்தின் 07ம் பிரிவின் கீழான அறிவித்தல்

காணி சுவீகரிக்கும் சட்டத்தின் கீழ் அரசிற்கு சுவீகரிக்கப்பட்டுள்ள கீழ்க்காணும் காணிகளுக்கு அச் சட்டத்தின் 09ம் பிரிவின் கீழ் உரித்துரிமை மற்றும் நட்ட ஈட்டுப் பரிசீலனை 2024.03ம் மாதம் 01, 05, 07, 12, 14, 15, 19, 21, 22, 26, 28 மற்றும் 04ம் மாதம் 02, 04, 05, 09, 18, 19, 25, 26, 30 மற்றும் 05ம் மாதம் 07, 09ம் திகதிகளில் மஹஓய பிரதேச செயலகத்தில் என்னால் நடத்தப்படும் என்பதை பொது மக்கள் தெரிந்து கொள்வதற்காக இத்தால் தெரிவித்துக் கொள்கிறேன். இக்காணி விடயமாக தொடர்புகள் உள்ளவர்களால் அப் பரிசீலனைக்காக முன்வரல் வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 2024.02.01ம் திகதிய 2369/30 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியைப் பார்க்கவும்.

- பிரதேச செயலகப் பிரிவு - மஹஓய
- அடிப்படை வரைபட இலக்கம் - டொபோ பீ.பீ 24இன் மேலதிக 22
- துண்டு இலக்கம் - 892 (4883-6355)
- முழுக் காணி அளவு - 340.1146 ஹெக்டயர்
- காணி அமைந்துள்ள கிராமம்/ கிராமங்கள் - நில்ஒப, கண்டியாய, மெதவத்துயாய, பெல்லேபெத்த

**திலின விக்ரமரத்ன,
பிரதேச செயலாளர்,
மஹஓய.**
2024.02.22ம் திகதி
**மஹஓய பிரதேச செயலகத்தில்.**

---




---

# பதவி வெற்றிடங்கள்

கடற்றொழில் அமைச்சு

## கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்

## கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தின் பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு

கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களம்சார் பதவிகளில் காணப்படுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ள ஓய்வூதியம் உரித்தான பதவிகளில் சேவையாற்றும் அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

| பதவி | சம்பளக் குறியீடு |
|---|---|
| தரக்கட்டுப்பாட்டு அலுவலர் தரம் II | MN05 - 2016 |
| கடற்றொழில் அலுவலர் தரம் III | MN04 - 2016 |
| கடற் பொறியியல் உதவியாளர் தரம் III | MN03 - 2016 |
| தொழில்நுட்ப அலுவலர்(சிவில்) தரம் III | MN03 - 2016 |
| கனிஷ்ட வானொலி அலுவலர் தரம் III | MT01 - 2016 |

விண்ணப்பம் கோரலுக்கான அறிவித்தல் 2024 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் நாயகம்
கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம்
மாளிகாவத்தை
கொழும்பு 10.**

---

இலங்கை மருத்துவ சபை

# பதவி வெற்றிடங்கள்

## திருத்த அறிவிப்பு

2024 பெப்ரவரி 11 ஆம் திகதியன்று வாரமஞ்சரியில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கு பின்வரும் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. **வெளிநாட்டு பட்டப்படிப்புகள் அலகின் தலைவர்**
2. **இணைந்த சுகாதார அலகின் தலைவர்**
3. **தர அங்கீகார அலகின் தலைவர்**

மேலேயுள்ள மூன்று (3) பதவி வெற்றிடங்களுக்கு ஆரம்ப விளம்பரத்தில் கூறப்பட்ட முதலாம் தகைமையானது பின்வரும் தகைமையினால் பதிலீடு செய்யப்படல் வேண்டும்.

இலங்கை மருத்துவ சபையுடன் மருத்துவ/பற்சிகிச்சை மருத்துவராக பதிவு செய்திருத்தல்.

மற்றும்

சபையொன்றினால் சான்றழிக்கப்பட்ட விஷேடத்துநர் (A board certified specialist)

அல்லது

மருத்துவ முதுமாணிப் பட்டம் அல்லது நிகரான தகைமையைக் கொண்டிருத்தல்.

மேலேயுள்ள மூன்று பதவி நிலைகளுக்குமான ஏனைய அனைத்து தகைமைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

**பொதுவான நிபந்தனைகள்:**
ஆரம்ப விளம்பரத்திலுள்ள ஏனைய அனைத்து நான்கு பதவி வெற்றிடங்களுக்கான வயதெல்லையானது பின்வருமாறு மாற்றப்பட்டுள்ளது.

வயது: பிரயோகப்படுத்தக்கூடிய அரசாங்க சுற்றறிக்கைகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைவானது.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியானது 2024 மார்ச் 12 ஆம் திகதியன்று வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப விளம்பரத்தில் கூறப்பட்ட ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

**பதிவாளர்,
இலங்கை மருத்துவ சபை,
31, நொரிஸ் கெனல் வீதி,
கொழும்பு-10.
registrar@slmc.gov.lk
2024 பெப்ரவரி 18.**

---

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

**2024.01.28 ஆம் திகதி வாரமஞ்சரி பத்திரிகையில் வெளியான வேலைவாய்ப்பு விளம்பரத்தில் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் காலஎல்லையை நீடித்தல்**

வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **மேலதிக பணிப்பாளர் நாயகம் (நிதி மற்றும் சொத்து முகாமைத்துவம்) HM 2-2**
2. **பிரதிப் பணிப்பாளர் நாயகம் (மனித வள முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம்) HM 2-1**
3. **பிரதிப் பணிப்பாளர் நாயகம் (கூட்டுறவு நிதி) HM 2-1**
4. **பிரதிப் பணிப்பாளர் நாயகம் (செயல்பாட்டு நிதி) HM 2-1**

இப்பதவிகள் தொடர்பான ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தகுதிகள் மற்றும் விண்ணப்பங்கள் www.rda.gov.lk மற்றும் www.mohsl.gov.lk இணையத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட வேண்டும்.


முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், கல்வி, தொழில்முறை தகுதிகள் மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் நகல்களுடன் விண்ணப்பம் இடப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியினைத் தெளிவாக குறிப்பிட்டு **2024.02.26** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியவாறு மேலதிக பணிப்பாளர் நாயகம் (மனித வளங்கள்) வீதி அபிவிருத்தி அதிகாரசபை, "மக நெகும மஹ மெதுர", 4ஆம் மாடி, இல.216, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, கொஸ்வத்தை, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும்.

**மேலதிக தகவல்களுக்கு :** **மேலதிக பணிப்பாளர் நாயகம் (மனித வளங்கள்) அலுவலகம்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
011 2046393 / 011 2046200.**

**பணிப்பாளர் நாயகம்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE

---



# விலைக்கோரல் அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## கழிவறைகளை மறுசீரமைத்தலும் புதுப்பித்தலும்

| | |
|---|---|
| விலைக்கோரல் இலக்கம் | FMD/ENG/RETRO/03 |
| விலைக்கோரல் விபரம் | மத்திய வங்கியின் தலைமை அலுவலகக் கட்டடங்களின் நான்காவது மற்றும் ஐந்தாவது கோபுரத்திலுள்ள கழிவறைகளை மறுசீரமைத்தலும் புதுப்பித்தலும் |
| விலைக்குறிப்பீட்டை மூடுதலும் திறத்தலும் | முடிவுத் திகதி: 2024 மார்ச் 14 முடிவு நேரம்: 1430மணி. அமைவிடம் : தலைமை அலுவலகக் கட்டடம், இலங்கை மத்திய வங்கி, இல 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01. |
| ஆர்வத்தை வெளிப்படுத்தும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் | முடிவுத் திகதி: 2024 பெப்ருவரி 22 முடிவு நேரம்: 1000 மணி. அமைவிடம் : தலைமை அலுவலகக் கட்டடம், இலங்கை மத்திய வங்கி, இல 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01. |

மேலதிகத் தகவல்களுக்கு தயவுசெய்து
https://www.cbsl.gov.lk/en/tenders
என்ற இணையத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது 0112477476 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக பராமரித்தல் மற்றும் கருத்திட்டப் பொறியியலாளரைத் தொடர்புகொள்ளவும்.

பணிப்பாளர், வசதிகள் முகாமைத்துவத் திணைக்களம்

---

SPICE TRAIL

# வேலை வாய்ப்பு

"The Spice Trail" என்பது Arugam Bay மற்றும் Ahangama வில் உள்ள முன்னணி ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களின் விருது பெற்ற தொகுப்பாகும். இந்நிறுவனம் ஊழியர்களுக்கு முற்போக்கான மற்றும் நட்பான பணி சூழலை வழங்குகிறது.

இந்நிறுவனத்திற்கு பின்வரும் வேலைகளுக்கு அனுபவம் வாய்ந்த, ஆர்வமுள்ள மற்றும் சுயமாக இயங்கும் நபர்களை நாங்கள் தேடுகிறோம்.

- **Front Office Supervisor/ Assistant Manager**
- **Maintenance Supervisor**
- **F & B Supervisor**
- **Demi Chefs/ Sous Chef**

**தகுதிகள் மற்றும் அனுபவம்**

- துறை தொடர்பான நல்ல தொழில்நுட்ப அறிவு.
- ஆங்கிலம் மற்றும் கணினி தொடர்பான போதிய அளவான அறிவு.
- குறைந்தபட்சம் இரண்டு வருட அனுபவம் உள்ளவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
- சிறந்த தொடர்பாடல் திறன் மற்றும் நேர முகாமைத்துவத் திறன்கள்.
- நேர்மறையான அணுகுமுறை, மிகவும் உணர்திறன் மற்றும் ஒழுக்கம்.
- 35 வயதிற்குட்பட்ட ஆண்.

பொருந்தக்கூடிய பணியாளருக்கான பிற நன்மைகள் உட்பட கவர்ச்சிகரமான ஊதிய தொகுப்பு
உங்கள் விண்ணப்பத்தை பின்வரும் மின்னஞ்சல்
முகவரிக்கு அனுப்பவும்
**hr@thespicetrails.com**
அல்லது அழைக்கவும்
+94 762 625 227
விண்ணப்பித்த வேலை வாய்ப்பை குறிப்பிடவும்

---

**எமது நாட்டின் சுபீட்சமான வளர்ச்சிக்கான பணியை மேற்கொண்டுள்ள, பரந்த கிளை வலையமைப்பு ஒன்றைக் கொண்ட இலங்கையில் உள்ள அபிவிருத்தி வங்கி ஒன்றுடன் எமது வாடிக்கையாளர்கள் இணைந்துள்ளனர். வருமானப் பகிர்வு மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதில் ஏற்றத்தாழ்வுகளைக் குறைப்பதற்கு கிராமியப் பகுதியில் தொழில்முனைவை வளர்ப்பதன் மூலம் குறிப்பாக நாட்டில் பொருளாதார செயற்பாடுகளை ஊக்குவிப்பது வங்கியின் திட்டமாகும். வங்கியின் வர்த்தகத்தை வழிநடத்துவதற்கான குழுவை கட்டியெழுப்பும் நோக்கம் சார்ந்து இயங்கும், தொழில் முறையாளர் ஒருவர் தேடப்படுகின்றார்.**

## பொது முகாமையாளர்/ பிரதான நிறைவேற்று அதிகாரி

**முக்கிய தேவைகள்**

- பின்வருவனவற்றில் ஒரு தகுதியை கொண்டிருக்க வேண்டும்.
  அ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்ற பட்டத்துடன் துறைசார் பட்டப் பின்படிப்பு
  **அல்லது**
  ஆ) வங்கியியல் அல்லது வேறு தொடர்புடைய துறைசார் தொழிற்றகைமைகள்.
- வங்கித் துறையில் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் பத்து வருட அனுபவம்.
- அபிவிருத்தி வங்கியியல், வங்கிச் செயற்பாடுகள், கடன் இடர் முகாமைத்துவம், நிதி மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற வங்கியியல் அம்சங்களில் மிகுந்த ஆற்றல் மிக்கவராக இருக்க வேண்டும்.
- சிறந்த ஆளணி முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவ பண்புகள் உள்ளவராக இருக்க வேண்டும்.
- **வயது** - 56 வருடங்களுக்கு குறைவாக இருக்க வேண்டும்.

**சம்பளம்/ கொடுப்பனவு**

தெரிவு செய்யப்படும் அபேட்சகருக்கு கவர்ச்சிகரமான சம்பளம் மற்றும் வங்கித் தொழில்துறையில் நிலவும் தரநிர்ணயங்களுக்கு ஈடான ஏனைய அனுகூலங்கள் அளிக்கப்படும்.

**விண்ணப்பிக்கும் முறை**

மேலே குறிப்பிட்டிருக்கும் தகைமைகளை கொண்டிராத அல்லது பிழையான தகவல்களை கொண்டிருக்கும் எந்த ஒரு விண்ணப்பப் படிவமும் ஆட்சேர்ப்பு படிமுறைகளில் எக்கட்டத்திலும் எவ்வித முன்னறிவித்தல்களும் இன்றி நிராகரிக்கப்படும். குறும்பட்டியலிடப்பட்ட விண்ணப்பதாரிகளை மாத்திரம் அழைப்பதற்கு அல்லது ஒத்திவைப்பதற்கு அல்லது ஆட்சேர்ப்பை இரத்துச் செய்யும் அதிகாரம் தொழில் வழங்குநருக்கு உண்டு.

சிபாரிசு செய்யக்கூடிய உறவினரல்லாத இருவரின் தொடர்புகொள்ளக்கூடிய விபரங்களுடன் PDF வடிவத்தில் பூர்த்தி செய்யப்பட்ட உங்களது சுயவிபரக் கோவையை, இந்த விளம்பரத்தின் 10 நாட்களுக்குள் Subject பகுதியில் MSL Reference No. 7945 என குறிப்பிட்டு **mslr1@sltnet.lk** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பவும்.

MSL Management Systems (Pvt) Ltd.
**இல.: 08 டிக்கேல் வீதி, கொழும்பு 08,**
**mslr1@sltnet.lk**
**0112015900**

---

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை

# பதவி வெற்றிடங்கள்

கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களுக்கு இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.

### 01. சிகிச்சை உளவியலாளர் - HM 1-1 (01 பதவி வெற்றிடம்) (CLINICAL PSYCHOLOGIST)

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் உளவியல் தொடர்பான இளமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்

**அத்துடன்**

சிகிச்சை உளவியல் தொடர்பான முதுமாணிப் பட்டம் (Masters) அல்லது அதற்குச் சமமான பட்டமொன்றைப் பெற்றிருத்தல் மற்றும் இலங்கை மருத்துவ பேரவையில் பதிவைப் பெற்றிருத்தல்

**மற்றும்**

கூட்டுத்தாபனம் நியதிச்சட்ட சபை / ஏனைய அரசாங்க நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் "முகாமைத்துவ மட்டத்தில்" ஆகக்குறைந்தது 12 வருட அனுபவம் சகிதம் சிகிச்சை உளவியலாளராக சிகிச்சை பின்புலத்தில் இரண்டு (02) வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்: (பின்வரும் 1 அல்லது 2 )**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவைப்படுத்தப்படும் தகைமைகளை கொண்டிருத்தல்.
2. முகாமைத்துவ வகுதியில் (MM) தரம் 1 பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகர சேவையை பூர்த்தி செய்திருத்தல் அத்துடன் சிகிச்சை உளவியல் தொடர்பான முதுமாணிப் பட்டம் (Masters) பெற்றிருத்தல்.

### 02. பணிப்பாளர் (நிதி) - HM 1-1 (01 பதவி வெற்றிடம்) DIRECTOR (FINANCE)

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் நிதி / கணக்கியல் / வர்த்தகம் / முகாமைத்துவம் ஆகியவற்றில் இளமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்

   **அத்துடன்**

   உரித்தான துறையில் நிதி / கணக்கியல் / வர்த்தகம் / முகாமைத்துவம் ஆகியவற்றில் முதுமாணிப் பட்டமொன்று அல்லது பதவியின் பாட பரப்பிற்கு இயைபாக அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவன இணை அங்கத்துவம்.

   **மற்றும்**

   கூட்டுத்தாபனம் நியதிச்சட்ட சபை அரசாங்க நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது 12 வருட அனுபவம்.
2. பதவிக்குரித்தான துறையொன்றில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் பட்டயம் பெற்ற நிறுவனமொன்றின் முழுமையான அங்கத்துவம்.

   **மற்றும்**

   கூட்டுத்தாபனம் நியதிச்சட்ட சபை அரசாங்க நிறுவனம் அல்லது புகழ்வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது 12 வருட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்: (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்குத் தேவைப்படுத்தப்படும் தகைமைகளை கொண்டிருத்தல்.
2. பதவிக்குரித்தான பாடப் பரப்பில் முகாமையாளர் வகுதியில் (MM) தரம் 1 பதவியில் ஆகக்குறைந்தது ஐந்து (5) வருட திருப்திகர சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

மேற்கூறிய 1 மற்றும் 2ஆம் பதவிகளுக்கு இயைபான ஏனைய விடயங்கள்:

- **சம்பள அளவு:**
  ஊழியர் வகுதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத் திட்டம்:
  மு.சே.தி. சுற்றுநிருபம் - 2/2016(1) HM 1-1 ரூ. [80,295 – 15x2270– 114,345.00]
- **வயது:**
  35 வயதிற்கு குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி அபேட்சகர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.
- **ஆட்சேர்ப்பு நடைமுறை** - அதிகாரசபையினால் நியமிக்கப்படும் நியமனக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வொன்றின் மூலம் ஆட்சேர்க்கப்படுவர்.
- **அனுகூலங்கள்** - அடிப்படைச் சம்பளத்திற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி, வாகனம் / போக்குவரத்துக் கொடுப்பனவு, எரிபொருள் கொடுப்பனவு மற்றும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் உரித்தாகும். மேலும் 12% ஊ.சே. நிதியத்திற்கும் மற்றும் 3% ஊ.ந.பொ. நிதியத்திற்கும் அதிகார சபையினால் வழங்கப்படும்.

### 3. மொழிபெயர்ப்பாளர் (ஆங்கிலம்) - MA-4 (01 பதவி வெற்றிடம்) TRANSLATOR (ENGLISH)

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஆங்கில பாடத்தை உள்ளடக்கிய இளமாணிப் பட்டம் சகிதம் க.பொ.த (சா∴த) பரீட்சையில் சிங்களத்தில் திறமைச் சித்தியுடன் ஆங்கில மொழியிலிருந்து சிங்கள மொழிக்கும் சிங்கள மொழியிலிருந்து ஆங்கில மொழிக்கும் மொழிபெயர்ப்பு செய்வதில் ஒரு வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

மொழிபெயர்ப்பு தொடர்பான டிப்ளோமாவொன்றைப் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகும்.

### 4. மொழிபெயர்ப்பாளர் (தமிழ்) - MA-4 (01 பதவி வெற்றிடம்) TRANSLATOR (TAMIL)

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஆங்கில பாடத்தை உள்ளடக்கிய இளமாணிப் பட்டம் சகிதம் க.பொ.த (சா/த) பரீட்சையில் சிங்களத்தில் திறமைச் சித்தியுடன் தமிழ் மொழியிலிருந்து சிங்கள மொழிக்கும் சிங்கள மொழியிலிருந்து தமிழ் மொழிக்கும் மொழிபெயர்ப்பு செய்வதில் ஒரு வருட கால அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

மொழிபெயர்ப்பு தொடர்பான டிப்ளோமாவொன்றைப் பெற்றிருத்தல் மேலதிக தகைமையாகும்.

மேற்கூறிய 3 மற்றும் 4ஆம் பதவிகளுக்கு இயைபான ஏனைய விடயங்கள்:

- **சம்பள அளவு:**
  ஊழியர் வகுதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத் திட்டம்:
  மு.சே.தி. சுற்றுநிருபம் - 2/2016 –MA 4 – ரூபா [37,970 – 10x755 – 15x930 – 5x1,135 – 65,145.00]
- **வயது:**
  23 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
- **ஆட்சேர்ப்பு நடைமுறை** - அதிகாரசபையினால் நியமிக்கப்படும் நியமனக் குழுவினால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வொன்றின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
- **அனுகூலங்கள்** - அடிப்படைச் சம்பளத்திற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி வழங்கப்படும். 12% ஊ.சே.நிதியத்திற்கும் மற்றும் 3% ஊ.ந.பொ. நிதியத்திற்கும் அதிகார சபையினால் வழங்கப்படும்.

### 5. நூலகர் MA-3 (01 பதவி வெற்றிடம்) LIBRARIAN

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நூலகவியலில் இளமாணிப் பட்டத்தைப் பெற்றிருத்தல்.

- **சம்பள அளவு:**
  ஊழியர் வகுதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத் திட்டம்:
  மு.சே.தி. சுற்றுநிருபம் - 2/2016 –MA 3 – ரூபா [32,200 – 10x445 – 11x660 – 10x730 – 5x750 – 54,960.00]
- **வயது:**
  23 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.
- **ஆட்சேர்ப்பு நடைமுறை** - அதிகாரசபையினால் நியமிக்கப்படும் நியமனக் குழுவினால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வொன்றின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
- **அனுகூலங்கள்** - அடிப்படைச் சம்பளத்திற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி வழங்கப்படும். 12% ஊ.சே.நிதியத்திற்கும் மற்றும் 3% ஊ.ந.பொ. நிதியத்திற்கும் அதிகார சபையினால் வழங்கப்படும்.

### 6. தகவல் தொழில்நுட்ப உதவியாளர் MA-2-1 (01 பதவி வெற்றிடம்) INFORMATION TECHNOLOGY ASSISTANT

**தகைமைகள்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தொழில்நுட்பம் மற்றும் தொழிற்பயிற்சி நிறுவனத்தினால் வழங்கப்படும் தேசிய தொழிற்றிறனில் (NVQ) 5ஆம் மட்டத்திற்குக் குறையாத தேர்ச்சிச் சான்றிதழைப் (தகவல் தொழில்நுட்பம்) பெற்றிருத்தல் மற்றும் ஒரு சேவை அனுபவத்தைப் பெற்றிருத்தல்

- **சம்பள அளவு:**
  ஊழியர் வகுதி மற்றும் மாதாந்த சம்பள அளவுத் திட்டம்:
  மு.சே.தி. சுற்றுநிருபம் - 2/2016 –MA -2-1 – ரூபா [ 30,310 -10x300 -7x350 - 4x 495- 20x 660 - 50,940.00]
- **வயது:**
  18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.
- **ஆட்சேர்ப்பு நடைமுறை** - அதிகாரசபையினால் நியமிக்கப்படும் நியமனக் குழுவினால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும் / அல்லது கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வொன்றின் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்படும்.
- **அனுகூலங்கள்** - அடிப்படைச் சம்பளத்திற்குப் புறம்பாக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி வழங்கப்படும். 12% ஊ.சே.நிதியத்திற்கும் மற்றும் 3% ஊ.ந.பொ. நிதியத்திற்கும் அதிகார சபையினால் வழங்கப்படும்.

**பொது நிபந்தனைகள்**

சகல அபேட்சகர்களும் இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் என்பதுடன் சிறந்த நன்னடத்தையுடையவராகவும் நாட்டின் எப்பாகத்திலும் தமது கடமைக்குரித்தான சேவைகளைச் செய்வதற்குத் தேவையான உடல் மற்றும் உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இந்த பதவிகளுக்கான மாதிரி விண்ணப்பப் படிவங்களை தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் www.childprotection.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம் என்பதுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2024 மார்ச் மாதம் 11ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

சகல விண்ணப்பப் படிவங்களுடனும் பிறப்பத்தாட்சிப் பத்திரம், தேசிய அடையாள அட்டை அல்லது வெளிநாட்டுக் கடவுச்சீட்டு மற்றும் கல்வி, தொழில்சார் மற்றும் அனுபவச் சான்றிதழ்களின் சான்றுபடுத்தப்பட்ட பிரதிகள் மற்றும் உறவினரல்லாத இரண்டு சான்றுபகர்வோர்களின் பெயர் மற்றும் முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம் சகிதம் அனுப்புதல் வேண்டும். யாராவது விண்ணப்பதாரரொருவர் ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்காக விண்ணப்பிப்பதானால் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறான வகையில் விண்ணப்பித்தல் வேண்டும்.

கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் அரச துறை / கூட்டுத்தாபனம் / நியதிகள் சபைகளில் தற்போது பணியாற்றுவோர் தமது விண்ணப்பங்களை தமது நிறுவனத் தலைமையினூடாகவே அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணக்கமில்லாத முழுமையற்ற மற்றும் தெளிவற்ற விண்ணப்பங்களும், மேற்கூறப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்திராத மற்றும் விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் எவ்வித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். இந்தப் பதவியைப் பெற்றுக்கொள்வதற்கு எவ்வகையிலாவது ஆதரவைப் பெறுவது தகுதியீனமாகக் கருதப்படும். குறும் பட்டியலிடப்பட்ட அபேட்சகர்கள் மட்டுமே நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்படுவர். இவ் ஆட்சேர்ப்பு தொடர்பில் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை பணிப்பாளர் சபையின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**தவிசாளர்,**
**தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை,**
**இல. 330, தலவத்துகொட வீதி,**
**மாதிவல, ஸ்ரீ ஜயவர்தனபுர.**

**தொலைபேசி: 0112778911- 14**
**இணையதளம்: www.childprotection.gov.lk**

---

To Buy Your Dream Vehicle within your Budget
If it is a vehicle you want,
YOU NAME IT,
WE HAVE IT
Sunday Observer
aDz it's what you want
Auto Focus

THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!
Sunday Observer
aDz it's what you want

- Auto Focus
aDz Magazine Issued with Sunday Observer
Hot Line 011 2 429 369
011 2 429 368
E-mail adzsuo@gmail.com




## மேஷம்

**(அஷ்வினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்)**

நினைத்த காரியங்களில் இருந்த தடங்கல்கள் அகலும். பூமி, வீடு தொடர்பான பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும். சகோதரர்களுடன் இருந்த மனவருத்தங்கள் நீங்கும். தாயின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் திடீர் சிக்கல் ஏற்பட்டு சரியாகும். வியாபார பொறுப்புகளை மற்றவர்களிடம் ஒப்படைக்கும் போது கவனம் தேவை. உத்தியோகத்தர்கள் அலுவலக பொறுப்புகளை கவனமாக செய்வது நல்லது. இயந்திரங்களில் பணி புரிபவர்கள், ஆயுதங்களை கையாள்பவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். குடும்பத்தினரது பேச்சுக்கு எதிர்ப் பேச்சு பேசுவதை தவிர்ப்பது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே வீண் வாக்குவாதங்கள் ஏற்படலாம். பிள்ளைகளிடம் அன்பாகப் பழகுவது நல்லது. பெண்களுக்கு கோபம், படபடப்பு குறையும். மாணவர்களுக்கும் உயர்கல்வி படிப்பவர்களுக்கு திடீர் பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும்.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம் , ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம் )**

கோபமான பேச்சு, டென்ஷன் குறையும். சகோதரர் வழியில் நன்மை உண்டாகும். மனதில் துணிச்சல் அதிகரிக்கும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் பணியாளர்கள் மூலம் நன்மை கிடைக்கப் பெறுவர். லாபம் கூடும். எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பரபரப்பு நீங்கி அமைதியாக பணிகளை கவனிப்பர். குடும்பத்தில் இருந்த பிரச்சினைகள் நீங்கும். கணவன் மனைவிக்கிடையில் இருந்த சங்கடங்கள் தீரும். பிள்ளைகள் கல்வி பற்றிய கவலை நீங்கும். வீட்டுக்கு தேவையான பொருட்களை வாங்குவீர்கள். பெண்கள் எடுத்த காரியத்தை எப்படியும் முடித்து விட வேண்டும் என்பதில் மன உறுதியுடன் இருப்பர். கொடுக்கல், வாங்கல் விவகாரங்களில் கூடுதல் கவனம் தேவை. மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண எதிர்பார்த்த உதவி கிடைக்கும். மனக்குழப்பம் நீங்கி படிப்பில் கவனம் செலுத்துவர்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எடுத்த காரியம் உடனே முடியவில்லையே என்ற டென்ஷன் இருக்கும். எதிர்பாராத வீண் செலவு ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்தில் எச்சரிக்கையாக இருப்பது அவசியம். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல், வாடிக்கையாளர்களுடன் வாக்குவாதம் போன்றவை உண்டாகலாம். பழைய பாக்கி வசூலாகும். உத்தியோகத்தில் மேலதிகாரிகளின் கெடுபிடிகளை சந்திக்க வேண்டி இருக்கும். குடும்பத்தில் திடீர் பிரச்சினைகள் தலைதூக்கலாம். கணவன், மனைவிக்கிடையே வாக்குவாதம், பிள்ளைகளின் செயல்களால் மனவருத்தங்கள் ஏற்படலாம். வீட்டில் உள்ள பொருட்களை கவனமாக பாதுகாப்பது நல்லது. பெண்களுக்கு எப்படிப்பட்ட சிக்கலையும் சமாளிக்கும் மனப்பக்குவம் உண்டாகும். எந்த சூழ்நிலையிலும் வாக்குவாதத்தில் ஈடுபடாமல் தவிர்ப்பது நல்லது. மாணவர்களுக்கு எப்படி பாடங்களை படித்து முடிப்பது என்ற டென்ஷன் உண்டாகும்.

## கடகம்

**(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

திடீர் மனவருத்தம் ஏற்பட்டு நீங்கும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. பணத்தேவை ஏற்பட்டாலும் அதை திறமையாக சமாளித்து விடுவீர்கள். தொழில் வியாபாரத்தில் நெருக்கடியான சூழ்நிலை ஏற்பட்டாலும் அதைச் சமாளித்து முன்னேறுவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலக பணிகளில் அலட்சியம் காட்டாமல் செயல்படுவது நல்லது. குடும்பத்தில் சுமுகமான சூழ்நிலை காணப்பட்டாலும் குடும்ப உறுப்பினர்களுக்காக மருத்துவ செலவு செய்ய வேண்டி இருக்கலாம். கணவன், மனைவி விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பிள்ளைகளை அவர்களின் போக்கிலேயே விட்டுப் பிடிப்பது நன்மை தரும். பெண்கள் மற்றவர்களால் ஏற்படும் தொல்லைகளில் சிக்காமல் இருக்க கவனமாக செயல்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மெத்தனப் போக்கு காணப்படும். மிகவும் கவனமாக படிப்பது கல்வியில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1 ஆம் பாதம்)**

வீண்செலவு ஏற்பட்டாலும் அதை சமாளிக்கும் விதத்தில் வரவும் இருக்கும். கனவுகளால் தொல்லை ஏற்படலாம். சரியான நேரத்தில் தூங்க முடியாத சூழ்நிலை உருவாகும். உஷ்ணம் சம்பந்தமான நோய் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் பணத்தேவை ஏற்படலாம். கடன் விவகாரங்களில் கவனமாக செயல்படுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் ஓய்வு இல்லாமல் பணியாற்ற வேண்டி இருக்கும். இயந்திரம், நெருப்பு, ஆயுதத்தை பயன்படுத்துவோர் மிகவும் கவனமாக இருப்பது அவசியம். குடும்பத்தில் தேவையற்ற பிரச்சினைகள் உருவாகலாம். கணவன், மனைவிக்கிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டாலும் சரியாகிவிடும். பிள்ளைகளுக்காக கூடுதல் செலவு செய்ய வேண்டி இருக்கும். பெண்களுக்கு மற்றவர்களின் வேலைகளுக்காக அலைய நேரிடும். மாணவர்கள் கல்வியை தவிர மற்றவைகளில் கவனத்தை சிதற விடாமல் படிப்பில் கவனம் செலுத்துவது அவசியம்.

## கன்னி

**(உத்தரம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், அத்தம், சித்திரை 1ஆம் 2ஆம் பாதம்)**

எல்லாவற்றிலும் சாதகமான பலனே கிடைக்கும். பொருளாதார முன்னேற்றம் பணவரவில் திருப்தி ஆகியவை இருக்கும். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் இருந்த தொய்வு நீங்கி வேகம் பிடிக்கும். எதிர்பார்த்த ஆர்டர் கிடைக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் செயல்திறன் அதிகரிக்கும். மேலதிகாரிகளின் பாராட்டும், பதவி உயர்வும் கிடைக்கும். புதிய வேலை தேடுபவர்களுக்கு சாதகமான பலன் கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன் மனைவிக்கிடையே ஒற்றுமை உண்டாகும். பிள்ளைகள் மூலம் பெருமை ஏற்படும். உறவினர்கள் வருகையும் அவர்களால் நன்மையும் உண்டாகும். திருமணம் தொடர்பான பேச்சுகள் சாதகமாக முடியும். பெண்கள் எடுத்த காரியத்தை திறமையாக செய்து முடிப்பர். மாணவர்களுக்கு கல்வி பற்றிய கவலை நீங்கும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

பிரச்சினையை சமாளிக்கும் திறமை அதிகரிக்கும். வெளியூர் அல்லது வெளிநாட்டு பயணம் செல்ல நேரலாம். உடல் ஆரோக்கியம் உண்டாகும். தொழில் வியாபாரத்தில் வீண் அலைச்சல் ஆர்டர் கிடைப்பதில் தாமதம் போன்றவை ஏற்பட்டாலும், தொழில் வியாபாரம் சீராக நடக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வேலைப்பளு, கூடுதல் பொறுப்புகள் உண்டாகலாம். குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வதன் மூலம் எல்லா பிரச்சினைகளும் சரியாகும். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனஸ்தாபம் நீங்கும். பிள்ளைகளின் எதிர்கால நலனுக்காக முக்கிய பணிகளை மேற்கொள்வீர்கள். உறவினர்கள், அக்கம் பக்கத்தினரிடம் வீண் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு எடுத்த காரியம் தடைபட்டு பின்னர் நல்லபடியாக நடந்து முடியும். மாணவர்களுக்கு கல்வியில் சீரான போக்கு காணப்படும். கூடுதல் மதிப்பெண் பெற மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றிபெறும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

கலை இலக்கியத்தின் மீது ஆர்வம் அதிகரிக்கும். பூர்வீக சொத்துக்களில் இருந்த பிரச்சினைகளில் சாதகமான நிலை காணப்படும். தானதர்மம் செய்யவும், ஆன்மிகப் பணிகளில் ஈடுபடவும் தோன்றும். நீண்ட தூர பயணங்கள் செல்ல நேரலாம். தொழில் வியாபாரம் தொடர்பான பணிகளில் நிதானமான போக்குக் காணப்படும். வியாபார போட்டிகள் இருந்தாலும் அதனால் பாதிப்பு இருக்காது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு எதிர்பாராத இடமாற்றம், சிலருக்கு உத்தியோக மாற்றம் உண்டாகலாம். குடும்பத்தில் எதிர்பாராத செலவு உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே திடீர் மனவருத்தம் ஏற்படலாம். பிள்ளைகளின் செயல்பாடுகள் மனதுக்கு திருப்தி அளிக்கும். பெண்களுக்கு எதிர்பார்த்த உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்படும். பயணங்களால் அலைச்சல் உண்டாகும். மனதில் ஒருவித கவலை இருக்கும். மாணவர்களுக்கு தடைகளை தாண்டி கல்வியை கற்க செய்யும் முயற்சி வெற்றி பெறும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் பாதம்)**

எடுத்த காரியத்தை செய்து முடிப்பதில் தடங்கல் ஏற்பட்டு நீங்கும். தேவையற்ற மனக்கவலை உண்டாகும். வழக்கு விவகாரங்களில் தாமதமான போக்கு காணப்படும். நிர்ப்பந்தமாக வெளியூர்ப் பயணம் செல்ல நேரலாம். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத சிக்கல் ஏற்பட்டு பின்னர் சரியாகும். சரக்குகளை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும்போது கவனம் தேவை. உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் கவனமாகப் பேசுவது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களால் வீண் பழி ஏற்பட வாய்ப்பு உண்டு. கணவன், மனைவிக்கிடையே சிறு சிறு மனஸ்தாபங்கள் வரலாம். பிள்ளைகளின் செயல்பாடுகளில் கவனம் தேவை. ஆயுதங்களை பயன்படுத்தும்போது கவனம் தேவை. பெண்களுக்கு தேவையற்ற சில காரியங்களை செய்ய வேண்டி இருந்தாலும் அதன் மூலம் நன்மை உண்டாகும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் காண வேண்டும் என்ற ஆர்வம் உண்டாகும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

பணவரத்து சீராக இருக்கும். வேலை பளு காரணமாக நேரம் தவறி உணவு உண்ண வேண்டி இருக்கும். வயிறு தொடர்பான கோளாறுகள் ஏற்பட்டு நீங்கும். கை, கால் வலி, உடல் சோர்வு உண்டாகலாம். அக்கம்பக்கத்தினரிடம் சில்லறை சண்டைகள் ஏற்பட்டு சரியாகும். தொழில் வியாபாரத்தில் அனுசரித்து செல்வது நல்லது. புதிய வாடிக்கையாளர்கள் கிடைப்பர். உத்தியோகத்தில் இருப்பவர்கள் சக ஊழியர்கள், மேலதிகாரிகளுடன் இணக்கமாக செல்வது நன்மை தரும். இயந்திரங்கள், ஆயுதங்கள், நெருப்பு ஆகியவற்றை கையாளும் தொழிலாளர்கள் கவனமாக இருப்பது நல்லது. கணவன், மனைவி விட்டுக் கொடுத்து செல்வது நல்லது. பெண்களுக்கு வீண் அலைச்சல், வேலைப்பளு அதிகரிக்கும். மாணவர்கள் அடுத்தவரை பற்றிய விமர்சனங்கள், கிண்டல், கேலிப் பேச்சு போன்றவற்றை தவிர்த்து கல்வியில் கவனம் செலுத்துவது நல்லது.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2 ஆம் 3 ஆம் பாதம்)**

காரியங்களில் இருந்த தடை நீங்கி நன்றாக நடந்து முடியும். கொடுக்கல், வாங்கலில் இருந்த சிக்கல் தீரும். எதிர்த்து செயல்பட்டவர்கள் விலகி சென்று விடுவார்கள். நோய் நீங்கி உடல் ஆரோக்கியம் உண்டாகும். பொருளாதார நிலை உயரும். தொழில் வியாபாரத்தில் இருந்த சிக்கல்கள் தீரும். போட்டிகள் குறையும். எதிர்பார்த்த ஆர்டர் வரும். கடன் பிரச்சினை கட்டுக்குள் இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் உழைப்புக்கு ஏற்ற நல்ல பலன் கிடைக்கும். மேலதிகாரிகள் ஒத்துழைப்பும் இருக்கும். வீட்டில் சுப காரியம் நடக்கும். திருமண காரியங்களில் சாதகமான போக்கு காணப்படும். பிள்ளைகளால் பெருமை உண்டாகும். பெண்கள் எந்த ஒரு சின்ன வேலைக்காகவும் மிகவும் பாடுபட வேண்டி இருக்கும். மாணவர்கள் வகுப்பில் கவனத்தை சிதற விடாமல் பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும்.

## மீனம்

**(பூரட்டாதி 4 ஆம் பாதம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

தேவையற்ற மனச் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வதன் மூலம் வீண் பிரச்சினை வராமல் தடுக்கலாம். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம். உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது. பதவி உயர்வு, சம்பள உயர்வு தாமதப்படலாம். குடும்பத்தில் இருப்பவர்களின் செயல்பாடுகள் உங்களுக்கு டென்ஷன் தருவதாக இருக்கலாம். கணவன், மனைவிக்கிடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும். பிள்ளைகளிடம் அனுசரித்து செல்வதும் அவர்கள் போக்கில் விட்டு பிடிப்பதும் நல்லது. பெண்கள் கோபத்தை கட்டுப்படுத்துவதும், வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பதும் நன்மை தரும். மாணவர்கள் மிகவும் பொறுமையுடனும், கவனமாகவும் பாடங்களை படிப்பது அவசியம்.

---

## தமிழ் ஆராய்ச்சி மாநாடு 2023 – கோலாலம்பூர்

அருணாசலம் லெட்சுமணன் 24



# மலையகம் குறித்த கரிசனையில் ஸ்ரீபிரசாந்தனது சிறப்பிற்குரிய வகிபங்கு

பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் பங்கேற்ற இலங்கை அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தவரும், உலகத் தமிழ் ஆய்வு மன்றத்தின் இணைச் செயலாளர்களில் ஒருவருமான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தலைவர், பேராசிரியர் ஸ்ரீபிரசாந்தனின் வகிபங்கு இம் மாநாட்டில் முக்கியத்துவம் பெறுகிறது. இலங்கை பேராளர்களை ஒன்றிணைப்பதிலும் ஆய்வு முன்மொழிவுகளால் தெரிவாகிய கட்டுரையாளர்களிடம் முழுமையான ஆய்வுக்கட்டுரைகளை பெற்றுக்கொள்வது, பரீசீலிப்பது வரையிலான பணிகளில் ஸ்ரீபிரசாந்தனின் பணி சிறப்பிடம் பெற்று விளங்கியது. அவ்வாறே ஆய்வரங்குகளில் இலங்கை ஆய்வாளர்களுக்கு களங்களை பொருத்தப்பாட்டுடன் ஒன்றிணைத்த பணியும் கவனத்திற்குரியதாகும். பேராளர்களுக்கான பயண ஆவணங்களை உறுதிப்படுத்துவதோடு அவர்களை ஒருங்கிணைத்தும் அவர்களின் வசதிகள் தொடர்பில் ஒழுங்கமைப்பு பணிகளிலும் இவரது பங்குபற்றல் மிக அவதானத்திற்குரியதாகும். ஒன்பதாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் தொடக்க நிகழ்வில் பேருரையாற்ற அழைக்கப்பட்டிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியை தொடர்ந்ததுடன் யாழ். இந்துக் கல்லூரியில் தனது உயர்தரக் கல்வியை கற்று பேராதனை பல்கலைக்கழக கலைப் பீடத்துக்கு தெரிவானார். 1994ம் ஆண்டு உயர்தரப் பரீட்சையில் கலைப் பிரிவில் அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தை பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. தனது இளங்கலைமானி. முதுமானிப்பட்டங்களை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெற்றதோடு அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். 2015ஆம் ஆண்டு முதல் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இணைந்து சிரேஷ்ட விரிவுரையாளர், முது நிலை விரிவுரையாளர் என்ற வகையில் பேராதனைப் பலகலைக்கழகத்திலும் கடமையாற்றியுள்ளார். 2017ஆம் ஆண்டு பேராசிரியராக உயர்வு பெற்ற நிலையில் 2020ஆம் ஆண்டு தொடக்கம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தலைவராக கடமையாற்றுகிறார் என்பதும் குறிப்பிடத்தக்கது. கம்பன் கழகத்தின் அமைப்பாளராகவும் அவ் அமைப்பின் உலகறிந்த பேச்சாளராகவும் திகழ்கின்றமை அவதானத்திற்குரியதாகும். தேசிய, சர்வதேச ரீதியிலும் பலவாறு தமிழ்ப்பணிக்காகவும், தனது புலமைமைக்காகவும் பல விருதுகளை தன்னகப்படுத்திக்கொண்டவர். தமிழ் கூறும் நல்லுலகில் தனித்துவ அடையாளமாகத் திகழ்பவர். இலங்கையின் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம், கலாசார அலுவல்கள் அமைச்சு ஆகியவற்றின் மதியுரைஞர் குழு உறுப்பினராகவும் தொழிற்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மலையக இலக்கியத்தோடும் ஸ்ரீபிரசாந்தன் தொடர்புபட்ட சம்பவம் மிக சர்ச்சைக்குறியதாக விளங்கியது. 2010ம் வருட காலப்பகுதியில் ஞானம் இதழில் வெளியாகும் இவரது கவிதைகளை பார்த்த அனபவம். கமபன் கழகத்தில் உரையாற்றுபவர் என அறிந்திருக்கிறேன். அப்போது அவருடைய உரைகளை செவிமடுப்பதற்கு வாய்ப்பு கிட்டவில்லை. இலங்கைக் கவிஞர்களின் கவிதைகளை ஸ்ரீபிரசாந்தன் தொகுத்து வெளியிட்டுள்ளார் என்றும் இத் தொகுப்பில் மலையக கவிஞரான சு.முரளிதரனின் கவிதை மாத்திரமே இணைக்கப்பட்டுள்ளது என்றும் ஏனைய மலையக கவிஞர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளார்கள் என்ற குற்றச்சாட்டும். முனைப்பாக பேசப்பட்டுக் கொண்டிருந்தது. இவ் விடயம் தொடர்பில் அவதானத்தை ஏற்படுத்தியவர்களில் அந்தனி ஜீவாவின் செயற்பாடு குறிப்பிடக் கூடியதாகும். இது தொடர்பிலான அவதானம் பல தளங்களிலும் அன்றைய காலகட்டத்தில் முனைப்பு பெற்றவொன்றாக விளங்கியது. மலையக கவிதைகள், இலக்கியம் தொடர்பில் பலரும் அக்கறை காட்டிய மாயை தோற்றுவிக்கப்பட்டது.

இவ் விடயம் 2011ம் வருடம் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் இடம் பெற்ற “முதலாவது உலகத் தமிழ் எழுத்தாளர் மாநாடு” நிகழ்விலும் கவனத்தை ஈர்த்த விடயமாக அமையப்பெற்றது. மாநாட்டில் அமைக்கப்பட்டிருந்த விசேட கருத்தாடல் அரங்கில் “ இழிசனர் இலக்கியம் போதிய கவனத்தை பெற்றுள்ளனவா? என்ற தலைப்பில் எழுத்தாளர் தெணியான் தலைமையில் இடம்பெற்றது. அவ் அரங்கில் கருத்தாளர்களாக இரா. நித்தியானந்தன், வே.இராமர் ஆகியோர் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தார்கள். இக் கருத்தாடலில் இழிசனர் இலக்கியம் தொடர்பில் மிகத் தெளிவான விளக்கத்தை வே.இராமரின் உரை சபையின் சந்தேகங்களையும் நிவர்த்தி செய்தமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த அரங்கில் மற்றுமொரு விடயம் சர்ச்சையை கிளப்பியது. அதுதான் ஸ்ரீபிரசாந்தன் தொகுத்த கவிதைகளில் மலையக கவிதைகளுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை என்பதாகும். பலரும் மிக காரசாரமான கருத்துக்களை முன் வைத்தார்கள். மலையக படைப்புகளை இருட்டடிப்பு செய்துவரும் செயற்பாடுகளுக்கு இவ் விடயமும் தகுந்த சாட்சியமாகிறது எனவும் கருத்து தொடரப்பட்டது. அரங்கின் இறுதியில் கருத்துரைக்காக வழங்கப்பட்ட சந்தர்ப்பத்தில் எனது கருத்து பின்வருமாறு அமைந்தது. ஸ்ரீ பிரசாந்தன் அவருக்கு பிடித்த கவிதைகளை தொகுத்திருக்கிறார். கவிதைகள் அவர்களது அகவயத் தன்மையை பொறுத்து செல்வாக்கு பெறும். அவரது பணியைப் போல நாமும் அதனை செய்யலாமே. மலையக கவிதைகளை தொகுப்பதற்கான நடவடிக்கையை விட்டு அவரை குறையாக பேசுவோமாக இருந்தால் அதனூடாக மலையக இலக்கியம் வளர்ச்சி நிலையை அடையாது. எனவே அவ் விடயத்தை விட்டு ஆக வேண்டியதைப் பார்ப்போம். என எனது கருத்தைத் தொடர்ந்து. அத்துடன் இவ் விடயம் நிறைவுக்கு வந்தமை ஞாபகத்துக்கு வருகிறது. அவ்வாறு மலையகத்திலிருந்து வெளிவந்த பல கவிஞர்களின் கவிதைகளை உள்ளடக்கிய தொகுப்புகளை பார்க்கின்ற போது விரல் விட்டு எண்ணக்கூடிய தொகுப்புகளே வெளிவந்துள்ளன. அவற்றுள் கவிஞர் சு.முரளிதரன் தொகுத்த “விருட்சியப் பதியங்கள்” அந்தனி ஜீவா தொகுத்த “மலையக குயில்கள்” வே.தினகரன் தொகுத்த “இசை பிழியப்பட்ட வீணை” கொட்டகலை ஆசிரியர் கலாசாலையின் “தேட்டம்” ஆகிய தொகுப்புகளை மாத்திரம் அடையாளம் காணலாம். ஸ்ரீ பிரசாந்தனின் முயற்சிக்கு முன்னரே மேற்குறித்த தொகுப்பு முயற்சிகள் வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. அதன் பின்னர் எந்தவித மலையக கவிதைகளின் தொகுப்பு முயற்சிகளும் இடம்பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது. இப் பணியில் வடம், காற்புள்ளி ஆகிய சஞ்சிகை முயற்சிகள் மனங்கொள்ளத்தக்கது.

இலங்கையில் கவிதைத் தொகுப்பு முயற்சிகளில் சிலோன் விஜயேந்திரனின் பணி குறிப்பிடத்தக்கதாகும். இருபதாம் நூற்றாண்டின் ஈழத்து கவிஞர்களை ஆவணப்படுத்தும் நோக்கோடு சிலோன் விஜயேந்திரனின் பணியும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் தேசிய ரீதியில் மிளிர்ந்த கவிஞர்களை ஆவணப்படுத்தும் நோக்கும் இத் தொகுப்பின் மூலம் நிறைவேறியிருக்கிறது. சிலோன் விஜயேந்திரனும் கவிதை மீதான ஆர்வத்துடனும் ஈடுபாட்டுடனும் இலங்கையின் சகல பாகங்களின் கவிஞர்களையும் அடயாளப்படுத்த முனைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. மிக நீண்டகாலம் இத் தொகுதிக்கான கவிதைகளை தேர்வு செய்யும் முனைப்பில் ஈடுபட்டுள்ளமையையும் அறிய முடிகிறது. ஐம்பதுக்கும் மேற்பட்ட இலங்கையின் முன்னணி கவிஞர்களின் கவிதைகளை இத் தொகுப்பின் ஊடாக தரிசிக்க முடிகிறது. பரம ஹம்சதாசன், சக்தி பாலையா, சி.வி.வேலுப்பிள்ளை, கே.கணேஸ், ஆகிய மலையக கவிஞர்களின் கவிதைகளும் இத் தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிலோன் விஜயேந்திரனின் தந்தை யாழ்ப்பாணத்தை சேர்ந்த நிலையில் அவரது தாயார் மலையகத்தோடு தொடர்புபட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. “ஈழத்தின் இணையற்ற மறுமலர்ச்சிக் கவிதைகளை (1940 - 1990) மிக அதிகளவிலும், பழந்தமிழ் மரபை ஒட்டிப் பாடப்பட்ட கவிதைகளில் மிகப் பிரபலமானவற்றையும் உள்ளடக்கி இத்தொகுப்பை உருவாக்கி உள்ளேன். என்ற விஜயேந்திரனின் கூற்றும் கவனிக்கத்தக்கது. இத் தொகுப்பில் “ஈழத்து இலக்கிய பாரம்பரியமும் இன்றமிழ் கவிஞர்களும்” எனும் அவரது பார்வையுடன் கொண்ட அவரது கட்டுரையும் குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த அனுபவங்களை பெற்ற நிலையிலேயே மலையக இலக்கியத்தோடு பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் அறிமுகமாகிறார். அவருடன் நெருங்கிப்பழகும் வாய்ப்பு இந்த பதினோராவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் பின்னரே சாத்தியமாகியது. நிகழ்வுக்கு முன்னர் பயண ஏற்பாடுகள் குறித்த விடயங்களை மாத்திரம் தொலைபேசி மூலமாக பேசிக்கொண்டோம். மலேசியாவில் மேற்கொண்ட சுற்றுப்பயணங்களின் போது மாநாட்டு பணிகளின் நிமித்தம் அவரால் எம்மோடு இணைந்து கொள்ள முடியவில்லை. மாநாடு நிறைவுற்றதன் பின்னர் இலங்கைக்கு திரும்புகையிலேயே விமானத்தில் அருகருகே அமர்ந்து உரையாடினோம். உரையாடல் மிக ஆரோக்கியமாக தொடங்கியது. தஞ்சை பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்துள்ள மலையகம் 200 நிகழ்வு பற்றி விசாரித்தார். அந் நிகழ்வு சாத்தியமில்லாமல் போனமை கவலைக்குரிய விடயமாகும். “மலையகம் 200” தொடர்பில் முதன் முதலாக ஆய்வு மாநாட்டை நடத்த தூண்டிய பல்கலைக்கழகமாக தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகமே விளங்கியது. பின்னர் முறையான தொடர்பாடல் புரிந்துணர்வு இன்மையால் அந் நிகழ்வை நடத்த முடியாமல் போனது என கருத்துப் பரிமாறிக்கொண்டோம். “மலையகம் 200” நிகழ்வை ஏனைய பல்கலைக்கழகங்களில் செய்வதை விட மலையகத்தின் தலைநகரான கண்டியை அண்மித்துள்ள பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நடத்துவதே மலையகத்திற்கு பெருமையைத் தரும் விடயமாக அமையும் என வலியுறுத்தினேன். அவ்வாறான நிகழ்வு ஒன்றுக்கான ஆரம்ப கட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதாக பதிலளித்தார். நாடகத்துறை தொடர்பில் ஆய்வுக்கட்டுரையை தயார் செய்யுமாறு கோரிக்கை விடுத்தார். இவ்வாறு மலையக இலக்கிய முன்னெடுப்புகள் தொடர்பில் இருவருக்குமான உரையாடல் தொடர்ந்த வண்ணம் இலங்கை மண்ணில் காலடி எடுத்து வைக்கிறோம்.

ஆகஸ்ட் 15 பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மலையகம் 200 ஆய்வு மாநாடு தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன் தலைமையில் இடம்பெறுகிறது. சிரேஷ்ட பேராசிரியர்கள் எம்.ஏ.நுஹ்மான், துரை மனோகரன், விஜயசந்திரன் ஆகியோர் உட்பட்டு ஆய்வாளர்களும் கலந்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது. மலையக கலை, இலக்கியம், வாழ்வியல், வரலாறு என்ற வகையில் ஆய்வு பொருண்மியங்கள் காணப்பட்டன. மலையகத்தின் ஆளுமைகள் பலர் ஆய்வரங்கில் கலந்து சிறப்பித்தார்கள். ஆய்வரங்கு இடம்பெற்று அவ் ஆய்வரங்கில் முன் வைக்கப்பட்ட பத்து கட்டுரைகள் தொகுப்பாக வெளிவந்த ஆச்சரியத்தை கொழும்பில் கலாசார அமைச்சு நடத்திய அரச இலக்கிய விருது வழங்கல் நிகழ்வில் பேராசிரியர் சாத்தியப்படுத்திக் காட்டியமை குறிப்பிடத்தக்கது. அவ்வாறே கடந்த டிசம்பர் மாதம் ஸ்ரீபாத தேசியக் கல்வியியற் கல்லூரியில் இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம் நடத்திய மலையக நாட்டாரியல் ஆய்வரங்கம் 2023” நிகழ்வில் திணைக்களத்தின் மதியுரைஞர் குழுவின் உறுப்பினர் என்ற வகையில் இம் மாநாட்டை ஒழுங்கமைப்பதில் முழுமையான பங்களிப்பை வழங்கினார். அத்தோடு மலையக நாட்டுப்புற கலைகள் பற்றிய “மலை நாட்டார் கலை வளம்” தொகுப்பு நூல் வெளிவருவதற்கும் தனது பங்கினை முழுமையாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது. அத்தோடு 1976 சி.வி.வேலுப்பிள்ளை தொகுத்து வெளியிட்ட மலையக நாட்டுப்புற தொகுப்பு நூலான “மாமன் மகனே!” தொகுப்பு நூல் பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தனால் மீள் பதிப்பு செய்து வெளியிட்டு வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. அண்மைக் காலமாக மலையகம் குறித்த கரிசனையில் அன்னாரது வகிபங்கு சிறப்பிற்குரியதாக அமைகின்றமை கவனிக்கத்தக்கது.



**பயணம் தொடரும்...**





# படித்ததும் பகர்வதும் 179



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### 'தனிமை' ஒரு 'நோய்'



"தனிமையிலே இனிமை காண முடியுமா?

நள்ளிரவினிலே சூரியனும் தெரியுமா?" ...

காதலர் தினம் கடந்து சென்று, சில தினங்கள் ஆன பின்னர், இன்று இப்பாடலை நினைவு படுத்துவதன் நோக்கம் 'தனிமை' பற்றி சிந்திக்கத்தான். 'தனிமை' காதலர்களுக்கு மட்டும் தொல்லையாக அமைந்த ஒன்றல்ல. மாறாக எல்லா வயதினருக்கும், எல்லாப் பருவத்தினருக்கும், எல்லா தரத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தும் ஒரு 'நோய்' ஆகும்.

தனிமையில் இருப்பதால் ஏற்படும் பாதிப்பு, ஒரு நாளில் பதினைந்து சிகரெட்டுகள் புகைப்பதால் ஒருவருக்கு ஏற்படும் பாதிப்புக்கு சமமானது என WHO எனும் 'உலக சுகாதார நிறுவனம்' எச்சரிக்கை விடுத்துள்ளது.

இன்றைய காலத்தில் தனிமையில் இருப்பது என்பது ஒரு தீவிரமான பிரச்சினையாக மாறி வருகிறது. மன நலன் மற்றும் உடல் நலன் ஆகிய இரண்டிற்கும் நீண்ட காலத்தில் பாதகமான விளைவுகளை தனிமை ஏற்படுத்துகிறது. மனச்சோர்வு, பதற்றம், தற்கொலை போன்ற மன நலப் பிரச்சினைகளும் தனிமையால் விளைகின்றன என அண்மைய தகவல்கள் தெரிவித்துள்ளன.

இந்த தனிமையால் உடல் நலம் சார்ந்தவற்றில் இதய நோய், பக்கவாதம், டிமென்ஷியா, அகால மரணம் போன்ற ஆபத்துகள் காத்திருக்கின்றன. இந்நிலையில் உடல் மற்றும் மன நலன் சார்ந்த பிரச்சினைகளுக்கு அப்பால், தனிமையில் இருப்பது சமூகத்திலிருந்து துண்டித்துக் கொள்ளவும், உறவுகளிடமிருந்து விலகுவதற்கும் காரணமாகி விடுகிறது என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாக உள்ளது.

இவற்றின் காரணமாக உலக சுகாதார நிறுவனம், தனிமையை ஒரு தீவிர உலகளாவிய, சுகாதார அச்சுறுத்தலாக அங்கீகரித்துள்ளது. அத்தோடு தனிமை மற்றும் அது சார்ந்த பிரச்சினைகளைத் தீர்க்க, தேசம் தழுவிய உத்திகளை உருவாக்கவும், செயல்படுத்தவும் தனது உறுப்பு நாடுகளுக்கு உலக சுகாதார நிறுவனம் அறிவுறுத்தி வருகிறது.

உடல் உழைப்பின்மை, மிகை பருமன் ஆகியவை இந்த தனிமையில் இருப்பவர்களுக்கு கூடுதல் பாதிப்பாக விளைகின்றன. இவற்றுக்கு அப்பால் சமூக தொடர்பு இல்லாததால் தனியான பாதிப்புகளுக்கும் இவர்கள் ஆளாகிறார்கள். இவை காரணமாக தனிமைக்கு எதிரான உலகளாவிய போராட்டத்தை எதிர்கொள்ள, சிறப்பு ஆணையம் ஒன்றை தொடங்கவும் உலக சுகாதார நிறுவனம் முடிவெடுத்துள்ளது.


இதனை, 'தனிமையின் தொற்றுநோயைச் சமாளிப்பதற்கான முதல் உலகளாவிய முயற்சி' என்று உலக சுகாதார நிறுவனம் வர்ணிக்கிறது. மேலும், தனிமையில் இருக்கும் சக மனிதர்களை மீட்க உதவுமாறு, உலக மக்கள் அனைவருக்கும் அழைப்பினை உலக சுகாதார நிறுவனம் விடுத்துள்ளது. 'தனிமை'யின் இத்தகைய பாதிப்புகளை ஒவ்வொருவரும் நன்கு சிந்தித்து உணர வேண்டும். தனிமையை விட்டும் தானும் தூரமாவதுடன், தனது குடும்பத்தில் எவரும் இந்த 'தனிமையின் தாக்கத்துக்கு உள்ளாகாமல் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக, சிறுவர், இளைஞர், முதியோர் போன்றோரை தனிமையில் விட்டு விடாமல், அவர்களை தம்மோடு, சேர்த்து, அரவணைத்து, ஆதரித்து, அன்பு செலுத்தி வாழ முன்வர வேண்டும்.

## நெஞ்சுக்கு நீதி

**உலகத்தில் எங்கேயும் உருவாகக் கூடாததுதான் தனிமை**
**உண்டானால் அதுவே எல்லாருக்கும் பெரும் கொடுமை**
**உறவுகள் சேர்ந்திடா வாழ்வுதான் உண்மையில் வறுமை**
**உணர்ந்து உளமதால் இணைந்து வாழ்ந்தாலே இனிமை**

## புது வரவு

### மாணிக்க வியாபாரமும் சீனன்கோட்டையும்




பேருவளை சீனன் கோட்டை ஷம்சுன் நஹார் ஜெமீல் மரிக்கார் வெளியிட்டுள்ள ஒரு வித்தியாசமான நூல், 'மாணிக்க வியாபாரமும் சீனன்கோட்டையும்' நூலாசிரியரைப் பற்றி மூத்த ஊடகவியலாளரும், எழுத்தாளருமான நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"மாணிக்கக் கல் வியாபாரத்துக்கு மகுடம் சூட்டும் பேருவளை சீனன்கோட்டை மண் ஈன்றெடுத்த முத்துக்களில் அல்ஹாஜா ஷம்சுன் நஹார் ஜெமீல் மரிக்காரும் குறிப்பிடத்தக்க பெண் ஆளுமையாவார். சீனன்கோட்டையில் முதலாவது பெண் ஆசிரியர், முதலாவது பெண் அதிபர் என்ற சிறப்பைப் பெற்ற பெருமைக்குரிய பெண்மணி இவர். சீனன்கோட்டையில் பெண் கல்விக்காகப் போராடி வெற்றி பெற்ற வீராங்கனை இவரென்றாலும் அது மிகையாகாது.

ஆசிரியர், அதிபர் என்ற பதவிகளையும் தாண்டி இவர் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இலக்கியம் படைக்கும் சிறந்த இலக்கிய வாதியும் கூட " இஸ்லாம் – இதுவே ஸிராத்துல் முஸ்தகீம் (நேரான வழி)" என்ற பெயரில் இவர் 2007 ஆம் ஆண்டில் தனது முதலாவது நூலை வெளியிட்டார். அதனை அடுத்து The Truth என்ற பெயரில் 2017இல் ஆங்கிலத்திலும் ஒரு நூலை வெளியிட்டுள்ளார். "மாணிக்க வியாபாரமும் சீனன்கோட்டையும்" என்ற பெயரில் தற்சமயம் வெளியிடும் இந்நூல் இவரது மூன்றாவது நூலாகும்."

"இலங்கை முஸ்லிம் வரலாற்றில் பேருவளைப் பிரதேசம் அதிகம் முக்கியம் பெறுகின்றது. முஸ்லிம்களது வரலாற்றை எழுதுகையில் அதற்குத் தனியான இடம் இருப்பதை இலங்கை முஸ்லிம்களது குடிப்பரம்பல் பற்றிய ஆய்வுகளை வாசிக்கும் போது எம்மால் புரிந்துகொள்ள முடிகின்றது.

இந்த வகையில் பேருவளை சீனன்கோட்டை வரலாறும் தனியாக ஆவணம் செய்யப்படுவதும் அதன் வரலாற்று அசைவியக்கத்தை பல கோணங்களில் ஆராய்வதும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. அதிலும் விசேடமாக சீனன் கோட்டை மக்களது பாரம்பரியமாக விளங்கும் மாணிக்கத் தொழில் பற்றிய வரலாற்றைத் தெரிந்து கொள்வது அவசியம். இந்த வகையில் ஓய்வு பெற்ற ஆசிரியை ஷம்சுன் நஹார் ஜெமீல் மரிக்கார் தனது சக்திக்குட்பட்ட வகையில் இப்பகுதியில் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளார். மிகுந்த வயதை அடைந்த நிலையிலும் தொடர்ந்தும் தேடலிலும் வாசிப்பிலும் எழுத்திலும் ஈடுபாடு காட்டி வரும் அவரது தொடரான அறிவு சார் முயற்சிகள் மிகுந்த பாராட்டுக்குரியவையாகும்." என்று பேருவளை, ஜாமிஆ நளீமிய்யா, சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்ஷெய்க் அரபாத் கரீம் குறிப்பிட்டுள்ளதன் மூலம் இந்நூலின் உள்ளடக்கத்தை இலகுவாகப் புரிந்து கொள்ளலாம்..

நூல்: மாணிக்க வியாபாரமும் சீனன்கோட்டையும், ஆசிரியர்: அல்ஹாஜா ஷம்சுன் நஹார் ஜெமீல் மரிக்கார் J.P, முதற்பதிப்பு: ஜனவரி 2024, பக்கங்கள்: 60,

## சிந்தனை செய் மனமே

### முரட்டுக் குதிரை



ஒரு ஊரிலே மகா முரடன் ஒருவன் இருந்தான். அவன் ஒருநாள் உயர்ந்த குதிரையொன்றின் மேல் அமர்ந்தபடி தெருவில் சென்று கொண்டிருந்தான்.

அப்போது, ஒரு வியாபாரி ஒரு குதிரையை இழுத்துக் கொண்டு வந்து, "ஐயா, இந்தக் குதிரை பத்து வராகன் தான். வாங்கிக் கொள்கிறீர்களா?" என்று அவனிடம் கேட்டான்.

முரடனுக்குப் பேராசை. 'அதிக விலை பெறும் குதிரையை வெறும் பத்து வராகனுக்குத் தருவதாகச் சொல்கிறானே!' என்று சற்றும் யோசிக்காமல் அக்குதிரையை வாங்க முடிவு செய்தான் அந்த முரடன்.

உடனே, பத்து வராகன் கொடுத்து குதிரையை வாங்கிக் கொண்டு, தன் குதிரையை அந்த வியாபாரியிடம் கொடுத்து, "சற்றுப் பிடித்துக் கொள்" எனக் கூறிவிட்டுத் தான் புதிதாக வாங்கிய குதிரையில் சவாரி செய்து பார்க்க விரும்பினான். உடன் குதிரையின் மேல் ஏறினான்.

அப்போது அந்தக் குதிரை வியாபாரி, "ஐயா, என் குதிரைக்குக் கடிவாளம் வேண்டாம். வார்த்தை ஒன்று போதும். 'அப்பாடா' என்று சொன்னால் குதிரை ஓடும். 'கடவுளே' என்றால் இந்தக் குதிரை நின்று விடும்" என்றான்.

குதிரை மீது ஏறி அமர்ந்த அந்த முரடன், அதைக் கேட்டு, 'அப்பாடா' என்றான்.

குதிரை பிய்த்துக் கொண்டு ஓடத் தொடங்கியது. சற்று நேரம் மகிழ்ச்சியாக அவன் அதில் உலா வந்தான். அதிக நேரம் சென்றதும், அதை நிறுத்த மிகவும் முயன்றான் முரடன். ஆனால் குதிரை நிற்கக் காணோம். அந்தக் குதிரையோ காடு மேடு நோக்கி ஓடியது. "ஏய் நில்லு நில்லு", என்று என்னென்னவோ சொற்களைச் சொல்லிப் பார்த்தான். கடிவாளத்தை இழுத்தான். ஆனாலும் குதிரை நிற்காமல் ஓடிக்கொண்டே இருந்தது. குதிரைக்காரன் சொன்ன 'கடவுளே' என்ற வார்த்தையை முரடன் முற்றாகவே மறந்து விட்டான்.

குதிரை ஒரு உயரமான மலையை நோக்கி ஓடியது, உச்சிக்கே சென்று விட்டது.


முரடன் அச்சத்தில் 'நாம் சாகப் போகிறோம்' என்று முடிவு செய்தான். என்னவெல்லாமோ சொல்லி கத்தினான். குதிரை நிற்கவே இல்லை. கடைசியாக, 'கடவுளே' என்று சொல்லிக் கடவுளை துணைக்கு அழைத்தான்.

குதிரை சட்டென்று நின்றது. அதிர்ச்சியிலிருந்து விடுபட்ட முரடன் தன்னை ஆறுதலாக ஆசுவாசப்படுத்திக் கொண்டு, 'அப்பாடா' என்றான். அதைக் கேட்டதும் குதிரை மீண்டும் பாய்ந்து ஓடத் தோடங்கியது.

அவசரப்பட்டு யோசிக்காமல் பேசி விட்டாலோ, தவறுதலாக வார்த்தையை விட்டாலோ இதுதான் நிலை. சிந்தியுங்கள்.

## வாசித்ததில் வசீகரித்தது

### வாசிப்பும் நேசிப்பும்!



சிரிக்கும், நடக்கும், சாப்பிடும் மனிதர்களைப் பார்பதற்கான ஆற்றல் மட்டுமே நமது கண்களுக்கு உண்டு. வாசிப்பினூடாக உள்ளுலகைக் காண்பதற்கான ஆற்றல் கண்களுக்கு இல்லை. வாசிப்பவர் மட்டுமே அனுபவத்தினூடாக அதைக் காண்கிறார்.

வாசிப்பவர் தனித்திருப்பதில்லை. அவர் வாசிப்பினூடாக முழு உலகுடனும் தொடர்பு கொள்கிறார். வாசிப்பவருக்கு மட்டுமே வாய்க்கும் அரிய வாய்ப்பு இது.

"இனியும் அறிந்துகொள்ள ஏராளம் இருக்கிறதே", "இனியும் செய்ய வேண்டியது ஏராளம் இருக்கிறதே" என்ற அறிவு வாசிப்பவருக்கு மட்டுமே கிட்டும் மகத்தான அனுபவம். "நான் எவ்வளவு சிறியவன்" என்ற எண்ணம் வாசிப்பினூடாகக் கிடைக்கும் பேறறிவு.

வாசிக்காமல் இருப்பவர் தன்னை எப்போதும் பெரியவனாகக் கருதுகிறார். தான் வசிக்கும் ஐந்து சென்ட் நிலமும் வீடும் மட்டுமே பெரும் பிரபஞ்சமாக அவருக்குத் தோன்றும். வாசிப்பவர் மரணிக்குமுன் ஆயிரம் வாழ்க்கை வாழ்கிறார். வாசிக்காதவர் ஒரேயொரு வாழ்க்கை வாழ்கிறார்.

ஒரு கவிஞன் இப்படி பாடியிருக்கிறார்.

"காற்று இல்லாத இடத்தில் என்னை விடுங்கள்,
நான் சஞ்சரித்துக் கொண்டிருப்பேன்.
சூரிய ஒளி இல்லாத இடத்தில் என்னை விடுங்கள்,
நான் உயிர்த்திருப்பேன்.
ஆளற்ற வனாந்தரத்தில் என்னை விடுங்கள்,
நான் சுற்றித் திரிவேன்.
ஆனால், புத்தகங்கள் இல்லாத அறையில்
என்னைப் பூட்டிவிடாதீர்கள்...
நான் செத்துப் போவேன்".

இது வாசிப்பிற்கான காலம். வாசிக்கும் தலைமுறையை வார்த்தெடுப்பதற்கான நேரம். வாசிப்பும் ஒரு வணக்கமே! உணர்வோம். வாசிப்போம்.

**இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்அப் (WhatsApp): 0777314207**




# துர்காவே ஏன் கொலைகாரியாக இருக்கக்கூடாது! எப்படி அதை உறுதியாக சொல்வது ஆதாரம் இல்லாது!

சிறிது நேரம் சிந்தித்து விட்டு,

"எங்கள் இருவருக்கும் எதிரிகள் இருக்கிறார்கள். கடிதங்கள் அனுப்பி மிரட்டியும் இருக்கிறார்கள்! ஒரு வாரத்திற்கு முன்பும் எனக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. ஆனால் அதை நான் கணக்கெடுக்கவே இல்லை! செல்வராகவனுக்கும் அதேபோல் ஒரு அழைப்பு வந்திருக்கும், ஆனால் அதைப்பற்றி அவர் என்னிடம் எதுவும் சொல்லவே இல்லை, ஆனால் அவருடைய நடவடிக்கைகளை வைத்து நான் அதைப் புரிந்து கொண்டேன்!"

அவர் சொன்னவற்றையெல்லாம் குறித்துக் கொண்டு,

அவர்களிடம் விடைபெற்றுச் சென்றார் இன்ஸ்பெக்டர்.

அவர் சென்ற பிறகு,

தனது பேச்சைத் தொடர்ந்தார் சிரஞ்சீவி,

"ம்! நடந்ததெல்லாம் நடந்துவிட்டது சொலமன், இந்த கொலைகாரன் யார் என்பதைத்தான் நாம் இப்போது கண்டு பிடிக்க வேண்டும். இதில் மறைப்பதற்கு எதுவுமில்லை, அதனால் என்னிடம் உண்மையைச் சொல்லுங்கள், நீங்களும் செல்வராகவனும் ஒருவித அச்சத்துடன் தானே வாழ்ந்து கொண்டிருந்தீர்கள்!"

"உங்களுக்கு எப்படி அது தெரியும்?"

வியப்பை விழிகளில் கட்டிக் கொண்டார் சொலமன்.

"நீங்கள் இருவருமே ஏற்பாடு செய்திருக்கும் பாதுகாப்பு வளையங்களை வைத்துத்தான் அவர் வீட்டில் இருப்பதைப் போல் உங்கள் வீட்டிலும் கதவு ஜன்னல்களில் மின்சார வயர்களை இணைத்து வைத்திருக்கிறீர்கள். கழுகு விழிகளில் அது படாமல் இருக்குமா?

"ம்.. அன்று போலவே இன்றும் உங்கள் விழிகள் கூர்மையாகத்தான் இருக்கின்றன" என்று நமட்டுச் சிரிப்பொன்றை உதிர்த்து விட்டு,

"உண்மைதான் சிரஞ்சீவி, ஓரளவு பாதுகாப்போடு தான் நான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்.!" என்றார்.

"யாரிடமிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ள விரும்புகிறீர்கள்?"

"அடையாளமே தெரியாத ஒரு நபரிடமிருந்து!!'

"உங்களுக்கு அடையாளமே தெரியாத அந்த நபர்தான் செல்வராகவனை கொலை செய்திருக்கிறான்!"

"ம்..அப்படியும் இருக்கலாம்!" என்று தாழ்ந்த குரலில் சொன்ன சொலமன்,

"விரைவில் நான் அவனைக் கண்டு பிடித்து விடுவேன்!" என்று சொல்லிய படியே,

பற்களை நறநற வென்று கடித்துக் கொண்டார்.

"அதற்கு எங்கள் உதவி எதுவும் உங்களுக்குத் தேவை இல்லையா சொலமன்?"

"அப்படியும் சொல்ல முடியாது, ஆனால், விரைவில் அவனைக் கண்டு பிடிப்பதற்கு முயற்சி செய்வேன்!"

"சரி இந்த தோமஸைப் பற்றி உங்களுடைய அபிப்பிராயம் என்னவாக இருக்கும்?"

"தோமஸைப் பற்றி எனக்கு அவ்வளவாகத் தெரியாது. ஆனால் அவர் துர்காவுக்கு மிகவும் வேண்டியவராக இருக்கிறார் என்பது மட்டும் தெரியும்.! துர்கா யாரையாவது அல்லது எந்தப் பொருளையாவது விரும்புகிறாள் என்றால் அவர் மீதோ அந்த பொருள் மீதோ வெறுப்பைக் காட்டுவார் செல்வராகவன்! துர்கா மகிழ்ச்சியுடன் இருப்பது அவருக்குப் பிடிக்காது! இதனால் தோமஸையும் அவர் வெறுத்தார்! என்றுதான் சொல்ல வேண்டும். துர்காவை துப்பாக்கி முனையில் வைத்துத்தான் அவர் ஆட்டிப் படைத்தார்!"

"ம் நீங்களும் துர்காவை விரும்புகிறீர்கள் அல்லவா?" கேட்டு விட்டு,

இடது கண்ணை பட்டென்று அடித்தார் சிரஞ்சீவி!

சிரஞ்சீவி இப்படிக் கேட்டதும்,

நாணத்தினால் சிவந்தது சொலமனின் வதனம்!

பிறகு,

சிரித்துக் கொண்டே,

"உண்மைதான், நான் அவளை விரும்புகிறேன், ஆனாலும் அது பொருந்தாத ஒரு உறவென்று எனக்குத் தெரியும். அறுபது வயதுடைய ஒருவன் இருபத்தி இரண்டு வயதுடைய ஒரு கன்னியை விரும்புவதென்பது செயற்கையானதுதான். ஆனாலும் நான் அவளை காதலிக்கிறேன்! அவள் அழகான ஒரு தேவதை!"

"தோமஸ், துர்கா இருவரது நட்பையும் நீங்கள் அனுமதிக்கிறீர்களா?"

"என்னாலும் அதைப் புரிந்து கொள்ள முடியாமல்தான் இருக்கிறது!"

"உங்களுக்கு இன்னுமொரு விஷயம் தெரியுமா?"

"சொல்லுங்கள்?"

"நேற்றிலிருந்து துர்காவைக் காணவில்லை!"

"என்னது துர்காவைக் காணவில்லையா?"

கேட்டபடியே,

படாரென்று எழுந்து நின்றார் சொலமன்!

அவர்முகம்,

ஆபிரிக்காகாரனின் முகத்தைப் போல் இருண்டு போனது!

இதன்பிறகு,

தனக்குத் தெரிந்த எல்லா விபரங்களையும்,

சொலமனிடம் சொன்னார் சிரஞ்சீவி!

துர்கா இரவில் சென்ற பயணம்!

சகதியில் கிடந்து எடுத்த அவளது காலணிகள்

பெட்டியில் இருந்த பொருட்கள்!

இவற்றைப் பற்றியெல்லாம்,

விளக்கமாகவே எடுத்துச் சொன்னார்!

எல்லாவற்றையுமே வியப்புடன் கேட்டுக்கொண்டிருந்தார் சொலமன்!

"சரி, இப்போது இந்த அறையைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்ப்போம்!" என்று சொல்லியபடியே எழுந்து நின்ற சிரஞ்சீவி,

"அது, செல்வராகவனைக் கொலை செய்யத் துணிந்தவர்கள் உங்களை மட்டும் கட்டிவைத்து விட்டுப் போனது ஏன் என்பதைத்தான் என்னால் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறது!"

"ம். அதுதான் எனக்கும் வியப்பாக இருக்கிறது! என் வாயை அடைத்து என்னைக் கட்டிப் போட்டுவிட்டு அடுத்து என்ன செய்யலாம் என்று பேசிக் கொண்டதாக ஞாபகம் இருக்கிறது! ஆனாலும் திடீரென்று கேட்ட ஏதோ ஒரு சத்தத்தினால் அவர்கள் ஓடி விட்டார்கள் என்று நினைக்கிறேன்!"

அதன்பிறகு,

தனக்குத் தேவையான விபரங்களை அவரிடமிருந்து கேள்விகளைக் கேட்டு பெற்றுக் கொண்ட சிரஞ்சீவி,

சிந்துஜனையும் அழைத்துக் கொண்டு,

அருகில் இருந்த ரெஸ்ட் ஹவுஸ் ஒன்றுக்குச் சென்றார்.

"இந்த மாதிரி மர்மம் நிறைந்த கொலைகள் எப்போதாவது தான் நடைபெறும். இதிலிருந்து நல்ல அனுபவங்களை நீ பெற்றுக் கொள்ளலாம் சிந்துஜன். பொலிஸ் மா அதிபரிடமிருந்து தகவல் வந்தால், இந்த விஷயத்தில் கொலைகாரனைக் கண்டு பிடிக்கும் பொறுப்பு என்னிடம்தான் ஒப்படைக்கப்படும்.

"ஆமாம் சிந்துஜன், இது சாதாரண கொலை அல்ல, மர்மம் நிறைந்த சிக்கலான ஒரு கொலை! அதைக் கண்டு பிடிப்பதற்கு அனுபவப்பட்ட மூளையும், அப்படி இப்படி வீசக்கூடிய சக்தியான கைகால்களும் உள்ள ஒருவரால் தான் இதைக் கண்டுபிடிக்க முடியும்!"

இப்படிச் சொல்லிவிட்டு

சிறிது நேரம் வரையில்,

சிந்துஜனையே பார்த்துக் கொண்டிருந்தார்.

அவர் என்ன சொல்ல வருகிறார் என்பது புரியாதவனைப் போல்,

அவரையே பார்த்துக் கொண்டிருந்தான் சிந்துஜன்.

"என்னிடம் சக்தி வாய்ந்த கை, கால்கள் இல்லாவிட்டாலும் மதிநுட்பமும் அனுபவமும் இருக்கிறது. என்னிடம் உள்ள அந்த இரண்டும் உன்னிடம் இருக்கிதே சிந்துஜா!" சொல்லிவிட்டு,

புன்னகை பூத்தபடியே அவனைப் பார்த்தார் சிரஞ்சீவி!

"நன்றாகத்தான் கதை சொல்லுகிறீர்கள் மாமா!" என்று சொல்லிவிட்டு

குலுங்கிச் சிரித்தான் சிந்துஜன்

பகல் உணவை அந்த உணவு விடுதியிலேயே இருவரும் எடுத்துக் கொண்டார்கள்.

"ம். சிந்துஜன், நீ துர்காவைப் பற்றி கவலைப்படாதே, அவள் நல்ல சுகத்துடன் கொழும்பில் இருப்பாள். இன்று இரவு அவள் உன்னை சந்திப்பாள்!" என்றார்.

"இன்று இரவா,! என்ன மாமா சொல்றீங்க, அப்போ அவள் இருக்கும் இடம் உங்களுக்குத் தெரியுமா?! அப்படியானால் பொலிசார் துர்காவைக் கைது செய்து விட்டார்களா?" வியப்புடனும்,

பதற்றத்துடனும்,

படபட வென்று கேள்விகளைக் கேட்டான் சிந்துஜன்!

**(தொடரும்..)**





## படித்தோம் பகர்கிறோம்!

மிகவும் வித்தியாசமான கதை!
படிக்கும்போது சுவாரஸ்யம்
ஏற்படுகிறதே அதை!

வாரந்தோறும் தினகரன் வார மஞ்சரியில் மிகவும் பரபரப்பாக வாசகர்களை தேடி வந்து கொண்டிருக்கும் பிரபல ஜனரஞ்சக எழுத்தாளர்.. மொழிவாணனின் துப்பாக்கி முனையில் துர்கா. தொடர் கதையை ஆவலோடு வாசித்து வரும் வாசகிகளில் நானும் ஒருத்தி.

இக்கதை வாசகர்களுக்கு விருந்தாகவும் மூளைக்கு மருந்தாகவும் இருக்கிறது. வாசிப்பின் முடிவில் அடுத்த அங்கம் எப்போது என்ற எதிர்பார்ப்பை தூண்டுகிறது.

5. 6. 7,தொடர்களில்.. செல்வராகவனின் மரணம் தான் மர்மமாகவும் சில சந்தேகங்களையும் எழுப்புவதாகவும் இருக்கிறது....இதனால் இந்த மரணத்திற்கு துர்கா தான் காரணமாக இருக்க வேண்டும் அந்த பெரிய வீட்டில் தங்கியிருந்த மனிதனும் துணையாக இருந்திருக்கலாம் பொறுத்திருந்து பார்ப்போம்....

ஆனாலும் எனது ரசனைக்கு துர்கா சிந்துஜன் காதல் அல்லது வேறு ஒரு புது அறிமுகமாக கூட இருந்தாலும் .......காதல் ரசனையும் சேர்ந்தே கதை தொடர்ந்தால் இன்னும் சுவாரசியமாக இருக்குமென்பதே எனது கருத்து...

ஆனால் கதாசிரியர் கற்பனை எவ்வாறு இருக்கிறதென்று பொறுத்திருந்துதான் பார்ப்போமே....

இக்கதாசிரியர் மொழிவாணனின் எத்தனையோ கற்பனை வடிவங்களில் இது சற்று வித்தியாசமாகவே அமைந்திருக்கிறது. வாழ்த்துக்கள். தொடர்க உங்கள் எழுத்துப்பணி..

**நான்.. அருந்தவம் அருணா**
**பிரபல பாடகி**
(16/02/2024]

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 102

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | | 03 | 04 | 05 |
| 06 | | 07 | 08 | | 09 |
| | 10 | 11 | | 12 | 13 |
| 14 | | 15 | | 16 | |
| 17 | 18 | 19 | 20 | | 21 |
| 22 | | | 23 | 24 | 25 |

பெயர் ........................................

வகுப்பு ........................................

தொலைபேசி இல ........................................

பாடசாலை பெயர் ........................................

வதிவிட முகவரி ........................................

........................................

................................ ........................................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(1) சுற்றிவர நீரால் சூழப்பட்ட நிலப்பகுதியைக் குறிக்கும் சொல்.
(3) இந்திய மாநிலமான தமிழ்நாட்டின் தலைநகரம் இது.
(7) அல்லல், துன்பம், இடர் ஆகிய சொற்கள் போன்று இதுவும் ஒரு ஒத்தபொருள் சொல்.
(10) இது ஒரு ஒட்டுண்ணிப் பூச்சி இனம். பெரும்பாலும் மனிதனின் தலைமுடியில் தங்கியவாறு, இரத்தத்தை உறிஞ்சிக் குடித்து உயிர்வாழும்.
(12) வீதியின் ஒத்தபொருள் சொல். (தலைகீழான சொல்)
(17) நாம் குடியிருக்கின்ற வீட்டை இப்பெயராலும் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)
(23) கண்களுக்கு எட்டிய தூரம் வரை தெரிகின்ற பசுமையான நிறம். (தலைகீழான சொல்)

**மேலிருந்து கீழ்**

(1) ஒருவர் மற்றவருக்கு இழைக்கின்ற கெடுதலான செயல்களைக் குறிக்கின்ற சொல்.
(3) தாவரங்களில் புல், பூண்டு, மரம், கொடி போன்று இதுவும் ஒரு வகை.
(5) இலங்கையில் விளைகின்ற பெருந்தோட்டப் பயிர்களில் இதுவும் ஒன்று. கிளைகள் இன்றி நேராக உயரமாக வளர்கின்ற மரம். (தலைகீழான சொல்)
(7) வானத்தில் இருந்து இடிமுழக்க ஒலி சற்றுத் தாமதமாக வருவதுண்டு. ஆனால் அதற்கு முன்னால் கண்ணைப் பறிக்கும் விதத்தில் ஒளிக்கீற்றாக ஆகாயத்தில் தென்படுவது இது.
(12) அறிவுக்கண் திறக்கும் ஆசிரியரைக் குறிக்கும் சொல். (தலைகீழான சொல்)
(14) இளைய சகோதரனைக் குறிக்கின்ற சொல்.
(20) கேட்கக் கேட்க காதுக்கு இனிமை தருவது. கவிதையுடன் இது கலந்தால்தான், கவிதைக்கு இனிமை உண்டாகும்.
(21) தென்னை போன்று இதுவும் கிளைகள் இன்றி மிக உயரமாக நீண்டு வளர்கின்ற மரம். மனிதனுக்கு பல்வேறு பயன்களைத் தருகின்ற மரம். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 101

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அதிபர் 07. வேங்கை 10. மேகம்
15. அவன் 20. யானை 22. படகு

**மேலிருந்து கீழ்**

02. திங்கள் 04. வேர் 05. பகைவன்
15. அலகு 18. பூனை

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 100

### பாராட்டு பெறுவோர்

**1. டப்.ஏ. தனீசா மெதும்லி**
தரம் 09, புருலப்பிட்டி மகா வித்தியாலயம்,
மினுவாங்கொடை.

**2. எம்.ஆர். முஹம்மத் இஸ்ஹாக்**
தரம் 03C, றோயல் கல்லூரி,
இல. 44/421, இந்திர ஜோதி மாவத்தை, இரத்மலானை.

**3. எம்.என். அப்ல் அஹமத்**
தரம் 06, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர, துல்ஹிரிய.

**4. அகீல் முஜீப்**
தரம் 04, கசாலியா மத்திய கல்லூரி,
அட்டுலுகம, பண்டாரகம.

**5. தி. மனுஜன்**
தரம் 07V, கமு/ விபுலானந்தா மத்திய கல்லூரி,
இல. 186, திருமால் முக வீதி, காரைதீவு 07.


**6. ஹிமா மர்யம் முஜாஹித்**
தரம் 07E, தாருல் உலூம் ம.ம. வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரிமலுவ, ரம்புக்கண.

**7. எம்.எம்.எப். ஹசீனா**
தரம் 07, முஸ்லிம் பாலிகா ம. வித்தியாலயம்,
இல. 142/1, ஒகடபொல, கஹடவிட்ட.

**8. கு. துவாகரன்**
தரம் 06C, கமு/ கார்மேல் பற்றிமா கல்லூரி,
இல. 33A, சருவோதய வீதி, பெரியநீலாவணை.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 102
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**இல்வாழ்க்கை : அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது.**

***தெளிவுரை :***

*இல்வாழ்க்கையின் அன்பும் அறமும் உடையதாக விளங்குமானால், அந்த வாழக்கையின் பண்பும் பயனும் அதுவே ஆகும்.*

# ஹீலியம்



ஹீலியம் 1868ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டதாகும். குழந்தைகளை சந்தோசப்படுத்த எப்போதும் மேலேயே பறந்துகொண்டிருக்கும் பலூன்களில் நிரப்பப்படுவது ஹீலியமாகும். இது பூமியிலிருப்பதாக கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னரே, சூரிய ஒளிக்கதிர்களை ஆராய்ச்சி செய்துகொண்டிருந்த Pierre Janssen and Norman Lockyer என்ற இரு விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் சூரியனுக்கருகில் ஹீலியம் நிறைந்திருப்பதைக் கண்டறிந்தனர். சூரியனைக்குறிக்கும் Helios என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்ததே ஹீலியம்.

ஹீலியம் வாயு தான் ஹைட்ரஜனுக்கு அடுத்தபடியான இலேசான வாயு. காற்றிலுள்ள வாயுக்களில் பெரும்பகுதியான நைட்ரஜன் மற்றும் ஒக்சிஜன் ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது ஹீலியம் மிகவும் இலேசானதாக இருப்பதால் ஹீலியம் நிரப்பப்பட்ட பலூன்கள் மேலெழுகின்றன.

ஒரு கிராம் எடையுள்ள பொருளை மேலே தூக்கிச் செல்ல ஒரு லீற்றர் ஹீலியம் தேவைப்படும். நீங்கள் 50 கிலோவாக இருந்தால், உங்களை மேலே தூக்கிச் செல்ல எத்தனை லீற்றர் ஹீலியம் வாயு தேவைப்படும் என்று கணக்கிட்டுக்கொள்ளுங்கள். நிறம், மணம் இல்லாத இந்த வாயுவை திடமாகவோ, திரவமாகவோ பூஜ்ய டிகிரி வெப்பநிலையில் மாற்ற முடியும்.

விண்வெளி ஆராய்ச்சிகளில் அதிகம் பயன்படுத்தப்படும் ஹீலியம், முதன் முதலில் விற்பனைக்கு 1928ஆம் ஆண்டு வந்திருக்கிறது. ஹீலியம் நிறப்பப்பட்ட பலூன்களை வீட்டில் இரண்டு அல்லது மூன்று நாட்கள் வைத்திருந்தால், அவற்றிலிருக்கும் ஹீலியம் மெதுவாக வெளியேறி பலூன் தானாக தரைக்கு வந்துவிடும். ஹீலியத்தின் எடை மிகக்குறைவு. அதனால்தான் எந்த புவியீர்ப்பு சக்தியாலும் ஹீலியம் பலூன்களை கீழே வைத்திருக்க முடிவதில்லை.

# இவ்வார மழலை



ஆத்விகா ரீனா

ரஜீவ் – துஷா




**ஷஹ்லா ஷிஹார்**
06D, அல் முபாரக் தேசிய பாடசாலை, மல்வானை.

# பறக்கும் மீன்கள்

*Exocoetidae* என்ற விலங்கியல் பெயரை கொண்ட மீன்களின் முன் துடுப்புகள் மிக நீண்டதாக பறவைகளின் இறக்கைகள் போல இருப்பதால் இவை, எளிதாக காற்றில் படபடத்து தாவுகின்றன.

இம்மீன்கள், கடல் அமைதியாக இருக்கும்போது கடலின் மேல்மட்டத்துக்கு வருவதில்லை; மாறாக கடலில் அலைகள் அதிகமாக இருக்கும் போது தண்ணீருக்கு வெளியில் வந்து குதித்து, காற்றில் சில அடி தூரம் வரை பறந்து சென்று விளையாடுகின்றன. இந்த மீன்கள் பறக்கும் மீன்கள் என்று பெயர் பெற்றது இப்படித்தான். அதிக பட்சமாக 6 மீற்றர் உயரத்துக்குத் தாவுவதும் சுமார் 50 வினாடிகளில் 70 கி.மீற்றர் வேகத்துக்கு பறப்பதும் இவற்றின் சிறப்பு. வேகமாக பறக்கும் போது இவை 160அடி தூரம் வரை பறப்பதாக தெரிய வந்துள்ளது.

கடலில் மிதக்கும் தாவர மிதவை நுண்ணுயிரிகள் தான் இதன் உணவாகும். பறக்கும் மீன்களைக் கடல் பறவைகளும் டொல்பின்கள் மற்றும் சில வகை மீன் வகைகளும் விரும்பிச் சாப்பிடுகின்றன. மீன்பிடிப்போர் டோர்ச் லைட்டுகளை இருட்டில் கடலின் மேற்பரப்பில் அடித்து இதைக் கவர்ந்து பிடிக்கின்றனர். இந்த மீன்கள் சுவை நிறைந்த உணவாகவும் இருப்பதால் இவற்றைப் பிடிப்பதில் பல காலமாகவே உலக நாடுகளிடையே போட்டிகள் நிலவுகின்றன. பார்படோஸ் நாட்டின் தேசிய சின்னமாகவும், தேசிய மீனாகவும் திகழும் இந்த பறக்கும் மீன்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைந்து வருகிறது.



# முயல்



சின்னஞ்சிறு பிள்ளைகளின்
மனதைக் கவர்ந்த முயலாரே!
அங்கும் எங்கும் துள்ளிக் குதித்து
மனதுக்கு மகிழ்வை தருகிறாய்!
எனக்குப் பிடித்த கரட்டினை
கொறித்துக்கொறித்து உண்கிறாய்!
காதைக் காதை ஆட்டுவாய்!
மண்ணைத் தோண்டி இறங்குவாய்!
குஞ்சுகளுடன் அமைதியாய் கொஞ்சுவாய்!
கெடுதி ஏதும் செய்திடாய்!
வெள்ளை வெள்ளையாய் அழகாய் இருப்பாய்!
குஞ்சுகளுடன் தினமும் – நீ

**ஷஹ்லா ஷிஹார்,**
(தரம் 06, அல் முபாரக் தேசிய பாடசாலை, மல்வானை)



# சந்ததியை உருவாக்கும் ராணி தேனீ

ஒரு தேன் கூட்டில் ஒரு ராணி தேனீ தான் இருக்கும். ஒரே நேரத்தில் ஒரு தேன் கூட்டில் ஒன்றுக்கு மேற்பட்ட ராணி தேனீக்கள் இருந்தால், அவை ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக்கொள்ளும். இப்படி சண்டைக்கு அழைப்பதற்கென்றே ராணி தேனீக்களுக்கு விசேட ரீங்காரமெல்லாம் இருக்கிறது. சண்டையில் ஒரு தேனீ மற்றொன்றைக் கொன்று ராணியாக வெற்றிவாகை சூடுகிறது. பெரும்பாலும், ஒரு தேன் கூட்டில் இருக்கும் தேனீக்கள், அக்கூட்டின் ராணி தேனீயின் குழந்தைகளாக இருக்கின்றன.

ஒரு ராணி தேனீ உருவாகும் போது, அதற்கென்று அக்கூட்டிலிருக்கும் மற்ற தேனீக்கள் புரதம் நிறைந்த உணவைக் கொடுக்கின்றன. மற்ற தேனீக்களுக்கும் இவ்வுணவு கொடுக்கப்பட்டாலும், வளரும் ராணி தேனீக்கு விசேட கவனிப்பு நிச்சயம்.

ஒரு புது ராணி தேனீ உருவாகும் போது, 15 நாட்களுக்கு தேன்கூட்டிலிருக்கும் துளையொன்றில் மற்ற தேனீக்களால் அடைத்து வைக்கப்படுகிறது. முற்றிலும் வளர்ந்து, இனப்பெருக்கத்திற்குத் தயாராகி 15 நாட்கள் கழித்து துளையிலிருந்து வெளிவரும் புது ராணி தேனீ, முதல் காரியமாகச் செய்வது தேன் கூட்டிலிருக்கும் பிற ராணி தேனீக்களை சண்டையிட்டு வெளியேற்றுவது அல்லது கொல்வது.

தேன்கூட்டிலிருக்கும் மற்ற தேனீக்களின் முக்கிய வேலையே, ராணி தேனீக்கு பணிவிடை செய்வதும், அதற்குத் தேவையான உணவைக்கொண்டுவருவதும் தான். ஆனால், ராணி தேனீக்கு தொடர்ந்து முட்டையிட்டு தன் சந்ததியை வளர்ப்பது மட்டுமே வேலை.

# சிவப்பு இரத்தம்!

இவ் உலகில் பிறந்த அனைத்து உயிர்களுக்கும் பொதுவாக இரத்தம் சிவப்பாக இருக்கும். அதுபோல அனைவரும் உயிர் வாழ்வதற்கு இரத்தம் அவசியம்.

இரத்தம் சிகப்பாக இருக்கக் காரணம் அதில் உள்ள இரத்த சிகப்பணுக்கள். (*Red blood cells*) இவை நமது ஒரு மி.லி.இரத்தத்தில் சுமார் 40 - 60இலட்சம் வரை இருக்கும்.

நம் உடலில் இருக்கும் இரத்த செல்கள் மொத்தம் 4 வகைப்படும்.

*Plasma*
*Platelet*
*White Blood Cell*
*Red Blood Cell*

இதில் இருக்கும் *Red Blood Cell* அதாவது இரத்த சிவப்பணுக்களில் இருக்கும் ஹீமோகுளோபின் தான் நம் உடலில் இருக்கும் இரத்தம் ஒக்சிஜனை எடுத்து செல்வதற்கு உதவுகிறது.

ஹீமோகுளோபின் உள்ளே *Fe* என்ற இரும்பு சத்துகள் அதிகமாக இருக்கின்றது. இதில் இருக்கும் அயனும் நாம் சுவாசிக்கும் ஒக்சிஜனும் ஒன்றாக சேரும் போது கிடைக்கக் கூடிய நிறம் தான் சிவப்பு. இதனால் தான் நம்முடைய இரத்தம் சிவப்பு நிறமாக இருக்கின்றது.

# கரி கட்டை

அக்காலத்தில் நம் முன்னோர்கள் இரவு நேரத்தில் வீட்டிலிருந்து அசைவ உணவு எடுத்துக் கொண்டு செல்லும் போது, அக்கூடையில் சிறிய (கரி கட்டை) வைத்துக் கொண்டு செல்வது வழக்கம். அதற்கு காரணம் பேய், பிசாசு அடித்து விடும் என்று சொல்வார்கள்.

ஆனால், உண்மையிலேயே இது காரணம் அல்ல. கரி கட்டை என்பது (கார்பன் C2) அசைவ உணவு கொண்டு செல்லும் கூடையில் இருக்கும் கார்பன், மசாலா வாசனையை உறிஞ்சி வாசனையை கூடையிலேயே வைத்திருக்கும். வெளியே அனுப்பாது.



# பட்டாசின் சுயசரிதை



பட்டாசு அல்லது வானவேடிக்கை எப்படி உருவாக்கப்பட்டது என்பதில் பல கருத்துக்கள் இருந்தாலும் சீன வெடி என்று நம் முன்னோர்கள் கூறுவதை கேட்டிருப்போம். இன்றும் சிலர் அதை சொல்வதை நாம் அறிவோம்.

கிட்டத்தட்ட 1000 வருடங்களுக்கு முன் சீனாவில் முதல் பட்டாசு உருவாக்கப்பட்டதாக கூறப்படுகிறது. ஆரம்பத்தில் மூங்கில் குழாய்களினுள் வெடிமருந்தை அடைத்து வைத்து வெடிக்கச் செய்துள்ளனர். இந்த வெடிகளை வெடிப்பதால், தீய சக்திகள் மிரண்டு ஓடும் என்று சீன மக்கள் நம்பினார்கள். அது மட்டுமல்லாமல், போர் நடக்கும்போது எதிரி நாட்டு வீரர்களை பயப்பட வைக்கவும் இவ்வெடிகளை சீனர்கள் உபயோகப்படுத்தியுள்ளனர்.

1800ஆம் ஆண்டுக்கு முன்பு வரை, வெள்ளை மற்றும் செம்மஞ்சள் நிறங்கள் மட்டுமே பட்டாசுகளிலிருந்து வந்திருக்கின்றன. 1800ஆம் ஆண்டுக்குக் பிறகு வேதியல் வல்லுனர்களின் முயற்சியால், நீலம், சிவப்பு, பச்சை என்று விதவிதமான நிறங்களில் பட்டாசுகள் வெடிக்கத் துவங்கின.

வானில் சென்று பூப்பூவாக வெடிக்கும் பட்டாசுகளை தொலைவிலிருந்து கவனித்தால், வெளிச்சம் வந்த சில நொடிகளுக்குப் பிறகுதான் வெடிக்கும் சத்தம் கேட்கும். காரணம் சத்தத்தை விட ஒளியின் வேகம் அதிகம். இதனாலேயே, முதலில் வெளிச்சத்தையும் அதன்பின் சத்தத்தையும் கேட்கிறோம்.

உலகில் நடக்கும் பட்டாசு விபத்துகளில் 16 வயதுக் குட்பட்ட சிறுவர்களே 50 சதவீதத்திற்கும் அதிகமாக காயமடைகின்றனர். இன்றுவரை பட்டாசுகள் எந்த மெஷினின் உதவியும் இல்லாமல், கைகளாலேயே உருவாக்கப்படுகின்றன. தீப்பிடிக்கும் வாய்ப்பு அதிகமிருப்பதால், பட்டாசு தயாரிக்கும் பணியிலிருப்பவர்கள் கதர் உடைகளையே அணிய வலியுறுத்தப்படுகிறார்கள்.

# விளையாட்டு



# ஆடுகளத்தை வைத்து திட்டம் வகுக்கும் சில்வர்வுட்

ஒருநாள் உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி மோசமாக ஆடி மூன்று மாதங்கள் தான் கடந்த நிலையில், அணியின் பயிற்சியாளர் கிறிஸ் சில்வர்வுட்டின் கூற்றுப்படி இலங்கை அணி தவறுகளை சரிக்கட்டி வருகிறது என்கிறார். இலங்கை அணி ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடரில் அனைத்து துறைகளிலும் சிறப்பாக ஆடியதே அவரது திருப்திக்குக் காரணம்.

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்று போட்டிகளிலும் இலங்கை அணி 42 மற்றும் 155 ஓட்டங்கள் வித்தியாசத்திலும் 7 விக்கெட்டுகளாலும் வெற்றி பெற்று தொடரை 3–0 என முழுமையாக கைப்பற்றியது. இலங்கையில் இருக்கும் வழக்கமான ஆடுகளங்களை விடவும் தடையான பல்லேகலவில் இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் தமது கைவரிசையை காட்டினார்கள். இப்படி தட்டையாக ஆடுகளங்களை தயாரித்ததற்கு சில்வர்வுட் மகழ்ச்சியை வெளியிட்டார்.

“தற்போது 50 ஓவர் கிரிக்கெட்டை மாத்திரம் பார்த்தால், ஆடுகளத்தில் எமது போட்டித் தந்திரங்கள் சிறப்பானதாகவும் பொருத்தமானதாகவும் இருக்கிறது” என்று ஆப்கானுக்கு எதிரான ஒருநாள் தொடர் குறித்து செய்தியாளர் சந்திப்பில் சில்வர்வுட் கூறினார். “நான் தட்டையான ஆடுகளத்தை கேட்டிருந்ததோடு அப்படியான ஆடுகளம் ஒன்று கிடைத்ததற்கு நன்றி” என்றார்.

முதல் இரு போட்டிகளிலும் 300க்கும் அதிகமான ஓட்டங்கள் பெறப்பட்டன. இலங்கை ஆடுகளங்களில் இப்படி வழக்கமாக நடப்பதில்லை என்பதோடு அதுவும் அடுத்தடுத்த போட்டிகளில் நிகழ்வது மிக அரிது. இந்தத் தொடருக்கு முன்னர் இலங்கை மண்ணில் 10 தடவைகளே ஒருநாள் போட்டியில் 358 ஓட்டங்களுக்கு மேல் பெறப்பட்டன.

முதலில் துடுப்பெடுத்தாடி 350க்கு மேல் ஓட்டங்கள் எடுத்த போட்டிகள் என்று பார்த்தால் ஆப்கானுக்கு எதிரான இலங்கை பெற்ற 381 ஓட்டங்களும் 2018 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பதிவான முதல் சந்தர்ப்பமாக இருந்தது. ஒட்டுமொத்தமாக இலங்கை மண்ணில் இத்தனை ஓட்டங்கள் பெறப்பட்ட ஒன்பது சந்தர்ப்பங்கள் பதிவானபோதும் இலங்கை 350க்கும் மேல் ஓட்டங்கள் பெற்றது நான்கு தடவைகள் மாத்திரம் தான்.

ஆனால் கடந்த ஆண்டு ஒருநாள் உலகக் கிண்ணத்தைப் பார்த்தால் மொத்தம் 13 தடவைகள் அணிகள் 350க்கு மேல் ஓட்டங்கள் பெற்றன. ஆனால் அனைத்து உலகக் கிண்ணங்களிலுமே மொத்தமாக 350க்கு மேல் ஓட்டங்கள் பெறப்பட்டது 24 தடவைகள் தான். அதாவது நாளுக்கு நாள் ஆடுகளங்கள் துடுப்பாட்டத்திற்கு சாதகமான போக்கை எடுத்து வருவது தெளிவாகத் தெரிகிறது. அதற்கு ஏற்ப இலங்கை ஆடுகளங்களும் மாறா வேண்டும் என்பதே சில்வர்வுட்டின் எதிர்பார்ப்பு.



“நமது கிரிக்கெட்டை நாம் எப்படி விளையாட விரும்புகிறோம், அந்த இயல்புக்கு, அதைச் செய்ய நமக்கு நல்ல ஆடுகளம் தேவை. நீங்கள் வெளியே சென்று அதை மீண்டும் மீண்டும் செய்யலாம் என்ற நிலை மூலமாக போட்டித் திட்டத்தை மேம்படுத்துவதற்கான வாய்ப்பு வீரர்களுக்கு கிடைக்கிறது. மெதுவான, தாழ்வான ஆடுகளங்கள் எமக்கு அதைச் செய்ய பொருத்தமாக இருக்காது.

என்னை பொறுத்தவரை இன்று (பல்லேகல) ஆடுகளம் சிறப்பாக இருந்தது. நாம் அதிக ஓட்டங்களை பெறுவதை பார்த்தபோதும். நாம் அப்படியாக மிகப்பெரிய ஓட்டங்களை பெற வேண்டும் என்பதோடு பின்னர் அதனை காப்பதற்கு முடியுமாகவும் இருக்க வேண்டும்” என்றும் சில்வர்வுட் குறிப்பிட்டார்.

சில்வர்வுட் கூறியதுபோல், முதல் போட்டியில் இலங்கை அணி 50 ஓவர்களுக்கும் 381 ஓட்டங்களை பெற்றது. சளைக்காத ஆப்கானிஸ்தானும் அந்த ஓட்டங்களை துரத்தியது. கடைசி கட்டத்திலேயே அந்த அணி இலக்கை எட்டுவதில் தவறவிட்டது. எவ்வாறாயினும் இரண்டாவது போட்டியில் இலங்கை அணி 308 ஓட்டங்களை பெற்றபோது, இலங்கை பந்து வீச்சாளர்களால் அதனை நெருக்கடி இன்றி தற்காத்துக் கொள்ள முடிந்தது. இதன்போது ஆப்கான் அணி வெறும் 25 ஓட்டங்களில் கடைசி எட்டு விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

சில்வர்வுட்டுக்கு இந்த முடிவு பெரும் திருப்தியானது. பயிற்சியின் போதுவழங்கப்பட்ட ஆலோசனைகள், திட்டங்களை வீரர்கள் ஆட்டத்தில் முழுமையாக செயற்படுத்தியதாகவே அவர் அதனை பார்க்கிறார்.

“முதல் போட்டிக்குப் பின்னர் மேம்படுத்த வேண்டிய பல விடயங்கள் இருப்பதாக நான் கருதினேன்” என்கிறார் சில்வர்வுட். “எனவே பந்துவீச்சாளர்கள் மாத்திரமல்ல அனைத்து வீரர்களையும் ஒன்றாக அமர வைத்து நாம் கூறும் விடயம் பற்றி ஹோக்–ஐ தரவுகளை பயன்படுத்தி அவர்களுக்குக் காட்டினோம். எந்த இடத்தில், எங்கு நாம் பந்து வீச வேண்டும் அதில் எது வெற்றி அளித்தது எது வெற்றி அளிக்கவில்லை என்பது பற்றியும் அதனை எவ்வாறு சரியாகச் செய்வது என்பது பற்றி நாம் பேசினோம். இரண்டாவது போட்டியில் அவர்கள் அதனை அழகாக செய்தார்கள்.

மற்றது நாம் அதனை முதலாவது மற்றும் ஆறாவது பந்தில் பயன்படுத்தினோம். அதாவது இரு பக்கங்களிலும் ஓட்டங்களை விட்டுக் கொடுப்பதை விடவும், பந்துவீச்சை சிறந்த முறையில் ஆரம்பித்து சிறந்த முறையில் முடிக்க முடியுமா? துடுப்பாட்ட விரர்களுக்கு அழுத்தத்தை கொடுத்து அவர்களின் துடுப்பை சுழற்ற வைக்க முடியுமா? இதன்போது விட்ட இடத்தில் இருந்து செயற்படுவது அடுத்த பந்துவீச்சாளரின் வேலையாக இருக்கும். எனவே, இது துடுப்பாட்ட வீரருக்கு தொடர்ச்சியாக அழுத்தம் கொடுப்பதாக இருக்கும். நாம் அதனை செய்ததை பார்த்தோம் குறிப்பாக இரண்டாவது போட்டியில் அது நிகழ்ந்தது. பௌண்டரிகள் செல்லும் எண்ணிக்கை குறைந்ததை பார்த்தோம்” என்றார்.

டெஸ்ட் மற்றும் டி20 கிரிக்கெட்டுக்கு இடையே இலங்கையின் ஒருநாள் கிரிக்கெட் கடந்த காலங்களில் மோசமாகவே இருந்தது. கடந்த உலகக் கிண்ணத்தில் அதனை தெளிவாக பார்க்க முடிந்தது. அதாவது நீண்ட கிரிக்கெட் போட்டிக்கும் குறுகிய கிரிக்கெட் போட்டிக்கும் இடையிலான சமநிலையை பேணுவதற்கு தவறியதே இதற்கு முக்கிய காரணம் என்று குறிப்பிடலாம். எனவே, 2027 ஆம் ஆண்டு நடைபெறப்போகும் அடுத்த ஒருநாள் உலகக் கிண்ணத்திற்கான அணியை கட்டியெழுப்புவதே தற்போதைய பிரதான இலக்காக உள்ளது.

“நாம் அணியை கட்டியெழுப்ப வேண்டிய கட்டத்தை மீண்டும் எதிர்கொண்டிருக்கிறோம். உலகக் கிண்ணத்திற்கான அணியை கட்டி எழுப்ப வேண்டி உள்ளது. அந்த கட்டுமானத்தில் அனைத்து கற்களும் சரியான இடத்தில் வைக்கப்படுவதை நாம் உறுதி செய்ய வேண்டும்” என்கிறார் சில்வர்வுட். “எனவே, நாம் அந்த இடத்திற்கு வரும்போது நாம் நல்ல இடத்தில் இருப்போம். ஒவ்வொருவரும் அனுபவம் பெற்றிருப்பார்கள், அனைவருக்கும் அவர்களின் பணி என்ன என்பது தெரியவரும் என்பதோடு அந்தப் பயணத்தில் பெற்ற வெற்றிகள் அனைவருக்கும் நம்பிக்கையை தருவதாக இருக்கும்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

உலகக் கிண்ணத்திற்குப் பின்னர் இலங்கை அடிய இரண்டாவது ஒருநாள் தொடராக ஆப்கானுக்கு எதிரான இந்தத் தொடர் அமைந்தது. முன்னதாக சொந்த மண்ணில் சிம்பாப்வேயுக்கு எதிரான ஒருநாள் தொடரிலும் இலங்கை சிறப்பாக செயற்பட்டு 2–0 என தொடரை கைப்பற்றியது.

எனவே ஒருநாள் அணியை கட்டியெழுப்பும் இலங்கையின் திட்டம் இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கிறது. இன்னும் முழு பலமான அணி ஒன்றை இலங்கை எதிர்கொள்ளவில்லை. அடுத்து பங்களாதேஷ் செல்லும் இலங்கை அணி மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டி20 உடன் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடப்போகிறது. இந்த இரண்டு அணிகளையும் ஒப்பிடுகையில் எதிர்வரும் சுற்றுப்பயணம் சவாலானதாக இருக்கும்.



# குறிப்புகள்



## அன்டர்ஸனின் அரிய சாதனை

விசாகாபட்டனத்தில் கடந்த பெப்ரவரி 2 தொடக்கம் 5 ஆம் திகதி வரை நடைபெற்ற இந்தியாவுக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வேகப்பந்து வீச்சாளரான ஜிம்மி அண்டர்ஸனும் விளையாடி இருந்தார். அவர் தனது கன்னி டெஸ்ட் போட்டியில் ஆடியது 2003 இல் லோட்ஸ் மைதானத்தில் நடந்த சிம்பாப்வேயுக்கு எதிரான ஆட்டத்திலாகும்.

ஆனால் விகாசாபட்டனத்தில் ஆடிய இங்கிலாந்து அணியின் இரண்டு வீரர்கள் ஜம்மி அண்டர்சன் தனது கன்னி டெஸ்டில் ஆடும்போது பிறந்திருக்கவே இல்லை. ஒருவர் 2004 ஓகஸ்ட் மாதம் பிறந்த ரெஹான் அஹமது. மற்றவர் 2003 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் பிறந்த சொஹைப் பஷீர்.

கிரிக்கெட் வரலாற்றில் இது அரிதானது என்றபோது புதிதல்ல. டெஸ்ட் போட்டிகளில் இப்படி இரு வீரர்கள் தனது கன்னி டெஸ்டில் ஆடும்போது பிறந்திருக்காத வீரர்களுடன் ஒன்றாகச் சேர்ந்து ஆடி இருக்கிறார்கள். ஒருவர் இங்கிலாந்தின் சகல துறை வீரர் வில்பிரேட் ரோட்ஸ். அவர் தனது கன்னி டெஸ்டில் ஆடியது 1899 ஆம் ஆண்டிலாகும்.

ஆனால் அப்போது பிறந்தே இருக்காத லெஸ் ஆம்ஸ் (1905), லெஸ்லி டவுன்சென்ட் (1903, பில் வொயிஸ் (1909) மற்றும் பொபி வியாட் (1901) ஆகிய வீரர்களுடன் சேர்ந்து ரோட்ஸ் 1929–30 இல் ஜோர்ஜ் டவுனில் நடந்த மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் ஆடி இருக்கிறார்.

இதற்கு பல ஆண்டுகளுக்குப் பின் பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் இம்ரான் கானும் இப்படி நீண்ட காலம் கிரிக்கெட் ஆடி இருக்கிறார். இம்ரான் கான் தனது கன்னி டெஸ்டில் ஆடியது 1971 ஜூன் மாதத்தில். அவர் 1991–92இல் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடினார். அப்போது அவருடன் ஆடிய ஆகிப் ஜாவிட் (1972), மொயின் கான் (1971 செப்டெம்பர்), வக்கார் யூனிஸ் (1971 நவம்பர்) மற்றும் சாஹித் பஸால் (1973) ஆகியோர் இம்ரான் முதல் டெஸ்டில் ஆடியபோது பிறந்திருக்கவே இல்லை.



## நபியின் வயதான சதம்

பல்லேகலவில் இலங்கைக்கு எதிராக நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் ஆப்கானிஸ்தான் சகலதுறை வீரர் முஹமது நபி 136 ஓட்டங்களை பெற்றார். அப்போது முஹமது நபியின் வயது 39 வருடங்களும் 39 நாட்களுமாகும். நிச்சயமாக அவர் ஒருநாள் சர்வதேச போட்டியில் சதம் பெற்ற வயதான வீரர்கள் வரிசையில் இடம்பெறுகிறார் என்பது உறுதி. என்றாலும் அந்த வரிசையில் அவருக்கு ஆறாவது இடமே கிடைத்தது.

இந்தப் பட்டியலில் முதலிடத்தில் இருப்பவர் ஐக்கிய அரபு இராச்சியத்தின் குர்ராம் கான். அவர் 2014–15 இல் டுபாயில் நடந்த ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் போட்டியில் ஆட்டமிழக்காது 132 ஓட்டங்களை பெற்றபோது அவரது வயது 43. என்றாலும் டெஸ்ட் ஆடும் நாடுகளில் அதிக வயதில் ஒருநாள் சதம் பெற்றவர் என்ற சாதனை இலங்கை அணியின் முன்னாள் அதிரடி வீரர் சனத் ஜயசூரியவுக்கு சொந்தமானது. அவர் 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தம்புள்ளையில் நடந்த இந்தியாவுக்கு எதிரான போட்டியில் 107 ஓட்டங்களை பெற்றபோது அவரது வயது 39 ஆக இருந்தது.

மகளிர் கிரிக்கெட்டை பெறுத்தவரை அதிக வயதில் ஒருநாள் சதம் பெற்றவர் என்ற சாதனை நியூசிலாந்தின் பார்பர் பெவெஜ் வசமானது. அவர் 1981–82 உலகக் கிண்ணத்தில் ஒக்லாந்தில் நடந்த சர்வதேச பதினொருவர் அணிக்கு எதிரான போட்டியில் சதம் பெறும்போது வயது 39 ஆக இருந்தது.

# பத்துமின் இலக்கு பெரியது



இலங்கைக்கு ஒருநாள் வரம் கிடைத்தது 1975 உலகக் கிண்ணப் போட்டியில். அன்று தொடக்கம் இன்று வரை 49 ஆண்டுகளில் இலங்கை அணி ஆடிய 900க்கும் அதிகமான போட்டிகளில் வீரர்கள் ஏகத்துக்கு சதம் அடித்திருக்கிறார். ஆனால் எவரும் இரட்டைச் சதத்தை எட்டி இருக்கவில்லை.

ஆப்கானிஸ்தானுக்கு எதிராக கடந்த பெப்ரவரி 09 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது ஒருநாள் போட்டியான, இலங்கை ஆடிய 913 ஆவது ஒருநாள் சர்வதேச போட்டியிலேயே பத்தும் நிசங்க அந்த சாதனையை படைத்தார்.

25 வயதான பத்தும் நிசங்கவுக்கு இரண்டு வயதாக இருக்கும்போது 2000 ஆம் ஆண்டு ஷார்ஜாவில் நடந்த கொகா கோலா சம்பியன்சிப் கிண்ணத்தின் இறுதிப் போட்டியில் சனத் ஜயசூரிய பெற்ற 189 ஓட்டங்களுமே இலங்கை வீரர் ஒருவர் இன்னிங்ஸ் ஒன்றில் பெற்ற அதிகூடிய ஓட்டங்களாக இருந்து வந்தது.

அப்போது விக்கெட்டுக்கு வெளியில் வந்து பந்தை அடிக்க முயன்ற சனத் ஜயசூரிய ஸ்டம்ப் ஆகிய வெளியேறியது பெறும் ஏமாற்றத்தை தருவதாக இருந்தது. என்றாலும் ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் முதல் இரட்டைச் சதத்தை பெறுவதற்கு கிட்டத்தட்ட இன்னும் 10 ஆண்டுகள் காத்திருக்க வேண்டி இருந்தது.

சச்சின் டெண்டுல்கள் 2010 ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவுக்கு எதிரான போட்டியில் ஆட்டமிழக்காது பெற்ற 200 ஓட்டங்களும் ஒருநாள் கிரிக்கெட்டில் பெரும் திருப்பமாக இருந்து. அதனைத் தொடந்து அவ்வப்போது இரட்டைச் சதங்கள் பெறுவது சகஜமாக இருந்தபோதும் இலங்கை அளவில் பத்துமின் இரட்டைச் சதம் முக்கியமானது.

“ஒருநாள் போட்டிகளில் இரட்டைச் சாதம் பெறும் கனவு எனக்கு இருந்தது. எனது கிரிக்கெட் வாழ்வில் இத்தனை விரைவில் அதனை அடைவேன் என்று நான் நம்பவில்லை. அணியிடம் இருந்து கிடைத்த பெரும் ஆதரவுக்கு நன்றியை கூறிக்கொள்கிறேன். எனது தவறுகளை குறைத்து தொடர்ந்து முன்னேற விரும்புகிறேன். எமது துடுப்பாட்ட பயிற்சியாளர் திலின கண்டம்பி புதிய யோசனைகளைத் தந்தது எனக்கு உதவியது” என்று பத்தும் நிசங்க கூறுகிறார்.

நடந்து முடிந்த ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் தொடர் பத்தும் நிசங்கவுக்கு மறக்க முடியாததாக இருந்தது. ஆப்கானிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் போட்டியிலும் அவர் சதம் பெற்றார். அதன்போது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட்டில் வேகமாக 2000 ஓட்டங்களை பெற்ற இலங்கை வீரராகவும் அவர் சாதனை படைத்தார்.

பத்தும் நிசங்கள் 2000 ஒருநாள் ஓட்டங்களை பெறுவதற்கு அவர் 52 இன்னிங்ஸ்களையே எடுத்துக் கொண்டார். தற்போது இலங்கை கிரிக்கெட் தேர்வுக் குழு தலைவராக இருக்கும் உபுல் தரங்க முன்னதாக 63 இன்னிங்ஸ்களில் 2000 ஓட்டங்களை எட்டியதே இலங்கை சாதனையாக இருந்து வந்தது.

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரில் மொத்தமாக 346 ஓட்டங்களை குவித்த பத்தும் நிசங்க தொடர் நாயகன் விருதையும் வென்றார். அதாவது தொடர் ஒன்றில் அதிகூடிய ஓட்டங்கள் பெற்ற இலங்கை வீரர் எனவும் அவர் சாதனை படைத்தார். முன்னர் 1994 ஆம் அண்டு சிம்பாப்வேயுக்கு எதிரான ஒருநாள் தொடரில் ரொஷான் மஹானாம மொத்தமாக பெற்ற 267 ஓட்டங்களுமே சாதனையாக இருந்து வந்தது. சர்வதேச கிரிக்கெட்டிலும் பத்துமின் மொத்த ஓட்டங்கள் வீரர் ஒருவர் பெற்ற நான்காவது அதிகூடிய ஓட்டங்களாக இருந்தது.

“உலகின் மிகச் சிறந்த துடுப்பாட்ட வீரர் ஆக வேண்டும் என்றே நான் விரும்புகிறேன். அதனை அடைவதற்கு என்னால் முடிந்ததைச் செய்வேன். எனக்கு சில இலக்குகள் இருக்கின்றன ஆனால் அவைகளை வெளியே சொல்ல மாட்டேன். என்னுடனேயே வைத்துக் கொள்வேன்” என்று தொடர் நாயகன் விருதை வென்ற பின் ஊடகங்களுக்கு கருத்துக் கூறும்போது பத்தும் நிசங்க குறிப்பிட்டார்.

பத்தும் நிசங்கவின் கிரிக்கெட் பயணம் இப்போது தான் ஆரம்பப் புள்ளியில் நிற்கிறது. இரட்டைச் சதம் பெற்றதற்கென்ன ஒரு தேர்ந்த கிரிக்கெட் வீரராவதற்கு நீண்ட தூரம் பயணிக்க வேண்டி இருக்கும்.

தனக்கு சாதகமான சூழலில் அபாரமாக துடுப்பெடுத்தாடுவதற்கு அப்பால், பரீட்சயமற்ற, சவாலான சூழலிலும் தனது திறமையை வெளிப்படுத்தினாலேயே அவரால் தன்னை நீரூபிக்க முடியுமாக இருக்கும்.

எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

Senthooram
செந்தூரம்
2024 பெப்ரவரி 18 ஞாயிற்றுக்கிழமை





# சிரிக்கச் சிரிக்க இறந்தவர்

தோமஸ் பிரடெரிக் கூப்பர் பிரிட்டன் நாட்டைச் சேர்ந்த பிரபல நகைச்சுவைக் கலைஞர் மற்றும் மந்திர வித்தைக்காரர். அவர் மேடைக்கு வந்தலே ரசிகர்கள் சிரிக்க ஆரம்பித்து விடுவார்கள். 1984 ஏப்ரல் 15 ஆம் திகதி அவரது வாரந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி ஆரம்பமானது. மில்லியன் கணக்கான மக்கள் அந்த நிகழ்ச்சியை தவறாமல் பார்ப்பார்கள். மேடையில் நடக்கும் அந்த நிகழ்ச்சியை மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் நேரடியாகவும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது கூப்பர் திடீரென்று மேடையில் விழுந்தார்□ துடிதுடித்தார்□ அவருக்கு மாரடைப்பு வந்தது. ஆனால் யாரும் அதிர்ச்சி அடைந்தாகவும் அவரை காப்பாற்ற முயற்சிப்பதாகவும் தெரியவில்லை. மாறாக அதுவும் நிகழ்ச்சியின் ஓர் அங்கம் என்று கைதட்டி சிரித்துக் கொண்டிருந்தார்கள். பின்னரே நிலைமை புரிந்தது. அவசரமாக மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது அவர் ஏற்கனவே மரணித்திருந்தார்.

## உலகின் ஒருநாள் செல்வந்தர்




அமெரிக்காவின் பென்சில்வேனியாவைச் சேர்ந்த கிறிஸ் ரெய்னோல்ட் தனது பேய்பால் கணக்கு மிச்சத்தை பார்த்து அவரது கண்களையே நம்ப முடியவில்லை. அவரது கணக்கில் 92,233,720,368,547,800 டொலர்கள் வைப்பு இருந்தது. அதாவது 92 குவாட்ரில்லியன் டொலர்கள். இது ஒட்டு மொத்த உலகின் உள்நாட்டு உற்பத்தியில் 13 மடங்கு அதிகம்.

2013 ஆம் ஆண்டு இந்த சம்பவம் நிகழ்ந்தது. அப்போது உலகின் பெரும் செல்வந்தராக இருந்தவர் மெக்சிகோவின் கார்லொஸ் ஸ்லிம். அவரது சொத்து மதிப்பு 60 பில்லியன் டொலர்கள், ஆனால் அன்று காலை ரெய்னோல்டிடம் ஸ்லிம்மை விடவும் ஒரு மில்லியன் மடங்குக்கு அதிகமான அளவு செல்வம் இருந்தது.

எனவே அவர் அப்போது உலகின் மிகப்பெரிய செல்வந்தராக மாறினார். என்றாலும் அன்று மாலையிலேயே அந்தப் பட்டத்தை இழந்தார். பெய்பால் நிறுவனம் தவறை புரிந்து ரெய்னோல்டின் உண்மையான கணக்கு மிச்சமான 00 எண்ணுக்கு அவரது கணக்கை மாற்றியது.

## உலகின் உயரமான போர்க்களம்



சியாச்சின் பனிமலை 76 கிலோமீற்றர் நீளமான ஒரு மனிப்பாறையாகும். இமயமலையில் காரகோரம் மலைத் தொடரில் அமைந்திருக்கும் இந்தப் பனி மலை உலகின் மிக உயர்ந்த இடத்தில் இருக்கும் போர்க்களம் என்றும் புகழ் பெற்றது. இந்தப் பகுதிக்கு இந்தியா மற்றும் பாகிஸ்தான் இரு நாடுகளும் உரிமை கோருகின்றன.

என்றாலும் அந்தப் பனி மலையில் இராணுவம் மற்றும் ஆயுதங்களை அனுப்பி சண்டை போடுவதை விட ஒதிங்கி இருப்பது நல்லது என்று இரு நாடுகளும் இணங்கின. எனவே இரு நாடுகளும் அங்கு தனது படைகளை அனுப்புவதை தவிர்த்துக்கொண்டன.

என்றாலும் 1984 ஆம் ஆண்டு இந்த பனி மலையை பிடிப்பதற்கு பாகிஸ்தான் திட்டம் திட்டியது. ஆனால் சரியாக பாகிஸ்தான் இந்தப் பனி மலையை பிடிப்பதற்கு ஒரு நாளைக்கு முன்னார் இந்தியா அந்த இடத்தை கைப்பற்றிவிட்டது.

சுவாரஸ்யம் என்னவென்றால், பாகிஸ்தான் பனிப்பாறைக்கு மேல் செல்வதற்கு இராணுவத்திற்கு தேவையான குளிர்கால ஆடைகளை தயாரிக்க லண்டனில் உள்ள ஆடை உற்பத்தி நிறுவனம் ஒன்றிடமே கொள்வனவுக் கோரலை செய்தது. ஆனால் பாருங்கள் அதே நிறுவனத்திலேயே இந்திய இராணுபவமும் ஆடை வாங்குவது பாகிஸ்தானுக்கு தெரியாது.

'கடைசியில் மண்டை மேல இருக்க கொண்டையை மறந்துட்டனே' என்ற வடிவேலு கதையாகிவிட்டது.

## ஊழியர்கள் லாபம் கண்ட சம்சுங்கின் பெரும் தவறு



சம்சுங் நிறுவனம் 2018 ஆம் ஆண்டு 100 பில்லியன் டொலர் பெறுமதியான பங்குகளை தவறுதலாக ஊழியர்களுக்கு வழங்கியது. நிறுவனத்தின் பங்குகளுக்கு உரிமை பெறும் திட்டத்தில் பங்கேற்ற சுமார் 2,000 ஊழியர்களுக்கு இலாபப் பங்குகளை பகிர்ந்து கொடுக்க முயலும்போதே இந்தத் தவறு நிகழ்ந்தது.

அந்த ஊழியர்களுக்கு 1,000 தென் கொரிய வொன்களை அதாவது கிட்டத்தட்ட ஒரு டொலரை கொடுப்பதற்கு பதில் 2.8 பில்லியன் டொலர் பங்குகளை கொடுத்துவிட்டது. இந்தப் பங்குகள் 112.6 டிரில்லியன் வொன் பெறுமதியானது அல்லது நிறுவனத்தின் சந்தை மூலதனத்தை விட 30 மடங்கு அதிகமாகும்.

37 நிமிடங்களின் பின்னரே நிறுவனம் இந்தத் தவறை கண்டறிந்தது. என்றாலும் இந்த இடைவெளிக்குள் 16 ஊழியர்கள் தமக்குக் கிடைத்த பங்குகளை தலா 9 மில்லியன் டொலர்களுக்கு விற்றுவிட்டார்கள். இதனால் சம்சுங்கின் பங்குகள் ஒரே நாளில் 11 வீதம் வீழ்ச்சி கண்டது.




## கணக்கு ஆபத்தானது

1983 ஆம் ஆண்டு ஒரு சாதாரண கணக்குப் பிரச்சினை கனடா விமானம் ஒன்றை விபத்தின் விளிம்பு வரை அழைத்துச் சென்றது. ஏயார் கனடா 5143 விமானம் பறந்து கொண்டிருக்கும்போது நடு வானில் வைத்து எரிபொருள் தீர்ந்துவிட்டது. அதுவும் 41 ஆயிரம் அடி உயரத்தில் இந்தப் பயங்கரம் நிகழ்ந்தது.

விமானியின் சமயோசிதத்தால் எரிபொருள் இல்லாத விமானத்தை கைவிடப்பட்ட ஓடுபாதை ஒன்றில் யாருக்கும் உயிராபத்து இல்லாமல் தரை இறக்கினார். விமானத்தின் முன் பக்கம் தரையில் உராய்ந்தபடி தரையிறங்கியது.

விமானத்தில் எரிபொருள் தீர்ந்ததற்கு என்ன காரணம் என்று தேடிப் பார்த்தால், எரிபொருளை நிரப்புவதில் ஏற்பட்ட கணக்கு குழப்பமே பிரச்சினையாக இருந்தது.

அப்போது கனடா இம்பீரியல் அலகில் இருந்து மெற்றிக் முறைக்கு மாறிக்கொண்டிருந்தது. எனவே எரிபொருள் நிரப்பும்போது ஒரு கணக்கு முறைக்கு பதில் மற்றொரு கணக்கு முறையில் நிரப்பியதால பாதி அளவே நிரம்பி இருந்ததை எவரும் அவதானிக்கவில்லை.

நண்பர் 1 : பெப்சி குடிக்கும்போது அவர் ஏன் டென்டுல்கரை கையில் புடிச்சிருக்காரு..?

நண்பர் 2 : டென்டுல்கர் ஓப்பன ராச்சே.. அதான்.



தொண்டன் : தலைவரே புது வீடு கட்டி பால்தான் காய்ச்சனும் சாராயம் காய்ச்ச கூடாது.

தலைவன் : பழைய ஞாபகத்துல பண்ணிட்டேன்.



பையன் : உங்க குடும்ப நன்மையை உத்தேசித்து இந்தக் கேள்வி, எப்ப நீங்க கல்யாணம் பண்ணிக்கப் போறீங்க ?

பெண் : அதைக் கேட்க நீ யாரு ?

பையன் : உங்க தங்கையோட லவ்வர் தான்.



ராணி : ஓங்க வீட்டு டி.வில ராத்திரி பத்துமணி நியூஸ் வரும்போது டி.வில படம் ஏன் சின்னதா தெரியுது

வேணி : அது செய்திச் சுருக்கம் தானே அதான் அப்படித் தெரியுது !



நீதிமன்றத்தில் :

கப்பல் கார்த்திக் : ஏன் பகலில் திருடுனே?

சதிஸ் : தொழிலுக்கு வந்த பின் ராத்திரி பகல்னு பார்க்க கூடாதுன்னு என்னோட குரு சொல்லிருக்கார், நான் 24/7 சர்விஸ் பண்ணுவேன் ஐயா





இயக்குனர் : இந்தப் படத்துல நன்றியுள்ள ஒரு நாய் காணாமப் போயிடுது சார். கடைசியில, அதுவாவே சில நாய்ங்ககிட்ட விசாரிச்சு வழி கண்டுபிடிச்சு வீட்டுக்குத் திரும்பிடுது!"

கதாநாயகன் : "படத்தோட பேரு?"

இயக்குனர் : "ஜிம்மி ரிடர்ன்ஸ்!"

நாயகன் : எப்படிடா உங்க மெட்ராஸ் டீரிப், அத்தை வீட்டுல ஜமாய்ச்சிங்களா ?

மழைக்காதலன் : மண்ணாங்கட்டி ! எங்களை லாரில தண்ணி பிடிக்கவும் தெரு ப்ம்புல தண்ணியடிக்கவும் விட்டுட்டு நாள்பூரா அத்தையும் மாமாவும் ஊரு சுத்திட்டு வந்தாங்க

ரமனன் : அவர் ரொம்ப குண்டு தான் ஆணா அதுக்காக அந்த ஹோட்டல்ல அவரை இப்படி அவமானப்படுத்தியிருக்கக் கூடாது

பாக்கி : அப்படி என்ன பண்ணீங்க

ரமனன் : மெனுவுக்கு பதிலா "கொடேஷன்" குடுத்தாங்களாம்





நண்பர் 1 : அது ஓர் அழுகை சினிமா. படம் பார்க்கும் போது அழுதுவிட்டேன்!

நண்பர் 2 : எந்த இடத்தில்?

நண்பர் 1 : உட்கார்ந்து கொண்டு படம் பார்த்த அதே இடத்தில் தான்.

மாலா : தயிர் ஏன் வெள்ளையா இருக்கு?

கலா : ஏன்னா அதைத் தான் தோய்க்கிறாங்களே. அதுதான்



தாத்தா : நாய்க்கு ஒரு கால் இல்லைன்னா எப்படிக் கூப்பிடுவாங்க

பேரன் : நொண்டி நாய்ன்னு, மூணுகால் நாய்ன்னு கூப்பிடுவாங்க

தாத்தா : இல்ல... நய் ன்னு கூப்பிடுவாங்க.

ஜோன்ஸ் : படத்தின் முடிவில் தற்கொலை செய்துகொள்கிறார்

பீன்ஸ் : யார் வில்லனா?? கதாநாயகனா??

ஜோன்ஸ் : தயாரிப்பாளர்

ரமனன் : ஒசிப் பத்திரிகை பாக்கற கூட்டம் ஒவரா போயிருச்சா .. .. .. எப்படி ?

முராரி : பக்கத்து வீட்டுப் பிரமுகருக்குக் குற்றப்பத்திரிகை வந்துருக்கு அதைப் படிக்க ஒரே கூட்டம்






ரமனன் : அது என்ன கோல்டு சாம்பார்...?

வேலு : இதிலே 24 கேரட் போட்டிருக்கு அதான்







அனல் சகோ : டாக்டர், நாலம் நம்பர் பேஷண்டுக்கு முன்னாடி ஆப்ரேஷன் பண்ணிட்டிங்க

டாக்டர் வாத்தி : இதுக்கு போய் ஏன் இவ்ளோ பதற்றப்படறே ?

அனல் சகோ : இல்ல டாக்டர் முதுகுல ஆப்ரேசன் பண்ணுறதுக்கு பதிலா முன்னாடி வயித்துல பண்ணிட்டிங்க !

ஆசிரியர் : மாலா, ஆறில் பத்து போகுமா?

மாலா : போகும் சார்!

ஆசிரியர் : எப்படி?

மாலா : எங்க வீடு ஆத்துக்குப் பக்கத்திலேதான் சார் இருக்கு. எங்கம்மா தினமும், பத்துப் பாத்திரத்தை அங்கே தான் தேய்ப்பாங்க

வேலு : நீங்கள் எப்பொழுதுமே இப்படித் தான் திக்குவீர்களா?

பாக்கி : எப்பொழுதும் இல்லை. டாக்டர் பே.... பே . . சு . . ம் பொழுது ம.... மட் . . டு . . . ந்தான்.







# சிரேஷ்ட ஊடகவியலாளர் எம். இந்திரஜித்தின் ஊடக வழிகாட்டி நூல் வெளியீட்டு விழா














சிரேஷ்ட ஊடகவியலாளர் எம். இந்திரஜித் சிங்கள மொழியில் எழுதி வெளியிட்ட ஊடக வழி காட்டி நூல் வெளியீட்டு விழா நேற்று மாலை கொழும்பு நூலக கேட்போர் கூடத்தில் நடை பெற்றது. ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தனவுக்கு நூலாசிரியர் சிறப்புப் பிரதி ஒன்றினை வழங்குவதையும், இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் நூலின் முதல் பிரதியை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடமிருந்து பெற்றுக் கொள்வதையும், முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க, பாராளுமன்ற உறுப்பினர் எம். எம் முஷாரப், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ் ஆகியோர் கௌரவப் பிரதிகளை பெற்றுக் கொண்டதையும் படங்களில் காணலாம். படம் சுதத் மலவீர

# கவிஞர் பொத்துவில் அஸ்மின் எழுதிய புதிய அல்பம் பாடல் "மாமாகுட்டிமா"

'தேனிசைத் தென்றல்' தேவா குரலில் ஸ்ரீ காந்த் தேவா இசையில் கவிஞர் பொத்துவில் அஸ்மின் வரிகளில் "மாமாகுட்டிமா" பாடல் புரோமோ வெளியானது.

தனியிசை பாடல்கள் மூலமாகவும் தமிழ்த் திரைப்பட பாடல்கள் வாயிலாகவும் உலகெங்கும் உள்ள தமிழர்கள் மனங்களில் இடம்பிடித்துள்ள கவிஞர் பொத்துவில் அஸ்மின் எழுதிய புதிய அல்பம் பாடல் "மாமாகுட்டிமா" புரோமோ வெளியாகியுள்ளது.

லண்டனைச் சேர்ந்த தொழிலதிபரும் சமூக சேவகருமான DR. மாலாகுமார் தனது படைப்பகத்தின் சார்பில் தயாரித்துள்ள இந்த பாடலுக்கு தேசிய விருது பெற்ற இசையமைப்பாளர் ஸ்ரீகாந்த் தேவா இசையமைத்துள்ளார். இந்த உற்சாகமிக்க பாடலை அவரது தந்தையும் பிரபல இசையமைப்பாளருமான தேவா தனது காந்த குரலில், பிரத்யேக ஸ்டைலில் பாடியுள்ளார்.

விஜய் ஆண்டனி நடித்த' நான்' திரைப் படத்தில் இடம்பெற்ற 'தப்பெல்லாம் தப்பே இல்லை' பாடலின் மூலம் தமிழ் சினிமாவில் அறிமுகமான கவிஞர் பொத்துவில் அஸ்மின், சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் நடித்த 'அண்ணாத்த', அஜித் குமார் நடித்த 'விஸ்வாசம்' உள்ளிட்ட படங்களுக்கு எழுதிய புரோமோ பாடல்கள் ரசிகர்களால் கொண்டாடப்பட்டன.




'முத்து முத்து கருவாயா', 'தாகம்தீர வானே இடிந்ததம்மா,' 'சண்டாளனே', 'கண்ணத்தொறந்ததும் சாமி' ஆகியவை அஸ்மின் எழுதிய குறிப்பிடத்தக்க பாடல்களாகும். மேலும், சமீபத்தில் இலங்கையில் இருந்த வெளியாகி உலகெங்கும் டிரெண்ட் ஆன 'ஐயோ சாமி நீ எனக்கு வேணாம்... பொய் பொய்யாய் சொல்லி ஏமாத்தினது போதும்' பாடலும் இவர் எழுதியது தான்.

'முத்து முத்து கருவாயா' மூலம் ஏற்கனவே வெற்றிப் பாடலைக் கொடுத்துள்ள ஸ்ரீகாந்த் தேவாஅஸ்மின் கூட்டணியில் உருவாகியுள்ள புதிய பாடல் இசை ரசிகர்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராப் பிரசாத் இயக்கியுள்ள இந்த அல்பம் பாடலின் புரோமோவினை நடிகர் ஜெய் வெளியிட்டு வைத்தார்.

இது பற்றி பாடலாசிரியர் பொத்துவில் அஸ்மின் கூறும்போது.

மிகச்சிறிய வயதில் இருந்தே தேவாவின்

தீவிர ரசிகன் நான். அவர் பாடிய பாடல்களை கெசட்டில் போட்டுக்கேட்டு கொண்டாடிய காலம் ஒன்றிருந்தது.




இப்போது அவர் எனது பாடலை பாடுகின்றார். இது நான் பெற்ற பாக்கியம்.

மிக நீண்ட இடைவெளிக்குப்பிறகு தேவாவின் சாரின் ரசிகர்களை உற்சாகப் படுத்தும் பாடலாக நிச்சயம் இப்பாடல் இருக்கும். ஸ்ரீகாந்த் தேவா மிகவும் ஜன ரஞ்சகமாக இப்பாடலுக்கு இசையமைத்துள்ளார் என்று கூறினார்.

# மின் துண்டித்த வீடுகளுக்கு மீள மின்சாரம் வழங்க உதவிய மனிதநேயன்

## ஹாசிம் உமர் பௌண்டேசன் ஆற்றிய பணிக்கு பாராட்டு

பணம் படைத்தவர்கள் மனம் படைத்தவர்களளாக இருப்பதில்லை என்கின்ற தத்துவத்தை பொய்யாக்கிய மனிதர்தான் புரவலர் ஹாசிம் உமர். சில ஆண்டுகளுக்கு முன்னர்தான் எனக்கு அவருடனான நெருக்கமான உறவு ஆரம்பித்தது. யதார்த்தவாதி பொதுசனவிரோதி என்ற அடிப்படையில் அவர் மீதான சிலருடைய விமர்சனங்கள் தவறானவை என்பதை அவருடன் நெருக்கத்தை ஆரம்பித்த சில நாட்களுக்குள்ளேயே அறியமுடிந்தது.

ஹாசிம் உமர் என்கின்ற ஒரு தனி மனிதரிடம் காணப்படும் மனிதநேயத்தைக் கண்டு வியப்பாக இருந்தது. மின்சாரம் துண்டிக்கப்பட்டு இருளில் மூழ்கிக் கிடக்கும் வீடுகளுக்கு அவரது தலைமையில் இயங்கும் 'ஹாசிம் உமர் பௌண்டேசன்' ஊடாக மீண்டும் மின்விநியோகத்தை வழங்கும் மனிதநேய நிகழ்ச்சித் திட்டத்தை எனது தலைமையில் காத்தான்குடி, புதியகாத்தான்குடி, பாலமுனை, பூநொச்சிமுனை, மஞ்சந்தொடுவாய், காங்கேயன்ஓடை, ஒல்லிக்குளம், சிகரம், கீச்சான்பள்ளம் உட்பட சில கிராமங்களில் ஆரம்பிக்கப்பட்டது. மின்சாரம் துண்டிக்கப்பட்டு மீண்டும் மின்விநியோகத்தைப் பெற வசதியற்ற குடும்பங்கள் இதனால் பயனடைந்தன. மாதக்கணக்கில் கைக்குழந்தைகளுடன் இருளிலே நுளம்புக் கடிக்கும், வியர்வைக்கும் மத்தியில் சீவியத்தை நடத்திவரும் எத்தனையோ குடும்பங்கள் இம்மனிதநேய பணியினால் நன்மையடைந்துள்ளன.



மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் தமது வீட்டைச் பூட்டி விட்டு உறவினர்களின் வீடுகளில் தஞ்சமடைந்து அவலங்களை சுமந்து வாழும் பல குடும்பங்கள் காணப்பட்டன. மின்சாரம் துண்டிக்கப்பட்டதால் கணவன், மனைவிக்கு இடையே ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் பிரிந்து வாழும் குடும்பங்கள், வீட்டில் மின்சாரம் இன்மையால் தெருவிளக்கில் கற்கும் குழந்தைகள் என்றெல்லாம் எத்தனையோ அவலங்களைக் காண முடிந்தது.




இத்தகைய கஷ்டங்களைச் சுமந்து வாழும் பல குடும்பங்களின் இருள் சூழ்ந்த வாழ்க்கைக்கு ஹாசிம் உமர் பௌண்டேசனின் மீள்மின்சாரம் வழங்கும் திட்டம் பாரியளவிலான நலன்களை ஏற்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தை காத்தான்குடியையும் அதனைச் சூழவுள்ள கிராமங்களிலும் முன்னெடுத்து வரும் முன்னாள் காத்தான்குடி நகர சபை உறுப்பினரும், ஹாசிம் உமர் பௌண்டேசன் கிழக்கு மாகாண பணிப்பாளரும், மனிதம் சிறீலங்கா நிறுவன தலைவருமான சிரேஷ்ட ஊடகவியலாளர் ரீ.எல்.ஜவ்பர் கான் அவர்களின் சேவையை பலரும் பாராட்டியுள்ளனர்.

# கலைஞர் ஸ்ரீ சங்கர் நினைவு தின நிகழ்வு பழைய நகர சபை மண்டபத்தில் 25 ஆம் திகதி



கலைஞர் ஸ்ரீ சங்கரின் 44ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு கலைஞர் ஸ்ரீசங்கர் நற்பணி மன்றம் வருடாந்தம் நடத்தும் நினைவு தின நிகழ்வு எதிர்வரும் 2024.02.25ஆம் திகதி மாலை 5 மணிக்கு கொழும்பு 11, புறக்கோட்டை, ஐந்துலாம்புச் சந்தியில் உள்ள கொழும்பு பழைய நகர சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேடை நாடகம், சினிமா என தனது நடிப்புத் திறனை வெளிப்படுத்தியவர் கலைஞர் ஸ்ரீசங்கர். இ வரது நினைவு தினத்தை கடந்த 44 ஆண்டுகளாகத் தொடர்ந்து நடத்தி வருபவர் இவரது நண்பர் வீ. ஷண்முகராஜா. இவர், மேடை நாடக ம், சினிமா என தனது நடிப்பாற்றலை வெளிக்காட்டி வருபவர். கலைஞர் ஸ்ரீசங்கரின் நினைவு தினம் வருடாந்தம் தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீசங்கர் யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்த ஒரு நடிகர். இவர் அந்தனி ஜீவாவின் முள்ளில் ரோஜா, பறவைகள், அக்கினிப்பூக்கள் ஆகிய நாடகங்களில் நடித்ததுடன் கலைஞர் கலைச்செல்வனின் கொள்ளைக்காரன், ஒரு மனிதன் ஒரு உலகம் போன்ற நாடகங்களிலும் மஞ்சள் குங்குமம், குத்துவிளக்கு ஆகிய திரைப்படங்களிலும் நடித்திருக்கின்றார்.

இவர் சிவாஜி கணேசனின் ராஜராஜ சோழன் படத்தில் ஈழத்துப் புலவராகவும் நடித்தார். "கொள்ளைக்காரன்", "ஒரு மனிதன் இரு உலகம்" முதலான பல நாடகங்களை மேடையேற்றினார்.


இலங்கையின் தமிழ்த் திரைப்படத்துறைக்கும் நாடகத்துறைக்கும் பாரிய பங்களிப்புகளை செய்த ஸ்ரீசங்கர். தேயிலை ஏற்றுமதி செய்யும் நிறுவனமொன்றில் தேயிலை பரிசோதகராக பணியாற்றியவர். கலைத்துறையின் மீது இவர் கொண்ட தீராத பித்தத்தினால் அப்போதே மாதாந்தம் ஆயிரம் ரூபாய் சம்பளத்தை அள்ளித் தந்த தொழிலையையும் தன்னிடம் இருந்த நிதியையும் அர்ப்பணித்தவர்.

இவரது நினைவு நாள் நிகழ்வை கடந்த 43ஆண்டுகளாக இடைவிடாது தொடர்ந்து நடத்தி வருபவர் இவரது நண்பர் ஸ்ரீ சங்கர்.

இவர் ஸ்ரீசங்கர் நடித்த நாடகங்களில் அவருடன் இணைந்து நடித்தவர். இவரது நண்பர் வீ. ஷண்முகராஜா இவருக்கு உருவச்சிலையும் நிறுவியிருக்கிறார்.

ஸ்ரீசங்கர் வழங்கிய உதவிகளை மறவாது நினைவு கூர்ந்து இவர் ஸ்ரீசங்கரின் நினைவு தின நிகழ்வை கொழும்பில் நடத்தி வருபவர்.

ஸ்ரீசங்கர் என்ற இந்த கலைஞரின் இயற்பெயர் வைத்தியலிங்கம். இவர், இலங்கையில் எப்படியும் ஒரு தமிழ்ப்படத்தைத் தயாரிக்கவேண்டும் என்று ஆவலுடன் துடித்துக்கொண்டு இருந்தார். கிங்ஸ்லி எஸ்.செல்லையா, ஸ்ரீசங்கர், ஏ. சுந்தர ஐயா, பதூர்தீன், பரஞ்சோதி ஆகியோர் ஒரு நாள் ஒன்று கூடி ஒரு தமிழ்ப் படமொன்றை தயாரிக்கத் திட்டமிட்டார்கள். இந்த படத்தை தயாரிக்க 'கீதாலயம் மூவீஸ்' என்ற பட நிறுவனத்தை ஆரம்பித்து இந்த திரைப்படத்தை தயாரித்தார்கள்.



முனைவர் கே. ஈஸ்வரலிங்கம்...✍
easwarantkn@gmail.com
வட்ஸ்அப்: 0773124543



பட்டமளிப்பு விழாவில் தாஜ் சமுத்ரா ஹோட்டல்



துபாயில் சங்கவி பிலிம்ஸ் பணிப்பாளர் சுரேஸ்



நடன கலைஞர்கள்







சகா





# பிடித்ததை செய்து கொண்டிருந்த போது கிடைத்த ஊடகத்தில் பிடிப்பு அதிகரிக்க ஆரம்பித்தது



பாத்திமா நளீரா


**ஊடகத்துறை என்பது உங்களது கனவா அல்லது ஆரம்பமாக வேரேதும் கற்றலில் ஆர்வம் இருந்ததா.... உங்களைப்பற்றி சற்று விரிவாக கூறுங்கள்?**

எனது பெயர் ஷாலினி சுப்பையா பிள்ளை (ஷாலினி பிள்ளை) நான் கிளிநொச்சியை பிறப்பிடமாக கொண்டவள். சிறுவயதிலேயே கொழும்புக்கு வந்துவிட்டேன். எனது தந்தையார் சுப்பையா பிள்ளை அம்மா சாந்தி சுப்பையா பிள்ளை அக்கா சரண்யா பிரஷாந்த், அண்ணா யஷிதரன் எனது தந்தையார் தவறி 5 வருடங்கள் ஆகின்றன. எனக்கு சிறு வயதிலிருந்தே பரத நாட்டியத்தில் மிக பெரிய ஆர்வம் இருந்தது. என்னுடைய 8 வயதிலிருந்து பரத நாட்டியம் கற்க ஆரம்பித்தேன். பின்னர் பரதநாட்டியத்தில் இருந்த ஆர்வம் அதிகரிக்க அதிலேயே படிப்பை தொடர்ந்தேன்.

பாடசாலை காலத்தில் எனக்கு பேச்சு திறன் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. பொதுவாக என்னிடம் எதையும் விமர்சிக்கும் விவாதிக்கும் பழக்கம் உண்டு. ஆனால் ஊடகத்தின் மீதான ஆர்வம் என்னிடம் பெரிதாக இருந்ததில்லை. பிடித்ததை செய்து கொண்டிருந்த போது கிடைத்த ஊடகத்தில் பிடிப்பு அதிகரிக்க ஆரம்பித்தது. அதன் பின்னர் எனது முழு நேர பணியாக ஊடகம் உருவானது.

**தற்போது ஊடகத்துறையில் உங்களை முழுமையாக ஈடுபடுத்தி வருகிறீர்களா அல்லது வேரேதும் துறைகளிலும் ஆர்வம் காட்டுகிறீர்களா?**

முழுமையாக ஊடகத்துறையில் தான் பணியாற்றி வருகின்றேன். வசந்தம் தொலைக்காட்சியில் நிகழ்ச்சி தொகுப்பபாளராகவும் மற்றும் செய்தி வாசிப்பாளராகவும் பணியாற்றி வருவதுடன் விளம்பரங்கள், குறுந்திரைப்படங்கள், ஆவணப்படங்கள் போன்றவற்றுக்கு குரல் வழங்கும் அதே நேரம் அரச மற்றும் தனியார் நிகழ்வுகளை தொகுத்து வழங்குவது போன்றன தற்போது என் தொழிலாக காணப்படுகின்றது.

**தனியார் வெளிநாட்டு வானொலியுடன் ஆரம்பமான உங்களது பயணத்தை தொலைக்காட்சியுடனும் இணைத்துக் கொண்டிருக்கிறீர்கள் அதனைப்பற்றி....?**

எனது 20 ஆவது வயதில் தனியார் வெளிநாட்டு வானொலியில் என்னுடைய ஊடகப் பயணம் தொடங்கியது. என்னுடைய 22 வயதில் தொலைக் காட்சியில் பணியாற்ற ஆரம்பித்தேன். அதன் பின் மீண்டும் மற்றுமொரு தனியார் வெளிநாட்டு வானொலியில் அறிவிப்பாளராக இணைந்தேன்.

பின்னர் தனியார் தொலைக்காட்சி ஒன்றில் இணைந்து சுமார் 5 வருடங்கள் செய்தி வாசிப்பாளராகவும் செய்தி தயாரிப்பாளராகவும் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் பணிபுரிந்தேன். தற்போது நான் வசந்தம் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகவும் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் பணிபுரிந்து வருகின்றேன்.

**வசந்தம் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராக இருக்குறீர்கள். செய்தி வாசிக்கும் திறனில் யாரையாவது பின்பற்றுகிறீர்களா?**

பொதுவாக என்னுடைய செய்தி வாசிப்பிலோ அல்லது நிகழ்ச்சித் தொகுப்பிலோ எவருடைய சாயலும் இருக்கக்கூடாது என்பது எனது விருப்பம்.

செய்தி மற்றும் நிகழ்ச்சி மீதான ஆர்வம் இல்லாமல் நிச்சயமாக அதனை எம்மால் சிறப்பாக செய்ய முடியாது என்பது தான் எனது கருத்து. இது எந்த தொழிலுக்கும் பொருந்தக்கூடிய ஒன்று என நினைக்கின்றேன்.

**விருதுகள் பற்றி அழகான கருத்துக்கள் கொண்டிருக்குறீர்கள். உண்மையில் விருதுகள் ஒருவரின் ஆளுமைத்தனத்தை எடை போட முடியுமா?**

கலைஞர்களுக்கு அங்கீகாரம் கொடுப்பது விருதுகள் அந்த கருத்தில் மாற்றமில்லை ஆனால் விருதுகளை கொண்டு மட்டும் ஒருவரின் திறமையை மதித்து விட முடியாது. நீங்கள் நன்றாக செய்தி வாசிக்கின்றீர்கள் என ஒருவர் என்னை பார்த்து மனதார கூறினால் அதுவும் என்னை பொறுத்த வரை ஒரு விருதுதான்.

ஆகவே எனது பணியில் நான் முழுமையாக ஈடுபட்டு கிடைக்கும் மனநிறைவையே என் முதல் விருதாக ஏற்றுகொள்வேன். அந்த வகையில் நீங்கள் கொடுத்த இந்த கௌரவத்திற்கு நன்றி.

**நீங்கள் ஊடகத்துறையில் காலடி எடுத்து வைத்த பின்னர் முகம் கொடுத்த சவால்கள் என்ன?**

போட்டி நிறைந்த ஊடகத்துறையில் எதை செய்தாலும் விமர்சனம் காணப்படும் அது மக்களிடம் இருந்து வரலாம் நம்மோடு பணியாற்ற கூடியவர்களிடம் இருந்தும் வரலாம் அதை நமக்கு ஆரம்பத்தில் எற்றுக் கொள்வதற்கு கடினமாக இருந்தாலும் அந்த விமர்சனங்கள் நம் வளர்ச்சிக்கு பெரும் வழி வகுக்க கூடியது என்பது என் கருத்து. அதே நேரம் சகிப்புத் தன்மை பொறுமை மிக முக்கியமாக ஏற்ற இறக்கங்களை தாங்கி கொள்வது. அவற்றை ஏற்று கொள்வதற்கான மனப்பாங்கு தற்போது என்னிடம் உருவாகியுள்ளது.

**நீங்கள் நன்றியுடன் நினைவு கூற விரும்பினால் யாரை நினைவு கூறுவீர்கள்?**

இத் தருணத்தில் வசந்தம் தொலைக்காட்சி அலைவரிசை பிரதானி k.புண்ணியமூர்த்தி மற்றும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களான k. ஜெயகாந்தன் S.தினேஸ் மற்றும் உதவி தயாரிப்பாளர்கள் சக தொகுப்பாளர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்வதோடு ஐவுN குழுமத்திற்கும் நன்றியை தெரிவத்துக்கொள்கின்றேன்.

அதே வேளை இந்த ஊடகத்துறை பயணத்திற்கு ஆதரவு கொடுத்த அனைவருக்கும் என் அன்பு கலந்த நன்றி.

**ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையே சமனில்லா தன்மையின் வெளிப்பாடே பெண்களுக்கெதிரான வன்முறையா?**

இங்கு ஆணுக்கு பெண் பெண்ணுக்கு ஆண் சமம் என்பதை விட இந்த உலகில் எல்லோரும் சமம் என்று எண்ணுவது ஆரோக்கியமானது என நான் எண்ணுகின்றேன். பெண்களுக்கெதிரான வன்முறைக்கு முழுமையாக ஆண்களை மட்டும் காரணமாக கூற முடியாது சில சமயம் பெண்களே பெண்களுக்கு எதிரான வன்முறைகளை மேற்கொள்கிறார்கள் என்பதும் கவலைக்குரிய விடையம்.அந்தளவில் இங்கு மாற்றம் நம்மில் இருந்து ஏற்படும் பொழுது எல்லாமே நமக்கு பிடித்தவாறு மாறும் என்பது என் கருத்து. அதே நேரம் ஊடகத்தில் பெண்களுக்கு பாலியல் சார்ந்த அச்சுறுத்தல் காணபடுகிறது என்கின்ற அச்சம் பொதுவாக காணப்படுகிறது என் அனுபவத்தில் இது ஊடகம் குறித்தான ஒரு தவறான எண்ணம் என்றே கூறுவேன்.

**இந்த சமுதாய கட்டடம் ஆண்களைவிட பெண்களை ஒருபடி தாண்டியே பார்க்க நினைக்கிறது இல்லையா.. இதில் நீங்கள் எதுவும் அனுபவபட்டு இருக்கின்றீர்களா?**

இந்த சமூதாய கட்டடம் என்பதில் பெண்களும் உள்ளடங்குகின்றார்கள் இல்லையா பெண்கள் பெண்களுக்கு எதிரியாக இருப்பதை முதலில் இல்லாமல் செய்தால் இந்த சமூதாய கட்டடம் உருவாக்கி வைத்திருக்க கூடிய சிந்தனையை நம்மால் இலகுவாக மாற்ற முடியும்.

**உங்கள் எதிர்கால கனவுகள் திட்டங்கள் என்ன?**

ஊடகத்துறையில் ஓர் உயர்ந்த பதவியில் அமர வேண்டும் என்பதே. அதற்கான உழைப்பை நேர்மையாக முழுமையாக வழங்க வேண்டும் என்பதே.

# கட்டார் வாழ் இளைஞர்களால் குறுந்திரைப்படம் வெளியீடு!













வசீகரன் பிரதான நடிப்பில் தமிழ்மணியனின் இயக்கத்தில் "பக்கம் 49" எனும் குறுந்திரைப்படம் நேற்று முன்தினம் (14) கட்டாரில் வெளியிடப்பட்டது.

மன்சூர் அலி, சுபா சிவக்குமார் தயாரிப்பில் இப்படத்தில் ராஜ் குமார், சிவபாலன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். நிகழ்வில் கட்டார் தமிழர் சங்கத்தின் தலைவர் மணி பாரதி, ICBF அமைப்பின் ஆலோசகர் ராம செல்வம், கட்டார் முத்தமிழ் மன்றத்தின் குரு ஸ்ரீ, கட்டார் தமிழர் சங்கத்தின் பிரதிநிதிகளான பாண்டியன், ரமேஷ் பரமசிவம், ஆருத்ரா சிலம்பக் கலைக்கூடத்தின் தலைவர் சரவணன், V2 நடனக் குழுவின் ஆசிரியர் வெங்கட் பிரபு, துல்லல் பறை குழுவின் மகேஸ், தமிழ் மருத்துவர் சுரேஷ் ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகை பணிப்பாளர் ஜே.எம்.பாஸித், முகாமையாளர் அஸ்வர் ரிஸ்வி மற்றும் ஊடகத்தின் உறுப்பினர்களும் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வை திரைப்பட குழுவினர் சிறப்பாக ஏற்பாடு செய்து இருந்தனர்.

# மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாட்டு ஹரோ மன்ற கௌரவிப்பு நிகழ்வு













(ஏறாவூர் நிருபர் நாஸர்)

இலண்டன் மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி வழிபாட்டு ஹரோ மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கௌரவிப்பு நிகழ்வு மட்டக்களப்பு ஏறாவூர் காட்டு மாஞ்சோலை மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் ஜஸ்டினா முரளிதரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார். பாடசாலை மாணவர்கள், கல்விமான்கள், சமூக பற்றாளர்கள், பல்துறைசார் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களும் கௌரவிக்கப்பட்டனர். ஆதிபராசக்தி வழிபாட்டு ஹரோ மன்றத்தின் மாவட்ட இணைப்பாளர் கே. துரை ராஜா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, கபொத சாதாரண தரம் மற்றும் உயர் தரம் ஆகிய பொதுப்பரீட்சைகளில் சிறந்த பெறுபேறுகளைப்பெற்றுக்கொண்ட மாணவர்கள், புறக்கிருத்திய செயற்பாடுகளில் சாதனை யீட்டிய மாணவர்கள், பல்கலைக்கழகத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர்களும் சான்றிதழ்கள் மற்றும் மடிக்கணினிகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறந்த தொலைக்காட்சி ஊடகவியலாளர்களாகத் தெரிவுசெய்யப்பட்ட எமது பிராந்திய செய்தியாளர் அப்துல் நாஸர் மற்றும் தனியார் தொலைக்காட்சி நிறுவனத்தின் செய்தியாளர் லியோன் ஆகியோரும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

அத்துடன் வறிய குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் மற்றும் நுளம்பு வலைகளும் வழங்கப்பட்டன.இந்நிகழ்வில் விசேட அதிதிகளாக ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலாளர் எஸ். தனபால சுந்தரம், கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சரோஜினி மகேஸ்வரநாதன், மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் ஜே.குணநாயகம் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

கர்நாடக சங்கீத ஆசிரியை அமரர் சிவசக்தி சிவநேசன் அம்மையாரின் பிறந்தநாளையொட்டி இக்கௌரவிப்பு நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# ஆரி அர்ஜுனன், லட்சுமி மேனன்

உண்மைச் சம்பவம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு உருவாகும் படத்தில் ஆரி அர்ஜுனன் கதாநாயகனாக நடிக்கிறார். மெட்ராஸ் டெக் நிறுவனம் சார்பில் அருணாச்சலம் அனந்தராமன் தயாரிக்கும் இந்தப் படத்தில் லட்சுமி மேனன் நாயகியாக நடிக்கிறார்.

இதில், 'மைம்' கோபி, வையாபுரி, ப்ளாக் பாண்டி, 'ஜெயிலர்' தன்ராஜ், ஷெர்லி பபித்ரா, கனிமொழி உட்பட பலர் நடிக்கின்றனர். ராஜசேகர பாண்டியன் கதை, திரைக்கதை எழுதி இயக்குநராக அறிமுகமாகிறார். செம்பூர் கே.ஜெயராஜ், ராஜசேகர பாண்டியன் வசனம் எழுதியுள்ளனர். கார்த்திக் நல்லமுத்து ஒளிப்பதிவு செய்கிறார். இதன் படப்பிடிப்பு மதுரையில் தொடங்கி இருக்கிறது. விளிம்பு நிலை மக்களின் வாழ்வியலை யதார்த்தமாகச் சொல்லும் இந்தப் படத்தில் மூட நம்பிக்கைகளுக்கு எதிரான கருத்துகளும் இடம் பெறும் என்கிறது படக் குழு தெரிவித்துள்ளது.

# சைரன் படத்துக்காக உடல் எடை கூடிய கீர்த்தி சுரேஷ்



ஜெயம் ரவி, கீர்த்தி சுரேஷ், அனுபமா பரமேஸ்வரன், சமுத்திரக்கனி, அழகம் பெருமாள் உட்பட பலர் நடித்துள்ள படம், 'சைரன்'. அந்தோணி பாக்யராஜ் இயக்கியுள்ளார். செல்வகுமார் ஒளிப்பதிவு செய்துள்ள இந்தப் படத்துக்கு ஜி.வி.பிரகாஷ் குமார் இசை அமைத்துள்ளார். ஹோம் மூவி மேக்கர்ஸ் சார்பில் சுஜாதா விஜய்குமார் தயாரித்துள்ள இந்தப் படம் வரும் 16ம் திகதி வெளியாகிறது.



இப்படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பில் சுஜாதா விஜயகுமார் கூறும்போது, " ஒரு ஆம்புலன்ஸ் சைரனுக்கும், போலீஸ் சைரனுக்கும் உள்ள போராட்டம் தான் படம். எப்போதும் வித்தியாசமான கேரக்டர்களில் அசத்தும் ஜெயம் ரவி இதிலும் அசத்தியுள்ளார். படம் பார்த்தால் உங்களுக்கே புரியும். கீர்த்தி சுரேஷுக்கு நடிப்பு வாழ்க்கையில் முக்கியமான படமாக இருக்கும். 5 கிலோ உடல் எடையை அதிகரித்து போலீஸாக நடித்துள்ளார். சமுத்திரக்கனி எல்லா பாத்திரங்களிலும் எல்லா மொழிகளிலும் அசத்துகிறார். இந்தப்படத்திலும் நன்றாக நடித்துள்ளார். யோகி பாபு படம் முழுக்க வருகிறார். அவர் நடிப்பைப் பார்த்து சிரித்துக் கொண்டே இருந்தேன்" என்றார். ஜெயம் ரவி, ஜி.வி.பிரகாஷ் உட்பட படக்குழுவினர் கலந்து கொண்டனர்.

# "குளிர்பான, சூதாட்ட விளம்பரங்களில் நடிக்க மாட்டேன்" - ஜி.வி.பிரகாஷ்குமார் உறுதி



"குளிர்பான விளம்பரங்களில் நடிக்கமாட்டேன். நிறைய தடவை கேட்டும் பண்ணவில்லை. சூதாட்ட விளம்பரங்களில் நடிக்க கோடிக்கணக்கில் சம்பளத்துடன் அழைப்பு வந்தது. பண்ணமாட்டேன் என கூறி விட்டேன்" என இசையமைப்பாளரும், நடிகருமான ஜி.வி.பிரகாஷ்குமார் தெரிவித்துள்ளார்.

சினிமாவில் வாய்ப்பு தேடும் கலைஞர்களுக்கும், படைப்பாளிகளுக்கும் இடையே வாய்ப்பு குறித்த தகவல்களை பரிமாறிக் கொள்ள பிரத்தியேகமாக 'ஸ்டார் டா' என்ற செயலி உருவாக்கப்பட்டு உள்ளது. இந்த செயலியின் அறிமுக விழாவில் கலந்துகொண்டு பேசிய ஜி.வி.பிரகாஷ்குமார், "எனக்கு எப்போதும் புதுமுகங்களுடன் பணியாற்றுவது மிகவும் பிடிக்கும். வெற்றிமாறன், அட்லீ, ஏ.எல். விஜய் என நிறைய அறிமுக இயக்குநர்களின் படங்களுக்கு இசையமைத்துள்ளேன்.

என் நடிப்பில் இதுவரை 23 படங்கள் வெளியாகியுள்ளன. அதில் 17 படங்கள் அறிமுக இயக்குநர்களின் இயக்கத்தில் நடித்துள்ளேன். நாம் எதனை விளம்பரப் படுத்துகிறோம் என்பதில் உள்ளது. குளிர்பான விளம்பரங்களில் நடிக்க மாட்டேன். நிறைய தடவை கேட்டும் பண்ணவில்லை. சூதாட்ட விளம்பரங்களுக்கு கோடிக்கணக்கில் சம்பளத்துடன் அழைப்பு வந்தது. பண்ணமாட்டேன் என கூறிவிட்டேன். ஆனால், பேட்மிண்டன் போன்ற விளையாட்டுகளுக்கு பிராண்ட் அம்பாசிடராக பணியாற்றி இருக்கிறேன்.

தற்போது இந்த செயலியின் பிராண்ட் அம்பாசிடராக பொறுப் பேற்று இருப்பதற்கும் மகிழ்கிறேன். ஆரம்ப காலகட்டத்தில் சினிமாவுக்கு வர விரும்புவர்களுக்கு எங்கு செல்வது, யாரை பார்ப்பது போன்ற கேள்விகள் அவர்களுக்குள் இருக்கும். அதற்கெல்லாம் இந்த செயலி பதிலாக இருக்கும் என்று நினைக்கிறேன். இனி வரும் காலங்களில் என்னுடைய படங்களுக்கும் இந்த செயலி மூலமே நடிகர்களை தேர்வு செய்ய முயற்சிக்கிறேன்" என்று தெரிவித்தார்.

# த்ரில்லரில் காளிதாஸ்



நடிகர் காளிதாஸ் ஜெயராம் நடிக்கும் சூப்பர் நேச்சுரல் த்ரில்லர் படத்துக்கு 'நிலா வரும் வேளை' என்று தலைப்பு வைத்துள்ளனர். தமிழ், தெலுங்கில் உருவாகும் இந்தப் படத்துக்கு தெலுங்கில் சத்யதேவ் காஞ்சரனா கதாநாயகனாக நடிக்கிறார். மிராக்கிள் மூவிஸ் நிறுவனம் சார்பில் ஸ்ருதி நல்லப்பா தயாரிக்கிறார். 'என்ன சொல்ல போகிறாய்' என்ற படத்தை இயக்கிய ஹரி இதை இயக்குகிறார். இதில் நடிக்கும் மற்ற நடிகர், நடிகைகள் குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும். இந்தப் படத்தின் படப்பிடிப்பு பாலக்காட்டில் தொடங்கியது.

# மைக்கேல் தோல்விக்கு என்ன காரணம்?

## சந்தீப் கிஷன் விளக்கம்



தமிழில், யாருடா மகேஷ்?, மாநகரம், நெஞ்சில் துணிவிருந்தால், மாயவன், கேப்டன் மில்லர் படங்களில் நடித்திருப்பவர் சந்தீப் கிஷன். தெலுங்கிலும் நடித்து வருகிறார். இவர் நடித்து கடந்த வருடம் வெளியான படம், 'மைக்கேல்'. இதில் விஜய் சேதுபதி, கவுதம் வாசுதேவ் மேனன், வரலட்சுமி, அனுசுயா, திவ்யன்ஷா உட்பட பலர் நடித்தனர். தமிழ், தெலுங்கில் உருவான இந்த மெகா பட்ஜெட் படத்துக்கு எதிர்பார்ப்பு இருந்தும் சரியான வெற்றியை பெறவில்லை. இந்நிலையில், அதன் தோல்விக்கு காரணம் என்ன என்று சந்தீப் கிஷன் தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அவர் கூறும்போது, "மைக்கேல் படம் சரியாக ஓடவில்லை. எனக்கும் அந்தப் படத்தின் இறுதி வடிவம் பிடிக்கவில்லை. அதை இயக்குநரிடமே சொன்னேன். எடிட்டிங்கில் ஏதேனும் மேஜிக் நடந்திருந்தால் சிறந்த படமாக வந்திருக்கும். ஆரம்பத்தில் சில காட்சிகளைப் பார்த்தபோது நன்றாக இருந்தது. முழு படமாக அது ஏமாற்றிவிட்டது. அந்தப்படத்தை 3 பேர் தயாரித்தனர். 2 பேர் அது நன்றாக ஓடும் என்று நம்பினர். ஒருவர், ரிலீஸுக்கு 12 நாட்களுக்கு முன், படம் சரியாக இல்லை என்றார். ரிலீஸ் நாள் நெருங்கிவிட்டதால், ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனாலும் தொழில்நுட்ப ரீதியில் 'மைக்கேல்' சிறந்த படம். அதற்கு கொடுத்த முக்கியத்துவத்தைக் கதைக்கு கொடுக்க தவறிவிட்டோம்" என்றார்.

# மீண்டும் நடிக்க வரும் சமந்தா



தமிழ், தெலுங்கில் முன்னணி நடிகையாக இருக்கும் சமந்தா, தசை அழற்சி நோய்க்காகச் சிகிச்சை மேற்கொண்டு வந்தார். இதற்காக நடிப்புக்கு இடைவெளி கொடுத்துவிட்டு ஓய்வு எடுத்து வருகிறார். சமீபத்தில் 'சிட்டாடல்' வெப் தொடருக்கான டப்பிங்கை முடித்த அவர், நடிப்புக்குத் திரும்ப இருப்பதாகச் செய்திகள் வெளியாகின. 'உப்பென்னா' புச்சிபாபு இயக்கும் படத்தில் ராம் சரண் ஜோடியாக அவர் நடிக்க இருப்பதாகக் கூறப்பட்டது.

இந்நிலையில் நடிப்புக்குத் திரும்புவதை சமந்தா உறுதிப் படுத்தியுள்ளார். இதுபற்றிஅவர் வெளியிட்டுள்ள வீடியோவில், "நடிப்புக்கு மீண்டும் திரும்புகிறேன். இடைப்பட்ட காலத்தில் வேலையில்லாமல்தான் இருந்தேன்.

ஆனால், என் நண்பருடன் உடல் ஆரோக்கியம் குறித்து உருவாக்கியுள்ள 'போட்காஸ்ட்' ஒன்றை அடுத்த வாரம் வெளியிடுகிறேன். உங்களில் சிலருக்கு அது பயனுள்ளதாக இருக்கும்" என்று தெரிவித்துள்ளார்.

# அரசியல் என்பது பொழுதுபோக்கு இடம் கிடையாது" – நடிகர் விஷால்

"அரசியல் என்பது பொதுப்பணி. அது ஒரு சமூக சேவை. சினிமா உள்ளிட்ட மற்ற துறைகளைப் போன்ற ஒரு துறை கிடையாது. அரசியல் என்பது பொழுதுபோக்கும் இல்லை. பொழுது போக்குவதற்காக சும்மா வந்துபோகும் இடமும் கிடையாது" என்று நடிகர் விஷால் கூறியுள்ளார்.

சென்னையில் நடிகர் விஷால் வெள்ளிக்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "அரசியல் என்பது பொதுப்பணி. அது ஒரு சமூக சேவை. சினிமா உள்ளிட்ட மற்ற துறைகளைப் போன்ற ஒரு துறை கிடையாது. அரசியல் என்பது பொழுதுபோக்கும் இல்லை. பொழுதுபோக்குவதற்காக சும்மா வந்துபோகும் இடமும் கிடையாது. மக்களுக்கு யார் நன்மை செய்தாலும் அவர்கள் அனைவருமே அரசியல்வாதிகள் தான்" என்றார்.

அப்போது 2026ல் நீங்கள் அரசியலுக்கு வருகிறீர்கள் என்று எடுத்துக் கொள்ளலாமா என கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "2026ல் தேர்தல் வருகிறது. இதில் மறைப்பதற்கு எதுவும் இல்லை. நான் அரசியலுக்கு வரமாட்டேன், நான் வரப் போகிறேன் என்று கூறிவிட்டு வராமல் இருப்பது, அப்படி எல்லாம் எதுவும் இல்லை. அந்தந்த நேரத்தில், காலக் கட்டத்தில் என்ன முடிவு எடுக்கப்படுமோ, அது எடுக்கப்படும்.

காரணம், நான் நடிகர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஆவேன் என்று எனக்கே தெரியாது. ஒரு நடிகனாக நான் 2004ல் இருந்து செயல்பட்டு வந்தேன். எனக்கு நடிகர் சங்க அட்டை வழங்கிய ராதாரவியை எதிர்த்து நிற்பேன் என்று கனவில்கூட நான் நினைத்துப் பார்க்கவில்லை. அதேபோல், தயாரிப்பாளர் சங்கத்தில் நான் நிற்பேன் என்றும் எதிர்பார்க்கவில்லை. அதுபோலத்தான், எல்லாமே அந்தந்த காலக்கட்டத்தில் எடுக்கக்கூடிய முடிவுதான்.

எனவே, அந்த நேரத்தில் இந்தக் கேள்வியைக் கேட்டால், சரியான பதில் வரும். இது ஏதோ, மழுப்பலாக பேசுவது இல்லை. நான் அந்த நேரத்தில் வருவேன், வரமாட்டேன் என்று கூறுவது போன்றது கிடையாது.



முன்பெல்லாம், ஒரு திரையரங்கில் ஒரு சினிமா அல்லது இரண்டு சினிமாதான் ஓடும். இன்று மல்டிபிளக்ஸ் வந்ததால் 6 முதல் 7 படங்கள் ஓடிக்கொண்டிருக்கிறது. இது ஒரு வளர்ச்சி. அதேபோலத்தான் 2026 தேர்தலில், மக்கள் தேர்ந்தெடுக்கக்கூடிய பிரதிநிதிகள் நிறைய பேர் இருப்பார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து" என்று விஷால் கூறினார்."

# சசிகுமார் நடிப்பில் 'ஃப்ரீடம்'



சசிகுமார் நடிப்பில் வெளியாக உள்ள 'ஃப்ரீடம்' (Freedom) படத்தின் முதல் தோற்றம் வெளியிடப்பட்டு ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து வருகிறது.

'கழுகு', 'கழுகு 2', 'நான் மிருகமாய் மாற' ஆகிய படங்களை இயக்கிய சத்ய சிவாவின் இயக்கத்தில் வெளியாக உள்ள அடுத்த படம் 'ஃப்ரீடம்' (Freedom). இப்படத்தில் சசிகுமார், லிஜோ மோல் ஜோஸ் முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கின்றனர். இப்படத்தை பாண்டியன் பரசுராமன் தயாரிக்கிறார். படத்துக்கு ஜிப்ரான் இசையமைக்க, உதயகுமார் ஒளிப்பதிவு செய்கிறார். சிநேகன், மோகன் ராஜா பாடல்களை எழுதுகின்றனர். படம் தமிழ் தவிர, தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் வெளியாக உள்ளது. இந்நிலையில், இப்படத்தின் முதல் தோற்றத்தை ஜி.வி.பிரகாஷ்குமார் தனது எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ளார்.

சசிகுமார், லிஜோ மோல் நடிக்கும் 'ஃப்ரீடம்' முதல் தோற்றம் வெளியீடுமுதல் தோற்றம் எப்படி? இரண்டு போஸ்டர்கள் வெளியிடப்பட்டுள்ளது. இதில் முதல் போஸ்டர் சசிகுமார் மட்டும் இருக்கிறார். தீ பற்றி எரிகிறது. அதற்கு பின்னணியில் உள்ள படகில் மக்கள் கூட்டமாக நின்றுகொண்டிருக்கின்றனர். படத்தின் டேக் லைன், 'ஆகஸ்ட் 14' என குறிப்பிடப்பட்டுள்ளது. படம் சுதந்திர போராட்டம் பற்றிய கதையா அல்லது வேறு எதேனும் நிகழ்வை மையப்படுத்தியதா என்பது எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இரண்டாவது போஸ்டரில் லிஜோ மோல் சசிகுமார் முன்னணியில் இருக்க, திரளான மக்கள் கூட்டம் இருப்பது போல வடிவமைக்கப்பட்டுள்ளது. இரண்டு போஸ்டர்களும், சோகத்தை மையப்படுத்தியே இருக்கின்றன. முக்கியமான பிரச்சினையை அடிப்படையாக கொண்டு படம் உருவாகியுள்ளதாக தெரிகிறது.

# திரவுபதியாகிறார் ஜான்வி கபூர்

நடிகர் சூர்யா 'கங்குவா' படப்பிடிப்பை நிறைவு செய்துள்ளார். இதைத் தொடர்ந்து சுதா கொங்கரா இயக்கத்தில் நடிக்கிறார். அதற்கு பின், மகாபாரத கதைக்களத்தைக் கொண்டு உருவாகும் 'கர்ணா' படத்தில் கர்ணனாக நடிக்கிறார். ராகேஷ் ஓம்பிரகாஷ் மெஹ்ரா இந்தப் படத்தை இயக்க இருக்கிறார். இதில் திரவுபதியாக ஜான்வி கபூர் நடிக்க இருப்பதாக செய்திகள் வெளியாகின. இப்போது அது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதற்கான லுக் டெஸ்ட் 2 முறை நடந்து முடிந்து விட்டதாகவும் கூறப்படுகிறது. இதையடுத்து அவர் ராம்சரண் ஜோடியாகவும் நடிக்க இருக்கிறார்.



கடந்த வாரத் தொடர்ச்சி.......

# திருமணமும் விவாகரத்தும்

காதல் திருமணமாகட்டும், பெற்றோர் பார்க்கும் திருமணமாகட்டும் வாழ்க்கை சீர்க்குலைந்து போகும் போது மனநிலை பாதிப்பு இரு குடும்பங்களுக்குமே ஏற்படும். இதனால் சாதாரண வாழ்க்கை நடைமுறை கூட மிகவும் பாரதூரமான விடயமாகவே தெரியும். இருப்பினும் அதிகமாக ஆண்களை பெற்றக் குடும்பங்கள் "எங்களுக்கென்ன பெண்கள் வீட்டிலேயே தைரியமாக இருக்கும் போது நாங்கள் ஏன் துக்கப்பட வேண்டும்" என்ற நினைப்பில் தங்களை இலகுவாக மீட்டுக் கொள்கின்றனர்.

ஆனால் பெண் பிள்ளைகளும் அவர்களின் குடும்பத்தினரும் அந்த காயத்திலிருந்து மீளுவது என்பது வெகு கடினம்.

சம்பந்தப்பட்ட பெண் மீண்டாலும் அவள் நிகழ்வுகளுக்கு செல்லும் இடங்களிலும் தொழில் செய்யும் இடங்களிலும் உறவுகளின் விழாக்களிலும் அக்கம் பக்கம் உள்ளவர்களின் பார்வையிலும் அந்த விடயம் மறக்கப்படுவதில்லை. ஏதோ செய்யக் கூடாத காரியத்தை செய்தது போலவும் மறக்க வேண்டிய விடயத்தை கண்முன்னே கொண்டு வந்து நிறுத்துவர். எங்கு போகிறாள், யாரிடம் பேசுகிறாள், உடை, நடை, பாவனை என்று எப்போதும் கண்காணிக்கப்பட்டு சில இடங்களில் வார்த்தைகளால் நோகடிக்கப்படுவாள்.



என்னதான் தைரியமான பெண்ணாக காட்டிக்கொண்டாலும் உள்ளூர வெந்து தணிவதை அவள் தாய் கூட அறிந்திருக்க வாய்ப்பில்லை. துணிச்சலான பெண்ணாக இருந்தால் "அவளுக்குத் துளியும் கவலை இல்லை, வேறு தொடர்பு இருக்கும்" என்றும் அப்பாவியாக இருப்பின் "இப்படி அப்பாவியாக இருந்தால் ஏமாற்றத் தான் செய்வான் பாவம்!" என்றும் பாவப்பட்ட பெண்ணாகவும் இந்த சமூகம் மாற்றிவிடும்.

அதிலும் பிள்ளைகள் இருப்பின் அவர்களின் நிலையோ வெகு பரிதாபம். சில பெண்களுக்கு சுற்றம் கதை சொல்லும் முன் வீட்டாரே "உனக்கு பிள்ளை இருக்கிறது" என்று சொல்லி சொல்லியே அவள் வாழவேண்டிய வாழ்க்கையை முடக்கி விடுகின்றனர். அவளுக்காக சிரித்து, இரசித்து, உடுத்தி வாழ்வது எப்போது? அப்படி அவளுக்கென வாழ ஆரம்பித்தால் பல வலிக்கும் வார்த்தைகளை செவியோடு போகட்டுமென விட்டுவிட பழகிக் கொள்ள வேண்டும். மனதிற்குள் எடுக்க ஆரம்பித்தால் அவள் நிம்மதி நிர்மூலமே!

விவாகரத்து என்பது அந்த நாளில் இல்லை என்று நாம் நினைக்கக்கூடாது. எத்தனையோ பெண்கள் திருமண வாழ்வில் தோல்வி கண்டு பெற்றோருடனும், குடும்பத்தினருடனும் வாழக்கையை கழித்தவர்கள் உண்டு. என்ன சட்டரீதியான பிரிவுகளை மேற்கொள்ள நீதி மன்றங்களை நாடவில்லை அவ்வளவு தான்.

இன்றைய பெண்கள் நீதியை நாடி சட்டரீதியான பிரிவை பெற்றுக்கொள்கிறார்கள். இது சரியா தவறாக என்று பார்ப்பதை விட சட்டரீதியான அணுகுமுறை எல்லோருக்கும் பாதுகாப்பான விடயமாகும்.

திருமணம் செய்த பாவத்திற்கு தம்பதிகளுக்குள் பிரச்சினை பட்டு அல்லுற பிள்ளைகள் பல வேதனைகளை இந்த சமூகத்தில் எதிர்கொள்வர். அவர்களின் நட்பு வட்டத்திலும் பாடசாலையிலும் அவர்களை அறியாமலே மனதாக்கம் ஏற்படும் நிகழ்வுகள் நடைபெறும். இதைப்பற்றி அடுத்தக் கட்டுரையில் பார்க்கலாம்.

ஆணுக்கோ பெண்ணுக்கோ விவாகரத்து மிகப்பெரிய போராட்டம். பாதிப்புகள் பெருமளவு பெண்களுக்கே என்பது நிதர்சனமான உண்மை.

பெண் குழந்தைகளை திருமணம் செய்து கொடுக்கும் முன் பெற்றோர் பலமுறை யோசித்து அறிந்து பெண் கொடுத்தால் சிறப்பு. அதேபோல் திருமணத்திற்கு தயாராகும் பெண் பெற்றோர் பார்த்தார்கள் என்பதற்காக தலையாட்டாமலும் தான் காதலித்து விட்டேன் என்று கண் மூடித் தனமாக நம்பாமலும் தன் வாழ்க்கையைப் பற்றிய சிந்தனையை, முடிவுகளை தீவிரமாக யோசித்து வாழ்க்கையைத் தேர்ந்தெடுப்பது விவாகரத்தை தடுக்கும்.

பெண்கள் விவாகரத்து முடிவினை எடுக்கும் முன் பலமுறை யோசித்து வரவிருக்கும் பல நிராகரிப்பை, வலிகளை, உதாசீனங்களை தாங்கிக் கொள்ளும் மனப்பக்குவத்தை ஏற்படுத்திக் கொண்டு வாழப் பழக வேண்டும்.

அன்பே வாழ்க்கையின் பரஸ்பரம். அந்த அன்பினை வெளிப்படுத்த தம்பதியர் தயங்கினாலும் அல்லது ஒருவரின் நேசிப்பை புரிந்துகொள்ள மறுந்தாலும் பிரிவு தானாகவே வரும்.

எது எப்படியிருப்பினும் திருமணம் விவாகரத்தில் முடியாமல் தம்பதிகள் வாழ ஆண், பெண் இரு தரப்பும் சிந்தித்தால், அழகான வாழ்க்கை வாழ வழி வகுக்கும். விவாகரத்து இல்லா சமூகம் உருவாகும். அச்சமூகம் உருவாக நாம் ஒவ்வொருவரும் பொறுப்பாளியே.



கவிஞர் நடராஜா தாமரைச் செல்வி...✍

# முகம் பளபளன்னு பொலிவா இருக்க..

உங்கள் முகத்தை ஐஸ் தண்ணீரில் மூழ்கடிப்பது அல்லது காலையில் உங்கள் தோலில் ஐஸ் கட்டிகளைப் பயன்படுத்துவது உங்கள் சருமத்திற்கும் ஒட்டுமொத்த நல்வாழ்விற்கும் பல சாத்தியமான நன்மைகளை அளிக்கும் என்பது உங்களுக்குத் தெரியுமா?

உங்கள் முகத்தில் இருக்கும் வீக்கத்தை அகற்ற ஐஸ் வாட்டர் உதவும். மேலும், பல்வேறு நன்மைகளை உங்களுக்கு வழங்கும். உங்கள் முகத்தை உறுதியாகவும், பளபளப்பாகவும் வைத்திருக்க ஐஸ் வாட்டர் உதவுகிறது வீட்டிலேயே ஐஸ் வாட்டர் ஃபேஷியல் செய்துகொள்வது முகப்பருவைக் குறைக்கவும், துளைகள் மற்றும் கருவளையங்களைக் குறைக்கவும் உதவுகிறது. மேலும், தினமும் காலையில் குளிர்ந்த நீரில் முகத்தை நனைப்பதன் மூலம் கிடைக்கும் நன்மைகள் பற்றி இங்கே தெரிந்துகொள்ளுங்கள்.

வீக்கத்தைக் குறைக்கிறது ஐஸ் நீரின் குளிர் வெப்பநிலை இரத்த நாளங்களைச் சுருக்கி வீக்கத்தைக் குறைக்கிறது. இது கண்களைச் சுற்றிலும் முகத்திலும் வீக்கத்தைக் குறைக்க உதவும். நீங்கள் வீங்கியதாகவோ அல்லது சோர்வாக தோற்றமளிக்கும் கண்களுடன் காலையில் எழுந்திருக்கும் போது இது குறிப்பாக பயனுள்ளதாக இருக்கும்.

துளைகளை இறுக்கமாக்குகிறது குளிர்ந்த வெப்பநிலை சருமத்தை சுருங்கச் செய்கிறது, இது துளைகளின் தோற்றத்தை தற்காலிகமாக இறுக்கும். இது உங்கள் சருமத்திற்கு மென்மையான மற்றும் சுத்திகரிக்கப்பட்ட தோற்றத்தை அளிக்கும், பெரிய துளைகள் அல்லது எண்ணெய் சருமம் உள்ளவர்களுக்கு இது ஒரு பிரபலமான நுட்பமாகும்.

வீக்கத்தைத் தணிக்கிறது ஐஸ் அழற்சி எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளது, இது சருமத்தில் சிவத்தல், எரிச்சல் மற்றும் வீக்கத்தை அமைதிப்படுத்த உதவுகிறது. உங்களுக்கு முகப்பரு, ரோசாசியா அல்லது வெயில் போன்ற நிலைமைகள் இருந்தால், பனியைப் பயன்படுத்துவது நிவாரணம் மற்றும் சிவத்தல் தோற்றத்தைக் குறைக்கும்.

சுழற்சியை அதிகரிக்கிறது குளிர்ந்த வெப்பநிலை சருமத்தில் இரத்த ஓட்டத்தை தூண்டுகிறது, இது ஆரோக்கியமான, ரோஸி நிறத்தை ஊக்குவிக்கும். மேம்படுத்தப்பட்ட சுழற்சி தோல் செல்களுக்கு ஆக்ஸிஜன் மற்றும் ஊட்டச்சத்துக்களை வழங்குகிறது, அவற்றின் ஒட்டுமொத்த ஆரோக்கியத்தையும் உயிர்ச்சக்தியையும் மேம்படுத்துகிறது. தயாரிப்பு உறிஞ்சுதலை மேம்படுத்துகிறது குளிர்ந்த சருமம் தோல் பராமரிப்பு பொருட்களை மிகவும் திறம்பட உறிஞ்சிவிடும். சீரம்கள், மாய்ஸ் சரைசர்கள் அல்லது பிற சிகிச்சைகளைப் பயன்படுத்துவதற்கு முன்பு உங்கள் முகத்தில் பனியைப் பயன்படுத்துவதன் மூலம், அவற்றின் ஊடுருவல் மற்றும் செயல்திறனை அதிகரிக்கலாம்.





# குழந்தைங்க பேசும் போது தவறான வார்த்தைகள யூஸ் பண்ணுறாங்களா?

குழந்தைகளின் பேச்சு கிளிப்பேச்சு என்று சொல்வார்கள். குழந்தைகளின் மழலை மொழி என்பது இனிமையான ஒன்றாகும். வளரும் குழந்தைகள் கொஞ்சம் கொஞ்சமாக அவர்களுடைய மொழித்திறனை வளர்க்க ஆரம்பிப்பார்கள். அவர்களிடம் கூறும் சொற்கள், அவர்களைச் சுற்றி கேட்கும் சொற்கள் இவற்றையெல்லாம் நன்கு கவனித்து ஒவ்வொன்றாக பேச ஆரம்பிப்பார்கள்.இருப்பினும் பல குழந்தைகள் தாங்கள் பேசும் சொற்களை தவறாக உச்சரிப்பது வழக்கம் தான். குழந்தைகள் தாங்கள் சொல்லும் சொற்களை சரியான முறையில் சொல்வதில் பல சிக்கல்களை அவர்கள் சந்திக்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு வயதிலும் சில ஒலிகள் மற்றும் வார்த்தைகளில் தேர்ச்சி பெறுகிறார்கள்.

ஒரு 8 வயதிற்குள் பெரும்பாலான குழந்தைகள் அனைத்து வார்த்தை ஒலிகளிலும் தேர்ச்சி பெற கற்றுக் கொள்கின்றனர். ஆனால் சில குழந்தைகள் பேச்சு ஒலி குறைபாடுகளை சந்திக்கின்றனர். இதனால் அவர்களுக்கு 8 வயதுக்கு மேல் ஆகியும் சில சொற்களை சொல்வதில் சிக்கல்களை சந்திக்கின்றனர். இதனால் குழந்தை என்ன சொல்ல முயல்கிறது என்பது கடினமாக அமைகிறது.

பேச்சு ஒலி உச்சரிப்பு பிரச்சினை சில குழந்தைகளுக்கு 'ஷ்' என்ற வார்த்தையை உச்சரிப்பதில் பிரச்சினை ஏற்படுகிறது. இந்த கோளாறு என்பது ஒலி தவறுகளில் ஏற்படும் தவறாகும்.

குழந்தைகளின் பேச்சு ஒலிப் பிழைகளுக்கு கீழ்க்கண்ட பிரச்சினைகள் காரணமாக அமையலாம். குழந்தைக்கு மூளையில் ஏற்படும் காயம் சிந்தனை அல்லது வளர்ச்சி குறைபாடு செவித்திறன் குறைபாடு, காது தொற்று போன்ற பிரச்சினைகள் குழந்தைகளின் பேச்சை பாதிக்கும் கோளாறுகள், பிளவு அண்ணம் அல்லது பிளவு உதடு தாடை, நாக்கு மற்றும் உதடுகளை நகர்த்துவதில் சிக்கல் மற்ற குழந்தைகள் போல் வயதுக்கு ஏற்ப பேச முடியாமல் போதல் மற்றவர்களுக்கு புரியும் படி தெளிவாக பேசுவதில்லை கரகரப்பான நாசி குரல் பேச்சு மெல்லுதல், மூக்கை ஊதுதல் அல்லது முகத்தில் தசைகளைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் சிரமப்படுதல் பேச்சுக்கு பயன்படும் நரம்புகளில் ஏற்படும் கோளாறுகள் போன்ற விஷயங்கள் காரணமாக அமைகிறது.

பேச்சு ஒலி கோளாறை எப்படி கண்டறிவது? உங்கள் குழந்தைக்கு பேச்சு ஒலி கோளாறு இருந்தால் முதலில் குழந்தையின் செவித்திறனை கண்டறிய வேண்டும். ஏனெனில் குழந்தைகள் வார்த்தைகளை தவறாக கேட்கும் போது இந்த மாதிரியான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. உங்கள் குழந்தைக்கு தேவைப்பட்டால் பேச்சு மொழி நோயியல் நிபுணரிடம் இது குறித்து பேசலாம்.




# "லிட்டில் மெஸ்ட்ரோ" ரவிபிரியன், கேசவ் விஸ்வநாதனுக்கு பாராட்டு

இந்தியன் கல்ச்சரல் ஆர்ட் அசோசியேசன் சார்பாக கலிபோர்னியா அமெரிக்காவில் சில்லிகான் கலையரங்கத்தில் 1998இல் பாடி 25 வருடங்களுக்கு பின் S.p. பாலசுப்பிரமணியம், சுஜாதா மோகன் குரலில் R.S.ரவிப்பிரியன் இசையில் 03.02.24 சனிக்கிழமை மாலை 'வின்டர் தேசத்து மலரே' பாடல் வெளியானது. இப்பாடலை திரைப்பட இசையமைப்பாளர் & இயக்குனருமான கங்கை அமரன் மற்றும் திரைப்பட பாடகருமான உன்னிகிருஷ்ணன் வெளியிட்டார். சூப்பர் சிங்கர் தேஜூ, Vp கல்சரல் சான்பிரான் சிக்கோ தமிழ் மன்றத்தின் முன்னாள் தலைவர் பொம்முதுரை, எஸ்.பி.பி பவுண்டேசன் ஷேஷாத்திரி,டில்லி தமிழ்ச் சங்கத்தின் பொதுச்செயலாளர் டாக்டர். இரா.முகுந்தன், சான்பிரான்சிக்கோ தமிழ் மன்றத்தின் முன்னாள் தலைவர் அண்ணாமலை, டில்லி கலை இலக்கியப் பேரவைச் செயலாளர் பா.குமார், நிகழ்ச்சியின் தொகுப்பாளர் ராஜசேகர் ஆகியோர் இணையம் வாயிலாகவும் நேரலையிலும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இந்நிகழ்ச்சியின் ஒருங்கிணைப்பாளரும் எஷிதா மீடியாவின் இயக்குநருமான கேசவ் விஸ்வநாதன், கலிபோர்னியா அமெரிக்கா வந்திருந்த அனைவருக்கும் நன்றி உரை வழங்கி நிகழ்ச்சியை சிறப்பாக வடிவமைத்து ஒருங்கிணைத்தார். சிறப்பு விருந்தினர்கள் இசையமைத்த "லிட்டில் மெஸ்ட்ரோ" ரவிபிரியன் மற்றும் கேசவ் விஸ்வநாதன் ஆகியோரை சிறப்பு விருந்தினர்கள் பாராட்டினார்கள்.

# சர்வதேச விருதுகளை குவிக்கும் மாத்தளை வடிவேலன்





'வல்லமை தாராயோ?' தொகுதியில் அடங்கியுள்ள சிறுகதைகள் மாத்தளை வடிவேலன் நேர்த்தியான கதைசொல்லி என்பதைக் கேள்விக்கிடமில்லாமல் நிரூபிக்கின்றன. எழுபதாண்டு காலம் அந்த மக்களோடு வாழ்ந்து, உண்டு, சுகித்து, சுகதுக்கங்களில் பங்கு கொண்டு, அந்த மக்களின் கூட்டு சொரூபமாய் இக்கதைகளில் அவர் வெளிவருகிறார்.

அவருக்குச் சொல்வதற்கு நிறையக் கதைகள் இருக்கின்றன. கதைகளின் கிட்டங்கி அவர். சரித்திரம் அவரில் புதையுண்டு கிடக்கிறது.' என்று பேராசான் மு.நித்தியானந்தன் குறித்த வரிகள் மிகையானவை அல்ல, மிகச்சரியானவை என்பதை இந்நூல் சர்வதேச அளவில் பெற்றிருக்கும் விருதுகள் நிரூபிக்கின்றன.

2022 ஆண்டு இலங்கையில் வெளிவந்த சிறுகதை தொகுதிகளில், தமிழகத்தில் 'வல்லமை தாராயோ?' என்ற நூல் வெளிவந்த கையோடு டாக்டர் எம்.ஜி.ஆர் ஜானகி அம்மாள் கலைக்கல்லூரி முனைவர் டாக்டர் குமார் ராஜேந்திரனின் 'தாய்' பதிப்பகம், இந்த நூலுக்கு ஒரு லட்சம் ரூபாய் விருது வழங்கிக் கௌரவித்தது. இதனைத் தொடர்ந்து இலங்கைத் தமிழ் இலக்கிய நிறுவனமும், இலண்டன் தமிழ் இலக்கிய நிறுவனமும் இணைந்து 'உதயணன் இலக்கிய விருது' வழங்கியது. இதன்மூலம் இந்நூலுக்கு 2022 ஆண்டில் இலங்கையில் வெளிவந்த சிறுகதைத் தொகுதிகளில் மிகத் தரமான தொகுதி என இன்னுமொரு மகுடத்தைச் சூட்டியிருக்கிறது.

அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் 2022 ஆண்டு இலங்கையில் வெளிவந்த சிறுகதைத் தொகுதிகளில் மாத்தளை வடிவேலனின் 'வல்லமை தாராயோ?' நூல் முதல் தரமான தொகுதி என்று மற்றுமொரு விருது வழங்கி கௌரவித்துள்ளது. இலங்கையில் மட்டுமின்றி தமிழகத்திலும், ஐரோப்பிய கனேடிய நாடுகளிலும் மாத்தளை வடிவேலனின் மலையக எழுத்துக்கள் களிநடனம் புரிகின்றன.

மலையகப் பத்திரிகை இயல் முன்னோடி கலைஒலி முத்தையாபிள்ளை நினைவுக் குழுவின் செயலாளர் எச். எச் விக்ரமசிங்க, பேராசான் இர. சிவலிங்கத்தின் முன்னுரையோடு வெளியிட்ட 'மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும்' (1994) என்ற வரலாற்று ஆய்வு நூலை எழுதிய மாத்தளை வடிவேலனுக்கு கௌரவம் அளித்தது. அமெரிக்க முத்தமிழ் பல்கலைக்கழகம், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் இணைந்து நடாத்திய 'மலையகம் 200' நிகழ்வில் வடிவேலனுக்கு 'மதிப்புறு முனைவர்' பட்டம் வழங்கி கௌரவித்துள்ளது.

***எஸ். மரதன் கிருஸ்ணன்***
***கேகாலை***

# கலாநிதி பட்டம் பெற்ற ஜெயசிறிலுக்கு காரைதீவில் வரவேற்பு









அமெரிக்க உலகத் தமிழ் பல்கலைக்கழகம் சமூக சேவைக்காக வழங்கிய கலாநிதி பட்டத்தைப் பெற்ற காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலுக்குஅவர் பிறந்த காரைதீவில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

முதலாவது வரவேற்பு நிகழ்வு காரைதீவு விக்னேஷ்வரா வித்தியாலய ஆசிரியர் மாணவர்களினால் சிறப்பாக இடம் பெற்றது.

இந்த விழா பாடசாலையின் அதிபர் பொன்.பாலேந்திரா தலைமையிலே இடம் பெற்றது.

ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர். கொரோனா காலகட்டத்திலும் வெள்ள காலகட்டத்திலும் சிறுவயதிலிருந்து சமூக சேவை செய்து வருகின்ற ஜெயசிறிலுக்கான பொருத்தமான சமூகசேவைக்கான கலாநிதி பட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது. அதனை நாமும் வாழ்த்துகிறோம் என்று அதிபர் வாழ்த்தினார்.

பிரதம அதிதி உரையாற்றுகையில்.

முன்னாள் தவிசாளர் கலாநிதி கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில்" தான் வறுமையின் காரணமாகவே சமூக சேவை செய்து வந்துள்ளதாகவும் கல்வி கற்கும் காலத்தில் பல சிக்கல்களை எதிர்கொண்டதால் வறுமையான மக்களுக்கும் கல்வியில் பின் தங்கிய பிரதேசங்களுக்கும் துயரதுன்பங்களோடு இருக்கின்ற மாணவர்களுக்கும் இந்த உதவியை செய்ய முடிந்தது என உரையாற்றியிருந்தார்.

ஒவ்வொருவருடைய சமூக சேவைக்கும் பின்னால் பல வறுமையும் பல கஷ்டங்களும் இருந்திருக்கும் என்று அவர் கூறினார். அதே போன்று சமூக சேவைக்கான கலாநிதி பட்டம் எனக்கானது அல்ல எனது மாவட்டத்தில் என்னைப்போல் செயற்படுகின்ற சமூக சேவையாளர் முத்தமிழ் வித்தகர் உலகத் தமிழ் பேராசிரியர் விபுலானந்தருடைய தூரநோக்கும் இதுவாகும்.

சமூக சேவை செய்கின்றவர்களுக்குரிய அங்கீகாரமே இங்கு வழங்கப்படிருக்கின்றது.இந்த கலாநிதிப் பட்டத்தை உலக தமிழ்ப் பல்கலைக்கழகமும் 12 சர்வதேச நாடுகளும் இணைந்து வழங்கியிருந்தாலும் இது சமூக சேவை செய்கின்ற அனைவருக்கும் பொருத்தமாகும் என்றார்.

**( காரைதீவு குறூப் நிருபர் சகா)**







# சாதனைகள் பல நிகழ்த்திய சாய்ந்தமருது பர்ஸான்

புலனுறுப்புகளால் மெய்சிலிர்க்க வைக்கும் சாகசம் புரிந்து சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடித்த சாய்ந்தமருதைச் சேர்ந்த எம்.எஸ்.எம். பர்ஸான் மீண்டும் உலக சாதனைக்காக இம்மாதம் 16 திகதி இந்தியா பயணமாகவுள்ளார்.

இந்தியாவின் சென்னை மாநகரில் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள சர்வதேச திறந்த கராட்டே சம்பியன்சிப் போட்டியிலும், 19 ஆம் திகதி மதுரையில் நடைபெறவுள்ள சர்வதேச சோழன் உலக சாதனை புத்தகத்தில் இடம்பிடிப்பதற்கான போட்டியிலும் கலந்து கொள்ளவுள்ளார்.

கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரியின் பழைய மாணவரான இவர் இந்தியாவின் மதுரை மாநகரில் இம்மாதம் 19 ஆம் திகதி ஐக்கிய நாடுகள் சபையுடன் இணைந்து உலகின் 26 நாடுகளில் வியாபித்துள்ள சோழன் உலக சாதனைப் புத்தக நிறுவனம் ஒழுங்கு செய்துள்ள மேற்படி உலக சாதனை நிகழ்வில் இலங்கைப் பிரதிநிதியாக கலந்து கொள்ளவுள்ளார். இவர் ஐந்து ஓடுகளை ஒரே நேரத்தில் உடைத்தல், இரண்டு கண் இமைகளாலும் 10 மி.மீ.கம்பியை வளைத்தல், இரண்டு கண் துருவங்களாலும் சங்கிலியால் பாரம் தூக்குதல், மூக்கினூடாக குளிர் பானம் அருந்துதல், பல்லினால் தேங்காய் உரித்தல், மூக்கினுள் வயரை விட்டு அதனை வாய் வழியாக எடுத்து மின் குமிழை எரியச் செய்தல், மூக்கினூடக 4 அங்குல கத்தரிக்கோலை செலுத்துதல், பல்லில் வைத்து 10 மி.மீ.கம்பிகள் இரண்டை வளைத்தல், வயிற்றில் பாரமான கற்களை வைத்து சுத்தியலால் உடைத்தல் , உடம்பு பாகங்களினால் ஓடுகளை உடைத்தல், மரப்பலகையில் கையினால் ஆணிகளை அடித்து ஏற்றுதல் , மரப்பலகைகளை கைகளினால் உடைத்தல் , நாணயக் குற்றிகளை இரு கண்களுக்குள்ளும் வைத்து மறைத்தல், பல்லினால் 15 கிலோ கிராம் எடையைத் தூக்குதல், பெப்ஸி குளிர்பான அலுமினிய டின்களை கையால் உடைத்தல் போன்ற 16 சாதனைகளை உலக சாதனைக்காக நிலை நாட்டவுள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.









( எம்.எம்.ஜெஸ்மின்)

# திஹாரிய முஷ்பிகா முன்சிரி "தேடலில் வந்த தோழன்" நூல் வெளியீடு

திஹாரிய இளம் கவிதாயினி முஷ்பிகா முன்சிர் எழுதிய "தேடலில் வந்த தோழன்" கவிதை நூல் வெளியீட்டு விழா அண்மையில் திஹாரிய அல் அஸ்ஹர் தேசியப் பாடசாலையில் நடைபெற்றது. மூதூர் ஜே.எம்.ஐ. பதிப்பக நிறுவனர் ஜே. எம். இஹ்ஷான் நிகழ்விற்குத் தலைமை வகித்தார். முதன்மை அழைப்பாளராக வலம்புரி கவிதா வட்டத் தலைவர் கலாபூஷணம் என். நஜ்முல் ஹுசைன் கலந்து கொண்டார். கலாபூஷணம் நூருல் அயின் நஜ்முல் ஹுசைன், குரீகொடுவ, ஹாதியா கல்வி நிறுவன அதிபர் அஷ்ஷெய்க் அக்ரம் அப்துஸ்ஸமத், அல் அஸ்ஹர் தேசியப் பாடசாலை உப அதிபர் எம்.ஐ.ஏ.









ஹஸன் ஆகியோர் விசேட அதிதிகளாக கலந்து கொண்டனர். நூலாசிரியர் முஷ்பிகாவின் தந்தை முன்சிர், தாயார் சாக்கிரா ஆகியோருக்கு முதல் பிரதியும் நஜ்முல் ஹுசைன் தம்பதியருக்கு முதன்மைப் பிரதிகளும் வழங்கப்பட்டன.

முதன்மை அழைப்பாளராகக் கலந்து கொண்ட கலாபூஷணம் நஜ்முல் ஹுசைனுக்கு நூலாசிரியர் முஷ்பிகா முன்சிரினால் நினைவுச் சின்னமும் வழங்கப்பட்டது.

வரவேற்புரையை நூலாசிரியரின் தந்தை முன்சிர் நிகழ்த்தினார். நூல் நயவுரையை நூருல் அயின் நஜ்முல் ஹுசைன் வழங்க வாழ்த்துரைகளை நஜ்முல் ஹுசைன், அஷ்ஷெய்க் அக்ரம் அப்துல் சமத் ஆகியோர் வழங்கினர்.

திஹாரிய மற்றும் பல இடங்களிலும் இருந்து வந்த பிரமுகர்கள் பலர் கலந்து கொண்ட நிகழ்வை இலங்கை வானொலி முஸ்லிம் சேவைத் தயாரிப்பாளர் பாத்திமா ரீஸா தொகுத்தளித்தார். நூலாசிரியர் முஷ்பிகா முன்சிர் ஏற்புரை வழங்கினார்.





**லுத்பியா லுக்மான் திஹாரிய**

# உரத்தும் பேச ஒரு ஒட்டகம் இல்லையே!

ஒட்டகங்களின் காவலராய்
ஓநாய்கள்!
ஓநாய்களின் ஒப்பாரிகள்
இந்த
ஒட்டகங்களுக்கு
வேதமாகி போனது.
ஆட்சிக் கதிரைக்காய்
இந்த ஒட்டகங்கள்
ஓநாய்கள் சபையை
உதவிக்கு
அழைக்கின்றன..
கழுகு தேசத்தின்
கால்களை
முத்தமிடுகின்றன..
ஈராக்கிய ஒட்டகங்களின்
கண்ணீர் துடைக்க வந்த
காருண்ய
ஓநாய்கள்இன்னும்தான்
இரத்தத்தையும்
எண்ணெயையும்
உறுஞ்சிக்
கொண்டிருக்கின்றன.
உரிமைகள் பேசும் இந்த
ஓநாய்கள் கூட்டத்துக்கு
உரிமைகள் மீறப்படும்
உயிர்கள் வதைக்கப்படும்
காஸா மண்ணில்
கருகும் உயிர்கள்
கண்ணில்
படுவதேயில்லை..
குருதியைச் சிந்தவரும்
கொடிய விலங்குகளுக்கு
மஞ்சள் தெளித்து இந்த
ஒட்டகங்கள் மஞ்சம்
விரிக்கின்றன..
பிணங்களைத் தேடும்
கழுகினை அழைத்து
இறந்தவன் குருதியை
விருந்தாய்ப்
படைக்கின்றன..
கழுகுகள் வட்டமிடுவது
காப்பாற்றுவதற்கல்ல
இரத்த வெறிபிடித்து
இரை தேடியலைவதை..
இன்னும் அறியாத
அறியாமை யுகத்தில்
இவர்கள்!
ஓநாய்களின் ஒப்பாரிகள்
இவர்களுக்கு
வேதமாகிப் போனபோது..
ஓநாய்களின் கடிவாளம்
இவர்கள் குரல்வளையை
நெரிக்கும் போது
எப்படி முடியும்
இவர்களால்..
எண்ணெய்க்காய்
இவர்கள்
குருதியை ஓட்டும்..
சமாதானச் சாயம் பூசிய
சதிகார முகங்கள் பற்றி..
ஒற்றுமைதனையழித்து
ஒவ்வொன்றாய் ஏப்பமிடும்
பாசிஷ விஷம் கொண்ட
குரூர நகங்கள் பற்றி..

**கலாபூஷணம் யாழ் அஸீம்**




## ஊரின் ஒற்றுமையை பறைசாற்றும் வகையில்

# வெகுவிமர்சையாக நடந்த DPL கிரிக்கெட் சுற்றுப் போட்டி

நகரங்களில் மாத்திரமன்றி கிராமங்களிலும் கலை,இலக்கியம்,விளையாட்டு, பொருளாதார மேம்பாடு,சமூக சேவை என பல்வேறு நோக்கங்களுக்காக அமைப்புகள் உருவாக்கப்பட்டு பல்வேறு பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவது வழமை. சில அமைப்புகள் சில காலங்களிலே மூடுவிழா கண்டுவிடும். உண்மையான நோக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்டு அனைவரினதும் பங்களிப்புடனம் ஒத்துழைப்புடனும் இயங்கும் அமைப்புகள் தொடர்ந்து வெற்றிகளை குவிக்கும்.

தெற்கின் தலைநகரான காலி மாவட்டத்திலும் இவ்வாறான பல அமைப்புகள் செயற்படுகின்றன. அதில் தங்கெதர நலன்புரி அமைப்பு பிரமிக்க வைக்கும் வகையில் பல சேவைகளை தொடர்ச்சியாக செய்து வருகிறது. நலன்புரி அமைப்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த அமைப்பு தற்பொழுது சமூக சேவைகளுக்கு மேலதிகமாக சிறுவர் மற்றும் பெரியவர்களுக்கான விளாயாட்டுப் போட்டிகளையும் கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளையும் நடத்தி ஊரில் ஒற்றுமையையும் பிணைப்பையும் ஏற்படுத்த பாடுபட்டு வருகிறது.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக கற்றல் உபகரணங்கள் வழங்கல்,புலமைப் பரிசில் வழங்கல், இலவச வகுப்புகள் போன்ற பல்வேறு சேவைகளை முன்னெடுத்து வரும் அதே வேளை சிரமதானம், குர்பான், நோன்புகால கஞ்சி விநியோகம்,மருத்துவ உதவி, உலர் உணவு விநியோகம், ஸக்காத் சேகரிப்பு என பல்வேறு சேவைகளை தொடர்ச்சியாக முன்னெடுத்து வருகிறது.




இதன் ஒரு அங்கமாக காலி தங்கெதர நலன்புரி அமைப்பு 5 ஆவது தடவையாக ஏற்பாடு செய்த பகலிரவு கிரிக்கெட் போட்டி கடந்த வாரம் காலி சமனெல விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடந்து முடிந்தது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் கிராமங்களை மையமாக வைத்து இவ்வாறான கிரிக்கெட் சுற்றுப்போட்டிகள் நடைபெற்று வந்தாலும் முற்றிலும் வித்தியாசமாக சர்வதேச மட்ட போட்டிகள் போன்று இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை விசேட அம்சமாகும். வீரர்கள் தெரிவு கூட போட்டிக்கு சில நாட்களுக்கு முன்னர் ஏலம் விடும் முறையில் மேற்கொள்ளப்பட்டது விசேட அம்சமாகும்.



பகலிரவு ஆட்டமாக நடைபெற்ற இந்தப் போட்டியில் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் மாத்திரமன்றி நடுத்தர வயதினர்,மூத்தோர் ஆகியோரும் ஆர்வமாக கலந்து கொண்டார்கள். 10 அணிகள் களமிறக்கியதோடு ஒவ்வொரு அணிக்கும் பல வர்ண ஆடைகள் வழங்கப்பட்டிருந்தன.

தங்கெதர செலஞ்சர்ஸ்,தங்கெதர வொரியஸ்,தங்கெதர டீ ஸோன்,தங்கெதர கூல் பாய்ஸ்,தங்கெதர பன் போய்ஸ்,தங்கெதர நெசுரல்,தங்கெதர எலிஜட்ன்,தங்கெதர லெஜன்ட்,தங்கெதர லயன்ஸ்,தங்கெதர, தங்கெதர சூப்பர் கிங்ஸ் ஆகிய அணிகள் போட்டிகளில் பங்கேற்றிருந்தன.

ஆரம்ப முதல் போட்டிகள் விறுவிறுப்பாக நடைபெற்றதோடு தேசிய மட்டத்தில் புகழ்பெற்ற அறிவிப்பாளர்களினால் நேர் முகவர்ணனை மேற்கொள்ளப்பட்டது. பாரிய எல்ஈடி திரையிலும் போட்டிகள் காண்பிக்கப்பட்டதோடு முகநூலில் நேரடி ஒளிபரப்பும் செய்யப்பட்டிருந்தது.



மாலையில் பாரிய மின் வெளிச்சத்தில் போட்டிகள் நடைபெற்றது. இரவு வரை நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளை காண பிரதேச மக்கள் மாத்திமன்றி வெளிநாட்டவர்களும் வருகை தந்திருந்தமை விசேட அம்சமாகும்.

இறுதிப் போட்டிக்கு அஸ்லம் தலைமையிலான வொரியஸ் அணியும் பாயிஸ் தலைமையிலான கூல் பொய்ஸ் அணியும் தெரிவாகியிருந்தன.

ஆரம்ப முதல் சிறப்பாக விளையாடியிருந்த இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன.

இறுதியில் கூல் போய்ஸ் அணி சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. வெற்றிபெற்ற அணி வீரர்களுக்கு வெற்றிக் கிண்ணமும் பதக்கமும் வழங்கப்பட்டது. வானவேடிக்கைகள் வானை அதிர பலத்த கரகோசத்திற்கு மத்தியில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

வெற்றி தோல்வி எவ்வாறு அமைந்தாலும் பேதங்கள் ஏற்றத்தாழ்வுகளின்றி அனைவரும் இணைந்து ஆராவாரத்துடன் வெற்றியாளர்களை பாராட்டியதோடு இனிதே அந்த நாள் நிறைவடைந்தது.



தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி

எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

Whatsap: 0714901181












# வாசிப்பின் குறியீடும் குறியீட்டு வாசிப்பும்


இலக்கிய வழி குறியீடுகளை உருவாக்குதல் அல்லது குறியீடுகள் வழி இலக்கிய வாசிப்பை நிகழ்த்துதல் தேர்ந்த எழுத்தின் அல்லது வாசிப்பின் பாற்பட்டதே.

தமிழில் ஈழத்தில் முதல் நாவல் எனப்படும் 'அசன்பே யுடைய கதை' மீது குறியீட்டு வாசிப்பை நிகழ்த்தும்போது அக்கதை மேலும் அர்த்தப் பொழிவைத் தருகிறது.

மேலோட்டமாக அல்லது குற்றச்சாட்டாக அசன்பே கதை ஈழத்துக்குரியதல்ல அது எகிப்து இளவரசர் கதை. அதற்கும் இலங்கைக்கும் தொடர்புள்ளதா என்றதான வாசிப்பு அல்லது விமர்சனம் குறியீட்டு வாசிப்பில் அர்த்தம் இழக்கிறது.

உண்மையில் வீரதீர மாயா ஜஆலக்கதஜ மரபிலிருந்து அசன்பேயை விடுவித்து அதுவொரு இலங்கைக்கேயுரிய சமூகவியல் புனைவு என்பதனை குறியீட்டு நோக்கு ஏற்படுத்துகிறது. சித்திலெப்பையின் உண்மையான இலக்கு மனிதன் அசன்பே என்பது இந்த முறையான வாசிப்பில் வெளிப்படுகிறது.

அசன்பேயை மீள் வாசிக்கை



யில் பல கட்டவிழ்ப்புக்கள் நிகழ்கின்றன.

அசன்பே கதை எழுதப்பட்டதன் நோக்கம் குறித்து அவர் முன்னுரையாகவோ பின்னுரையாகவோ குறிப்பிடா நிலையில் நாவலில் ஊடுசென்றே அதனை இனங்காண வேண்டியுள்ளது. சித்திலெப்பையின் சமூக அக்கறையை அடியொட்டிப் பார்க்கும் போது இது' தனது சமூகத்திற்கு எவற்றைச் செய்ய வேண்டுமென்று அவர் அயராது உழைத்து வந்தாரோ அவற்றை தான் முன்னெடுக்க விரும்பிய மத, கல்வி, பண்பாடு, அரசியல் சீர்திருத்தங்களை உரைநடை நவீனத்தில் வெளிப்படுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகவே சித்திலெவ்வை அவர்கள் இந்நாவலை எழுதியிருக்கிறார்'என்பதாக அ.வா. முஹ்சீன் மறு வாசிக்கிறார்.

சமூக முன்னேற்றத்தைத் தடுக்கும் மதப்பிரிவினரிடமிருந்து சமூகத்தை விடுவித்தல், ஆங்கிலக் கல்வி மயப்படல், சுய ஒதுக்கலிலிருந்து வெளிவரல் ஃபண்பாட்டு உயர்ச்சியடைதல், அரசியல் சுதந்திரம் மற்றும் உலகளாவிய உயர்ச்சியடைதலென அசன்பேயை மறுவாசிக்கும்போது அல்லது குறியிட்டு வாசிக்கும் போது உணரமுடிதலை முஹ்சீன் நிறுவுகிறார்.

இவ்வாறு பார்க்கும்போது அசன்பேயுடைய கதை சாரம்சத்தில் குறியீட்டு நாவல்தான். இத்தகைய உயர்ந்த கருத்துக்களை வெளிப்படுத்துவதை குறியீடு உணர்த்துகிறது.


சமூகத்தின் மீது நேரடியாக விளிக்காமல், இலங்கைக்களத்துடன் களக்காமல் மறைமுக நாவலாகவே சித்திலெப்பை அஸன்பேயை வடிவமைக்கிறார்.

நாவலை கூர்ந்து வாசிக்கும் போது அஸன்பே குறியீட்டு மனிதனாக, அறிஞர் பெருமகன் சித்திலெப்பையின் விம்பமாக நிற்கிறான். அதாவது சித்திலெவ்வை இந்நாவலில் இலட்சிய மனிதராக மேலெழுகிறார்

தமிழில் பிறமொழி வழியே வந்து சேரும் கவிதைகள் ஒரு துறையாக போக்குதலுக்குரியது. மொழிபெயர்ப்பு கவிதை வெளி பரந்தது.

தமிழில் பிரம்ம ராஜன் மொழிபெயர்த்து இவ்வார மாற்றுமொழிக் கவிதை புகழ்பெற்ற ஜெர்மன் நாடகாசிரியரும், கவிஞருமான பிரெக்ட் எழுதியது. எளிய மொழி; அனுபவத்தின் சாரம்; முற்றுருவத்தின் வெளிப்பாடு.

தன்சக்திக்கு இயன்றதை செய்கிறான் நினைவுகொள்ள.
நாடகம் முடிந்துவிட்டது
நிகழ்ச்சி நடத்தப்பட்டு விட்டது
மெதுவாய் அந்த அரங்கம்
ஒரு சரியும் குடல் காலியாகிறது
ஒப்பனை அறைகளில் அழுகிச் சிதையும்
சொல் ஜாலத்தின்
கரம் தாவி நையாண்டி செய்யும்
லகுவான விற்பனையாளர்கள்
ஒப்பனை மற்றும் வியர்வையை
கழுவுகின்றனர்
இறுதியாக விளக்குகள்
அமிழ்கின்றன
அவை இழிந்த
கோணல்மாணல் பாணியை
காட்டின வெளியே தவறாய்
பயன்படுத்தப்பட்ட அரங்கின்
அழகிய வெறுமை மீது
அந்தி வெளிச்சம் கவிகிறது
இன்னும் மென்மையாய்
வாசனை வீசும் காலியான
அரங்கில்
அமர்ந்திருக்கிறான்
நேர்மையான
நாடகாசிரியன்திருப்
தியற்று, மற்றும்







இரண்டாம் பக்க அடிக்குறிப்பு
(இ)
பாடசாலை தர்மவிதிப் புத்தகத்தின் இரண்டாம் பக்க அடிக்குறிப்பில் உணர்வுகள் மிதக்கின்றன
கனவுகள் அலைகின்றன
அவாக்கள் நிரம்பி வழிகின்றன
எதிர்பார்ப்புகளால் கழிந்த கல்விக் காலத்தின் ஏக்கங்கள் இன்னும் நினைவுகளிலொட்டின
முதலாம் பிள்ளையென்ற முயலுமையின் விழித்துப் படித்த ராத்திரிகளின் லாம்பொளியில் நிரம்புகிறது ஆவல் பூத்த எதிர்காலம்
பிள்ளைகளை பிள்ளைகளோடு நிரற்படுத்தும் பரீட்சை முறையொன்றை வகுப்பறை சட்டமாக்கியது
ஆசிரியர் மையக் கல்வி முறையொன்று வகுப்புக்குள் வேர் விட்டது
நீர் விட்டு வளர்த்தது கலைத் திட்டம்
விரிவுரை வடிவிலொரு மூளைச்சலவை முறையிருந்தது
கிளிப்பிள்ளைப் பாடம் ஒப்புவிக்கும் மரபிருந்தது
கைத்திறனற்ற காலம்
மாணவராக இருந்த போது ஆசிரியர் மையமிருந்தது
ஆசிரியராக மாறிய போது
மாணவர் மையம் வளர்ந்தது
மாணவரை வளர்த்தது
வகுப்பறை
தேர்ச்சி மைய முறைமையில்
5 ஈ முறைமையில்
ஒப்படை முறைமையில் வளர்ந்தது
கல்விக்கூடம்
வாழ்க்கை நீடித்த கல்வியில்
வாழ்வு முழுதுமான கல்வியில் தேடல் விரிகை ஆசிரியம்
கற்க கற்கவே புமையுறும்
பண்பாடு மேலெழ மேலெழ
நற்குண குடி பெருகும்
பாடசாலை தர்மவிதியில் நகர்கிறது காலம்
ஒழுக்கம் ஒழுக ஒழுக




# போர் வழி இலக்கியமும் இலக்கிய வழி போரும்



போரும் இலக்கியமும் மனுக்குலம் சந்திந்த இரு அம்சங்கள். போர்க்கால இலக்கியங்கள் போர் மைய எழுத்துக்களாய் உள்ளன.

மறுபுறம் இலக்கியங்கள் வழியே போரின் பரிமாணங்களை அல்லது சமூக பொருளாதார பண்பாட்டு அரசியல் பெறுமானங்களைப் புரிதலும் முக்கியமானது.

ஈழத்தில் போரிலக்கிய வகைமை மீது ஒழுங்குமுறைப் படுத்துதல் என்பது தொய்வு நிலையில் இருக்கும் சூழலில் அதன் மீது ஆய்வுப்பார்வை செலுத்த வேண்டியுள்ளது.

ரியாஸ் குரானா இந்தப்பின் புலத்தில் ஈழத்துப் போரிலக்கியம் குறித்த ஆய்வுத்தேடலை முன்னெழுப்ப முயல்கிறார்.

அவர் மூன்று தசாப்த தந்துள்ளது மேற்பட்ட போர் வழி தோன்றிய இலக்கியங்களை அடைய முனைகிறாரா அல்லது கடந்து சென்ற ஈழத்தின் கதை, கவிதை, நாவல், நாடகமென படைப்பு வழி போரை அல்லது போரின் விளைவான சமூக பொருளாதார கலாசார அரசியல் மொழி இன மத நிலைமைகளை ஆய்ந்துணர்த்த முற்படுகிறாரா என்பதும் பெரும் கேள்வியே.

ஈழத்தில் போரிலக்கிய வரலாறு கனதியானது சூழலில் றியாஸ்குரானாவின் முன்னெடுப்பு மிகுந்த அவதானிப்புக்குரியது.

அவர் எழுமாறாக அல்லது உத்தேசமாக 19701986/1987 2009/2009 பின்காலம்ள ன கால வரையறை செய்கிறார்.விரிந்த தளத்தில் இவ்வாய்வு மேலெழ ஆர்வமுடையோர் பங்களிக்கலாம்போர் வழி இலக்கியமும் இலக்கிய வழி போரும்

# கறுப்பு காந்தி நெல்சன் மண்டேலா 09

(கடந்த வாரத் தொடர்)



ரோமானிய டச்சு சட்டம் என்று பல பாடங்கள் புகட்டப்பட்டன. கல்வி எனும் அருந்தனம் அழியாப் பெருந்தனம் என்பதைப் புரிந்துகொண்ட மண்டேலா கல்வியில் கண்ணாயிருந்தான். எதிர்காலமே கல்வியில்தான் தங்கியிருக்கிறது என்பதை புரிந்துகொண்டான். பெற்ற தந்தை காட்லாவும் வளர்த்த தந்தை ஜோங்கிந்தாபாவும் எதிர்பார்த்தபடி பிற்காலத்தில் கோஸாவுக்கு தலைவனாக வரவேண்டும் என்ற உன்னத குறிக்கோளோடு கல்வியில் கவனத்தை செலுத்தினான். அவ்வப்போது பொழுது போக்கிற்காக புதிய தோழன் டேம் போவுடன் விளையாட்டுக்களிலும் ஈடுபட்டான். கல்லூரியில் ஒரு பிரச்சினை ஏற்பட்டது. கல்லூரியின் பழைய மாணவர்கள் புதிய மாணவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தினர். பழைய மாணவர்களே கல்லூரியின் விடுதிக்கு நிர்வாகிகளாக இருந்து புதிய மாணவர்களை வேலை வாங்கி தங்கள் கட்டுப்பாட்டுக்குள்ளேயே வைத்திருந்தனர். இது புதிய மாணவனான மண்டேலாவுக்கு சற்றும் பிடிக்கவில்லை. என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்தான். அச் சந்தர்ப்பத்தில் மண்டேலா முன்னர் படித்த உயர்பள்ளியில், மண்டேலாவுடன் நெருங்கிப் பழகிய ஒருவனை பழைய மாணவர்களில் ஒருவராக சந்தித்தான். பழைய நண்பருடன் பேசி பிரச்சினையை ஒருவாறு சுமூகமாக தீர்த்துவிடலாம் என்ற நம்பிக்கையில் நண்பருடன் பேச முயன்றான். ஆனால் அவனோ தன் முகத்தை சுளித்துக் கொண்டு மண்டேலாவிடமிருந்து தூரமாகினான். மண்டேலாவுக்கோ இவன் ஏன் இப்படி செய்கிறான் என்பது புரியாத புதிராக இருந்தது. திரும்பவும் நண்பனை அணுகி நெருங்கி பேச முயன்றபோது அவன் தன் முகத்தை சுளித்துக் கொண்டு "மண்டேலா நீ என்னுடன் பேசாதே! நீ நாகரிகமற்றவன், கிராமப்புற மனிதன், ஆங்கிலம் பேச தெரியாதவன், உனக்கும் எனக்கும் என்ன பேச்சு? என்னைத் தெரியும் என்று மற்றவர்கள் முன் காட்டிக் கொள்ளாதே. போ" என்று விரட்டினான். மண்டேலா செய்வதறியாது அவ்விடத்தை விட்டு அவமானத்தோடு வெளியேறினான். அவமானத்தால் அவன் முகம் வாடி வதங்கியது. அதிர்ச்சியும் அவமானத்தையும் விட கோபமே அவனுக்கு அதிகமாக இருந்தது. அன்று இரவு முழுவதும் தூங்காமல் என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்தான். தன்மானத்திற்கு இழுக்கு ஒன்று நேர்கிறது என்றால் உயிரே போனாலும் போராடாமல் விட்டுவிடக்கூடாது என்று காட்லா ஊட்டி ஊட்டி சிறுவயதிலேயே வளர்த்திருந்தார். வெறும் வாய் வார்த்தையாக மட்டுமல்லாமல் செயல் மூலமும் இந்தப் பாடத்தை மகனுக்கு புகட்டி இருந்தார். மண்டேலா தன் வாழ்நாள் முழுவதும் நினைவில் வைத்திருந்த பாடம் அது. எதையும் மறக்கலாம், மன்னிக்கலாம். ஆனால் தன்மானத்தை மட்டும் யாருக்காகவும் எதற்காகவும் விட்டுக் கொடுக்கக் கூடாது என சபதமிட்டபடி போராடுவோம் என மனதில் உறுதி பூண்டான்.

அடுத்த நாள் பொழுது விடிந்தது. மண்டேலா கல்லூரிக்குள் ஆவேசமாக நுழைந்து புதிய மாணவர்களான தன் சக மாணவர்களுடன் கலந்துரையாடி பழைய மாணவர்களுக்கு எதிராக போராடுவோம் என்ற முடிவை திடமாக எடுத்தான். பழைய மாணவர்களின் அநீதிக்கெதிராக போராட தயாரானதற்கு முதல் காரணம், தன்னை இழிவுபடுத்திய நண்பனுக்கு ஒரு பாடம் புகட்ட வேண்டும் என்பதாகும். அந்த சம்பவம் தான் பழைய மாணவர்களுக்கெதிராக போர்க் கொடி தூக்கும் எண்ணத்தை மண்டேலாவின் மனதில் விதைத்தது. ஆனால் அதை அவர் தன் சக மாணவர்களுக்கு சொல்லிக் கொள்ளவில்லை.

புதிய மாணவர்கள் அனைவரும் மண்டேலாவின் பின் அணிதிரண்டனர். பலம் கூடப் பெற்றதால் அவர்களின் நடவடிக்கைகள் சுறுசுறுப்படைந்து பிரசாரம் சூடுபிடிக்க ஆரம்பித்தது. பதாகைகள் ஏந்திய வண்ணம் ஆவேசமாக "பழைய மாணவர் அநீதி ஒழிக" என்ற கோஷத்துடன் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். பிரச்சினை கல்லூரி நிர்வாகிகளிடம் கொண்டு செல்லப்பட்டது. விடுதி நிர்வாகத்தை இனிமேல் புதிய மாணவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். பழைய மாணவர்கள் இந்தப் பொறுப்பை தவறாக பயன்படுத்தி, புதிய மாணவர்களை தங்கள் கட்டுப்பாட்டுக்குள் வைத்து அடிபணிய வைக்கிறார்கள். இது முற்றிலும் மாற வேண்டும், எமக்கு நியாயம் வேண்டும் என்று மண்டேலா நிர்வாகத்திடம் எடுத்துரைத்தார். மண்டேலாவின் நியாயமான கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. விடுதி நிர்வாகம் புதிய மாணவர்களுக்கு கைமாற்றப்பட்டது. மண்டேலா உட்பட புதிய மாணவர்கள் விடுதி நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டனர். மண்டேலாவின் முதல் போராட்டம் வெற்றிகரமாக நிறைவேறியது. மண்டேலாவுக்கு போராடி வென்று விட்டோம் என்ற கர்வமும் இறுமாப்பும் பெருமிதமும் மனதில் மிகைத்தது. பழைய மாணவர் பிரச்சினை அத்துடன் முடிவடைந்தபாடில்லை. மீண்டும் மீண்டும் மோதல்கள் அவ்வப்போது வெடித்துக் கொண்டுதான் இருந்தன. ஆனால் மண்டேலா விடாப்பிடியாக இருந்தான். படிப்பு, விளையாட்டுக்களான கால்பந்து, நெடுந்தூர ஓட்டம், பால் நடனம் போன்றன ஒரு பக்கமாகவும் மோதல்கள் இன்னொரு பக்கமுமாக மண்டேலாவின் கல்லூரி வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது.

(தொடரும்)



கலாபூஷணம்
**பரீட் இக்பால்...**
யாழ்ப்பாணம்

---



# கே.விஸ்வநாத்

இந்திய சினிமாவின் பிரதான இயக்குநர்களில் ஒருவர்தான் கே.விஸ்வநாத். 1930ம் வருடம் பெப்ரவரி மாதம் 19ம் தேதி ஆந்திர மாநிலம் கிருஷ்ணா மாவட்டத்தில் பிறந்தவர் விஸ்வநாத். இவருக்கு ஜெயலட்சுமி என்ற மனைவியும் நாகேந்திரநாத், ரவீந்திரநாத் என்ற மகன்களும், பத்மாவதி என்ற மகளும் உள்ளனர். ஸ்டூடியோ ஒன்றில் சவுண்ட் என்ஜினியராக தனது திரையுலக வாழ்க்கையை தொடங்கினார் விஸ்வநாத். இயக்குநர் ஆவதற்காக பல முயற்சிகளை மேற்கொண்டார். அதன்பின்னர் தெலுங்கு திரையுலக இயக்குநர் அடுர்த்தி சுப்பாராவிடம் உதவி இயக்குநருக்கான வாய்ப்பு கிடைத்தது விஸ்வநாத்திற்கு. பின்னர் இயக்குநர் பாலசந்தர், பாபு என பிரபல இயக்குநர்களிடம் சினிமாவை இயக்குவதை கற்றுக்கொண்டார்.சினிமா இயக்கத்தை கற்றுக்கொண்ட விஸ்வநாத் 1965ம் ஆண்டு முதன் முதலாக தெலுங்கில் ஆத்ம கவுரவம் என்ற திரைப்படத்தை இயக்கினார். ஆந்திர மாநில எழுத்தாளரான எடானபுரடி சுலோச்சனா ரவி எழுதிய ஆத்ம கவுரவம் நாவலை தழுவி எடுக்கப்பட்ட இப்படத்தில் நாகேஸ்வர ராவ் காஞ்சனா உள்ளிட்டோர் நடித்திருந்தனர். சிறந்த திரைப்படத்திற்காகவும், சிறந்த கதை அம்சத்திற்காகவும் நந்தி விருதுகளை தட்டிச் சென்றது தெலுங்கு மொழி படமான ஆத்ம கவுரவம்.பின்னர் இவர் கலாசக்தி கே.விஸ்வநாத் என்றே அழைக்கப்பட்டு வந்தார். இந்தி சினிமாவின் தந்தை என்று அழைக்கப்பட்டவர் தாதா சாகேப் பால்கே. இந்தியாவின் முதல் சினிமாவானா ராஜா ஹரிச்சந்திரா என்ற படத்தை இயக்கியவர் தாதா சாகேப் பால்கே. இந்திய சினிமாவில் சிறப்பாக செயல்படுபவர்களுக்கு பால்கே விருது வழங்கப்படுவது நாம் அனைவரும் அறிந்த விஷயமே. இந்த விருது 2016ம் ஆண்டு கே.விஸ்வநாத்திற்கு கிடைத்தது தெலுங்கு ரசிகர்களை ஆழ்ந்த மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. இதற்கு முன்பாக சத்யஜித்ரே, ராஜ் கபூர், லதா மங்கேஷ்கர், சிவாஜி கணேசன், கே.பாலச்சந்தர் ஆகியோருக்கு அந்த விருது கொடுக்கப்பட்டிருந்தது. 1992ம் ஆண்டு நடிகரும், இயக்குநருமான கே.விஸ்வநாத்திற்கு இந்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கி அவரை கவுரவித்தது. 50க்கும் மேற்பட்ட படங்களை இயக்கிய கே.விஸ்வநாத் தமிழ், தெலுங்கு, ஆங்கில மொழிகள் அத்துப்படியாக இருந்தது.இவரது சங்கராபரணம், சாகர சங்கமம், ஸ்வாதி முத்யம் உள்ளிட்ட திரைப்படங்கள் காலத்தால் அழியாதவையாகும். 1983ல் இவரது இயக்த்தில் தெலுங்கில் உருவான சாகர சங்கமம் படத்தில் கமல்ஹாசன் நடிக்க இளையராஜா இசையமைத்திருந்தார். இந்த படம் 3 பிலிம்பேர் விருதுகள், 2 நந்தி விருதுகள், 3 தேசிய விருதுகளை அள்ளிச் சென்றது. இந்த படம் தமிழில் மொழி மாற்றம் செய்யப்பட்டு தமிழ் திரை ரசிகர்களின் ஏகோபித்த ஆதரவை பெற்றது. அதுமட்டுமின்றி பல தியேட்டர்களில் இந்த படம் 150 நாட்களை தாண்டி திரையிடப்பட்டது. விஸ்வநாத்திற்கு மட்டுமல்ல திரையுலக வாழ்வில் கமல்ஹாசனுக்கும் இந்த படம் பெரிய திருப்புமுனையாக அமைந்தது.1987ல் கமல்ஹாசன் நடிப்பில், விஸ்வநாத் இயக்கத்தில் வெளியான ஸ்வாதி முத்யம் (தமிழில் சிப்பிக்குள் முத்து) ஒரு மைல்கல் என்றே சொல்லலாம். சவுண்ட் என்ஜினியராக வாழ்க்கையை தொடங்கிய கே.விஸ்வநாத் நடிப்பு, இயக்கம், தயாரிப்பு என அனைத்து துறைகளிலும் ஆளுமையை செலுத்தினார். குருதிப்புனல், யாரடி நீ மோகினி, உத்தமபுத்திரன், முகவரி போன்ற தமிழ் திரைப்படங்களில் தானும் ஒரு நடிகர் என தனது முகவரியை தெரிவித்திருந்தார்.



**எஸ்.கணேசன் ஆச்சாரி சதீஷ்...**
கம்பளை

# சுபாஷினியின் கவிதை நூல் வெளியீட்டு விழா













தேஜஸ்வராலயா கலைக்கூடத்தின் இயக்குனர் கலைஞானச் சுடர் ஸ்ரீமதி சுபாஷினியின் (கவிஞர், ஆசிரியர்) 4வது கவிதை நூலான வங்கூழ் கவிதைநூல் வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் பிரித்தானிய சைவ முன்னேற்ற சங்கத்தின் முன்னாள் தலைவர் ரபீந்திரமோகன் தலைமையில் நடைபெற்றது. கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் பிரதம விருந்தினராகவும் இலக்கிய படைப்பாளர், கவிஞர் ஜின்னா சரிபுத்தீன் மகிமை விருந்தினராகவும் கொழும்பு பம்பலப்பிட்டி ராமநாதன் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி யோகராணி சிவபாலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டனர். வ. இ. ராமநாதன் (ஸ்தாபகர், பிரித்தானிய சைவ முன்னேற்ற சங்கம் ) வைத்திய கலாநிதி. சோ. பதந்தன் (அவசர சத்திரசிகிச்சைப்பிரிவு, கொழும்பு தேசிய வைத்தியசாலை) செந்தில்நாதன் ( பிரதம நிறைவேற்று அதிகாரி வீரகேசரி பத்திரிகை) செந்தில்வேலவர் ( பிரதம ஆசிரியர், தினகரன் பத்திரிகை) சூரிப்பிள்ளை பாலசிங்கம் (பட்டயக்கணக்காளர் பிரித்தானிய சைவ முன்னேற்ற சங்கம்) நிரஞ்சன் (தலைவர், பிரித்தானிய சைவ முன்னேற்ற சங்கம்) லோகநாதன் (பிரித்தானிய சைவ முன்னேற்ற சங்கம்) ஆகியோர் உவகைவிருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிட்ட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 பெப்ரவரி மாதம் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.